
# 2005 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 11</u>

**18.01.2005** வினாடி நேரத்தில் தேக உணர்விலிருந்து விடுபட்டு, ஜீவன் முக்த் ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள் மேலும் மாஸ்டர் முக்தி-ஜீவன்முக்தி வள்ளல் ஆகுங்கள்!

**03.02.2005** சேவை செய்து கொண்டே உபராம் மற்றும் 'பேகத்' வைராக்கிய விருத்தி மூலம் எவர்ரெடியாகி, பாபா சமானமாக சம்பன்னம் ஆகுங்கள்! (உபராம் -பாபாவாகிய ராம் நினைவு மூலம் அருகாமையில் இருக்கும் அனுபவம்).

**20.02.2005** இதயப்பூர்வமாக என்னுடைய பாபா என்று கூறுங்கள் மற்றும் அனைத்து அழிவற்ற பொக்கிஷத்திற்கு அதிகாரியாகி கவலையற்ற இராஜாவாகுங்கள்!

**07.03.2005** சம்பூரண பவித்திரத்தா விரதம் இருப்பதும், "நான்" என்பதை அர்ப்பணிப்பதும் தான் சிவஜெயந்தி கொண்டாடுவதாகும்!

**25.03.2005** மாஸ்டர் சூரியன் ஆகி, அனுபவத்தின் கிரணங்களைப் பரப்புங்கள், வழங்குபவர் ஆகுங்கள், தபஸ்வி ஆகுங்கள்!

**04.09.2005** அறிவுரையோடு, மன்னித்தல் மற்றும் இரக்க குணத்தை தன்னுடையதாக்குங்கள். ஆசி வழங்குவதும், பெறுவதுமாக இருந்தால் உங்களுடைய வீடு ஆசிரமம் ஆகி விடும்!

**21.10.2005** சம்பூரணம் மற்றும் சம்பன்னம் ஆவதற்கான தேதியை நிச்சயித்து நேரத்தின் கணக்குப்படி இப்போது எவர்ரெடி (தயாராகுங்கள்) ஆகுங்கள்!

**15.11.2005** உண்மையான மனதுடன் தந்தை மற்றும் பரிவாரத்தினரிடம் அன்பாயிருந்து, உழைப்பிலிருந்து விடுபடுவதற்கு உறுதிமொழி எடுங்கள் மற்றும் லாபம் அடையுங்கள்!

**30.11.2005** சமயம் என்பது நெருங்கிக் கொண்டிருக்கிறது, அதற்கேற்ப தன்னை எல்லைக்குட்பட்ட பந்தனத்திலிருந்து விடுவித்து சம்பன்ன மற்றும் சம்பூர்ணமாக ஆகுங்கள்!

**15.12.2005** வரும் புத்தாண்டில் சிநேகம் மற்றும் சகயோகத்தின் தோற்றத்தை மேடையில் கொண்டு வாருங்கள். ஒவ்வொருவருக்கும் குணம் மற்றும் சக்திகளை அன்பளிப்பாக கொடுங்கள்!

**31.12.2005** புத்தாண்டில், தங்களிடமுள்ள பழைய சம்ஸ்காரங்களை யோக அக்னியில் பஸ்மம் செய்து,

பிரம்மாபாபா தியாகம், தபஸ்யா மற்றும் சேவையில் சமானமாக நம்பர் ஒன் ஆகுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 18.01.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வினாடி நேரத்தில் தேக உணர்விலிருந்து விடுபட்டு, ஜீவன் முக்த் ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள் மேலும் மாஸ்டர் முக்தி-ஜீவன்முக்தி வள்ளல் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள லக்கி மற்றும் லவ்லி அதிர்ஷ்டம் மற்றும் அழகும் மிக்க குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். குழந்தைகள் ஒவ்வொருவரும் அன்பில் (சிநேகத்தில்) மூழ்கி இருக்கின்றார்கள். இந்த பரமாத்ம சிநேகம் அலௌகீக சிநேகமாகும். இந்த சிநேகம் தான் குழந்தைகளை தந்தையினுடையவர்களாக்கி விட்டது. சிநேகம் (அன்பு) தான் சகஜமாகவே வெற்றியாளராகவும் ஆக்கி விட்டது. இன்று அமிர்தவேளை முதல் நாலா பக்கங்களிலுமுள்ள ஒவ்வொரு குழந்தையும் அன்பினுடைய மாலையை தந்தைக்கு அணிவித்தனர். ஏனென்றால், இந்த பரமாத்ம சிநேகம் எதிலிருந்து என்னவாக ஆக்கி விடுகிறது என்பதை ஒவ்வொரு குழந்தையும் அறிந்தவராக இருக்கின்றார்கள், சிநேகத்தின் அனுபவம் அநேக பரமாத்ம பொக்கிஷங்களுக்கு எஜமானனாக (மாலிக்) ஆக்கவல்லதாக இருக்கிறது. மேலும் சர்வ பரமாத்ம கஜானாக்களின் கோல்டன் சாவியை தந்தை எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுத்து விட்டார் தெரியுமல்லவா? அந்த கோல்டன் சாவி எது? அந்த கோல்டன் சாவி மேரா பாபா! மேரா பாபா என்று சொன்னவுடனேயே, எல்லாப் பொக்கிஷங்களுக்கும் அதிகாரி ஆகி விட்டார்கள். சர்வ பிராப்திகளுக்கான அதிகாரத்தால் சம்பன்னம் ஆகி விட்டார்கள். சர்வ சக்திகளால் சக்திசாலி ஆகி விட்டார்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களாக ஆகி விட்டார்கள். இப்படிப்பட்ட சம்பன்ன

ஆத்மாக்களின் உள்ளத்திலிருந்து என்ன பாடல் வருகிறது? அடையாத பொருள் ஒன்றுமில்லை நம் பிராமணர்களின் கஜானாவில் என்பதாகும்.

இன்றைய தினத்தை ஸ்மிருதி திவஸ் நினைவு நாள் என்று கூறுகின்றீர்கள். இன்றைக்கு எல்லாக் குழந்தைகளுக்கும் விசேஷமாக ஆதி தேவ் பிரம்மாபாபாவின் நினைவு அதிகமாக வந்து கொண்டிருக்கிறது பிரம்மாபாபா குழந்தைகளாகிய உங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார் ஏன்? ஒவ்வொரு பிராமணக் குழந்தையும் கோடியில் ஒரு பாக்கியவான் குழந்தையாக இருக்கிறது. உங்களுடைய பாக்கியத்தை அறிவீர்கள் அல்லவா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பாக்கிய நட்சத்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார் இன்றைய நினைவு நாளில் விசேஷமாக பாப்தாதா விஷ்வ சேவைக்கான பொறுப்பு எனும் கிரீடத்தை குழந்தைகளிடம் அர்ப்பணித்து விட்டார். ஆதலால் இந்த நினைவு நாள் குழந்தைகளாகிய உங்களுடைய ராஜ்ய திலகத்தின் நாளாகும். குழந்தைகளின் விசேஷ சாகார சொரூபத்தில் சொத்துரிமையை, சாசனம் (உயில்) ஆக்குகின்ற வில் நாளாகும். தந்தையைப் பிரத்தியட்சம் செய்கின்ற மகன் (சன் சோஸ் ஃபாதர்) என்ற பழமொழி இருக்கிறதல்லவா? அதைப் பிரத்தியட்சம் செய்வதற்கான நாளாகும். பாப்தாதா குழந்தைகள் நிமித்தமாகி, தன்னலமற்ற விஷ்வ சேவை செய்வதைப் பார்த்து குஷி அடைகின்றார். பாப்தாதா செய்விப்பவர், செய்கின்ற குழந்தைகளின் ஒவ்வொரு அடியையும் பார்த்து குஷி அடைகின்றார் ஏனென்றால், சேவையில் வெற்றிக்கு விசேஷ ஆதாரமாக இருப்பது செய்விப்பவரான தந்தை, செய்கின்ற ஆதமாவாகிய என் மூலமாக செய்வித்துக் கொண்டிருக்கின்றார் என்பது. ஆத்மாவாகிய நான் நிமித்தமாத்திரம் தான் கருவி. ஏனெனில் அந்த நிமித்த பாவனை மூலம் பணிவுத் தன்மை (நிர்மான் ஸ்திதி) இயல்பானதாகி விடுகிறது. தேக உணர்வில் கொண்டு வருகின்ற நான் என்பது இயல்பாகவே நிமித்த பாவனையின் காரணமாக, இல்லாமல் முடிந்து போய் விடுகிறது. இந்த பிராமண வாழ்க்கையில் அதிகபட்சமாக விக்னத்தை உண்டாக்குவது தேக உணர்வு காரணமாக வரும் நான் என்பது தான். செய்பவர் செய்வித்துக் கொண்டிருக்கின்றார். நான் நிமித்தமாகி செய்பவனாகி செய்து கொண்டிருக்கின்றேன். இதன் மூலம் தேக அபிமானம் விடுபட்டுப் போய்விடுகிறது. மேலும் முக்தி

ஜீவன்முக்தியின் ஆனந்தத்தை அனுபவம் செய்கின்றார்கள் வருங்காலத்தில் ஜீவன் பிராப்தி ஆகப்போகிறது ஆனால் இப்போதைய சங்கம யுகத்தில் ஜீவன்முக்திக்கான அலௌகீக ஆனந்தம் இன்னும் அதிக அலௌகீகமானது. பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா? கர்மம் செய்யும் போது, கர்ம பந்தனத்திலிருந்து விலகியிருந்தார். வாழ்க்கையில் இருக்கும்போது தாமரை மலருக்கொப்பாக, விலகியுமிருந்தார், அன்பாகவுமிருந்தார். இவ்வளவு பெரிய குடும்பப் பொறுப்பு, வாழ்க்கைக்கான பொறுப்பு, யோகியாக ஆக்குவதற்கான பொறுப்பு, ஃபரிஸ்தாவிலிருந்து தேவதைகளாக்குவதற்கான பொறுப்பு இருந்த போதிலும் கூட கவலையற்ற பாதுஷாவாக இருந்தார். இதற்குத்தான் ஜீவன்முக்த் ஸ்திதி என்று பெயர். ஆகவே தான், பக்தி மார்க்கத்தில் பிரம்மாவின் ஆசனம் தாமரை மலராகக் காட்டியிருக்கின்றார்கள். தாமரை மலர் மீது அமர்ந்திருப்பவராக, கமல ஆசனதாரியாக காட்டியிருக்கின்றார்கள். ஆதலால் குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் கூட சங்கமயுகத்தில் ஜீவன்முக்தியை அனுபவம் செய்யத்தான் வேண்டும். பாப்தாதாவிடமிருந்து, முக்தி, ஜீவன்முக்திக்கான கஸ்தி இந்த சமயத்தில் தான் கிடைக்கும். இந்த சமயத்தில் தான் மாஸ்டர் முக்தி-ஜீவன்முக்தி வள்ளல் ஆக வேண்டும். ஆகி விட்டீர்களா? அல்லது இனிமேல் தான் ஆக வேண்டுமா? முக்தி-ஜீவன்முக்திக்கு மாஸ்டர் வள்ளல் ஆவதற்கான விதி -ஒரு வினாடியிலில் தேக உணர்விலிருந்து விடுதலை அடைந்து விடவேண்டும். இந்த அப்பியாசம் இப்போது அவசியம் செய்ய வேண்டும். மனதின் மீது அவ்வளவு வசப்படுத்தும் திறமை கன்ட்ரோல் இருக்க வேண்டும். அதாவது ஸ்தூல கர்மேந்திரியங்களான கை, கால்களை தன் விருப்பப்படி அசைக்க அல்லது இயக்க முடிகிறதல்லவா? அதற்கு பிரத்யேக நேரம் ஏதாவது தேவைப்படுகிறதா? இல்லை. இதுபோல மனம் தனது விருப்பப்படி நடப்பதற்கான முழு கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இப்போது சற்று நினைத்துப் பாருங்கள் கையை உயரத் தூக்க வேண்டுமானால், நேரம் பிடிக்குமா? உடனே செய்ய முடிகிறதல்லவா? இப்போது பாப்தாதா கையை உயர்த்துங்கள் என்று சொன்னால், உடனே செய்கிறீர்கள் அல்லவா? செய்வதல்ல, செய்ய முடியும். இதே போல மனதின் மீது கன்ட்ரோல் இருக்க வேண்டும். எங்கே ஏகாக்கிரஹா மனதை ஒருமுகப்படுத்தச் செய்ய வேண்டுமோ அங்கு மனம் ஏகாக்கிரஹம் ஆகி

விடவேண்டும். ஒருமுகப்பட்டு விட வேண்டும் மனம் என்பது கை, கால்களைப் போலல்லாது சூட்சுமமானது தான். என்றாலும் மனமும் உங்களுடையது தானே! என்னுடைய மனம் என்று தானே சொல்கிறீர்கள். உங்களுடைய மனம் என்று சொல்வதில்லையல்லவா? எப்படி ஸ்தூலமான கர்மேந்திரியங்கள் கன்ட்ரோலில் வசத்தில் இருக்கிறதோ, அதுபோல மனம், புத்தி, சம்ஸ்காரம் தன் வசத்தில் இருக்க வேண்டும். அப்போது தான் நம்பர் ஒன் விஜயி என்று சொல்ல முடியும். விஞ்ஞானிகள் ராக்கெட் மூலமாக அல்லது தங்களுடைய சாதனங்கள் மூலமாக, இந்த லோகத்தில் (ஸ்தூல உலகம்) அதிகபட்சமாக கிரகங்கள் வரை சென்றடைகிறார்கள்; ஆனால் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் மூன்று உலகம் வரையிலும் சென்றடைய முடியும். ஒரு விநாடியில் சூட்சும லோகம், நிராகாரி லோகம், ஸ்தூல லோகத்தில் மதுபன் வரை சென்றடைய முடிகிறதல்லவா? ஒருவேளை மனமே மதுபன் போ என்று நீங்கள் மனதிற்குக் கட்டளை இட்டால் ஒரு வினாடியில் சென்றடைய முடிகிறதல்லவா? உடலால் அல்ல மனதால் கட்டளை இடுங்கள். சூட்சும வதனத்திற்குச் செல்ல வேண்டும் நிராகார வதனத்திற்குச் (மூலவதனம்) செல்ல வேண்டும் என்று மூன்று உலகங்களுக்கும் செல்ல வேண்டும் என்று எப்போது நினைக்கின்றீர்களோ, அப்போது மனதை சென்றடையச் செய்ய முடியுமா? இப்படிப்பட்ட பயிற்சி இருக்கிறதா? இப்போது இந்த அப்பியாசம் மிகவும் அவசியமாக இருக்கிறது. இப்படிச் செய்கிறீர்கள் என்பது பாப்தாதாவுக்குத் தெரியும் ஆனால் எப்போது வேண்டுமே, எவ்வளவு நேரம் ஏகாக்கிரஹ ஸ்திதியில் நிலைத்திருக்க வேண்டுமோ, ஸ்திரமாக நிலைத்திருக்க வேண்டுமோ, சஞ்சலத்தில் வரக்கூடாது. இப்படி இதன் மீது கவனம் அட்டென்ஷன்) வேண்டும். மகிமை இருக்கின்றது. மனதை வென்றவர் யாரோ அவா உலகை வென்றவராவார். இப்போது சிற்சில சமயம் மனம் ஏமாற்றிவிடுகிறது. ஆதலால் பாப்தாதா இன்றைய சக்திசாலியான தினத்தில், இத்தகைய சக்திசாலியான விசேஷ அட்டென்ஷன் கொடுக்கின்றார். ஹே சுய ராஜ்ய அதிகாரி குழந்தைகளே! இப்போது இந்த விசேஷ அப்பியாசத்தை இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் போதும், சோதித்துப் பாருங்கள். ஏனென்றால், காலப்பிரமாணப்படி திடீரென அதிகமான விளையாட்டைப் பார்க்கப் போகிறீர்கள். இதற்காக ஏகாகிரதா சக்தி அவசியமாகிறது. ஏகாக்கிரஹ சக்தியின் மூலமாக திடமான சக்தியும்

கூட சகஜமாக வந்து விடுகிறது மேலும் திடமான உறுதித் தன்மையானது வெற்றியை இயல்பாகவே பெற்றுத் தந்து விடுகிறது. ஆதலால் விசேஷமாக இந்த சக்திசாலியான தினத்தில் இந்த சந்திசாலியான அப்பியாசத்தில் விசேஷ சுவனம் வைக்க வேண்டும். ஆகவே தான் பக்தி மார்க்கத்தில் கூட "மனதால், தோல்வியடைந்தவர்கள். தோல்வியடைந்தார்கள். மனதை வென்றவர்கள் வெற்றி அடைந்தார்கள்" என்று கூறுகின்றார்கள். எப்போது எனது மனம் என்று சொல்கின்றீர்களோ, அப்போது எனக்கு மாலிக் (எஜமானன்) ஆகி சக்திகளின் கடிவாளம் மூலமாக வெற்றி பெறுங்கள். இந்த புத்தாண்டில் இந்த ஹோம் ஒர்க்கில் விசேஷ கவனம் வேண்டும். இதற்குத் தான், யோகி ஆகி விட்டீர்கள் ஆனால் இப்போது பிரயோகி ஆகுங்கள் என்பதாகும்.

மற்றபடி இன்றைய நாள் சிநேகத்திற்கான ஆன்மீக சம்பாஷனை செய்யும் நாளாகும் -ரூஹ்-ரிஹான்! இன்றைக்கு சிநேக பூர்வமான புகார்கள் மேலும் சமான் ஆவதற்கான ஆர்வம், உற்சாகம் என்று மூன்று விதமான ஆன்மீக சம்பாஷனை பாப்தாதாவை வந்தடைந்தது. நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் அன்பு நிறைந்த நினைவுகள் சிநேகம் நிறைந்த அன்பு பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தது, கடிதமும் வந்தது, ஆன்மீக சம்பாஷனையும் வந்தது, செய்தியும் வந்தது. பாப்தாதா குழந்தைகளின் சிநேகத்தை ஏற்றுக் கொண்டார். உளப்பூர்வமாக, இதற்குப் பதிலாக அன்பு நினைவுகளைக் கொடுத்தார். உள்ளப் பூர்வமான ஆசிகளையும் வழங்க ஒவ்வொருவருடைய பெயரையும் குறிப்பிட முடியாது. நிறைய பேர் இருக்கிறார்கள் ஆனால் மூலை முடுக்குகள், கிராமங்கள், நகரங்கள் என்று எல்லாப் பக்கங்களிலுமுள்ள குழந்தைகள் பாந்தேலி மாதாக்கள் புலம்பிக் கொண்டிருப்பவர்கள் ஆகிய அனைவருடைய அன்பு நினைவுகள் வந்து சேர்ந்தது. இதற்கு பாப்தாதா கூறுகின்றார், சிநேகத்திற்குப் பதிலாக, இப்போது தங்களைத் தாங்களே திருப்புங்கள் பரிவர்த்தனை செய்யுங்கள். இப்போது மேடையில் (ஸ்டேஜில்) தங்களுடைய சம்பன்ன சொரூபத்தைப் பிரத்யக்ஷம் செய்யுங்கள். உங்களுடைய சம்பன்னதா மூலமாக துக்கமும், அசாந்தியும் முடிவடைந்து விடப்போகிறது. இப்போது உங்களுடைய சகோதர சகோதரிகளை அதிக துக்கப்பட வைத்து விடாதீர்கள். இந்த துக்கம், அசாத்தியிலிருந்து விடுதலை செய்யுங்கள்.

மிகவும் பயத்தில் பீதியடைந்து போய் இருக்கிறார்கள். என்ன செய்வது? என்ன ஆகுமோ? இப்படியான அந்தகாரத்தில் இருளில் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது ஆத்மாக்களுக்கு, வெளிச்சத்திற்கான பாதையைக் காட்டுங்கள். ஆர்வம் இருக்கிறதா? இரக்கம் வருகிறதா? இப்போது விசாலமாகப் பாருங்கள். எல்லையற்ற பார்வை இருக்கட்டும் நல்லது. ஹோம் ஒர்க் நினைவு இருக்குமல்லவா? மறந்து விடக்கூடாது. பரிசு (பிரைஸ்) கொடுப்பேன். யார், ஒரு மாத காலத்தில் மனதை முற்றிலும் தன் வசத்தில் கண்ட்ரோலிங் பலர் மூலம் கொண்டு வந்து எங்கு வேண்டுமோ, எப்போது வேண்டுமோ அங்கு ஏகாக்கிரஹம் செய்ய வேண்டும். இதற்கான சார்ட்டின் ரிசல்ட் பார்த்து வெகுமதி கொடுப்பேன், சரிதானா? யார் வெகுமதி வாங்குவார்கள்? பாண்டவர்களா? முதலில் பாண்டவர்களா? பாண்டவர்களுக்கு நல் ஆசிகள் மேலும் சக்திகள் ஏ ஒன். பாண்டவர்கள் நம்பர் ஒன் என்றால் சக்திகள் ஏ ஒன்! சக்திகள் ஏ ஒன் ஆகவில்லை என்றால் பாண்டவர்கள் ஏ ஒன் இப்போது வேகத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்துங்கள். சாவகாசமாக அல்ல, தீவிர கதியில். ஆத்மாக்களின் துக்கத்தை வேதனையை நிவர்த்தி செய்யுங்கள் கருணையின் குடை நிழல் ஆத்மாக்களின் மீது இருக்கட்டும். நல்லது, இப்போது என்ன செய்ய வேண்டும்?

**சேவைக்கான வாய்ப்பு: தமிழ்நாடு, ஈஸ்டர்ன் மற்றும் நேபால்:** சேவாதாரிகளாக வந்திருப்பவர்கள் எல்லோரும் எழுந்திருங்கள். மிகப் பெரிய குருப்பாக இருக்கிறது. 3000-பேர் சேவையில் கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல திறமையைக் காட்டியிருக்கிறார்கள். 15-நாட்கள் சேவை செய்வார்கள். 2-ஜென்மத்திற்கு புண்ணியக் கணக்கை சேமித்து விடுவார்கள். கெட்டிக்காரர்கள் ஆகி விட்டார்கள் அல்லவா? நன்றாகச் செய்திருக்கிறார்கள். பிரம்மாபாபாவைப் பிரத்யக்ஷம் செய்யக்கூடிய பூமி கல்கத்தா தானே? சரி கல்கத்தாக்காரர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. கல்கத்தாக்காரர்களுக்கு விசேஷமான பொறுப்பிருக்கிறது. சொல்லட்டுமா? நல்லது, பிரம்மாபாபாவை பிரத்யக்ஷம் செய்யக்கூடிய பூமி கல்கத்தா என்றால், பாப்தாதா பிரத்யக்ஷம் ஆகக்கூடிய பூமி எதுவாக இருக்கும்? கல்கத்தாவாக இருக்குமா? என்ன செய்வீர்கள்? பெரிய புரோகிராம் செய்து விட்டீர்கள். இனி என்ன செய்வீர்கள். ஏதாவது

கமால் செய்து காண்பியுங்கள். எங்கிருந்து ஆரம்பமாகியதோ, அங்கு தான் முடிவும் ஆகும். எல்லோரும் கல்கத்தா பூமிக்கு வந்தனம் (பிரணாம்) செய்வார்கள். வாஹ் கல்கத்தா நிவாசிகளே வாஹ்! இப்படி, கமால் செய்யக்கூடிய புரோகிராம் செய்யுங்கள். புதிதாக ஏதாவது செய்யுங்கள். மெகா புரோகிராம் அதிகம் நடந்து விட்டது. இனி ஏதாவது புதுமையாகச் செய்யுங்கள் நல்லது. பாப்தாதா குழந்தைகள், புண்ணியத்தை சேமிப்பதற்கான விதியைப் பார்த்து குஷியடைகின்றார். இதுவும் கூட கோல்டன் சான்ஸ் தான் நல்லது.

நேபால் மற்றும் தமிழ்நாடு: கல்கத்தாவில் பிரவேசம் ஆவதற்கு முன்பாகவே, நேப்பாளின் தொடர்பு முதலிலேயே இருந்தது. ஆதலால் நேப்பாளம் கமால் செய்து காண்பிக்க வேண்டியதாயிருக்கும். நேபாளத்துக்காரர்கள் எழுந்திருங்கள் நேபாள்காரர்களுக்கு, ராஜ்ய அதிகாரிகள், கவர்ன்மெண்ட்காரர்கள் அல்ல, ராஜவம்ச ஆத்மாக்களுக்கு அதிகமாக மங்களம் (கல்யாண்) செய்ய வேண்டும். யாராவது பழைய ராஜ வம்சத்திலிருந்து வந்திருக்கிறார்களா? மதுபன் வந்திருக்கிறார்களா? இப்போது அவர்களை இன்னும் நெருக்கமாகக் கொண்டு வாருங்கள். கனெக்ஷன் நன்றாக இருக்கிறது. இனி உறவில் கொண்டு வாருங்கள் நல்லது. நேபாளமும் கூட நல்ல சேவை செய்கிறார்கள் நல்லது. நேபாள்காரர்களுக்கு பாராட்டுகள். இன்னும் சேவையை அதிகரிக்க வேண்டும். ராஜ வம்சத்துகாரர்களை மதுபன்னுக்கு அழைத்து வருவார்கள். நல்லது. தமிழ்நாட்டுக்காரர்கள் எழுந்திருங்கள். ரெம்பவும் பின்னால் அமர்ந்திருக்கிறார்கள், கை அசையுங்கள். தமிழ்நாடு என்ன செய்யும்? சேவையின் விஸ்தாரம் நன்றாகச் செய்திருக்கின்றீர்கள். ரோஸி குழந்தையை நினைவு செய்கிறார்கள் அல்லவா? அஸ்திவாரம் நன்றாகப் போட்டிருக்கின்றார். இப்போது அதற்கு நீங்கள் எல்லோரும் நிமித்தமாகி இன்னும் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? என்ன செய்ய முடியாது. என்ன வேண்டுமோ சுப சங்கல்பம் செய்யுங்கள், எல்லாம் செய்ய முடியும். தைரியம் உங்களுடையது, உதவி பாபாவினுடையது. தைரியசாலிகளாகத்தான் இருக்கிறார்கள். தைரியம் நன்றாக இருக்கிறது உதவியும் பாபாவிடமிருந்து கிடைக்கிறது. இன்னும் தைரியம் வைத்தால், உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும். மற்றப்படி ரோஸி குழந்தைக்குப் பிறகு நன்றாக

பராமரிப்பு செய்து விட்டீர்கள். இன்னும் வருங்காலத்திலும் நீங்கள் எல்லாம் சேர்ந்து ரோஸி குழந்தைக்கு ரிடர்ன் பிரதி உபகாரம் கொடுப்பீர்கள். நல்ல அஸ்திவாரம் போட்டிருக்கிறீர்கள். எல்லோரும் குஷியாக இருக்கின்றீர்களா? யார், குஷியாக இருக்கின்றார்களோ, அவர்கள் எல்லோரும் கை உயர்த்துங்கள் குஷி அல்ல, சதா குஷி, நல்லது. குஷியாயிருங்கள் குஷியைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நல்லது அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, பீஹாரும் கூட இருக்கிறது பங்களாதேஷும் இருக்கிறது. இவ்வளவு பேரும் ஒன்று சேர்ந்திருக்கிறீர்களா? ஒரிஸ்ஸாக்காரர்களும் நல்ல சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். பீஹார்காரர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் இந்த ஜோன் நம்பர் ஒன் ஆக வேண்டும். எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? 5-7 இடங்கள் சேர்ந்தால், மொத்தம் எவ்வளவு பேர் இருப்பார்கள். ஆகவே பாப்தாதா வலது கரங்களைப் பார்த்து ரைட் ஹேண்ட்ஸ் பார்த்து குஷி அடைகின்றார். எவ்வளவு பெரிய ஜோனோ, அவ்வளவு பெரிய கமால் செய்து காண்பிக்க வேண்டும் நீங்கள் 6-7 இடங்களிலிருந்து குரல் எழுப்பினாலே போதும், அந்த சப்தம் தானாகவே பரவிவிடும் வங்காளத்திலிருந்தும் சப்தம் பரவட்டும், ஒரிஸாவிலிருந்தும் சப்தம் பரவட்டும், நேபாளத்திலிருந்தும் சப்தம் பரவட்டும், அஸ்ஸாமிலிருந்தும் சப்தம் பரவட்டும். இப்படி எல்லா மூலைகளிலிருந்தும் சப்தம் கிளம்புமானால், எவ்வளவு பெரிய சப்தம் கேட்கும் கொஞ்சம் கமால் செய்யுங்கள். எல்லாவற்றையும் விட பெரிய ஜோன். இதில் இத்தனை மாகாணங்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. மகாராஷ்டிரா, குஜராத்திலும் கூட இருக்கிறது. மூன்று இடங்கள் பெரிது. இப்போது கமால் செய்து காண்பியுங்கள்.

**கல்வித்துறை (Educational wing): 200-பேர் வந்திருக்கிறார்கள்**. கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் ஏதாவது புது பிளான் தயார் செய்திருக்கிறார்களா? புதிதாக ஏதாவது செய்திருக்கிறீர்களா? நல்லது. கல்வித்துறை விசேஷமானது கல்வித்துறையில் ஒருக்கால், உங்களுடைய ஏதாவதொரு ஸ்தானத்தில் கூட வகுப்பிற்கு வகுப்பு பரிவர்த்தனை செய்து காண்பித்தால் அரசு எவ்வளவு மகிழ்ச்சி அடையும். எப்படி கிராமத்துறையினர், ஏதாவதொரு கிராமத்தை தத்தெடுக்கிறார்கள் அல்லவா? அதுபோல நீங்கள் ஏதாவது ஒரு யுனிவர்சிட்டியில், அல்லது காலேஜில் ஸ்கூல் வகுப்பில் முழு

வகுப்பையும் மாற்றிக் காண்பித்தீர்களானால், மெஜாரிட்டி முழுமையாக இல்லாமல், கொஞ்சப்பேர் இதில் குறைந்தாலும் சரி. இது வேறு விஷயம் ஆனால் ஏதாவது ஒரு வகுப்பில் நடைமுறையில் பரிவர்த்தனை செய்து காண்பித்தால் அரசு வரையிலும் சப்தம் சென்றடையும், மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள். வாழ்த்துக்கள். பிளான் பற்றி கூறினார்கள் மிகவும் நல்லது முன் கூட்டியே வாழ்த்துக்கள். நல்லது. பாருங்கள் தெற்கு குஜராத்தின் வைஸ்-சான்ஸ்லரிடமிருந்து இவர் ஒருவர் நிமித்தம் ஆனார். அநேக ஆத்மாக்களிடமிருந்து உங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதம் கிடைக்கும்! எந்த மாணவர் பரிவர்த்தனை ஆனாரோ, அவருடைய ஆசிகள் உங்கள் வங்கியில் சேரும். ஆகவே நீங்கள் ஷேர் ஹோல்டர் ஆகி விட்டீர்கள். பரமாத்ம ஷேர் ஹோல்டர். அந்த ஷேர் அல்ல. மேலே போகக்கூடிய ஷேர் அல்ல. ஏதாவது வகுப்பு வாரியாக, மெஜாரிட்டி பரிவர்த்தனை செய்து காண்பியுங்கள் நல்லது. நிமித்தமாகியிருக்கின்றார். இனி கமால் செய்து காண்பியுங்கள். ஏதாவது வகுப்பு வாரியாக, மெஜாரிட்டி பரிவர்த்தனை செய்து காண்பியுங்கள். நல்லது. உங்களுக்குள்ளேயே தீர்மானம் செய்து கொண்டு முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். ஏதாவது நிவாரணம் வேண்டுமானால், உங்களுக்குள் மீட்டிங் செய்து தீர்மானியுங்கள். ஆகும். செய்யத்தான் வேண்டும். அதிகரிக்கத்தான் போகிறது!

டபுள் விதேஷி: டபுள் விதேஷிகளைப் பார்த்து பாப்தாதா கூறுகின்றார் டபுள் விதேஷி என்றால் டபுள் புருஷாரத்தில் முன்னேறிச் செல்பவர்கள் டபுள் விதேஷி என்ற டைட்டில் இருக்கிறதே, அடையாளம் இருக்கிறதல்லவா உங்களுக்கு அதே மாதிரி டபுள் விதேஷி நம்பர் ஒன்னில் வருவதற்கு டபுள் வேகத்தில் முன்னேறுபவர்கள் நல்லது. ஒவ்வொரு குரூப்பிலும் பாப்தாதா டபுள் விதேஷிகளைப் பார்த்து குஷி அடைகின்றார். ஏனெனில் பாரதவாசிகள் உங்கள் எல்லோரையும் பார்த்து குஷி அடைகின்றார்கள். பாப்தாதாவும் கூட விஷ்வ கல்யாணகாரி டைட்டிலைப் பார்த்து குஷி அடைகின்றார். இப்போது டபுள் விதேஷிகள் என்ன பிளான் செய்து கொண்டிருக்கிறீர்கள்? பாப்தாதாவுக்கு ரொம்ப குஷியாக இருக்கிறது ஆப்பிரிக்காகாரர்கள் தீவிர புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதலால் தங்கள் எல்லோரும் கூட அக்கம் பக்கத்திலுள்ள உங்களுடைய சகோதர

சகோதரிகள் யாரெல்லாம் விடுபட்டுப் போய் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் செய்தி கொடுப்பதற்கான ஆர்வம், உற்சாகம் கொண்டிருங்கள் யாரும் புகார் செய்யும்படி சான்ஸ் கொடுக்கக் கூடாது. விருத்தியாகக் கொண்டிருக்கிறது மேலும் விருத்தியாகிக் கொண்டேயிருக்கும் ஆனால் இப்போது புகார் இல்லாமல் முடித்து விட வேண்டும். டபுள் விதேஷிகளுடைய விசேஷத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டு தான் இருக்கின்றேன். கபடமற்ற தந்தையை சம்மதப்படுத்துவதற்கான சாதனம் -சச்சி தில் பர் சாஹப் ராசி -இது டபுள் விதேஷிகளின் விசேஷமாகும். தந்தையைச் சரிக்கட்டுவதென்றால், மிகவும் திறமை வந்து விடுகிறது. உண்மையான உள்ளம் தந்தைக்கு ஏன் பிரியமானதாக இருக்கிறது. ஏனென்றால், தந்தையை சத்தியமானவர் என்று கூறுகின்றார்கள். காட் இஸ் ட்ரூத் (இறைவன் சத்தியமானவர்) என்று சொல்கிறார்கள் அல்லவா? ஆதலால் பாப்தாதாவுக்கு கபடமற்ற சுத்தமான உள்ளம் உடையவர்கள் மிகவும் பிரியமானவர்களாக இருக்கிறார்கள் அப்படித்தானே? கபடமில்லா உள்ளம், உண்மையான உள்ளம், சத்தியம் தான் பிராமண வாழ்க்கையின் மகானத்தா ஆதலால் டபுள் விதேஷிகளுக்கு பாப்தாதா சதா, நினைவு செய்கிறார். வெவ்வேறு தேசங்களில் ஆத்மாக்களுக்கு செய்தி கொடுப்பதில், நிமித்தமாகி விட்டார்கள் பாருங்கள். எத்தனை தேசங்களிலிருந்து வருகின்றார்கள். ஆகவே இத்தனை நாடுகளில் உள்ளவர்களுக்கு மங்களம் உண்டானதல்லவா? ஆகையால் பாப்தாதா இங்கே நீங்கள் நிமித்தமாகி விட்டீர்கள் ஆனால் நாலா பக்கங்களிலுமுள்ள டபுள் விதேஷி குழந்தைகளுக்கு, நிமித்தமாயிருக்கின்ற குழந்தைகளாகிய உங்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றார். ஆசிகளை வழங்குகின்றார். பறந்து கொண்டே இருங்கள். பறக்கும்படி செய்யுங்கள். பறக்கும் கலை எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடியதாகவே இருக்கும் எல்லோரும் புத்துணர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். புத்துணர்வு பெற்றீர்களா? சதா அமரராக இருப்பீர்கள் அல்லது மதுபன்னிலேயே, பாதியை விட்டுச் சென்று விடுவீர்களா? கூடவே இருக்கும். கூடவே இருக்குமா? அமர் பவ வரதானம் இருக்கிறதல்லவா? ஆகவே எதை பரிவர்த்தனை செய்தீர்களோ அது சதா அதிகமாகிக் கொண்டேயிருக்கும். நிலைத்திருக்கும். நல்லது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது.

நீங்களும் கூட குஷியாக இருக்கிறீர்கள். மற்றவர்களுக்கும் குஷியைக் கொடுக்க வேண்டும். நல்லது.

**ஞான சரோவர் -10 ஆண்டுகள் ஆகி விட்டது!** நல்லது. ஞான சரோவர் ஒரு விசேஷத்தை ஆரம்பித்து வைத்தது. எப்போது ஞான சரோவர் ஆரம்பமானதோ அப்போதிருந்து வி.ஐ.பி., ஐ.பி.க்கான விசேஷ விதிபூர்வமான புரோகிராம் ஆரம்பமானது. ஒவ்வொரு வர்க்கத்தினருக்குமான புரோகிராம் ஒன்றன் பின் ஒன்றாக நடந்து கொண்டே இருக்கின்றது மேலும் குறிப்பாக, ஞான சரோவரில் வருகின்ற ஆத்மாக்களுக்கான ஸ்தூல சேவை மற்றும் அலௌகீக சேவை மிக நல்ல விருப்பத்தோடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆகையால், ஞான சரோவர்காரர்களுக்கு பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். சேவையின் ரிசல்ட்டைப் பார்க்கும்போது எல்லோரும் குஷியுடன் திரும்பிச் செல்கிறார்கள். மேலும் குஷி, குஷியுடன் மற்றவர்களையும் உடன் அழைத்து வருகின்றார்கள். நாலா பக்கமும் சப்தம் பரவுவதற்கு ஞான சரோவர் அமைக்கப்பட்டது. ஆதலால் வாழ்த்துக்கள். மேலும் சதா வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

இப்போது ஒரு விநாடியில், மனதை ஏகாக்கிரஹம் செய்ய முடியுமா? எல்லோரும் ஒரு விநாடியில், பிந்து ரூபத்தில் நிலைத்து விடுங்கள். (டிரில் செய்வித்தார்) நல்லது. இப்படிப்பட்ட பயிற்சியை, இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போது செய்து கொண்டேயிருங்கள்.

நாலா பக்கமுள்ள, சிநேகி லவ்லீன் ஆத்மாக்களுக்கு சதா இரக்க மனம் ஆகி ஒவ்வொரு ஆத்மாவையும் துக்கம், அசாந்தியிலிருந்து விடுவிக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு சதா தன்னுடைய மனம், புத்தி, சமஸ்காரத்தை வசப்படுத்தக்கூடிய சக்தி மூலமாக (கன்ட்ரோலிங் பவர் மூலமாக) கண்ட்ரோலில் வைக்கக் கூடிய மகாவீர் ஆத்மாக்களுக்கு, சதா சங்கம யுகத்தின் ஜீவன் முக்த் ஸ்திதியை அனுபவம் செய்யக்கூடிய பாப்சமான், ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் ஆயிரம் மடங்கு (பதம் குணா) அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: (மோகினி சகோதரியுடன்) இவரும் தனது சரீரத்தை நடத்துவதற்குக் கற்றுக் கொண்டு விட்டார். நடந்து கொண்டேயிருக்கும். (சாந்தாமணி தாதியிடம்) இவரும் கூட மிக நன்றாக நடத்திக் கொண்டிருக்கின்றார். (எல்லா தாதிகளையும் பார்த்தவாறே) ஆதி ரத்தினங்களாகிய உங்களில் யாராவது ஆஜரில்லாமல் இருந்தால், காலி-காலியாக இருக்கிறது. ஆதி ரத்தினங்களிடம் இந்த விசேஷம் உள்ளது. எங்கு சென்றாலும், எல்லோருக்கும் குஷியாக இருக்கிறது. பேசுங்கள் பேசாமலிருங்கள் நீங்கள் ஆஜராக இருந்தாலே குஷி தான். சரீரத்தை நடத்துவதற்குத் தெரிந்து விட்டது. வந்து விட்டதல்லவா? எல்லோருடைய சரீரங்களும் சிறிதும், பெரிதுமாக கொஞ்சம் தொந்தரவு கொடுக்கிறது. இருந்தாலும் நடத்தத் தெரிந்து விட்டது. (தாதிஜியுடன்) மிக நல்ல பார்ட் செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். சரீரத்தைப் பற்றியும் தெரிந்து விட்டது. இதைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார். ஆதி ரத்தினங்கள் குறைந்தவர்கள் அல்ல. ஆதி ரத்தினங்கள் என்றால் ஒவ்வொரு ஆதி ரத்தினத்திற்கும் ஒரு விசேஷம் இருக்கிறது.

நிர்மல்சாந்தா தாதியுடன்: மிக நல்ல பார்ட் செய்து கொண்டிருக்கிறீர்கள். வலி இல்லை தானே! (பாபாவை சந்தித்ததும், வலி இருந்தாலும் ஓடிப்போய்விடும்) உங்களுடைய பெயரைக் கேட்டு எல்லோருக்கும் குஷியாக இருக்கிறது. பர்தாதி. ஆகவே பர்தாதி என்ற பெயர் கேட்டு குஷியடைந்து விடுகிறார்கள். மிகவும் நல்லது. நன்றாக இருக்கிறீர்கள் அல்லவா? சரீரம் நன்றாக இருக்கிறது. மிகவும் நல்லது. இப்போதோ, குளிரை வென்று விட்டீர்கள் வெற்றியாளர் ஆகி விட்டீர்கள். மிகவும் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋

**03.02.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# சேவை செய்து கொண்டே உபராம் மற்றும் 'பேகத்' வைராக்கிய விருத்தி மூலம் எவர்ரெடியாகி, பாபா சமானமாக சம்பன்னம் ஆகுங்கள்! (உபராம் -பாபாவாகிய ராம் நினைவு மூலம் அருகாமையில் இருக்கும் அனுபவம்).

இன்று கிரேட்-கிரேட்-கிராண்ட் ஃபாதர், நாலா பக்கமும், கோடியில் சிலராகவும், அந்த சிலரிலும் ஒரு சிலராக இருக்கின்ற, தன்னுடைய குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். இவ்வளவு விசேஷ பாக்கியம் வேறு யாருக்கும் கிடைக்க முடியாது. ஒவ்வொரு குழந்தையினுடைய விசேஷத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். எந்தக் குழந்தைகள் பாப்தாதாவிடம் உள்ளன்புடன் சம்மந்தம் வைத்திருந்தார்களோ, அப்படிப்பட்ட ஒவ்வொரு குழந்தையிடமும் ஏதாவதொரு விசேஷம் நிச்சயமாக இருக்கின்றது. எல்லாவற்றிலும் முதலாவது விசேஷம் சாதாரண ரூபத்தில் வந்திருக்கின்ற தந்தையை (பாபா) புரிந்து கொண்டு "மேரா பாபா" என்னுடைய தந்தை தான் என்று ஏற்றுக் கொண்டு விட்டார்கள். இப்படிப் புரிந்து கொண்டது தான் எல்லாவற்றிலும் மிகப் பெரிய, விசேஷம் வேதாந்திகள், விஞ்ஞானிகள், தர்மாத்மாக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த சாதாரண குழந்தைகள் புரிந்து கொண்டு தன்னுடைய அதிகாரத்தை பெற்றுக் கொண்டார்கள். யாராவது வந்து இந்த சபையில் உள்ள குழந்தைகளைப் பார்த்தால், இந்தகள்ளங்கபடமில்லாத மாதாக்கள், இந்த சாதாரண குழந்தைகள் இவ்வளவு பெரிய தந்தையை (பாபா) அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியாது. ஆகையால்

புரிந்து கொள்வது, புரிந்து கொண்டு தந்தையை தன்னுடையவராக ஆக்கிக் கொள்வது என்ற விசேஷத் தன்மை யானது கோடியில் ஒரு சிலராக இருக்கின்ற குழந்தைகளாகிய உங்களுடைய பாக்கியம். எல்லாக் குழந்தைகளும், அதாவது இங்கு எதிரில் அமர்ந்திருப்பவர்கள் மற்றும் வெகுதூரத்தில் இருந்து கொண்டு எதிரில் அமர்ந்திருக்கும் அனுபவம் செய்து கொண்டிருப்பவர்கள் ஆகிய அனைவரும் உள்ளன்புடன் புரிந்து கொண்டு விட்டீர்கள். புரிந்து கொண்டு விட்டீர்களா? புரிந்து கொண்டிருக்கிறீர்களா? யாரெல்லாம் புரிந்து கொண்டு விட்டார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். புரிந்து கொண்டு விட்டீர்களா? நல்லது. ஆதலால் பாப்தாதா புரிந்து கொண்டு விட்ட விசேஷத்திற்காக, ஒவ்வொரு குழந்தைக்கும் வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றார். வாஹ் (ஆஹா) பாக்கியவான் குழந்தை களே வாஹ்! புரிந்து கொள்வதற்கான மூன்றாவது கண் கிடைத்து விட்டது. குழந்தைகளினுடைய உள்ளத்தின் பாடலை, பாப்தாதா கேட்டுக் கொண்டே இருக்கின்றார். எந்தப் பாட்டு? அடைய விரும்பியதை, அடைந்து விட்டேன் தந்தையும் கூட கூறுகின்றார். ஓ! செல்லக் குழந்தைகளே எதை தந்தையிடமிருந்து பெற வேண்டும் என்று விரும்பினீர்களோ, அதை பெற்றுக் கொண்டு விட்டீர்கள். ஒவ்வொரு குழந்தையும், அநேக ஆன்மீகப் பொக்கிஷங்களுக்கு உரிமைக்குரிய குழந்தையாகி (பாலக்) மாலிக் (எஜமான், அதிகாரி) ஆகி விட்டீர்கள்.

ஆகையால், இன்று பாப்தாதா பொக்கிஷங்களின் "மாலிக்" ஆக இருக்கின்ற குழந்தைகளின் பொக்கிஷப் பட்டியலைப் பார்த்தார். (பொக்கிஷ சேமிப்பு கணக்கு) தந்தை பொக்கிஷத்தை, ஒருவருக்கு எவ்வளவு கொடுத்தாரோ, அதே மாதிரியே எல்லோருக்கும் கொடுத்தார். சிலருக்கு ஆயிரம், சிலருக்கு லக்ஷம் என்று கொடுக்கவில்லை ஆனால் பொக்கிஷங் களைப் பற்றி அறிவது, மற்றும் அடைவது, வாழ்க்கையில் இணைத்துக் கொள்வது (உபயோகம்) இதில் நம்பர்வாராக இருக்கின்றார்கள். பாப்தாதா தற்சமயத்தில் அடிக்கடி, வெவ்வேறு விதத்தில் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கின்றார். சமயம் நெருங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து தனக்குத் தானே சூட்சுமமான விசால புத்தியோடு சோதித்துப் பார்க்க வேண்டும். அதாவது என்ன கிடைத்தது, எதை அடைந்தோம் மற்றும் நிரந்தரமாக அந்த பொக்கிஷங்களால் பலன் அடைந்து கொண்டேயிருக்கின்றீர்களா என்று சோதித்துப்

பார்த்தல் சோதனை செய்து பார்ப்பது மிகவும் அவசியம். ஏனென்றால் நிகழ்காலத்தில், மாயை விதவிதமான ராயல் ரூபத்திலான அலக்ஷியம் மற்றும் ராயலான சோம்பல் ரூபத்தில் பரீட்சித்துப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது. ஆதலால், தன்னுடைய சோதனையை செய்து கொண்டேயிருங்கள். கவனமாக சோதிக்க வேண்டும். அலக்ஷியமாக சோதனை செய்யக்கூடாது. தவறு செய்யவில்லை, துக்கம் கொடுக்கவில்லை, கெட்ட பார்வை இல்லை, இப்படியும் சோதிக்கிறீர்கள் ஆனால் நல்லதிலும், நல்லதாக என்ன செய்தீர்கள்? சதா ஆத்மீக திருஷ்டி இயற்கையாகவே இருந்ததா? அல்லது மறதி, நினைவு என்ற விளையாட்டாக இருந்ததா? எவ்வளவு பேருக்கு சுபபாவனை, சுப அபிலாஷை ஆசீர்வாதம் கொடுத்தீர்கள்? இப்படிப்பட்ட சேமிப்புக் கணக்கு எவ்வளவு மற்றும் எப்படி இருந்தது? ஏனென்றால், சேமிப்பு கணக்கு இப்போது மட்டுமே செய்ய முடியும் என்பதை மிக நன்றாக அறிவீர்கள். இந்த சமயத்தில் செய்யும் சேமிப்புக் கணக்கு முழு சீசனுக்குமான சேமிப்பாகும். பிறகு முழு நேரமும், சேமிப்பின் அடிப்படையில், இராஜ்ய பாக்கியம் மற்றும் பூஜ்ய தேவ-தேவியர் ஆவதற்காகும். சேமிப்பு குறைவாக இருந்தால் இராஜ்ய பாக்கியமும் குறைவு தான். பூஜ்யராவதிலும் நம்பர்வாராகத் தான் இருப்பார்கள் சேமிப்புக் குறைவாக இருந்தால், பூஜையும் குறைவாகவே செய்வார்கள். விதிபூர்வமான சேமிப்பில்லாமலிருந்தாலும், பூஜையும் கூட விதி பூர்வமாக இருக்காது. அவ்வப்போது விதி பூர்வமாக இருந்தால், பூஜையும், பதவியும் எப்போதாவது தான் இருக்கும். ஆதலால் பாப்தாதாவுக்கு ஒவ்வொரு குழந்தையின் மீதும் அதிக அன்பு இருக்கிறது. ஆதலால் ஒவ்வொரு குழந்தையும் சம்பன்னம் ஆக வேண்டும், சமான் ஆக வேண்டும் என்பதே பாப்தாதாவினுடைய விருப்பமாக இருக்கிறது. சேவை செய்யுங்கள் ஆனால் சேவை செய்யும் போதும் உபராம், பேகத். (விசாலமான, எல்லையற்ற).

மெஜாரிட்டி குழந்தைகளிடம் யோகம் அதாவது நினைவு எனும் பாடத்தில் கவனம் குறைவாகவும், சேவையில் கவனம் அதிகமாகவும் இருப்பதை பாப்தாதா பார்த்தார் ஆனால், நினைவில்லாமல், சேவை அதிகமாகும்போது, அதில் ஸ்தூலம் (உடல் நினைவு) வந்து விடுகிறது. உபராம் உணர்வு இருப்பதில்லை. பெயர், புகழ், அதிகாரம், கலப்படம் ஆகி விடுகிறது. பேகத் உணர்வு (சரீர உணர்வைக் கடந்த நிலை)

குறைந்து விடுகிறது. ஆதலால் கோடியில் சிலராகவும், அந்த சிலரில் ஒரு சிலராகவும் இருக்கின்ற என்னுடைய குழந்தைகளே! இப்போதிருந்தே எவர் ரெடியாக ஆகி விடுங்கள் என்று பாப்தாதா விரும்புகின்றார். ஏன்? ஏனெனில், நேரம் வந்தவுடன் ஆகி விடலாம் என்று சிலர் நினைக்கிறார்கள் ஆனால் நேரம் உங்களது படைப்பு அப்படியிருக்கும்போது, படைப்பை உங்களுக்கு ஆசிரியராக ஆக்கப் போகிறீர்களா? இன்னொரு விஷயம் தெரியுமல்லவா! வெரு காலத்தின் கணக்கு வெகு காலத்தின் சம்பன்ன நிலை. வெகு கால பிராப்தியைக் கொடுப்பதாக இருக்கிறது. ஆகையால், நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதன் அடிப்படையில், வெகுகால சேமிப்பு அவசியமானதாக இருக்கிறது. பிறகு, இன்னும் நேரம் இருக்கின்றது என்று நினைத்தோம் என்று புகார் செய்யக் கூடாது. இப்போதிருந்தே, வெகுகாலம் பற்றிய கவனம் வையுங்கள். புரிந்ததா? அட்டென்ஷன் ப்ளிஸ்.

பாப்தாதா, ஒவ்வொரு குழந்தையும், எந்த ஒரு பாடத்திலும் குறைவாக இருந்து விடக்கூடாது என்று விரும்புகின்றார். பிரம்மாபாபாவிடம் அன்பு இருக்கிறதல்லவா? பிரம்மாபாபா விடம் உள்ள அன்புக்கு ரிடர்ன் ஆக (பிரதி உபகாரம்) அன்புக்கு ரிடர்ன் கொடுப்பீர்கள் அல்லவா? அப்படியானால் அன்பிற்குப் பிரதி உபகாரமாக, தன்னிடமுள்ள குறைகளை சோதித்துப் பார்த்து. ரிடர்ன் கொடுங்கள். உங்களைத் திருப்புங்கள். தங்களைத் தாங்களே திருப்பிக் கொள்வது (மாற்றிக் கொள்வது) தான் ரிடர்ன் (முதலில் இருந்த மாதிரியாக, திருப்பிக் கொள்வது). அப்படியானால், ரிடர்ன் கொடுப்பதற்கான தைரியம் இருக் கிறதா? கையை உயர்த்தி விடுவீர்கள், மகிழ்ச்சியும் அடைவீர்கள். கையைப் பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். இனி மனதில் பக்கா-பக்காவாக ஒரு பெர்சன்டேஜ் (ஒருசதவிகிதம்) கூட கச்சா (கறை) இருக்கக்கூடாது. பக்காவாக விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். ரிடர்ன் கொடுத்து தான் ஆக வேண்டும். தங்களை தாங்களேமாற்றிக் கொள்ள வேண்டும்.

இப்போது சிவராத்திரி வரப் போகிறதல்லவா? ஆகவே மிக அன்புடன் எல்லாக் குழந்தைகளும் ஆர்வத்துடன் தந்தையின் ஜெயந்தியோடு கூடவே தன்னுடைய ஜெயந்தியையும் கொண்டாடுவதற்காக

வருகிறது. நல்ல நல்ல புரோகிராம் செய்து கொண்டிருக்கிறார்கள். சேவைக்கான பிளான் மிக நன்றாகத் தயார் செய்கிறீர்கள். பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார் ஆனால்... லேகின் (ஆனால்) என்று சொல்வது நன்றாக இல்லை. ஐகதம்பா 'மாதா லேகின் (ஆனால்) என்ற வார்த்தைக்கு என்ன சொல்கின்றார் என்றால், சிந்தி பாஷையில் லேகின் கின் என்பது கிச்சடாவை (குப்பை) குறிக்கும். லேகின் என்று சொல்வதன் பொருள், ஏதாவது கொஞ்சம் குப்பையை வாரிக் கொள்வது என்று பொருள். ஆதலால் லேகின் என்று சொல்வது 'நன்றாக இல்லை. சொல்லத் தான் வேண்டியதிருக்கிறது. சேவைக்கான பிளான் தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள் இனியும் செய்வீர்கள் ஆனால் இந்த விரதம், (ஒரு சதவிகிதம் கூட குறை என்பது இருக்கக் கூடாது) கொடுப்பதற்கான புரோகிராம் செய்ய வேண்டும். ரிடர்ன் கொடுக்கத்தான் வேண்டும். ஏனெனில் பாப்தாதா அல்லது வேறு யாராவது எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால்? இதற்கு மெஜாரிட்டி என்ன பதில் கூறுகிறார்கள்? மிக நன்றாகத் தான் இருக்கிறோம் ஆனால் பாப்தாதா எதிர் பார்க்கும் அளவுக்கு இல்லை என்கிறார்கள். இனிமேல் பதில் இப்படித் தான் இருக்க வேண்டும். அதாவது பாப்தாதா என்ன விரும்புகின்றாரோ, அப்படி இருக்கிறோம். குறித்துக் கொள்ளுங்கள் பாப்தாதா என்ன விரும்புகின்றாரோ அந்த லிஸ்ட் தயார் செய்யுங்கள். பிறகு பாப்தாதா இதை விரும்புகின்றார். அது இருக்கிறதா? இல்லையா? என்று சோதித்துப் பாருங்கள். உலகிலுள்ளவர்கள் முன்னோர்களாகிய உங்களிடம் முக்தி வேண்டும் என்று கேட்கிறார்கள், முக்தி கொடு, முக்தி கொடு என்று கதறுகிறார்கள். எதுவரையிலும் மெஜாரிட்டி குழந்தைகள் தங்களுடைய பழைய சம்ஸ்காரங்கள், எதை நீங்கள் நேச்சர் (குணம், சுபாவம்) என்று சொல் கின்றீர்களோ, இயற்கையான குணம் அல்ல, பழைய சுபாவத்தில் ஏதாவது கொஞ்சம் மீதியிருந்து, அதிலிருந்து முக்தி (விடுதலை) அடையாமல் இருந்தால், எல்லா ஆத்மாக் களுக்கும் முக்தி கிடைக்கறது. ஆதலால் பாப்தாதா கூறுகின்றார். ஹே! முக்தி தாத்தாவின் குழந்தைகளாகிய மாஸ்டர் முக்திதாதா (முக்தி அளிக்கும வள்ளல்) இப்போது உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள். பிறகு எல்லா ஆத்மாக்களுக்கும் முக்திக்கான வாசல் திறந்து விடும். ஏற்கனவே கூறியிருந்தேன் அல்லவா? வாயிற்கதவைத் (கேட்) திறக்கும் சாவி எது என்று? பேகத் வைராக்கியம். எல்லா காரியமும் செய்யுங்கள் ஆனால், இப்படி

பிரசங்கம் செய்கிறீர்கள் அல்லவா? குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்களிடம், தாமரை மலர் போல வாழுங்கள் என்று கூறுகின்றீர்கள். இப்படி எல்லாம் செய்து கொண்டே. செய்கிறேன் என்பதிலிருந்து விடுதலை, நியாரே (விலகியிருப்பது), சாதனங்களுக்கும் வசமாகக் கூடாது. அதிகாரத்திற்கும் வசமாகக் கூடாது. ஏதாவது கிடைக்க வேண்டும். (அந்தஸ்து) என்பது. இது அந்தஸ்தல்ல. இது மாயையாகிய எதிரி. விலகி இருக்க வேண்டும் (தந்தைக்கு அன்பானவராக வேண்டும். (நியாரா,பியாரா) இது கஷ்டமா? நியாரே, பியாரே ஆவதில் யாருக்காவது கஷ்டமாக இருந்தால் கை உயர்த்துங்கள். யாருக்கும் கஷ்டமில்லை. ஆகவே சிவராத்திரிக்குள்ளாக எல்லோரும் சம்பன்னம் ஆகி விடுவீர்கள். எப்போது கஷ்ட மில்லையோ, ஆகியே தீரவேண்டும். பிரம்மாபாபா சமான மாக ஆகத்தான் வேண்டும். சங்கல்பத்திலும், வாய் மொழி யிலும் சேவையிலும், கூட சம்மந்தம், தொடர்பிலும் கூட, எல்லாவற்றிலும் பாபாசமான்.

நல்லது. பிரம்மாபாபா மற்றும் தாதா கிரேட், கிரேட் கிராண்ட் ஃபாதர் (இம் மூன்றும் பிரம்மாபாபாவையே குறிக்கும்) இவரிடம் எனக்கு 100-சதவிகிதத்துக்கும் அதிகமாக அன்பிருக்கிறது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். மகிழ்விப்பதற்காக அல்ல. இப்போதைக்கு குஷிப்படுத்தி விடலாம் என்பதும் கூடாது. எல்லோரும் உயர்த்தியிருக்கிறார்கள். டி.வி.யில் படம் பிடிக்கிறீர்கள் அல்லவா? சிவராத்திரியின் போது இந்த டி.வி.யைப் பார்க்கலாம். கணக்கெடுக்கலாம். சரி. கொஞ்சம் கூட சமானமாவதில் வித்தியாசம் இருக்கக்கூடாது. அன்புக்குப் பிரதி உபகாரமாக தியாகம் செய்ய வேண்டும் இதுட ஒன்றும் பெரிய விஷயமல்ல. உலகத்தவர், அசுத்த அன்புக்காக உயிரையே பாப்தாதாவோ பலி கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். வெறும் குப்பை .யைத் தான் கொடுத்து விடுங்கள் என்கின்றார். அது போதும். பலவீனம், குறை என்ன இருக்கிறது? குப்பை இருக்கிறதா? குப்பையை தியாகம் செய்வது என்ன பெரிய விஷயம்! பரஸ்திதி முடிந்து விடட்டும். சுயஸ்திதி சிரேஷ்டமாகி விடட்டும். சொல்கிறீர்கள் அல்லவா? என்ன செய்வது பரிஸ்திதி அப்படி இருந்தது. பர-ஸ்திதி என்ற பெயரே இருக்கக்கூடாது. அசைக்கக் கூடியது. சுய ஸ்திதி சக்திசாலியாகட்டும். முடிப்பதற்கான திரை

விலகினால் எல்லோருக்கும் என்ன தெரிய வேண்டும்? ஃபரிஷ்தாக்கள் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் ஜொலிப்பது தெரியட்டும். ஆதலாலேயே திரை விலக்குவது நிறுத்தப்பட்டிருக்கிறது. உலகத்தார் திரையை விலக்கு, திரையை விலக்கு என்று கூச்சலிடுகிறார்கள். ஆதலால் உங்கள் பிளானை நீங்களே தயார் செய்யுங்கள். தயாரிக்கப்பட்ட பிளானை கொடுத்தால், அதில் அநேக விஷயங்கள் இருக்கின்றன. தன்னுடைய பிளானை, தன்னுடைய தைரியம் மூலமாக தயார். செய்யுங்கள். உறுதியான (திடம்) சாவி போட்டால், வெற்றி நிச்சயம். திட சங்கல்பம் செய்கிறீர்கள். இதைப்பார்த்து பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். வாஹ் குழந்தாய் வாஹ்! திட சங்கல்பம் செய்கிறீர்கள் ஆனால் உறுதியில் கொஞ்சம், கொஞ்சம் அலக்ஷியம் கலப்பட மாகி விடுகிறது. ஆதலால் வெற்றி கூட, சில சமயம் பாதி, சிலசமயம் முக்கால் பங்கு என்றாகி விடுகிறது. எப்படி அன்பில் 100-சதவிகிதம் உள்ளதோ, அது போல புருஷார்த்தத்தில் சம்பன்னம், இது கூட 100-சதவிகிதம் இருக்க வேண்டும். அதிகமானால் பரவாயில்லை. குறைவாக இருக்கக் கூடாது. சரியா? சரியாயிருக்கிறதல்லவா? சிவராத்திரியின் போது ஜொலிப்பின் அழகைக் காட்டுவீர்கள் அல்லவா? ஆகியே தீர வேண்டும். நாம் ஆகவில்லையேல், வேறுயாரால் ஆக முடியும்? இந்த நிச்சயம் இருக்கட்டும் நாங்கள் தான் அப்படி இருந்தோம். நாங்கள் தான் இருக்கிறோம் மீண்டும் நாங்கள் தான் இருப்போம். )இந்த நிச்சயம் வெற்றியை உறுதியாக்கி விடும். பர தர்ஷன் செய்யக்கூடாது. தங்களையே தான் பார்க்க வேண்டும். அநேக குழந்தைகள் ரூஹ்-ரிஹான். (ஆன் மீக சம்பாஷணை) செய்கிறார்கள். அப்போது கூறுகிறார்கள் இதைக் கொஞ்சம் அவரை சரி செய்து விடுங்கள். பிறகு நான் சரியாகி விடுவேன் என்று கூறுகின்றார்கள். இதைக் கொஞ்சம் மாற்றி விடுங்கள், பிறகு நானும் கூட மாறி விடுவேன் ஆனால் அவரும் மாற மாட்டார். நீங்களும் மாறப்போவதில்லை. உங்களை (சுயத்தை) மாற்றினால், அவரும் மாறி விடுவார். யாரையும் ஆதாரமாக வைக்காதீர்கள். இது நடந்தால், இது ஆகும். நான் செய்யத்தான் வேண்டும். நல்லது. சிவராத்திரி இப்போது வரத்தான் போகிறதல்லவா?

நல்லது. யார் முதல் முறையாக வந்திருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். யார் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ,

அவர்களுக்காக பாப்தாதா கூறுகின்றார். இன்னும் கொஞ்சம் நாட்களே இருக்கின்ற சமயத்தில் வந்திருக்கிறீர்கள் ஆனால், புருஷார்த்தம் தீவிரமாக செய்ய வேண்டும் (லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட், ஃபாஸ்ட் ஸோ, பர்ஷ்ட்) முதல் நம்பரில் வந்து விடுங்கள். ஏனென்றால் இப்போது "சேர்ஸ் கேம்" (chairs game) நடக்கிறது. இப்போது யாருக்கு வெற்றியோ, அது அவுட் ஆகவில்லை (தெரிவிக்கப்படவில்லை) வந்திருக்கிறீர்கள் ஆனால் வேகமாகச் சென்றால், சேர்ந்து விடுவீர்கள். அமிர்தவேளையில் நீங்களே உங்களுக்கு அமர் பவ வரதானத்தை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். நல்லது. சிலர் தூரத்திலிருந்தும், சிலர் அருகிலிருந்தும் வந்திருக்கிறார்கள். பாப்தாதா கூறுகின்றார். வரட்டும் தங்களுடைய வீட்டிற்கு சபை நன்றாக இருக்கிறது. டி.வி.யில் பார்க்கிறீர்கள் அல்லவா? சபை நிறைந்திருப்பதால் நன்றாக இருக்கிறது. நல்லது. அப்படியானால் எவர்ரெடி தானே? எவர் ரெடிக்கான பாடம் படிப்பீர்கள் அல்லவா? நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

சேவைக்கான வாய்ப்பு இந்தூர் ஜோன்: இந்தூர்க்காரர்கள் எழுந்திருங்கள். கை அசையுங்கள். நிறைய பேர் வந்திருக்கிறார்கள். மிகவும் நல்லது. வாய்ப்பை எடுத்துக் கொள்வதும் கூட சிரேஷ்ட பாக்கியம் செய்து கொள்வதற்குத் தான். பாக்கியசாலிகள். யாருக்கு சான்ஸ் கிடைத்ததோ, யார் எடுத்துக் கொண்டார்களோ, எல்லோரும் பாக்கியவான்கள். பாப்தாதா சதா கூறுகின்றார் 15-20 நாட்களுக்கு எந்த ஒரு பொன்னான வாய்ப்பு (கோல்டன்) சான்ஸ்) கிடைக்கிறதோ, (ஒவ்வொரு ஜோனுக்கும்) நிறைய ஸ்வமானில் இருப்பதற்கும், ஸ்வ ஸ்திதி மற்றும் புண்ணியக் கணக்கு சேமிப்பதற்கும் கிடைக்கும் வாய்ப்பாகும். ஆதலால் எல்லோரும், ஆர்வம், உற்சாகத்தோடு சேவை செய்கிறீர்கள். அதற்கு வாழ்த்துக்கள். நல்லது. இந்தூர் சதா அந்தர் முகமாக இருக்கிறீர்கள் போலும். இன்-டோர் அல்லவா? (கதவிற்குள்ளே இருப்பவர்கள்) ஆகவே உள்நோக்கு முகமாகவே ஆகி விட்டார்கள் ஆதலால் அந்தர்முகி, சதா சுகியாக இருப்பார்கள். இந்தூர் நிவாசிகளுக்கு இயற்கையாகவே வரதானம் அந்தர்முகி சதா சுகி என்று ஆகி விட்டது. அப்படியானால், வருமானம் சேமித்தீர்களா? அதிகத்திலும் அதிகமாக சேமித்தீர்களா? குறைவாகவா? எல்லோரும் நிறைய சேமித்தீர்களா? நல்லது, ஒரு பிராமணருக்கு உணவளிக்கிறார்கள். சேவை செய்கிறார்கள். அதை புண்ணியம்

என்கிறார்கள். நீங்களோ, எத்தனை பிராமணர்களுக்கு சேவை செய்தீர்கள்? ஆகவே, உங்களுடைய புண்ணியக் கணக்கு அதிகமாக சேமிப்பாகி விட்டது. மேலும் உண்மையான பிராமணர்களுக்கு சேவை செய்தீர்கள். ஆகவே புண்ணியக்கணக்கும் அத்தனை மகான் ஆகி விட்டது. நல்லது. ஆர்வம், உற்சாகத்துடன் சுய உன்னதி செய்து கொண்டிருக்கிறார்கள். செய்து கொண்டே இருக்க வேண்டும். மேலும் மேலும் பறந்து கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

நாலா பக்கமும், கோடியில், சிலர், சிலரிலும் கூட சிலர் பாக்கியவான், பகவானுடைய குழந்தைகளாகிய சிரேஷ்ட ஆத்மாக்கள் சதா தீவிர புருஷாரத்தம் மூலமாக எதை நினைத்தார்களோ, அதைச் செய்தார்கள். சிரேஷ்டமாக நினைப்பது. சிரேஷ்டமாக செய்வது லக்ஷியம் மற்றும் லக்ஷணத்தை சமமாக செய்வது. இப்படிப்பட்ட விசேஷ ஆத்மாக்களுக்கு சதா வெகு காலத்திய புருஷாரத்தம் மூலமாக இராஜ்ய பாக்கியம் மற்றும் பூஜ்யராகக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பாபாவின் சிநேகத்திற்கு ரிடர்னாக, தன்னை டர்ன் செய்யக்கூடிய நம்பர்ஒன் வெற்றியடையக்கூடிய பாக்கியவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**மெடிக்கல் விங்:** நன்றாகச் செய்திருக்கிறீர்கள். இவர்கள் தங்களுடைய துறையில் விசேஷ தாரணை, மிக நல்ல முறையில் வைத்திருக்கிறார்கள். தயை, ஆசீர்வாதம் மற்றும் மருந்து, (தயா-துவா-தவா) தயா-துவா-தவா என்று எவ்வளவு நன்றாக வைத்திருக்கிறார்கள். தயா பாவனை இருந்ததா? கஷ்டப்பட்டு சேவை செய்யவில்லை தானே? உங்களுக்கு கஷ்டம் உண்டாக்கும் வகையில், எந்த ஒரு நோயாளியாவது வந்தாரா? ஆசீர்வாதமும் கொடுத்து மருந்தும் கொடுத்தீர்களானால் அவர் நோயாளியாக (பேஷண்ட்) இருக்க மாட்டார். பேஷ்ன்ஸ் (patience பொறுமை) ஆக இருப்பார். பேஷன்ஸில் (பொறுமை) வந்து விடட்டும். டாக்டர்கள் இருக்கிறார்கள் அல்லவா? இவர்களை கடவுளுக்கு அடுத்தவர்கள் (next to God) என்று கூறுகின்றார்கள். அப்படியானால் உங்களுடைய சேவைக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. டைட்டில் கிடைத்திருக்கிறது. நெக்ஸ்ட் டு காட். முதலில் கடவுள், அடுத்து டாக்டர். ஆகவே தான் லக்ஷியம் நன்றாக வைத்திருக்கிறார்கள். தயா மற்றும் துவா (இரக்கம் மற்றும்

ஆசீர்வாதம்). மருந்து, கொடுப்பது ஒரு கடமையும் ஆகும். ஏதாவதொரு நோயாளி அழுது கொண்டே வந்தால் போகும்போது சிரித்துக் கொண்டே சென்றால், தயையும், ஆசீர்வாதமும் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். கதறிக் கொண்டு வருபவர், சுகமாகச் செல்ல வேண்டும். நல்லது. மெடிக்கல் விங் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் அமர்ந்திருக்கிறார் அல்லவா (டாக்டர் சதீஷ் குப்தா) மெடிக்கல் விங் செய்திருக்கிறது. நல்ல சேவை, கவர்ன்மெண்ட் வரை செய்தி எட்டியிருக்கிறது. இம்மாதிரி, ஒவ்வொரு விங்கினுடைய சேவையும் கவர்ன் மெண்ட் வரையிலும் செய்தி சென்றடைய வேண்டும். பிரசிடெண்ட் கூட கூறினார் அல்லவா? பிரம்மா குமாரிகள் செலவே இல்லாமல் இருதயத்தை சரி செய்து விடுகிறார்கள். இப்படி செய்தி எட்டிய தல்லவா? கவர்ன்மெண்ட வரை செய்தி கட்டாயம் சென்றடையத் தான் வேண்டும். கவர்ன்மென்ட் வரை சென்றடைய வேண்டும் என்பதன் பொருள், அந்தச் செய்தி தானாகவே பரவும். இதற்கு முன்பு என்ன செய்தீர்கள். யாராவது ஒரு தலைவரை அழைத்தீர்கள். அந்த செய்தி டிவியில் வந்தது. இப்போது டி.வி உங்களுடையதாகி விட்டது. பெயர் வர வேண்டுமென்று முன்பு அப்படிச் செய்தீர்கள். டி.வி ஆட்கள் வர வேண்டும், செய்தி பரவ வேண்டும் என்பதாக இருந்தது. இப்போது இதற்கு மேலாக நடக்கிறது. டி.வி.க்காரர்கள் உங்களைத் தேடி வந்து செய்தி ஏதாவது உண்டா என்று கேட்கிறார்கள். ஆகவே இப்படி விஷயம் சாதகமாக மாறி விட்டதல்லவா? ஆகவே தான் கவர்ன்மெண்ட் வரை செய்தி சென்றடையும் படியாகச் செய்தால், அது பரவுகிறது. நல்லது. நன்றாகச் செய்கிறீர்கள். வாழ்த்துக்கள்.

**ஸ்போர்ட்ஸ் விங் (விளையாட்டுத்துறை):** நல்லது (மம்மா, பாபா, தீதி தாதி பேட் மின்ட்டன் விளையாடும் போட்டோவை காண்பிக்கின்றனர்) நல்லது. எல்லோருக்கும் காட்டுங்கள். நல்லது. யாராவது இப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு செய்தி கொடுங்கள். மைக் ஆகி செய்தி பரவும்படி செய்யட்டும். செய்திருக்கிறீர்கள் அல்லவா? புரோகிராம் நன்றாக இருக்கிறது. ஸ்போர்ட்ஸில் பிரசித்தமானவர்கள் வந்திருந்தால், அவர்கள் மைக் ஆகட்டும் என்று பாப்தாதா விரும்புகின்றார். இந்த முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு வர்க்கத்திலும் எல்லோரிலும் அதிக மகிமை செய்யப்படுபவர்கள், உங்களுடைய மைக் ஆகட்டும் நீங்கள் மைக் ஆவதற்கான அவசியம் ஏற்படாது. ஒவ்வொரு வர்க்கத்தினரும்

பல்வேறு துறை இருக்கிறதல்லவா? முயற்சி செய்து பிரசித்தமானவர்கள் யாரையாவது தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்கு அனுபவம் செய்வியுங்கள். பிறகு அவர் தன்னுடைய அனுபவத்தைச் சொல்லட்டும். நீங்கள் செலவு செய்ய வேண்டியதும் இருக்காது. கஷ்டப்பட வேண்டியதும் இருக்காது. ஒவ்வொரு வர்க்கமும் இப்படிச் செய்ய வேண்டும். சாதாரணமானவர்களுக்குச் செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். (மெகா புரோகிராம்) அதில் பொது ஜனங்கள் தான் வருகிறார்கள். இப்போது கொஞ்சம் குவாலிட்டிக்கு சேவை செய்யுங்கள். ஒவ்வொரு வர்க்கமும், இந்த மாதிரி ஒன்றிரண்டு மைக் தயார் செய்யுங்கள் ஏனெனில் இப்போது அதிக சமயம் ஆகி விட்டது வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சேவை செய்கிறார்கள். அறிமுகம் கொடுத்து விட்டீர்கள், இப்போது நிறைய பேருக்கு இந்த மாதிரி செய்தாகி விட்டது. இப்போது ஒவ்வொருவரும் இப்படி தயார் செய்யுங்கள். ரெகுலர் மாணவர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, மைக் ஆகட்டும் ஏனென்றால் இப்படிப்பட்ட ஆத்மாக்கள் ரெகுலர் ஸ்டூடண்ட் ஆவது கடினம். அனுபவமாவது சொல்லட்டுமே! ஆதலால் இந்த ஆண்டு இதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு வர்க்கத்தினரும் முயற்சி செய்யுங்கள். பிறகு இவர்களெல்லாம் ஒன்று சேரட்டும். சிறு குரூப் ஆனாலே போதும் பெரிதாக இருக்க வேண்டும் என்பதல்ல இதன் மூலம், ஒன்றிரண்டு பேரைப் பார்த்து, ஆர்வம் வரும். சரிதானா? அப்படியானால், முதலில் யார் செய்யப் போகிறார்கள்? நீங்கள் செய்வீர்களா? நல்லது முன்கூட்டியே வாழ்த்துக்கள்.

செக்யூரிட்டி விங்: பேனர் காட்டுகிறார்கள். லக்ஷியம் நன்றாக இருக்கிறது இவர்கள் லக்ஷியம் இப்படி வைத்திருக்கிறார்கள். சுரக்ஷா, சேவா சம்பூரண சமர்ப்பண் பாதுகாப்பு -சேவை -சம்பூரண அர்ப்பணிப்பு. சம்பூரண அர்ப்பணமாகி விட்டால், சம்பூரணமாகியே விடுவார்கள். நல்ல லக்ஷியம் வைத்திருக்கிறார்கள் தன்னை அர்பணிப்பது என்பது, நிமித்தம் மற்றும் நிர்மான் (நிமித்தம்-பணிவு) நிமித்த பாவனையும், பணிவும் இருந்தால், வெற்றி நிச்சயம். நல்லது. நீங்களோ, கடைசி வரையிலும், சேவை செய்து கொண்டே இருக்க வேண்டியதிருக்கும். கடைசி நேரத்தில், உங்களுடைய சேவை அதிகமாக இருக்கும் நல்லது. ஒவ்வொரு வர்க்கமும் தங்களுடைய லக்ஷியத்தை மனதில்

நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும் எல்லோரும் நன்றாகவே எழுதியிருக்கிறார்கள். லக்ஷியத்தை, லக்ஷணமாக்கியே தீர வேண்டும். (பிராக்டிக்கல்) இன்றைக்கு உங்கள் லக்ஷியம் என்னவென்று காட்டி விட்டீர்கள். இனி லக்ஷணத்தைப் பார்க்கலாம். எல்லா விங்கும் நல்ல இலக்ஷியம் வைத்திருக்கிறார்கள். நல்லது. யாராவது மிலிட்டரியில் அனுபவமுள்ளவர்கள் யாரையாவது தயார் செய்திருக்கிறீர்களா? செக்யூரிட்டிக்காரர்கள், ஒவ்வொரு குரூப்போடும் கனெக்ஷன் வைத்திருக்க வேண்டும். தேசத்திற்காக வேண்டுமானாலும், ஆத்மாக்களுக்காக என்றாலும் செக்யூரிட்டி டிப்பார்ட்மெண்ட், எல்லோருக்கும் சேவை செய்ய வேண்டும். ஏனெனில், இது தக்க சமயத்தில் உதவியாயிருக்கும். சமயம், நாசூக்காக ஆகிக் கொண்டிருக்கும்போது மற்ற குரூப் பின் உதவியோடு, எல்லோருக்கும் செய்தி பரப்புவதற்கு ஏதுவாக இருக்கும். கனெக்ஷன் எல்லோருடனும் வைத்துக் கொள்ளுங்கள்.

எந்த ஒரு பிரிவினராயிருந்தாலும் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். சேவாதாரிகள் நிறையப் பேர் இருந்தால், வேண்டிய நேரத்தில் சேவாதாரிகள் உதவியாயிருப்பார்கள். நல்லது இருந்தாலும், ஒவ்வொரு குரூப்பும் நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். நல்லது வாழ்த்துக்கள்.

ஸ்பார்க் குரூப்: பண்புள்ள சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற லக்ஷியம் வைத்து சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறீர்கள். இதில் ஒவ்வொரு ஜோனிலும் உள்ள, ஒவ்வொரு விங்கும், இணைந்து சேவை செய்யட்டும். இத்தோடு, கடைசி நேரத்திற்கான தயாரிப்புகள் மற்றும் சம்ஸ்கார பரிவர்த்தனை சம்மந்தமாக ஆழமான அனுபவம் செய்வதற்கான லக்ஷியம் வைத்திருக்கிறார்கள். மிகவும் நல்லது. ஒவ்வொரு வீட்டிலும் செய்தி பரவி விடும். கவர்ன்மெண்ட் வரை செய்தி சென்றடையும்படி செய்வதற்கான, அப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். இந்த சுற்றுப்பயணம் காரணமாக செய்தி பரவும். நல்ல எண்ணமாக இருக்கிறது. எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எல்லோரும் ரிசல்ட் கொண்டு வர வேண்டும். பிறகு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிப்பார். ஆர்வம், உற்சாகம் நன்றாக இருக் கிறது. தங்களுடைய

புருஷார்த்தத்திலும் ஆர்வம், உற்சாகம் அதிக மாகும். சேவையில் மட்டுமின்றி, கூடவே, புருஷாரத்தத்திலும், ஆர்வம் உற்சாகம் அதிகமாகிக் கொண்டே இருக்கட்டும். மற்றப்படி நன்றாகவே செய்திருக்கிறீர்கள். வாழ்த்துக்கள். யூத் குருப்பும் சேவை செய்து வந்திருக்கிறார்கள்; சேவையில் குஷி கிடைத்தது. ஏனெனில் சேவையின் பலன் குஷி ஆர்வம், உற்சாகம் சேவை மட்டுமே செய்தீர்களா? சேவை செய்ததற்கான பலனும் கிடைத்ததா? எவ்வளவு குஷி இருந்தது? குஷியாக இருந்தீர்கள். குஷியை பகிர்ந்து கொண்டீர்கள் இந்த பலனும் கிடைத்தது. மற்றவருக்கும் கிடைக்கச் செய்திருக்கிறீர்கள். முயற்சி நன்றாகச் செய்திருக்கிறீர்கள். முயற்சிக்கு வாழ்த்துக்கள் மற்றும் மேலும் முன்னேறுவதற்கு வாழ்த்துக்கள். நல்லது.

டபுள் விதேஷி: எத்தனை நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். (35-நாடுகள்) நல்லது டபுள் விதேஷிகளால் மதுபன் அலங்காரமாகி விடுகிறது. ஞான சரோவரில் தங்கியிருந்தாலும், கீழே தங்கியிருந்தாலும், நீங்கள் மதுபன்னுக்கு டபுள் அலங்காரம். எல்லோரும் உங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கின்றார். எப்போது ஸ்தாபனையாகியதோ, அப்போது பாப்தாதாவுக்கு ஒரு டைட்டில் இல்லை. பிறகு எப்போது வெளி நாட்டு சேவை நடந்ததோ அப்போதிருந்து பிராக்டிக்கலாக அந்த டைட்டில் வந்து விட்டது. அந்த டைட்டில் எது? விஷ்வ கல்யாணகாரி. இப்போது உலகில் எல்லா மூலைகளிலும் சேவா கேந்திரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கண்டத்திலும் அநேக சேவா கேந்திரங்கள். ஒரு யு.கே. மற்றும் ஐரோப்பாவில் எத்தனை இருக்கும்? ஆஸ்திரேலியாவில் எத்தனை இருக்கும்? ஆகவே விஷ்வகல்யாணகாரி என்ற டைட்டில் டபுள் ஃபாரினர்ஸ் சேவை மூலம் உறுதியாகி விட்டது. உங்களுக்குத் தெரியும் பாப்தாதாவுக்கு டபுள் ஃபாரினர்ஸ்னுடைய ஒரு விசேஷம் பிடித்தமானதாக இருக்கிறது. தெரியுமா? சச்சாயி சஃபாயி சொல்லி விடுகிறார்கள். தைரியம் கொஞ்சம் குறைந்து விடுகிறது. என்றாலும் சொல்லி விடுகிறார்கள் மறைப்பதற்கான பழக்கமே இல்லை. ஆகவே உண்மை (சச்சாயி) பாபாவுக்குப் பிரியமானது. சத்யத்தா, மகானத்தாவை அடையும்படி செய்கிறது. மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள். எந்த நாட்டில் பாபாவின்

அறிமுகம் கிடைத்ததோ அந்த நாட்டின் சேவாதாரி ஆகி விட்டீர்கள். இல்லாவிட்டால், பாரதவாசி குழந்தைகளுக்கு எத்தனை பாஷை கற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. முதலாவது இந்தப் படிப்பு படிக்க வேண்டும் ஆனால் நீங்கள் வந்தீர்கள். சேவாதாரி ஆகி விட்டீர்கள் சேவை செய்ததன் பலனையும் அழைத்துக் கொண்டு வருகிறீர்கள். இதற்கு மிக மிக மிக வாழ்த்துக்கள். மற்றபடி இங்கு இருப்பவர்களெல்லாம் ஓகே. ஓ.கே. இதை ஒரு போதும் மறக்கக் கூடாது. நல்லவர்கள், இனியும் நல்லவர்களாகவே இருக்கவும் வேண்டும். வெளிநாடு நம்பர் ஒன் ஆக வேண்டும். வெற்றியடைந்து நம்பர் ஒன்றில் வரவேண்டும். இரண்டாம் நம்பர் இல்லை தானே? ஒன் வின் அவுர் ஒன். நல்லவர்கள் எல்லோருக்கும் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். உங்களை எல்லோரும் பார்க்க விரும்புகிறார்கள். பாப்தாதா பார்த்து விட்டார். இப்போது இந்தப் பக்கமாக வாருங்கள். உங்களை எல்லோரும் பார்க்கட்டும். பாருங்கள். தர்சனிய மூரத் ஆகி விட்டார்கள் (ஜெயந்தி சகோதரியிடம்) இது சரியா? நல்லது. நல்லது.

ஜிப்ரால்டர்: எல்லோரிலும் சிறிய குழந்தை. மிக நன்றாக நிமித்தமாகி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் நல்லது. எல்லோரைக் காட்டிலும் நம்பர் ஒன் ஆக வேண்டும். நல்லது. எல்லோரும் தங்கள் தங்களுடைய சேவை செய்கிறீர்கள். செய்து கொண்டே இருப்பீர்கள். எல்லோரையும் பறக்கச் செய்வீர்கள்.

நல்லது. மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். நிறைய இருக்கிறார்கள். மதுபன் வாசிகள் விருந்தோம்புபவர்கள். என்றாலும் விருந்தாளிகளாக வருகிறார்கள். சென்று விடுகிறார்கள் ஆனால் மதுபன் வாசிகள் விருந்தோம்புபவர்கள். நெருக்கத்தில் இருப்பவர்கள். மிகவும் அன்பானவர்கள். மதுபன்வாசிகளைப் பார்த்து எல்லோரும் மகிழ்ச்சியடைகிறார்கள் அல்லவா? எந்த இடத்திற்கும் மதுபன் வாசிகள் சென்றாலும் எந்தப் பார்வையில் பார்க்கின்றார்கள். வாஹ், மதுபன்னிலிருந்து வந்திருக்கிறார்கள். ஏனெனில் மதுபன் பெயரைக் கேட்டதும், மதுபன் பாபா நினைவுக்கு வந்து விடுகின்றார். ஆதலால் மதுபன் வாசிகளுக்கு மகத்துவம் இருக்கிறது இருக்கிறதா மகத்துவம்? மகிழ்ச்சியடைகிறார்கள் அல்லவா? அப்படி முழு அன்போடு பாலனை செய்யக்கூடிய இடம் கோடியில் சிலருக்குத் தான் கிடைத்திருக்கிறது.

எல்லோரும் பிரியப்படுகிறார்கள். மதுபன்னிலேயே இருக்க வேண்டும். என்று இருக்க முடியுமா? நீங்கள் இருக்கிறீர்கள். ஆகவே நல்லது தான். மதுபன் வாசிகள் மறப்பதில்லை. புரிந்து கொள்கிறார்கள். நம்மைக் கேட்கவில்லை என்று ஆனால் பாப்தாதா சதா உள்ளத்தில் கேட்கின்றார். முதலில் மதுபன்வாசிகள். மதுபன் வாசிகள் இல்லை என்றால், வருவார்களா? சேவைக்கு நிமித்தமாக இருக்கிறீர்கள் அல்லவா? சேவாதாரி எத்தனை பேர் கிடைத்தாலும் சரி, அஸ்திவாரம் மதுபன் வாசிகள் தானே! ஆகவே மேலே ஞானசரோவர், பாண்டவ பவன், அனைவருக்கும் பாப்தாதா உள்ளபூர்வமான ஆசீர்வாதங்கள் மற்றும் அன்பு நினைவுகளைத் தருகின்றார். மதுபனில் இங்கு டோலி கொடுத்தால், மேலே கிடைக்கிறதா? ஆகவே மதுபன் வாசிகளுக்கு டோலியும் கிடைக்கிறது. மகாவாக்கியமும் கிடைக்கிறது. இரண்டும் கிடைக்கிறது. நல்லது. எல்லா ஹாஸ்பிடல்வாசிகளும் நலமா? ஏனெனில் ஹாஸ்பிடலுக்கு விசேஷ பார்ட் இருக்கிறது அல்லவா? கீழே வருகிறார்கள். சரி கொஞ்சம் பேர் வருகிறார்கள். ஹாஸ்பிடல் காரர்கள் நல்ல சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். பாருங்கள். ஆரோக்கியமில்லாத வேளையில் ஹாஸ்பிடல் உபயோகப்படுகிறதல்லவா? இந்த ஹாஸ்பிடல்காரர்கள் இருக்கிறார்கள் அல்லவா? எப்போது ஹாஸ்பிடல் திறந்ததோ, அப்போதிருந்து, எல்லோருடைய பார்வையில் வந்து விட்டார்கள். அதாவது பிரம்மா குமாரிகள் ஞானம் மட்டும் கொடுக்கவில்லை, சமயத்தில் உதவியும் செய்கிறார்கள் சமுதாய சேவையும் செய்கிறார்கள். ஹாஸ்பிடல் வந்த பிறகு மதுபன்னுடைய வாயுமண்டலமே மாறிவிட்டது. முதலில் எந்த பார்வையில் பார்த்தார்களோ, இப்போது அப்படிப்ப பார்ப்பதில்லை. இப்போது சகயோகியின் பார்வையில் பார்க்கிறார்கள். ஞானத்தை ஏற்றுக் கொள்கிறார்களோ, இல்லையோ, சகயோகி பார்வையில் பார்க்கிறார்கள். ஹாஸ்பிடல்காரர்கள் சேவை செய்தார்கள் அல்லவா? நல்லது. இன்றைய விஷயம் ஞாபகத்தில் இருக்கிறது -சம்பன்னம் ஆகத்தான் வேண்டும். என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும் சம்பன்னம் ஆகிய தீர வேண்டும். இந்த ஆர்வம் இருக்கட்டும். சம்பன்னம் ஆக வேண்டும். சமான் ஆக வேண்டும் நல்லது.

<u>தாதிஜியுடன்</u>: உங்களுடைய பெயரே சேவை செய்கிறது தாதி, தாதி என்று சொல்லியே சேவை நடந்து கொண்டிருக்கிறது. நல்லது. எல்லோரும் சகயோகி மற்றும் சிநேகி, நம்பர் ஒன். சிநேகியாகவும் இருக்கிறார்கள். சகயோகியாகவும் இருக்கிறார்கள். குரூப் நன்றாக இருக்கிறது.

<u>ரத்தன் மோகினி தாதி:</u> நாளை ரீவா (மத்திய பிரதேசம்) மெகா புரோகிராமுக்கு செல்கின்றார். நன்றாக இருக்கிறது. ஆர்வம், உற்சாகத்துடன் செய்கிறார்கள். பலனும் கிடைக்கிறது. நல்லது. எல்லோருக்கும் நினைவைக் கொடுக்கவும்.

<u>ஜெயந்தி சகோதரியிடம்:</u> பிரகிருதிஜீத் ஆகி விட்டாரல்லவா? பிரகிருதி விளையாட்டுப் பிள்ளை மாதிரி, கடைசி ஜென்மம் அல்லவா? ஆதலால் கொஞ்சம் விளையாட்டு காண்பிக்கும் ஆனால் பிரகிருதி ஜீத் ஆகி பறந்து செல்லுங்கள். பாப்தாதாவின் மற்றும் பரிவாரத்தின் ஆசீர்வாதம் நிறைய இருக்கின்றது. ஆதலால் ஆசிகள் அருமருந்தின் வேலை செய்து கொண்டிருக்கிறது.

<u>டாக்டர் ஹன்ஸா ராவல்:</u> சேவையில் நல்ல பலன் கிடைக்கிறது. பிரத்யக்ஷ பலன் குஷி அருகாமை ஆகவே இந்த பலனை அடையக்கூடிய அறிவாளி நீங்கள்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.02.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இதயப்பூர்வமாக என்னுடைய பாபா என்று கூறுங்கள் மற்றும் அனைத்து அழிவற்ற பொக்கிஷத்திற்கு அதிகாரியாகி கவலையற்ற இராஜாவாகுங்கள்!

இன்று பாக்கிய விதாதா பாப்தாதா தன்னுடைய அனைத்து குழந்தைகளின் நெற்றியின் மத்தியில் பாக்கியத்தின் ரேகையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையின் பிரகாசிக்கின்ற தெய்வீக நட்சத்திரத்தின் ரேகை தென்படுகிறது. ஒவ்வொருவரின் கண்களில் சிநேகம் மற்றும் சக்தியின் ரேகையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். வாயில் சிரேஷ்டமான இனிய வாணியின் ரேகையை பார்க்கின்றார். உதட்டில் இனிமையான புன்முறுவலின் ரேகை பிரகாசித்து கொண்டிருக்கிறது. இதயத்தில் திலாராம் சிநேகத்தின் அன்பில் மூழ்கின்ற ரேகையைப் பார்க்கின்றார். கை சிநேகத்தின் சதா அனைத்து பொக்கிஷங்கள் நிறைந்திருக்கின்ற ரேகையைப் பார்க்கின்றார். பாதங்களில் ஒவ்வொரு அடியிலும் பன்மடங்கு பாக்கியத்தின் ரேகையை பார்க்கின்றார். இத்தகைய சிரேஷ்ட பாக்கியம் கல்ப முழுவதிலும் எவருக்குமே இருக்காது ஆனால் குழந்தைகளாகிய உங்களுக்குத் தான் இந்த சங்கமயுகத்தில் பாக்கியம் கிடைத்துள்ளது. இவ்வாறு தங்களது பாக்கியத்தை அனுபவம் செய்கின்றீர்களா? இவ்வளவு சிரேஷ்ட பாக்கியத்தின் ஆன்மீக போதையை அனுபவம் செய்கின்றீர்களா? இதயத்திலிருந்து தன்னைத்தான் கீதம் ஒலிக்கின்றதா? ஆஹா என்னுடைய பாக்கியம்! இந்த சங்கமயுகத்தின் பாக்கியம் அழிவற்ற பாக்கியமாக உள்ளது. ஏன்? அழிவற்ற பாபாவின் மூலம் அழிவற்ற பாக்கியம் கிடைத்துள்ளது, ஆனால் இந்த சங்கமயுகத்தில் தான் கிடைக்கின்றது. இந்த விசேஷமான சங்கமயுகத்தில் தான் பிராப்தி மிகவும் சிரேஷ்டமாக

இருக்கின்றது. இதை சங்கமயுகத்தில் தான் அனுபவம் செய்கின்றீர்கள். இத்தகைய சிரேஷ்ட பாக்கியத்தின் அனுபவம் சதா வெளிப்படுகிறதா? சிலசமயம் வெளிப்படுவதில்லையா? மற்றும் முயற்சி என்ன செய்தீர்கள்? இவ்வளவு பெரிய பாக்கியத் தின் பிராப்திக்காக, முயற்சி எவ்வளவு சுலபமாக இருக்கிறது. மனதார தெரிந்து கொண்டோம், ஏற்றுக் கொண்டோம். தன்னுடையவராக அமைத்துக் கொண்டோம். என்னுடைய பாபா (மேரா பாபா) இதயப்பூர்வமாக அறிந்து கொண்டோம், நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர் என்று ஏற்றுக் கொள்தலே அதிகாரி ஆகி விடுதல் ஆகும். அதிகாரம் கூட எவ்வளவு பெரியதாக உள்ளது. சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு என்னென்ன கிடைத்தது என்று யாராவது உங்களை கேட்டால் என்ன சொல்வீர்கள்? எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன். பரமாத்மாவின், பொக்கிஷத்தில் இல்லாத பொருள்களே இல்லை. இத்தகைய பிராப்தி சொரூபத்தை அனுபவம் செய்து விட்டீர்களா? அல்லது செய்து கொண்டிருக்கின்றீர்களா? எதிர்கால விஷயம் தனிப்பட்டது. இந்த சங்கமயுகத்தில் தான் பிராப்தி சொரூபத்தின் அனுபவம் உள்ளது. ஒருவேளை சங்கமத்தில் அனுபவம் செய்யாவிட்டால் எதிர்காலத்தில் கூட அனுபவம் ஏற்படாது -ஏன்? எதிர்காலம் பிராப்தியாகும் ஆனால் பிராலப்தம் (பிராப்தி) இந்த முயற்சியின் சிரேஷ்ட கர்மத்தினால் அமைகிறது. கடைசி நேரத்தில் நாம் அனுபவ சொரூபமாகி விடுவோம் என்று இவ்வாறு நினைக்காதீர்கள். சங்கமயுகத்தில் தொடர்ந்து பல கால அனுபவமாகும் இது. இப்பொழுது கவலையில்லாத இராஜா ஆவதற்கான அனுபவம் உள்ளது. ஆகவே அனைவரும் கவலையில்லா இராஜாக்களா? அல்லது கவலையுள்ளவர்களா? யார் கவலையில்லாத இராஜாவாகி இருக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். ஆகி விட்டீர்களா? அல்லது ஆகி கொண்டிருக்கின்றீர்களா? ஆகி விட்டீர்கள் அல்லவா? எப்பொழுது வள்ளலுடைய குழந்தை ஆகி விட்டீர்களோ அப்போது கவலை என்ன இருக்கிறது. என்னுடைய பாபா என்று ஏற்றுக் கொண்ட பிறகு கவலையின் அநேக விதமான கூடையின் சுமை இறங்கி விட்டது. சுமை இருக்கிறதா என்ன? இயற்கையின் விளையாட்டை கூட பார்க்கிறீர்கள், மாயையின் விளையாட்டைக் கூடப் பார்க்கிறீர்கள் ஆனால் கவலையற்ற ராஜாவாகி சாட்சி நிலையில் விளையாட்டைப் பார்க்கிறீர்கள். உலகத்தில் இருப்பவர்கள் என்ன ஆகுமோ தெரியாதே என்று பயப்படுகிறார்கள்! உங்களுக்கு பயம்

இருக்கிறதா? பயப்படுகிறீர்களா? எதெல்லாம் நடக்குமோ அவை மிக நன்றாக நடக்கும் இதில் நம்பிக்கையும் உறுதியும் இருக்கிறது ஏன்? திரிகாலதரிசியாகி ஒவ்வொரு காட்சியையும் பார்க்கிறீர்கள். இன்று என்ன இருக்கிறது. நாளை என்ன ஏற்படும் இதை நன்றாக அறிந்துள்ளீர்கள் ஞானம் நிறைந்தவர்கள் அல்லவா? சங்கம யுகத்திற்குப் பிறகு என்ன ஏற்படும் உங்கள் அனைவருக்கும் முன்னால் தெளிவாக உள்ளதல்லவா? புது யுகம் வந்தே ஆக வேண்டும். உலகத்தில் உள்ளவர்கள் வரும் என்று கூறுவார்கள்? நீங்கள் என்ன கூறுகிறீர்கள் வந்தே விட்டது ஆகையால் என்ன ஆகும் என்ற கேள்வியே கிடையாது. பொன்யுகம் வந்தே ஆக வேண்டும் தெரியுமல்லவா? இரவுக்குப் பிறகு காலை இந்த சங்கமயுகம். அமிர்தவேளைக்கு பிறகு பகல் வந்தே ஆக வேண்டும். யாருக்கு நம்பிக்கை இருக்கிறதோ அவர்கள் கவலையில்லாமல் இருப்பார்கள். உலகைப் படைப்பவர் மூலமாக படைப்பின் தெளிவான ஞானம் கிடைத்து விட்டது.

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் சிநேகம், உதவி மற்றும் தொடர்பின் அன்பின் பந்தனத்தில் கட்டுண்டவர்கள். தன்னுடைய வீட்டிற்கு வந்து விட்டார்கள். இதைப் பார்த்து கொண்டிருக்கிறார். பாப்தாதா அனைத்து சிநேகி குழந்தைகள், உதவி செய்கின்ற குழந்தைகள், தொடர்பில் இருக்கின்ற குழந்தைகள் தன்னுடைய வீட்டிற்கு வந்ததற்காக வாழ்த்துக்களை வழங்குகிறார். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! பாப்தாதாவினுடைய அன்பு குழந்தைகளை விட அதிகமாக இருக்கிறதா? அல்லது குழந்தைகளினுடைய அன்பு பாப்தாதாவை விட அதிக மாக இருக்கின்றதா? யாருடையது அதிகமாக இருக்கிறது. பாபா வினுடையதா அல்லது உங்களுடையதா? குழந்தைகளுடையது தான் அதிகமாக உள்ளது என்று பாபா கூறுகிறார். குழந்தை களுக்கு அன்பு இருப்பதால் எங்கு எங்கெல்லாம் இருந்து வந்து சேர்ந்திருக்கிறார்கள் இதைப் பாருங்கள் எவ்வளவு தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள். (50-தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள்) ஆனால் அனைவரையும் விட மிக தூரத்திலிருந்து யார் வந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் இருப்பவர்கள் தூரத்திலிருந்து வந்து இருக்கிறார்கள். நீங்கள் கூட தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா பரந்தாமத்திலிருந்து வந்திருக்கிறார். அவரை ஒப்பிட்டுப்

பார்க்கும்பொழுது அமெரிக்கா என்னவாக உள்ளது. அமெரிக்கா தூரத்தில் இருக்கிறதா? அல்லது பரந்தாமம் தூரத்தில் இருக்கிறதா? பாப்தாதா அனைவரையும் விட தூர தேசத்தில் இருக்கிறார். குழந்தைகள் நினைக்கும்பொழுது பாபா ஆஜராகி விடுகிறார். இப்பொழுது பாபா குழந்தைகளிடத்தில் என்ன விரும்புகிறார்? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையும் சுய ராஜ்ய அதிகாரி ராஜாவாக வேண்டும் என்று மிக இனிமையான குழந்தைகளிடத்தில் விரும்புகிறார். அனைவரும் ராஜா தானே. சுய ராஜ்ய அதிகாரி தானே சுயத்தின் மீது இராஜ்யம் செலுத்து கிறீர்கள் அல்லவா? யார் தன்னை சுய ராஜ்ய அதிகாரி ராஜா என்று நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்தவும். மிக நல்லது துக்கம் அசாந்தியிலிருந்து விடுபடுவதற்காக 63-ஜன்மங்களாக மிகுந்த உழைப்பு செய்தீர்கள். ஆகவே பாப்தாதாவிற்கு குழந்தைகளைப் பார்த்தவுடன் அன்பு வருகிறது. ஒவ்வொரு குழந்தையும் சுய ராஜ்ய அதிகாரி ஆக வேண்டுமென்று பாப்தாதா விரும்புகிறார். மனம், புத்தி சம்ஸ்காரத்திற்கு அதிகாரி ஆக வேண்டும். ராஜா ஆக வேண்டும் இதை பாபா விரும்புகிறார். எப்பொழுது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் அப்படி மனம் புத்தி சம்ஸ்காரத்தை மாற்றிக் கொள்ளுங்கள் மனம், அழுத்தமற்ற வாழ்க்கையை சதா வெளிப்படுத்துங்கள். சில நேரம் வெளிப்படுவதில்லை. இதை பாப்தாதா பார்க்கிறார். இதை செய்யக்கூடாது என்று நினைக்கிறார்கள் ஆனால் நினைக்கிறார்களே தவிர சொரூபத்தில் கொண்டு வர முடியவில்லை. நினைத்தால் என்றாலே அடக்கி வைத்தல். சொரூபத்தில் கொண்டு வருவதென்றாலே வெளிப்படுத்துதல் சமயத்திற்காக நீங்கள் எதிர்பார்த்து கொண்டு இருக்கவில்லையே, எப்பொழுதாவது நேரத்தை எதிர்பார்க்கிறீர்கள். ஆன்மீக உரையாடல் செய்கிறீர்கள் அல்லவா -சமயம் வந்தவுடன் நாங்கள் சரியாகி விடுவோம் என்று சில குழந்தைகள் கூறுகிறார்கள். சமயம் என்னவோ உங்கள் படைப்பாகும். மாஸ்டர் படைப்பவர்கள் தானே? ஆகவே மாஸ்டர் படைப்பவர் படைப்பின் ஆதாரத்தில் நடப்பதில்லை சமயத்தை முடிவான நேரத்திற்கு அருகாமையில், மாஸ்டர் படைப்பவரான நீங்கள் தான் கொண்டு வர வேண்டும். ஒரு நொடியில் மனதிற்கு அதிகாரியாகி மனதை ஒருமுகப்படுத்த முடியுமா? முற்றுப்புள்ளி வைக்க முடியுமா? முற்றுப்புள்ளி வைக்கிறீர்களா? முற்றுப்புள்ளி வைக்கிறீர்கள் ஆனால்

கேள்விக்குறியாகி விடுகிறதா? ஏன்? என்ன? எப்படி? இது என்ன? அது என்ன? ஆச்சர்யக் குறி கூட இருத்தல் கூடாது. முற்றுப்புள்ளி ஒரு நொடியில் புள்ளி ஆகி விடுங்கள். மற்ற எந்த உழைப்பும் இருக்காது. ஒரு வார்த்தையை மட்டும் அப்பியாசத்தில் கொண்டு வாருங்கள். பாயிண்ட் (புள்ளி) சொரூபம் ஆக வேண்டும் வீணானதிற்கு புள்ளி வைக்க வேண்டும். மற்றும் கேட்கின்ற மகா வாக்கியத்தின் குறிப்புகள் மீது சிந்தனை செய்ய வேண்டும். மற்ற எந்த விதமான கஷ்டமும் கிடையாது. புள்ளியை நினையுங்கள். புள்ளி வைத்து விடுங்கள். புள்ளி ஆகி விடுங்கள். இந்த அப்பியாசத்தை நாள் முழுவதும் நடு நடுவில் எத்தனை முறை எவ்வளவு தான் பிஸியாக இருந்தாலும் இதை பயிற்சி செய்து பாருங்கள். ஒரு நொடியில் புள்ளி வைக்க முடியும். ஒரு நொடியில் புள்ளி ஆக முடியும். எப்பொழுது இந்த அப்பியாசம் இருக்குமோ, அடிக்கடி செய்கின்ற அப்பியாசம் தான் வருகின்ற கடைசி நேரத்தில் முழுமையான மதிப்பெண் எடுக்க முடியும். பாஸ் வித் ஹானர் ஆகி விடுவீர்கள். இது தான் பரமாத்மாவின் பாலனையாகும்.

முதல் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் வந்துள்ளனர். நல்வரவாகுக! முதன் முதலில் வந்துள்ளீர்கள். எனவே முதல் நம்பரிலும் வரவேண்டும், வாய்ப்புள்ளது. நாங்கள் முதல் முறையாக வந்துள்ளோம், நமக்கு முன்னரேயே பலர் உள்ளனர் ஆனால் நாடகத்தில் இறுதியில் வந்தாலும் வேகமாக முன்னேறி முதல் நம்பரில் வரும் வாய்ப்பு உள்ளது. சான்ஸ் (வாய்ப்பு) பயன்படுத்திக் கொள்வோரை பாபா சான்ஸ்லர் (வேந்தர்கள்) என்கிறார். யார் வேந்தர்கள் ஆகப் போகிறீர்கள்? ஆஹா! இவ்வளவு பேரா! வாழ்த்துக்கள் வந்திருக்கும் அனைவருமே கை உயர்த்துகின்றனர், வாழ்த்துக்கள்!, வாழ்த்துக்கள்!! பாப்தாதா, வந்திருக்கின்ற இனிமையிலும் இனிமையான குழந்தைகளை நினைவு செய்கிறார்? ஏன் வரவேற்கிறார்? தெரியுமா? அழைப்பு என்பது அனேகருக்குக் கிடைத்தது ஆனால் வரக்கூடிய நீங்கள் வந்து சேர்ந்து விட்டீர்கள் பாப்தாதா ஏன் உங்களை நினைவு செய்தார்! ஏனெனில், பாப்தாதா அறிவார். வந்துள்ள அனைவரும் சினேகமானவர்கள், சகயோகி களாக யிருந்து சகஜயோகிகளாகும் தரம் உள்ளவர்கள். தைரியம் வைத்தீர்கள் எனில், பிறருக்கும் சகஜ யோகத்தின் தூதுவர்களாகி செய்தியை வழங்க முடியும் செய்தியை வழங்குவது என்றால். இறைவனின் தூதுவர்

ஆவது ஆத்மாக்களை துக்கம், அசாந்தியிலிருந்து விடுதலை அளிப்பது. இருப்பினும் உங்களது சகோதர சகோதரிகள் தானே! உங்களது சகோதர சகோதரிகளுக்கு செய்தி வழங்குவது எனில், அவர்களுக்கு விடுதலை அளிப்பது. இதன் ஆசீர்வாதம் அதிகம் கிடைக்கும். மேலும் ஆசீர்வாதம் கிடைப்பதால் அதீந்திரிய சுகம், உள்குஷியின் அனுபவம் அதிகம் கிடைக்கும். ஏன்? ஏனெனில் குஷியை வழங்கு வதன் மூலம் குஷி அதிகரிக்கிறது. அனைவரும் குஷியாயிருக்கிறீர்களா? விசேஷமாக பாப்தாதா விருந்தினர்களைக் கேட்கவில்லை, அதிகாரிகளிடம் (உரிமையுடையோர்) கேட்கிறார். தங்களை விருந்தினர்களாக உணர வேண்டாம், அதிகார உரிமையுடையோர் ஆக அனைவரும் குஷியாய் இருக்கிறீர்களா? வந்திருக்கும் உங்களிடம் தான் கேட்கிறார். வந்திருப்பதால் விருந்தினர் என கூறலாம். ஆனாலும் விருந்தினர்கள் இல்லை, மகான் ஆகி, மகான் ஆக்கக் கூடியவர்கள். குஷியாய் இருக்கிறீர்களா? குஷி என்றால் கை அசையுங்கள்! இப்போது குஷியா? இப்போது போய் என்ன செய்வீர்கள். குஷியை விநியோகிப்பீர்கள் தானே! அனைவருக்கும் அதிகமாய் குஷியை விநியோகியுங்கள் எவ்வளவு விநியோகிப்போமோ அவ்வளவு அதிகரிக்கும். சரியா? நல்லது. நன்றாகக் கைத்தட்டுங்கள். அனைவரும் கை தட்டுகின்றனர். எப்படி இப்போது கை தட்டினீர்களோ அவ்வாறே சதா குஷியின் கையை தட்டிக் கொண்டே இருங்கள்.

நாலா புறங்களிலுமுள்ள, சாகார ரூபத்தில் எதிரில் இருந்தாலும் சரி, தூரத்தில் இருந்தாலும் உள்ளத்தால் அருகில் இருக்கக்கூடிய இப்படிப்பட்ட சதா சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மாக்களுக்கு சதா நிமித்தமாயிருந்து, நிர்மாண் காரியத்தில் ஈடுபடக்கூடிய விசேட ஆத்மாக் களுக்கு சதா பாபா சமான் ஆவதற்கான உற்சாகம் ஆர்வத் தில் முன்னேறிச் செல்லக்கூடிய தைரியமுள்ள ஆத்மாக்களுக்கு, சதா ஒவ்வொரு அடியிலும் பல கோடி மடங்கு சம்பாத்தியத்தை சேமிக்கக் கூடிய மிக மிக உலகத்தில் பன்மடங்கு செல்வந்தர்களான, நிறைந்து வழியும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

சேவையின் வாய்ப்பு போபால் ஜோன்: போபாலை சார்ந்தவர்கள் எழுந்திருங்கள். சேவையின் வாய்ப்பினால் எத்தனை பன்மடங்கு

ஒவ்வொரு அடியிலும் சேர்த்தீர்கள்? சேமீத்தீர்களா? ஏனென்றால் இங்கு சேவை மற்றும் யக்ஞ தந்தையின் நினைவு இருக்கிறது. யக்ஞ சேவை செய்கிறீர்கள் என்றால் யக்கு தந்தையின் நினைவும் தானாகவே வருகிறது. இங்கு என்ன செய்தீர்கள்? இரண்டு வேலை தானே? அதைத் தவிர்த்து எந்த வேலையும் இல்லை யல்லவா? தந்தையை நினைவு செய்வது மற்றும் சேவை செய்வது பிற வேலை ஏதாவது இருந்ததா என்ன? இது தானே இருந்தது. சேவை செய்வது என்றாலே சக்திசாலி பலனை சாப்பிடுவது ஆக மிக சிறப்பாக சேவை செய்தீர்கள். தனக்கும் சேமிப்புக் கணக்கினை சேமித்தீர்கள் மேலும் மற்ற வர்களுக்கும் ஓய்வினை அளித்தீர்கள் அதாவது தந்தையின் நினைவினை அளித்தீர்கள். ஆக சிறப்பபான பொன்னான வாய்ப்பினைப் பெற்றீர்கள். மற்றும் இங்கு சேமித்ததை அங்கு சென்று சுயத்திற்காகவும் மேலும் பிறருக்கும் அளிக்கவும். நல்லது. இதிலிருக்கும் டீச்சர்கள் கையை உயர்த்துங்கள். பாப்தாதா சதா டீச்சர்களுக்கு தெரிவிக்கிறார் -டீச்சர் என்றாலே தன்னுடைய தோற்றம் மூலம் வருங்காலத்தை தெரியப்படுத்துபவர்கள். இப்படிப்பட்ட டீச்சர்கள் தானே. தங்களைப் பார்த்து சொர்க்கத்தின் சுகத்தின் அனுபவம் ஏற்பட வேண்டும். சாந்தியின் அனுபவம் ஏற்பட வேண்டும். நடக்கும் பொழுது பரிஸ்தாக்களாகத் தென்பட வேண்டும். இப்படிப்பட்ட டீச்சர்கள் தானே. நல்லது. இல்லறத்தில் இருந்தாலும் சரி, சேவையில் நிமித்தமாக இருந்தாலும் சரி அனைவரும் பாப்தாதாவிற்குச் சமமாகக் கூடிய நிச்சய புத்தி வெற்றியடைபவர்கள். ஆக மிக சிறப்பாக இருந்ததல்லவா? சேவை செய்வது சிறப்பாக இருந்ததல்லவா? திருப்தியாக இருந்தீர்களா? இருந்தீர்கள் என்றால் கையை அசைக்கவும். மிக நல்லது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

**மீடியா விங்:** மதிப்பு மிக்க மீடியா, சத்தியம், நிர்பயம், தெய்வீகம், பரமாத்மா பிரத்யக்ஷம் என்ற பேனர்களை காட்டினார்கள். நல்ல லட்சியம் வைத்துள்ளீர்கள், மீடியா என்றாலே பாப்தாதாவை வெளிப்படுத்துவதற்கான சப்தத்தை பரப்பக் கூடியவர்கள். மீடியாவே பிரத்யக்ஷம் செய்வதற்கான சாதனம் ஏனென்றால் மக்கள் கூறுகிறார்கள் உங்களுடைய சப்தம் அந்தளவு நாலாபுறமும் பரவவில்லை ஆனால் மீடியாவானது இப்படிப்பட்ட சாதனமாகும் அது நாலா புறமும் சப்தத்தை பரப்ப முடியும். இப்பொழுது சிறிதளவு

பரப்பியுள்ளீர்கள், ஆகவே இப்பொழுது இப்படிப்பட்ட வாயுமண்டலத்தைப் பரப்பவும் அதன் மூலம் ஒவ்வொரு மீடியா துறையினரும் தானே முன் வந்து எங்களுக்கும் சேவையை அளியுங்கள் எனக் கூற வேண்டும். தொடர்பு நன்றாக வைத்திருக்கிறீர்கள். தொடர்பில் இருக்கக் கூடியவர்களை எங்களுக்கும் பொறுப்பு உள்ளது என்ற உறவில் கொண்டு வர வேண்டும். செய்து கொண்டிருக்கிறீர்கள், செய்து கொண்டிருப்பீர்கள் மற்றும் அவசியம் சப்தம் பரவியே தீரும். பரப்பக்கூடியவர்கள் புத்திசாலிகளாக இருந்தால், சப்தம் பரவும் அல்லவா! ஆரம்பித்துள்ளீர்கள், சிறப்பாகச் செய்கிறீர்கள். இப்பொழுது இதை அதிகரிக்கவும். தாதிஜியின் விருப்பம் -ஒரு கோடி மக்களுக்கு அறிமுகம் கிடைக்க வேண்டும். இப்படி திட்டம் தீட்டியுள்ளோம். மேலும் பல திட்டம் தீட்டியுள்ளோம். வாழ்த்துக்கள்! நடைமுறையில் செய்யுங்கள், பிறகு பரிசினையும் அளிப்போம். இப்பொழுது வாழ்த்துக்கள்.

<u>**அறிவியில் மற்றும் பொறியியல் துறை:**</u> பேனர் நிமித்தம், பணிவு மூலம் புது படைப்பு, ஞானம்-விஞ்ஞானம் விழிப்பு -சிறப்பாக செய்துள்ளீர்கள். இப்பொழுது விஞ்ஞானி மற்றும் பொறியியல் துறையினர் இப்படி ஏதாவது செய்து காட்ட வேண்டும். இதனால் மக்கள் அனுபவம் செய்ய வேண்டும். அமைதி சக்தி விஞ்ஞானத்தையும் தெளிவு செய்து மேலும் முன்னேற்றத்தில் கொண்டு செல்ல முடியும். விஞ்ஞானம் மற்றும் அமைதியின் சேர்க்கை என்னென்ன செய்ய முடியும் அந்த முக்கியமான கருத்துக்களை (பாயின்ட்ஸ்) சேகரியுங்கள். அதன் பிறகு அதை பாபாவும் விஞ்ஞானிகளுக்கு தெரிய வர வேண்டும். அமைதியானது நமது விஞ்ஞானத்தில் என்ன உதவி அளிக்க இயலும், என்ன முன்னேற்றம் ஏற்படுத்தலாம்? இப்படிப்பட்ட அனுபவத்தை சுயம் செய்யவும், மற்றும் செய்விக்கவும். நல்லது. பாப்தாதா மகிழ்ச்சியாக இருக்கிறார். ஒவ்வொரு துறையினரும் காரியத்தில் ஈடுபட்டுள்ளனர். சிந்தனை செய்வதை ஆரம்பித்து உள்ளார்கள். இப்பொழுது சிந்தனை மூலம் வெண்ணையை (ஞான கருத்துக்களை) வெளிக் கொண்டு வரவும். ஏதாவது இப்படிப்பட்ட விசேஷ அனுபவத்தை அவர்களின் முன் வைக்கவும். ஏனென்றால் தற்சமயம் நடைமுறை அனுபவமானது பிரபாவத்தை வெளிப்படுத்தக் கூடியதாகும். தலைப்பு (டாபிக்) மீது சொற்பொழிவு நடத்துகிறீர்கள்

ஆனால் சொற்பொழிவை விட விசேஷமான நடைமுறை அனுபவத்தைக் கூறுவதற்கான லட்சியத்தை வையுங்கள். மற்றப்படி சிறப்பாகச் செய்கிறீர்கள். சிறப்பாக இருக்கிறது இதுவும் ஒரு வாய்ப்பாக கிடைத்து விடுகிறது. விதியை நன்றாக செய்துள்ளீர்கள். நல்லது -வாழ்த்துக்கள், செய்ததற்கும், வாழ்த்துக்கள் மேலும் செய்வீர்கள். அதற்கும் முன் கூட்டியே வாழ்த்துக்கள். இந்த விங்கை சார்ந்தவர்கள் இரண்டு குணத்தை விசேஷமாக தாரணை செய்வோம் என்று வைத்துள்ளார்கள் -நிமித்த பாவனை மற்றும் பணிவு! நல்லது. மிக சிறப்பாகச் செய்துள்ளீர்கள், செய்து கொண்டே இருக்கவும் மற்றும் லட்சியத்தில் உறுதியாக இருக்கவும்.

நிர்வாகத்துறை: நல்லது. தாங்களும் திட்டத்தை தீட்டியுள்ளீர்கள். மற்றும் உருவாக்கி கொண்டே இருக்கிறீர்கள் நல்லது. நிர்வாகிகள் மாற்றம் பெற்று விட்டால் அனைவரும் மாற்றம் பெற்று விடலாம் ஏனென்றால் எப்படி ராஜாவோ அப்படியே பிரஜைகள் என்று சொல்லப்படுகிறது. ஆக நிர்வாகிகள் தங்களுடைய வாழ்க்கையில் மாற்றம் கொண்டு வந்தால் மற்றவரையும் மாற்றம் செய்வதில் நிமித்தமாக முடியும். அப்படியென்றால் சிறப்பானது அல்லவா? ஏனென்றால் ஒவ்வொரு தேசத்திலும் நிர்வகிக்க கூடியவர்கள் இருக்கிறார்கள். ஆக ஒவ்வொரு தேசத்திலும் விசேஷமாக அவர் களை மாற்றம் செய்வதற்கான அறிமுகத்தை அளித்து தகுதியுடைவராக்கவும். மற்றபடி சேவை சிறப்பாக இருக்கிறது. அநேகருக்கு பலனளிக்க முடியும். ஒருவர் அநேகருக்கு நிமித்தமாக இருப்பவர்களாக இருக்கிறார்கள், ஆகவே செய்கிறீர்கள் மேலும் வேகமாக மாற்றம் செய்வதற்கானத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவும். இந்தத் துறையின் அவசியம் இருக்கிறது. அனைவருடைய பார்வை இந்த துறையின் மேல் உள்ளது. ஆக நிமித்தமாகி உள்ளீர்கள், உருவாக்குவீர்கள். நல்லது.

இரட்டை அயல் நாட்டினர்: இரட்டை அயல் நாட்டினர் உலகின் மூலை மூலைக்கு அறிமுகம் அளிப்பதற்கான காரியத்தை மிகச் சிறப்பாக செய்கிறார்கள். பாப்தாதாவிற்குத் தெரிகிறது 50-தேசத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். அப்படியென்றால் 50-தேசத்திதற்கு அறிமுகம் அளிப் பவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அறிமுகம் அளிப்பதற்கான

காரியத்தைச் செய்கிறீர்கள் மற்றும் இப்பொழுதும் திட்டத்தையும் மிகச் சிறப்பாக செய்கிறீர்கள். எங்கெல்லாம் அறிமுகம் கிடைக்க வில்லையோ அங்கு நிமித்தமாக ஆகத்தான் வேண்டும். செய்து கொண்டிருக்கிறீர்கள். இதுவும் பாப்தாதாவிற்குத் தெரிகிறது. இப்பொழுது ஊக்கம், உற்சாகம் உள்ளது மேலும் எங்கு ஊக்கம் உற்சாகம் இருக்கிறதோ அங்கு வெற்றி இருக்கவே இருக்கிறது. ஆக இரட்டை அயல் நாட்டினர் என்றாலே யார்? வெற்றியின் நட்சத்திரங்கள். அப்படி தானே? வெற்றியின் நட்சத்திரங்களாக இருக்கிறீர்கள். சிறப்பாகச் செய்கிறீர்கள். ஒவ்வொருவருடைய உள்ளத்தின் சப்தமானது பாப்தாதாவிடம் சேர்ந்து கொண்டே இருக்கிறது. இதைச் செய்யலாமா, அதை செய்யலாமா, இதையும் செய்யலாமா அதையும் செய்யலாமா, என்ற ஊக்கம் உற்சாகம் சிறப்பாக உள்ளது. மற்றும் வெற்றியானது கிடைக்கத்தான் வேண்டும். உங்களுடைய காலடியில், கழுத்தில் வெற்றி இருக்கவே இருக்கிறது. மற்றும் உங்கள் அனைவரையும் பார்த்து அனைவரும் குஷி அடைகிறார்கள். தங்களை வரவேற்கிறார்கள். இரட்டை அயல் நாட்டினரும் அவசியம் இங்கு இருக்க வேண்டும். செல்லமானவர்கள் ஆகி விட்டீர்கள் அல்லவா? ஆக மிக சிறப்பாகச் செய்கிறீர்கள், செய்து கொண்டே இருப்பீர்கள் பறக்கிறீர்கள், பறக்கச் செய்வீர்கள் அனைத்து டீச்சர்களும் மிகுந்த ஊக்கத்தில் இருக்கிறீர்கள் அல்லவா? பாருங்கள் உங்களுடைய ஊக்க உற்சாகத்தினால் இந்த மகான் அதிகாரி ஆத்மாக்களும் வந்து சேர்ந்து விட்டனர் சிறப்பான குரூப்பை அழைத்து வந்துள்ளீர்கள். யரெல்லாம் அழைத்து வந்தீர்களோ அவர்களுக்கு வாழ்த்துக்கள். குவாலிட்டி நன்றாக உள்ளது. இப்பொழுது மேலும் சப்தம் அவசியம் பரவும். நல்லது. வாழ்த்துகள், வாழ்த்துக்கள், நல்லது.

தாதிஜி மற்றும் தாதி ஜானகிஜியுடன்: நீங்கள் ரூபமாக இருக்கிறீர்கள் (தாதிஜி) மற்றும் இவர்கள் வாசனையாக இருக்கிறார்கள். தாதி ஜானகிஜி -நீங்கள் திருஷ்டி மூலமாக செயலினை செய்து விடுகிறீர்கள். இப்படி உயர கையை வைத்து நடனமாடுகிறீர்கள் அல்லவா நல்லது. அனைவரையும் லேசாக்கி விடுகிறார்கள். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களுக்கு துணையானவர்களும் சிறப்பாக இருக்கிறார்கள். நல்லது வாயுமண்டலத்தை உருவாக்குவது இதுவும் உயர்ந்ததிலும் உயர்ந்த சேவையாகும். ஆதி ரத்தினங்கள் மூலமாக வாயுமண்டலம்

உருவாகிறது. பேசினாலும் சரி, பேசவில்லையென்றாலும் சரி வாயுமண்டலத்தை உருவாக்கக் கூடியவர்கள். பாருங்கள் எவ்வளவு சேவை செய்கிறீர்கள்.

**மனோகர் தாதியிடம்:** மிகச் சிறப்பாக அனைவரையும் சிரிக்க வைத்து விடுகிறீர்கள். இந்த சேவையை மிக சிறப்பாக செய்கிறீர்கள். நல்லது.

**முன்னி சகோதரியிடம்:** சுறுசுறுப்பாக (பிஸியாக) இருக்கிறீர்கள், சுறுசுறுப்பாக வைப்பதிலும் புத்திசாலியாக இருக்கிறீர்கள். மிகச் சிறப்பான பங்கினை நடிக்கிறீர்கள்.

**ஈஷு தாதியிடம்:** இவர்கள் ரகசியமாக இருக்கிறார்கள் ஆனால் அதிர்வலைகளை நன்றாக உருவாக்குகிறார்கள். மிக நல்லது.

**நிர்மல் சாந்தா தாதியிடம்:** இப்பொழுது இயற்கையை வென்றவராகி விட்டீர்களா? இப்பொழுது இயற்கையின் வசம் அல்ல இயற்கையை வென்றவர். பாருங்கள் குழுவில் எவ்வளவு நன்றாகத் தென்படுகிறீர்கள். அனைவரையும் விட மலர்ச்சியாக நீங்கள் தென்படுகிறீர்கள். அனைவருக்காகவும் கையை அசைக்கவும்.

**ருக்மணி சகோதரியிடம்:** நன்றாக இருக்கிறீர்களா? சேவையை அன்பாக செய்கிறீர்கள்.

**இரட்டை அயல்நாட்டிற்கு நிமித்தமான மூத்த சகோதரிகளிடம்:** சிறப்பான சேவையின் வெளிப்பாட்டை அளிக்கிறீர்கள். இதன் மூலமே சப்தம் பரவும். அனுபவத்தைக் கூறுவதினால் மற்றவருக்கும் அனுபவம் அதிகரிக்கிறது. ஆக பாப்தாதா குஷியாக இருக்கிறார். அயல் நாட்டில் சேவைக்கு நிமித்தமானவர்கள் சிறப்பான ஊக்கம், உற்சாகத்துடன் சேவையில் பிஸியாக இருக்கிறார்கள். இந்த தேசத்திலிருந்து சென்றார்கள் ஆனால் அயல் நாட்டிற்காக சேவை ஏதோ அங்கே இருப்பவர்களை போன்று இப்படி நிமித்தமாகிச் செய்கிறீர்கள். தன்னுடையவர் என்ற கிரணங்களை அளிக்கிறார்கள். அனைத்து இடங்களிலும் செய்யக்கூடியவர்கள். ஒரு இடத்தில் செய்யக்கூடியவர்கள் அல்ல. லண்டனை சார்ந்தவர் அல்லது

அமெரிக்காவை சார்ந்தவர் என்றில்லாமல் எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரியாக இருக்கிறார்கள். பொறுப்பென்பது உலகத்தினுடையது அல்லவா? ஆக, பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கிறார், செய்கிறீர்கள், எதிர் காலத்தில் மேலும் சிறப்பிலும் சிறப்பாக பறப்பீர்கள் மற்றும் பறக்க வைப்பீர்கள். நல்லது.

இரட்டை அயல்நாட்டு விருந்தாளிகளிடம்: பாப்தாதா தாங்கள் அனைவரையும் ஏன் நினைவு செய்தார்? ஏனென்றால் நீங்கள் அனைவரும் இறைவன் செய்தியாளராக வேண்டும். செய்தியைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? என்ன செய்தி என்று நினைக்கவும். இந்த செய்தி தெரியுமல்லவா? அனை வருக்கும் தந்தையின் நினைவினை அளித்துக் கொண்டே இருக்கவும். இது எளிது தானே. கடினமாகத் தென்படவில்லை அல்லவா? நினைவில் இருக்கவும். மற்றும் நினைவினை அளிக்கவும். மிக நல்லது செய்தீர்கள் -வந்து சேர்ந்தீர்கள். தங்களை தந்தையின் அதாவது பரமாத்மாவின் பிறப்பு உரிமையின் அதிகாரத்தின் அதிகாரியாகப் புரிந்துள்ளீர்களா? புரிந்துள்ளீர்களா? முழு அதிகாரத்தைப் பெறக்கூடியவர்கள் அல்லவா? முழுமையாக பாதி அல்ல. முழுமையாக தாங்கள் விருந்தாளிகள் அல்ல. மகானாகி மற்றவரையும் மகானாக்கக் கூடியவர்கள். குஷியாக இருக்கிறதல்லவா! குஷியாக இருக்கிறதா?' சதா மகிழ்ச்சியா? இப்பொழுது சதா மகிழ்ச்சியாக இருக்கவும். சதா புன்முறுவலுடன் இருக்கவும். சிரிப்பது நல்லது தானே ஆக சதா மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய குரூப் ஓகே. சதா மகிழ்ச்சியான குரூப் மிக நல்லது.

அனைவரும் தூய்மையான மற்றும் மகிழ்ச்சியான அன்னப்பறவைகள் அன்னத்தின் செயல் என்ன? அன்னத்தில் நிர்ணயிக்கும் சக்தி அதிகமாக இருக்கும். ஆக நீங்களும் மகிழ்ச்சி யான, தூய்மையான அன்னப்பறவைகள் வீணானதை முடிக்கக் கூடியவர்கள் மற்றும் சக்திசாலியாகி சக்திசாலியாக்கக் கூடியவர்கள். அனைவருக்கும் மகிழ்ச்சியா? சதா மகிழ்ச்சியா? இப்பொழுது துக்கத்தைத் வர விடாதீர்கள். விவாகரத்து அளித்து விட்டீர்களா? துக்கத்திற்கு விவாகரத்து அப்பொழுது தான் மற்றவரின் துக்கத்தை தீர்க்க முடியும். ஆக சுகமாக இருக்க வேண்டும். மற்றும் சுகத்தினை அளிக்க வேண்டும். இந்த செயலி னை செய்வீர்களா? இங்கிருந்து என்ன சுகம் கிடைத்ததோ

அதை சேமித்து வைக்கவும். எப்பொழுதும், எது நடந்தாலும் பாபா இனிமையான பாபா துக்கத்தை பெற்றுக் கொள்ளவும், தங்களிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். வீணான பொருளை வைத்துக் கொள்வார்களா என்ன? ஆக துக்கம் வீணானது அல்லவா! ஆக துக்கத்தை விலக்கி விடவும். சுகமாக இருக்கவும். இதுவும் சுகமான குரூப் மற்றும் சுகத்தினை வழங்கும் குரூப். நடந்து செல்லும் பொழுதும் சுகத்தினை வழங்கவும். புன்முறுவலுடன் இருக்கவும். குஷியில் நடனமாடவும்.

**இரட்டை அயல்நாட்டு சேவை செய்த முக்கியமான சகோதர சகோதரிகளிடம்:** அனைவரும் சிறப்பான சேவை செய்துள்ளீர்கள். அதற்காக மிகுந்த, மிகுந்த வாழ்த்துக்கள். இப்படியே சேவை செய்து கொண்டிருங்கள். நல்ல குரூப். ஒரு புத்தகத்தை உருவாக்கி கொண்டிருக்கின்றோம். பாப்தாதா செய்தியை கேட்டார். நல்லது. அனைவருக்கும் மகாவாக்கியம் கிடைக்கும், மகான் ஆகி விடு வார்கள் ஆக. இதில் இப்படிப்பட்ட மந்திரத்தை நிரப்பவும். புத்தகத்தை திறந்தவுடன் மந்திரம் பட்டு விடவேண்டும். குஷியில் நடனமாட வேண்டும். நல்ல முயற்சி செய்கிறீர்கள். பாப்தாதா விற்கு குஷியாக உள்ளது.

**ஆப்ரிக்காவைச் சார்ந்த முக்கிய சகோதர சகோதரிகள்:** அங்கு நடந்த சேவையின் விஷயத்தைத் தெரிவித்தார்கள். மிக நல்லது பாப்தாதாவின் ஆசீர்வாதங்கள் உள்ளது. திட்டம் மிக நன்றாக உள்ளது. வாழ்த்துக்கள். நல்லது. இவர்கள் நிமித்தமாகி உள்ளார்களா? இருவரும் சிறப்பான நிமித்தமானவர்கள். இத்தனை பேருக்கு நன்மை செய்துள்ளீர்கள். இதுவும் மிகப் பெரிய புண்ணியம். புண்ணியாத்மா ஆகி விட்டீர்கள். இருவரும் நன்றாக இருக்கிறார்கள். மிக நல்லது.

**வேதாந்தி சகோதரியிடம்:** நீங்கள் சகயோகம் நன்றாக செய்கிறீர்கள்.

**ஜெயந்தி சகோதரியிடம்:** நீங்கள் முதுகுத் தண்டாக இருக்கிறீர்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 07.03.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூரண பவித்திரத்தா விரதம் இருப்பதும், "நான்" என்பதை அர்ப்பணிப்பதும் தான் சிவஜெயந்தி கொண்டாடுவதாகும்!

இன்று விசேஷமாக சிவதந்தை தன்னுடைய சாலிகிராம் குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். குழந்தைகளாகிய நீங்கள் தந்தையின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றீர்கள். பாப்தாதா குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். ஏனென்றால், தந்தைக்கு குழந்தைகள் மீது மிகுந்த அன்பு இருக்கின்றது. தந்தை அவதரித்த உடனேயே யக்ஞத்தைப் படைக்கிறார். யக்ஞத்தில் பிராமணர்கள் இல்லையேல், யக்ஞம் சம்பன்னமாகாது. ஆதலால் இந்த பிறந்தநாள் அலௌகிகமானது. நியாரா மற்றும் பியாராவாக இருக்கின்றது. தந்தைக்கும், குழந்தைகளுக்கும் ஒன்றாகவே பிறந்த நாள் என்பது, முழு கல்பத்திலும் நடக்கவில்லை. மேலும் இப்படி ஒருபோதும் இருக்கவும் முடியாது. தந்தை நிராகாரமானவராக இருக்கின்றவர். ஒரு பக்கம் நிராகார். இன்னொரு பக்கம் பிறந்தநாள் கொண்டாடுகிறார்கள். சிவதந்தை ஒருவருக்குத்தான் தனக்கென சரீரமில்லை. ஆகவேதான் பிரம்மாபாபாவின் உடலில் அவதரிக்கின்றார். இந்த அவதாரத்தையே, பிறந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள். அப்படியானால், நீங்கள் எல்லோரும் தந்தையின் பிறந்த நாளைக் கொண்டாட

வந்திருக்கிறீர்களா? அல்லது உங்களுடைய பிறந்தநாளைக் கொண்டாட வந்திருக்கிறீர்களா? வாழ்த்துக்களை வழங்குவதற்காக வந்திருக்கின்றீர்களா? அல்லது வாழ்த்துக்களைப் பெறுவதற்காக வந்திருக்கிறீர்களா? இப்படி கூடவே இருப்பதற்கான உடன்பாடு குழந்தைகளிடம் தந்தைக்கு உள்ளது. இப்போதும்கூட சங்கமத்தில் கம்பைன்டாக உடனிருக்கின்றார். அவதாரம் செய்வதும் கூடவேதான், பரிவர்த்தனை செய்வதற்கான காரியமும் டவே தான் மற்றும் பரந்தாமம் செல்வதும் கூடவேதான். இதுதான் தந்தை மற்றும் குழந்தைகளுக்கு இடையேயான அன்பு சொரூபம்.

சிவஜெயந்தியை பக்தர்களும் கொண்டாடுகிறார்கள் ஆனால் அவர்கள் சத்தமாக அழைப்பதும், பாடுவது மட்டுமே தான். நீங்கள் சத்தமாக அழைப்பதில்லை. உங்களுடைய பண்டிகை என்பது சமமாக ஆவதற்காக. கொண்டாடுவது என்பது சதா ஆர்வம், உற்சாகத்துடன் பறந்து கொண்டே இருப்பது. ஆதலால் இதற்கு உற்சவம் என்று கூறுகின்றார்கள். உற்சவம் என்பதன் பொருள் உற்சாகத்தில் இருப்பது என்பதாகும். ஆகவே சதா உற்சவம் அதாவது உற்சாகத்தில் இருப்பவர்கள் தானே? எப்போதும் உற்சாகம் இருந்து கொண்டேயிருக்கிறதா? அல்லது சில சமயம் மட்டும் இருக்கிறதா? பார்க்கப் போனால், பிராமண வாழ்க்கையின் சுவாசமே ஆர்வம்-உற்சாகம்தான். எப்படி சுவாசிக்காமல் உயிர் வாழ முடியாதோ, அதுபோல பிராமண ஆதமாக்கள் ஆர்வம், உற்சாகம் இல்லாமல் பிராமண வாழ்க்கையில் இருக்க முடியாது. இப்படி அனுபவம் செய்கிறீர்களா? பாருங்கள்! விசேஷமாக பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக, எங்கெங்கிருந்தோ, தூர தூரமாக இருந்தெல்லாம் ஓடோடி வந்திருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு குழந்தைகளினுடைய பிறந்த நாள் பற்றி எவ்வளவு குஷி இருக்கிறதோ அதுபோல் தன்னுடைய பிறந்த நாள் பற்றி, அவ்வளவு குஷி இல்லை. ஆதலால், பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் நூறு மடங்கு குஷியை தட்டுகளில் நிரப்பி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

பாப்தாதாவுக்கு இன்றைய தினம் உண்மையான பக்தர்களின் நினைவு அதிகமாக வருகிறது. இவர்கள் ஒரு நாள் விரதம் இருக்கிறார்கள்

ஆனால் நீங்கள் வாழ்க்கை முழுவதும் சம்பூரண பவித்திரமாக வாழ வேண்டும் என்று விரதம் இருக்கிறீர்கள். அவர்கள் உணவில் விரதம் இருக்கிறார்கள். நீங்களும் கூட மனதிற்கான உணவில், வீணான எண்ணம், எதிர்மறை எண்ணம், அபவித்திர எண்ணம் இருக்கக்கூடாது என்ற விரதம் இருக்கிறீர்கள். பக்கா விரதம் து இருக்கிறீர்கள் அல்லவா? இந்த டபுள்ஃபாரினர்ஸ் எதிரிலேயே முன்னால் அமர்ந்திருக்கிறார்கள். குமாரர்களாகிய நீங்கள் சொல்லுங்கள். குமாரர்கள் விரதம் இருக்கின்றார்களா? பக்கா? கச்சா அல்ல. மாயை கேட்டுக் கொண்டிருக்கிறது. எல்லாக் கொடிகளும் அசைவதை மாயை பார்த்துக் கொண்டிருக்கிறது. கொடிகளை அசைத்துக் காண்பிக்கிறார்கள். எப்போது விரதம் இருக்கிறீர்களோ (உறுதிமொழி) அப்போது பவித்திரமாக இருக்கத்தான் வேண்டும். விரதம் இருப்பது என்பது விருத்தியை (உள்உணர்வை) சிரேஷ்டமா வைத்துக் கொள்வதாகும். எப்படி விருத்தி இருக்கின்றதோ அதுபோலவே திருஷ்டி (பார்வை), கிருத்தி (செயல்) தானாகவே ஆகி விடும். அப்படியானால், இப்படிப்பட்ட விரதம் இருக்கின்றீர்கள் அல்லவா? பவித்திர சுப விருத்தி, பவித்திர சுப திருஷ்டி. எப்போது ஒருவரையொருவர் பார்க்கின்றீர்களோ அப்போது என்ன பார்க்கிறீர்கள்? முகத்தைப் பார்க்கிறீர்களா? அல்லது பிருகுட்டியில் பிரகாசிக்கும் ஆத்மாவைப் பார்க்கிறீர்களா? ஒரு குழந்தை இப்படி கேட்டது. அதாவது எப்போது பேச வேண்டுமோ, அல்லது வேலை செய்ய வேண்டுமோ அப்போது முகத்தைப் பார்த்துக் கொண்டு தான் பேசும்படியாக இருக்கிறது. கண்களின் பக்கமாக பார்வை செல்வதால், சில சமயம் முகத்தைப் பார்த்து கொஞ்சம் விருத்தியில் சஞ்சலம் உண்டாகிறது. பாப்தாதா கூறுகிறார் கண்களைப் பார்க்கும் போதும், கூடவே பிருகுட்டியும் இருக்கிறதல்லவா? பிருகுட்டியில் இருக்கும் ஆத்மாவைப் பார்த்து பேச முடிவதில்லையா? இப்போது பாப்தாதா, எதிரில் அமர்ந்து கொண்டிருக்கும் குழந்தைகளின் கண்களைப் பார்க்கின்றாரா? பிருகுட்டியில் இருக்கும் ஆத்மாவைப் பார்க்கின்றாரா? தெரிகிறதா? கூடக்கூடவேதான் நடக்கிறதல்லவா? ஆதலால் முகத்தைப் பாருங்கள் ஆனால் முகத்தில் பிருகுட்டியில் ஜொலிக்கும் நட்சத்திரத்தைப் பாருங்கள். இப்படி விரதம் எடுத்துக் கொள்ளுங்கள். இருக்கின்றீர்கள் என்றாலும் இதில் இன்னும் சற்று கவனம் வைக்க வேண்டும். ஆத்மாவைப் பார்த்துப் பேச வேண்டும். ஆத்மாவுடன், ஆத்மா பேசுகிறது. ஆத்மா பார்க்கிறது. இதனால் விருத்தி

சதா சுபமாக இருக்கும். மேலும் இத்துடன் இன்னொரு லாபமும் உண்டு. அதாவது விருத்தி எப்படி இருக்கிறதோ, அப்படி வாயுமண்டலமும் இருக்கும். வாயுமண்டலத்தை சிரேஷ்டமாக வைத்துக் கொள்வதன் மூலம் சுய புருஷாரத்தத்தோடு. சேவையும் ஆகி விடும். இப்படி இரண்டு விதமான லாபம் இருக்கிறது அல்லவா? ஆகவே உங்களுடைய விருத்தியை (உள்ளுணர்வை) சிரேஷ்ட மானதாகச் செய்து விட்டால், உங்கள் விருத்தியின் வாயுமண்டலம் காரணமாக எப்படிப்பட்ட விகாரி அல்லது பதீதமானவர்களும் பரிவர்த்தனை ஆகி விடுவார்கள். இப்படிப்பட்ட விரதம் சதா ஸ்மிருதியில் (நினைவில்) இருக்கட்டும். சொரூபத்தில் இருக்கட்டும்.

தற்சமயம், பாப்தாதா குழந்தைகளின் சார்ட்டைப் பார்த்தார். தங்களுடைய விருத்தி மூலம் வாயுமண்டலத்தை உருவாக்குவதற்குப் பதிலாக சில இடங்களில், அவ்வப்போது மற்றவர்களின் வாயுமண்டலத்தின் பிரபாவத்திற்குள்ளாகிறார்கள். என்ன காரணம்? குழந்தைகள் பாப்தாதாவுடன் மிகவும் இனிமையான ஆன்மீக சம்பாஷனை செய்கிறார்கள். என்ன கூறுகின்றார்கள்? இவர்களிடமுள்ள விசேஷம் நன்றாக உள்ளது. இவர்களிடமிருந்து நல்ல சகயோகம் கிடைக்கிறது. விசேஷம் யாருடையது? பிரபுவிடமிருந்து கிடைத்தது தானே! அதாவது ஆனால் கொடுக்கும் வள்ளலை மறந்து விட்டு, பெறுகின்ற வரை நினைவு செய்தால் ...! பிரசாதம் ஒருபோதும் எந்த ஒரு தனிப்பட்டவருடையதல்ல. பிரபு பிரசாதம் என்றே சொல்லப்படுகிறது. இவருடைய பிரசாதம் என்று சொல்வதில்லை. சகயோகம் கிடைக்கிறது. நல்ல விஷயம்தான் ஆனால் சகயோகம் கிடைக்கச் செய்யும் வள்ளலை மறக்காமல் இருக்க வேண்டும். ஆகவே பக்கா, பக்கா பிறந்த நாள் விரதம் வைத்திருக்கிறீர்களா? விருத்தி மாறி விட்டதா? சம்பன்ன (நிறைந்த) பவித்திரத்தா. இந்த உண்மையிலும் உண்மையான விரதம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது பிரதிக்ஞை செய்ய வேண்டும். பெரிய, பெரிய விகாரத்திற்கு விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் அதன் குழந்தை குட்டிகளிடமிருந்து முக்தியடைந்து விட்டீர்களா? மற்றபடி பாருங்கள் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு, அவர்களுடைய குழந்தைகளை விட பேரன், பேத்திமார்களிடம் தான் அன்பிருக்கும். மாதாக்களுக்கு அன்பு இருக்கிறதல்லவா? அதாவது பெரிய சிலர் இப்படி

ரூபத்திலுள்ளவற்றின் மீது வெற்றி அடைந்து விட்டீர்கள் ஆனால் சிறியவைகள் சூட்சும ரூபத்தில் சண்டை போடுவதில்லையல்லவா? சொல்கிறார்கள் அல்லவா! பற்று இல்லை ஆனால் பிடித்தமானதாக இருக்கிறது. இந்தப் பொருள் மிக நன்றாக இருக்கிறது ஆனால் பற்று இல்லை என்பார்கள். விசேஷமாக எதனால் நன்றாக இருக்கிறது? ஆதலால் சோதித்துப் பாருங்கள். சிறு சிறு ரூபத்தில் அபவித்திரத்தாவின் அம்சம் இன்னும் மிச்சம் மீதி இருக்கிறதா? ஏனென்றால் ஆம்சமாயிருப்பது சில சமயம் வம்சமாக உற்பத்தியாகி விடும். எந்த ஒரு விகாரமானாலும் சிறிதோ, பெரிதோ வருவதற்கு நிமித்தமாயிருப்பது. ஒரு வார்த்தைதியினுடைய பாவனைதான், அந்த வார்த்தை என்னவென்றால் "நான்" என்பது. தேகாபிமான "நான்". இந்த ஒரு "நான்" என்ற வார்த்தையிலிருந்து அபிமானம் கூட வருகிறது. மேலும் அபிமானம் நிறைவேறாமல் போனால் கோபம் வருகிறது. ஏனென்றால் கோபத்தின் அறிகுறி அந்த ஒரு வார்த்தையும் கூட தன்னுடைய அபிமானத்தை பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. ஆகவே தான் கோபம் வருகிறது. சரி, பக்தர்கள் பலி கொடுக்கிறார்கள் ஆனால் தற்காலத்தில் எந்த ஒரு லௌகிக நான் என்பது உள்ளதோ, அதை தந்தையிடம் கொடுத்து அர்ப்பணம் செய்து விடுங்கள். இப்படி நினைக்காதீர்கள் செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும் என்று வேண்டும், வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருக்கக் கூடாது. நீங்கள் திறமைசாலிகள், இன்னும் கொஞ்சம் அதிக திறமைசாலியாகி சமாப்தி செய்து விடுங்கள். இது ஒன்றும் புதிய விஷயமில்லை. எத்தனை கல்பம், எத்தனை முறை சம்பூரணம் ஆகியிருக்கிறீர்கள். செய்திருப்பதைச் செய்கிறீர்கள். திரும்பவும். செய்ய வேண்டும். அவ்வளவுதான். செய்திருப்பதைச் செய்ய வேண்டும். ஆகவேதான் இது நிச்சயிக்கப்பட்ட டிராமா என்று சொல்லப்படுகிறது. செய்யப்பட்டிருக்கிறது, இப்போது திரும்பவும் செய்ய வேண்டும். அதாவது அப்படிச் செய்ய வேண்டும். அவ்வளவுதான். கஷ்டமா? அல்லது சுலபமா? பாப்தாதாவுக்குத் தெரியும். சங்கமயுகத்தின் வரதானம் சகஜ புருஷார்த்தம், இந்த ஜன்மத்தின் சகஜ புருஷார்த்தத்தின் வரதானம் 21-ஜன்மம் சகஜமான வாழ்க்கை தானாகவே கிடைத்து விடும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் கஷ்டப்படுவதிலிருந்தும் விடுவிப்பதற்காக வந்திருக்கின்றார். 63-ஜன்மம் கஷ்டப்பட்டீர்கள். ஒரு ஜென்மம் பரமாத்ம அன்பு மற்றும்

மிகுந்த சிநேக பாவத்துடன் கஷ்டப்படுவதிலிருந்து விடுதலை பெற்று விடுங்கள். எங்கே சிநேகம் உள்ளதோ அங்கு கஷ்டம் இல்லை. எங்கே கஷ்டம் உள்ளதோ, அங்கு சிநேகம் இல்லை. ஆதலால் பாப்தாதா "சகஜ புருஷாரத் பவ" என்னும் வரதானம் கொடுக்கின்றார். மேலும் முக்தி அடைவதற்கான சாதனம் -சிநேகம் மற்றும் பாபாவிடம் உள்ள ஆழமான அன்பு. அன்பில் மூழ்கியிருத்தல், மேலும் மகா தாயத்து மன்மனாபவ என்னும் மந்திரம். ஆகவே தாயத்தை செயலில் உபயோகப்படுத்துங்கள். செயல்படுத்துவது எப்படி என்பது தெரியுமல்லவா? பாப்தாதா பார்க்கின்றார். (சங்கமயுகத்தில் பரமாத்ம அன்பு மூலமாக, பாப்தாதாவிடமிருந்து எவ்வளவு சக்திகள் கிடைத்திருக்கின்றதோ, குணம் கிடைத்திருக்கின்றதோ, ஞானம் கிடைத்திருக்கின்றதோ, குஷி கிடைத்திருக்கின்றதோ இவை எல்லாம் பிரபுவின் பிரசாதம். இந்த பிரபு பிரசாதத்தை, கஜானாக்களை தேவையான சமயத்தில் காரியத்தில் பயன்படுத்துங்கள்.

ஆகவே பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்பதை புரிந்து கொண்டீர்களா? ஒவ்வொரு குழந்தையும் சகஜ புருஷாரத்தி. சகஜம் மற்றும் தீவிரம். உறுதியைக் கடைப்பிடியுங்கள். ஆகத்தான் வேண்டும். நாம் ஆகவில்லையேல், வேறு யாரால் ஆக முடியும்? செய்வோம் என்று சொல்லாதீர்கள். செய்தேயாக வேண்டும். ஆகத்தான் வேண்டும். நிச்சயிக்கப்பட்டு விட்டது.

பாப்தாதா உள்நாடு மற்றும் வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார். எதிரில் அமர்ந்திருக்கின்ற உங்களை மட்டும் பார்க்கவில்லை. நாலா பக்கமும் உள்ள உள்நாடு, வெளிநாட்டுக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார், இங்கும், அங்குமிருந்து பிறந்த நாள் வாழ்த்துக்கள் மெஜாரிட்டி வந்திருக்கின்றன. கார்டு வந்திருக்கிறது. இ.மெயில் கூட வந்திருக்கிறது. உள்ளத்தின் சங்கல்பம் கூட வந்திருக்கிறது. தந்தையும் கூட குழந்தைகளின் மகிமையைப் பாடுகின்றார். நீங்களும் கூட புகழ் பாடுகின்றீர்கள் அல்லவா? பாபா நீங்கள் கமால் செய்து விட்டீர்கள் என்று பாடுகிறீர்கள். தந்தையும் கூட இனிமையான குழந்தைகள் கமால் செய்து காட்டுகிறார்கள் என்று பாடுகின்றார். பாப்தாதா சதா கூறுகின்றார். நீங்கள் எதிரில் அமர்ந்திருக்கின்றீர்கள் ஆனால் தூரமாயிருப்பவர்களும்

கூட பாப்தாதாவின் உள்ளத்தில் அமர்ந்திருக்கின்றனர். இன்று நாலா பக்கமிருக்கின்ற குழந்தைகளின் எண்ணத்தில் வாழ்த்துக்கள், வாழ்த்துகள் என்று வாழ்த்துக்களாகவே இருக்கின்றது. பாப்தாதாவின் காதுகளில் சப்தம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் மனதிலும் சங்கல்பம் வந்து அடைந்து கொண்டிருக்கிறது கார்டு அல்ல இது ஆனால் இது நிமித்த கார்டு. கடிதம் தான் ஆனால் மிகப் பெரிய வைரத்தைக் காட்டிலும் பெரிய சன்மானம். எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லோரும் தங்களுடைய பிறந்த நாளை கொண்டாடிவீட்டீர்கள். இரண்டு ஆண்டுகளாக இருந்தாலும் சரி, ஒரு ஆண்டாக இருந்தாலும் சரி, ஒரு வாரமாக இருந்தாலும் சரி ஆனால் யக்கு ஸ்தாபனையின் பிறந்த நாள். எல்லோருமே, பிராமண யக்ஞ நிவாசிகள் தான், ஆதலால் எல்லா குழந்தைகளுக்கும் மிக, மிக உள்ள பூர்வமான அன்பு நினைவுகள், ஆசிர்வாதமும் கூட. சதா ஆசிர்வாதங்களில் வளர்ந்து கொண்டே இருங்கள். பறந்து கொண்டே இருங்கள். ஆசிர்வாதம் கொடுப்பது மற்றும் பெறுவது சகஜமாக இருக்கிறதல்லவா? சகஜமா? யார், சகஜம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். கொடியினை அசையுங்கள். ஆசிர்வாதத்தை விட்டு விட மாட்டீர்கள் அல்லவா? எல்லாவற்றையும் விட சகஜமான புருஷாரத்தம் ஆசிர்வாதம் கொடுப்பது. ஆசிர்வாதம் பெறுவது. இதில் யோகாவும் உள்ளது. ஞானம் கூட வந்து விடுகிறது, தாரணையும் வந்து விடுகிறது, சேவையும் வந்து விடுகிறது. ஆசிர்வாதம் கொடுப்பது மற்றும் பெறுவதில் நான்கு பாடங்களும் வந்து விடுகின்றன.

ஆகவே டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு ஆசிர்வாதம் கொடுப்பது மற்றும் பெறுவது சகஜமாக இருக்கின்றதா? 20-ஆண்டு காலம் இருப்பவர்கள் வந்திருந்தால், அவர்கள் கை உயர்த்துங்கள். உங்களுக்கு 20-ஆண்டுகள் ஆகி விட்டன. இதற்காக பாப்தாதா உங்களுக்கு நூறு மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். எத்தனை நாடுகளிலிருந்து வந்திருக்கின்றனர். (69-நாடுகள்) வாழ்த்துக்கள். 69-வது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக 69-நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். எவ்வளவு நன்றாக இருக்கிறது! வருவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை தானே? சகஜமாக வந்து விட்டீர்கள் அல்லவா? எங்கே உள்ள பூர்வமான

அன்பு இருக்கிறதோ, அங்கு கஷ்டம் ஒன்றுமில்லை. ஆகவே இன்றைக்கு எந்த ஒரு வரதானத்தை விசேஷமாக வைத்துக் கொள்ளப் போகிறீர்கள்? “சகஜ புருஷாரத்தி" சகஜமான காரியம் சீக்கிரம், சீக்கிரமாக நடந்து விடும். கஷ்டப்பட்டுச் செய்யும் காரியம் கஷ்டமாகவும், தாமதமாகவும் நடக்கும். அப்படியானால் நீங்கள் எல்லோரும் யார்? “சகஜ புருஷாரத்தி சொல்லுங்கள். நினைவில் இருக்க வேண்டும். உங்களுடையை நாட்டுக்குத் திரும்பிச் சென்றவுடன் கஷ்டப்பட்டு முயற்சி செய்யக்கூடாது. ஒருவேளை ஏதாவது கஷ்டப்பட்டு முயற்சி செய்யவேண்டியிருந்தால், மனதார சொல்லுங்கள் பாபா! மேரா பாபா! கஷ்டம் இல்லாமல் போய்விடும். நல்லது, கொண்டாடி விட்டீர்களா? தந்தையும் கூட கொண்டாடினார். நீங்களும் கூட கொண்டாடிவிட்டீர்கள். நல்லது. சொல்லுங்கள். டபுள் விதேஷி 6-குரூப்பாக தனித்தனியாக பட்டி செய்து கொண்டிருக்கிறார்கள்.

குமாரிகளுடன்: ஒவ்வொரு குமாரியும் 100-பிராமணர்களை விட உத்தமமானவர்கள். ஆதலால் சோதித்துப் பார்க்க வேண்டும். மகிமை இருக்கிறதல்லவா? ஒவ்வொரு குமாரியும் குறைந்த பட்சம் 100-பிராமணர்களை தயார் செய்ய வேண்டியிருக்கும். தயார் செய்வீர்களா? சரி என்றால், கை அசையுங்கள். எவ்வளவு நாட்களில் செய்வீர்கள்? நேரம் சமீபித்துக் கொண்டிருக்கிறதல்லவா? நீங்கள் சொல்லுங்கள் எவ்வளவு நாட்கள் வேண்டும்? முடிவு அனுப்ப வேண்டியதாயிருக்கம். (ஒரு ஆண்டில்). ஒரு ஆண்டு காலம் நீங்கள் கலியுக உலகில் வாழ வேண்டியதாயிருக்கும். சரி. நீங்கள் சொன்னபடியே இருக்கட்டும். உங்கள் வாயில் குலாப் ஜாமூன். அப்படியானால் 6-மாதங்களில் 50-பேர் தயார் செய்ய வேண்டும். ஒரு ஆண்டில் 100-பேர். ஆறுமாதங்களில் 50-பேர். 6-மாதங்களுக்குப் பிறகு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். சரிதானே? என்ன செய்ய முடியாது? எது வேண்டுமோ, அதைச் செய்ய முடியும். நன்றாக இருக்கிறது. குமாரிகள் குரூப் நன்றாக இருக்கிறது. பாப்தாதா குமாரிகளைப் பார்த்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றார். ஏனென்றால், குமாரிகள் சேவையில் நம்பர் ஒன் சகயோகி ஆக முடியும். நல்லது, மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள்.

**குமார் குரூப்:** பாட்டு பாடினார்கள் -நான் பாபாவுக்கு, பாபா எனக்கு! நன்றாக இருக்கிறது. குமார், டபுள் குமார் ஆகி விட்டீர்கள். முதலாவது உலகாயத கணக்குப் படியும் குமார். அடுத்து இந்த பிராமண வாழ்க்கையில் பிரம்மா குமார் ஆகவே டபுள் குமார். அப்படியானால் டபுள் காரியம் செய்ய வேண்டியதாக இருக்கும். செய்வீர்கள். ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு விட்டது. திடசங்கல்பம் செய்தால் முடிந்து விட்டது போலத்தான். நல்லது எல்லோரும் மிக நல்ல பேனர் தயார் செய்திருக்கிறார்கள்.

**மாதாக்களுடன்**: மிகவும் நல்லது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். மாதாக்களிடம் மிகுந்த ஆர்வம் உற்சாகம் இருக்கிறது. ஆதலால் தான் மாதாக்களை நிமித்தமாக செய்திருக்கின்றார். மிகவும் நல்லது. பாப்தாதாவுக்கு பிடித்தமாக இருக்கிறது.

**அதர்குமார்**: அதர்குமார் கூட கமால் செய்வார்கள். ஒவ்வொரு அதர்குமாரும் தன்னுடைய பரிவர்த்தனை பற்றிய அனுபவத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறி, அவர்களை பாபாவுக்கு அருகாமையில் கொண்டு வர முடியும். ஏனென்றால், உலகத்தார் அதர்குமார் வாழ்க்கை மிகவும் கஷ்டமானது என்று நினைக்கிறார்கள், ஆனால் நீங்கள் எல்லோரும் கஷ்டமானதை, சகஜமாகச் செய்து விட்டீர்கள், நீங்கள் உங்கள் அனுபவத்தைக் கூறிக் கொண்டே இருங்கள் எப்படி கஷ்டத்தைப் போக்க முடியும்? ஒரு வார்த்தையை மாற்றுவதன் மூலம், அதாவது கிரஹஸ்தி என்பதை டிரஸ்டி என்று மாற்றிக் கொண்டால், கஷ்டம், சகஜமாகி விடும். ஆகவே இப்படி அதர்குமார் சேவையில் வெற்றி அடைந்து கொண்டிருக்கிறார்கள். மேலும் வெற்றி அடைந்து கொண்டே இருப்பார்கள். நல்லது.

**யுகல் (ஜோடி):** பேனர் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். விஷ்ணுவின் சின்னம் நன்றாக செய்திருக்கிறார்கள். நீங்கள் விஜயி ரத்தினத்தில் இருக்கின்றீர்கள். கூடவே இருந்தும் நியாரே, பியாரேவாக இருக்கின்றீர்கள். ஜோடிகளாக இருப்பவர்களைப் பார்த்து பாப்தாதா கூறுகின்றார். இவர்கள் தாமரை மலருக்குச் சமமாக நியாரே, பியாரே. லௌகிக குடும்பத்தில் இருக்கிறார்கள் ஆனால் மனதில் சதா

தந்தையுடன் இருக்கிறார்கள். மிகவும் நன்றாக டவுள் ஃபாரினர்ஸ். களும், ஆரோக்கியமான புத்துணர்வு பெற்றுக் கொண்டு விட்டீர்கள். இப்போது இங்கே நீங்கள் பெற்ற புத்துணர்வை மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும். வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

சென்டரில் இருப்பவர்கள்: பேனர் -அன்பு மற்றும் இரக்கம், இவற்றின் ஒளி ஏற்றி வைப்பீர்கள். மிக நல்ல எண்ணம் கொண்டுள்ளீர்கள். உங்கள் மீதும் தயா திருஷ்டி (இரக்க பார்வை) கூட இருப்பவர்கள் மீதும் இரக்கமுள்ள பார்வை மேலும் எல்லோர் மீதும். தயா திருஷ்டி ஈஸ்வரிய அன்பு காந்தம் போன்றது. ஆதலால் உங்களிடம் ஈஸ்வரிய அன்பு எனும் காந்தம் உள்ளது. எப்படிப்பட்ட ஆத்மாவையும் ஈஸ்வரிய அன்பு எனும் காந்தம் மூலமாக தந்தையினுடையவராக ஆக்க முடியும். பாப்தாதா சென்டரில் இருப்பவர்களுக்கு விசேஷமாக உளமார ஆசிகளை வழங்குகிறார். நீங்கள் எல்லோரும் உலகில் பெயர் விளங்கும்படி செய்தீர்கள். மூலை முடுக்குகளிலெல்லாம் பிரம்மா குமாரிகளின் பெயர் பரவச் செய்தீர்கள் அல்லவா? மேலும் எல்லாவற்றையும் விட பாப்தாதாவுக்கு பிடித்தமாக இருப்பது என்னவெனில், எப்படி டபுள் விதேஷிகளோ, அதுபோல டபுள் வேலை செய்பவர்கள். மெஜாரிட்டி லௌகிக வேலையும் செய்கிறார்கள். அலௌகிக சேவையும் செய்கிறார்கள். மேலும் பாப்தாதா பார்க்கின்றார். பாப்தாதாவிடம் மிகப் பெரிய டி.வி இருக்கிறது. எப்படி சீக்கிரம், சீக்கிரமாக (ஃபடாஃபட்) வகுப்பில் பாடம் கேட்கிறார்கள். காலை உணவை நின்று கொண்டே சாப்பிடுகிறார்கள், வேலைக்கு குறித்த நேரத்தில் சென்று விடுகிறார்கள். இப்படி விந்தை செய்து (கமால்) காட்டுகிறார்கள். பாப்தாதா இவை எல்லாவைற்றையும் பார்த்து மனதார அன்பு தந்து கொண்டே இருக்கின்றார். மிகவும் நல்லது. சேவைக்கு நிமித்தமாகியிருக்கீறீர்கள். மேலும் நிமித்த மானதற்கான பரிசாக சதா தந்தை விசேஷமாக திருஷ்டி கொடுத்துக் கொண்டேயிருக்கின்றார். மிக நல்ல இலட்சியம் வைத்திருக்கின்றார்கள். நன்றாக இருக்கின்றீர்கள். நன்றாக இருப்பீர்கள். நன்றாக தயார் செய்வீர்கள்.

ஐ.டி.குரூப்: சேவைக்காக, ஏதாவது புது பிளான் தயார் செய்திருக்கிறீர்களா? பிரம்மா குமாரிஸ் "வெப் சைட்" இன்னும் நன்றாகச் செய்ய வேண்டும். இதன் மூலம் உலகம் முழுவதும்

பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்யும் சேவையில் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். என்ன செய்தீர்களோ, அதை சோதித்துப் பார்த்து ரிசல்ட் (முடிவு) பற்றி எழுத வேண்டும். எப்படி ஆப்பிரிக்கா காரர்கள் ரிசல்ட் எழுதினார்கள் அல்லவா, அதுபோல நீங்களும் கூட ரிசல்ட் அனுப்ப வேண்டும். செய்ததற்கு வாழ்த்துக்கள். ஆர்வம் இருக்கிறது. உற்சாகமும் இருக்கின்றது. எங்கே ஆர்வம், உற்சாகம் உள்ளதோ அங்கே வெற்றி நிச்சயமாக இருக்கிறது. மிக நன்றாகச் செய்திருக்கின்றீர்கள்.

சேவை டர்ன் இராஜஸ்தான்-யு.பி. ஜோன்: நன்றாக இருக்கிறது. ஆன்மீக சேனை மிக நன்றாக சேவையை மனதார செய்தீர்கள் மேலும் எல்லோரையும் திருப்திபடுத்தினீர்கள். யார், திருப்தி படுத்துகிறார்களோ, அவர்களுக்கு திருப்தியின் அலைகள் வந்து சேர்கின்றன. இதன் காரணமாக மிகவும் மகிழ்ச்சி உண்டாகிறது. ஆகவே அதிகமான குஷி கிடைத்ததல்லவா? நீங்கள் ஸ்தூலமான சேவை செய்தீர்கள். இதற்கு மற்றெல்லா சகோதர, சகோதரிகளும் உங்களுக்கு குஷியினை பரிசாகக் கொடுத்து விட்டார்கள். திருப்தி எல்லாவற்றிலும் பெரிய குஷி எனும் சத்துணவாகும். முழு குரூப்பும் சந்துஷ்டமணியாக ஆகி விட்டார்கள். திருப்தி செய்யும் சந்துஷ்ட மணிகள், சந்துஷ்டமணிகளுக்கு பாப்தாதா மற்றும் பரிவாரத்தினர் அனைவருடைய வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்,

நல்லது. பாரதத்தின் மாதாக்கள் பார்க்கின்றனர். பாபா தங்களுடைய பெயர் எடுக்கவில்லையே! பாப்தாதா கூறுகின்றார். மாதாக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, மாதாக்களின் விசேஷம் என்னவென்றால், அந்தந்த இடத்தில் பண்டகசாலையும், பொக்கிஷமும் நிறைந்திருக்கும். மாதாக்களுக்கு வரதானம் இருக்கிறது. துளி, துளியாக சேர்ந்து குளம் நிரம்புவது போல. ஆதலால் மாதாக்கள் மிகவும் பாக்கியவான்கள். தந்தையின் பொக்கிஷ அறையை நிரப்பி விடுகிறார்கள். பண்டக சாலையும் நிரம்பி விடுகிறது. ஆதலால் மாதாக்களுக்கு வாழ்த்துக்கள். நல்லது. சகோதரர்களும் குறைந்தவர்கள் அல்ல. பாருங்கள் எங்கே சகோதரர்கள் இருக்கிறார்களோ அங்கே சேவை நாலா பக்கமும் நடக்கும். சகோதரர்கள் மூலமாக ஆல்ரவுண்டு சேவை நடக்கிறது. பண்டக சாலையை நிரப்பவும் செய்கிறார்கள்.

மேலும் சேவை அதிகரிப்பதற்கு விசேஷமாக, சகோதரர்கள் நிமித்தம் ஆகின்றார்கள். ஆதலால் சேவையில் அழகை அதிகரிப்பவர்கள் சகோதரர்கள். ஆதலால் பாப்தாதா எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லா சகோதரர்களுக்கும் மிக, மிக வாழ்த்துக்களை அளிக்கின்றார். எல்லோரும் வரட்டும் தங்கள் வீட்டிற்கு. பாருங்கள். இந்த ஹாலின் அழகு யாரால் ஏற்படுகிறது? குழந்தைகளாகிய நீங்கள் எப்போது வருகிறீர்களோ அப்போது டயமெண்ட் ஹால், டயமெண்ட் ஆகி விடுகிறது. காட்சி பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. நல்லது. தாதிக்கு டயமண்ட் ஹால் ரொம்பவும் பிடித்திருக்கிறது. தானும் நன்றாக ஆடுகின்றார். மற்றவர்களையும் ஆடும்படி செய்கின்றார். எல்லோரும் மகிழ்ச்சியடைகிறார்கள். எப்போது தாதி வந்து, ஆட்டு விக்கின்றாரோ, அப்போது எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. மிகவும் நல்லது. இப்போது ஒரு செகண்ட் டிரில் செய்ய முடியுமல்லவா? செய்ய முடியுமல்லவா? நல்லது.

நாலா பக்கமும் சதா ஆர்வம் உற்சாகத்தில் இருக்கக் கூடிய கிரேஷ்ட குழந்தைகளுக்கு, சதா சகஜ புருஷாரத்தி, சங்கம யுகத்தின் எல்லா வரதானி குழந்தைகளுக்கு, சதா தந்தை மற்றும் (நான்) ஆத்மா என்ற இந்த ஸ்மிருதி மூலம் (நினைவு) பேசக்கூடிய, நான் ஆத்மா சதா எல்லா ஆத்மாக்களுக்கும் தன்னுடைய விருத்தி மூலம் வாயுமண்டல்த்தின் சகயோகம் கொடுக்கக்கூடிய அப்படிப்பட்ட மாஸ்டர் சர்வசக்திவான் குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவு, ஆசிகள், வாழ்த்துக்கள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: உங்கள் எல்லோராலும் மதுபன் அழகாக இருக்கிறது. இன்று விசேஷமான தந்தையுடன் அதே நேரத்தில் உங்களுடைய அவதாரமும் ஆனது, விசேஷமாக ஆதி ரத்தினங்களின், ஆதி காலத்தில் அவதாரம். ஆதலால் உங்களுக்கு விசேஷமாக வாழ்த்துக்கள். ஹேப்பி பர்த் டே. ஒரு பாடல் இருக்கிறதல்லவா? நீங்கள் மதுபன்னுக்கு அழகு என்று. ஆதியில் வந்தவர்கள் சிலர் சென்று விட்டார்கள் ஆனால் நீங்கள் அமரராக (நிரந்தரமாக) இருக்கின்றீர்கள். பாபாவின் ஆசிகள் உள்ளன. எல்லோருடைய கைகளும் உயரவே சல்கின்றது. கீழே வருவதில்லை. நல்லது. நல்லது. எல்லா தாதிகளையும் பார்த்து குஷி அடைகிறார்கள் அல்லவா!

நிர்வயர் சகோதரர், ரமேஷ் சகோதரர்: நல்லது, பாண்டவர்கள் இல்லாமல் கதி இல்லை. பாண்டவர்கள் ஆனாலும், சக்திகள் ஆனாலும், எல்லோரும் சேர்ந்திருப்பது. அமைப்பை உண்டாக்குகிறது.

டபுள் விதேஷி -மூத்த சகோதரிகளுடன்: எல்லோரும் நல்ல முயற்சி செய்திருக்கிறீர்கள். குரூப் குரூப்பாக செய்ததன் மூலம் நல்ல முயற்சி எடுத்திருக்கிறீர்கள். மேலும் இங்கே வாயுமண்டலமும் நன்றாக இருக்கிறது. சேர்ந்திருப்பதால் சக்திசாலி நிலையும் இருக்கிறது. இதனால் எல்லோருக்கும் நல்ல ஆரோக்கியமான புத்துணர்வும் கிடைத்து விடுகிறது. இதில் நீங்கள் நிமித்தமாகி விடுகிறீர்கள். நன்றாக இருக்கிறது. தூர தூரமாக இருப்பவர்கள், இங்கு வந்து சேர்ந்து இருப்பதன் மூலம் சக்தியின் அனுபவம் கிடைக்கப் பெறுகிறார்கள். நன்றாக இருக்கிறது. இவ்வளவு பெரிய பரிவாரம் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் போது, ஒவ்வொருடைய விசேஷத்தின் பிரபாவமும் உதவுகிறது. நல்ல பிளான் செய்திருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. எல்லோருடைய நறுமணத்தையும் நீங்கள் எடுக்கின்றீர்கள். அவர்களுக்கு மகிழ்ச்சி. உங்களுக்கு ஆசிகள் கிடைத்து விடுகிறது. எல்லோரும் இங்கே சேர்ந்திருக்கிறார்கள் அல்லவா? இது நல்லது. ஒருவருக்கொருவர் அனுபவத்தையும் பகிர்ந்துக் கொள்ள முடிகிறது. புத்துணர்ச்சியும் பெறுகிறார்கள். சிலருடைய விசேஷமும் நன்றாக இருக்கிறது. பயன்படுத்திக் கொள்கிறார்கள். கூட்டாக சேர்ந்திருப்பது நன்றாக இருக்கிறது. இது சரிதான்.

ஜெயந்தி சகோதரியுடன்: இப்போது கொஞ்சம், கொஞ்சம் சேவையில் பார்ட் கிடைத்தது. ஏனென்றால் குஷி கிடைக்கிறது. எல்லோருடைய ஆசிகளும் கிடைக்கிறது. அதுவும் கூட மருந்தின் வேலை செய்யும். மிகவும் நன்று.

டாக்டர் நிர்மலா சகோதரி ஸ்ரீலங்கா செல்கின்றார். அங்கே ரிட்ரீட் இருக்கிறது. நல்லது. அவர்களுக்கு புத்துணர்ச்சி தேவையாக உள்ளது.

காட்மாண்டு நேபாளத்தின் கிரண் சகோதரியுடன்: பிரகிருதிஜீத்தாக இருக்கிறீர்கள். நீங்கள் சிவசக்தி. இது கொஞ்சம் கணக்கு வழக்கு இருக்கிறது. எல்லாம் முடிந்து விடும். தைரியமாக இருக்க வேண்டும்.

எல்லா நேபாள நிவாசிகளுக்கும் நினைவைத் தாருங்கள். பயப்பட வேண்டாம்.

பாப்தாதா தன் கைகளால், சிவ கொடியைப் பறக்க விட்டு, **69'**வது சிவஜெயந்தியை முன்னிட்டு வாழ்த்துக்களை அளித்தார்**!** உங்கள் எல்லோருடைய உள்ளத்திலும் தந்தையின் நினைவு என்னும் கொடி பறந்து கொண்டே இருக்கிறது. இப்போது முழு உலகிலும் எங்கெல்லாம் சேவை செய்தீர்களோ, அந்த வெற்றியின் பலன் உருவாகப் போகிறது. நாலா பக்கமிருந்தும் இதே ஒலி கிளம்பும் -"மேரா பாபா" வந்து விட்டார், இவர்தான், இவர்தான், இவரேதான்.. அந்த நாளும் தூரத்திலில்லை. வரத் தான் போகிறது. ஆகியே தீரும். நிச்சயிக்கப்பட்டு விட்டது. இப்படிப்பட்ட மைக் தயாராகி கொண்டிருக்கிறது. நீங்கள் சக்தி கொடுங்கள். அவர்கள் தங்கள் வாய்மொழி ஒலி மூலமாக (மைக்) பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வார்கள். செய்ய வேண்டுமல்லவா? பாப்தாதா யாரோ ஒரு வி.ஐ.பி. மைக்கை பார்த்துக் கூறினார். இந்த மைக் அமர்ந்திருக்கிறார் அல்லவா? சிறந்த மைக். இப்படிப்பட்ட மைக் உருவாக்கி விடுவார்கள். நீங்கள் திருஷ்டி மட்டும் கொடுத்தால் போதுமானது. அந்த நாள் வந்து கொண்டிருக்கிறது. வந்து கொண்டிருக்கிறது. வந்து கொண்டிருக்கிறது. நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 25.03.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மாஸ்டர் சூரியன் ஆகி, அனுபவத்தின் கிரணங்களைப் பரப்புங்கள், வழங்குபவர் ஆகுங்கள், தபஸ்வி ஆகுங்கள்!

இன்று பாப்தாதா தன்னுடைய நாலா பக்கங்களிலுமுள்ள தூய அன்னங்களாகிய குழந்தைகளுடன் ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். குழந்தைகளும் கூட, அன்புக் கயிற்றால் கட்டப்பட்டவர்களாக, ஹோலி கொண்டாடுவதற்காக வந்து சேர்ந்து விட்டனர். சந்தித்து மகிழ்வதற்காக எவ்வளவு அன்புடன் வந்து சேர்ந்து விட்டார்கள்! பாப்தாதா எல்லாக் குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். எவ்வளவு பெரிய பாக்கியம்! எவ்வளவு புனிதமானவர்களாக (ஹோலியெஸ்ட்) இருக்கின்றார்களோ, அவ்வளவு மேன்மையானவர்களாகவும் (ஹையெஸ்ட்) இருக்கின்றார்கள். முழு கல்பத்திலும் பாருங்கள், உங்கள் எல்லோருடைய பாக்கியத்தைக் காட்டிலும், உயர்ந்த பாக்கியம் வேறு எவருக்கும் இல்லை. உங்களுடைய பாக்கியத்தை அறிவீர்கள் தானே! தற்சமயத்திலும் கூட, பரமாத்மாவின் பாலனை, பரமாத்மாவின் படிப்பு மற்றும் பரமாத்மாவின் வரதானங்களால் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள். வருங்காலத்திலும் கூட, விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆகின்றீர்கள். ஆகத்தான் வேண்டும். நிச்சயிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாகவும் இருக்கிறது. பிறகும் கூட, எப்போது பூஜிக்கப்படுகிறீர்களோ, சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுக்கு விதிபூர்வமாக நடப்பதைப் போன்ற பூஜை வேறு யாருக்கும் நடப்பதில்லை. ஆதலால் தற்காலம், வருங்காலம் மற்றும் பூஜ்ய சொரூபத்தில் ஹையெஸ்ட் அதாவது உயர்ந்தவர்களிலும், உயர்ந்தவர்களாக இருக்கின்றீர்கள். உங்களுடைய ஜட சித்திரம், அவர்களுடைய ஒவ்வொரு கர்மத்தின் போதும் பூஜை செய்யப்படுகிறது. அநேக தர்ம பிதாக்கள், மகான் ஆத்மாக்கள் வந்து போயிருக்கின்றனர் ஆனால், இப்படிப்பட்ட விதிபூர்வமான பூஜை,

உயர்ந்தவர்களிலும் உயர்ந்தவர்களான பரமாத்மாவின் குழந்தைகளுக்குத் தான் நடக்கிறது. ஏனென்றால், இந்த சமயத்தில், ஒவ்வொரு கர்மத்தையும், கர்மயோகியாகி, விதிபூர்வமாக கர்மம் செய்ததன் பலன், பூஜையும் கூட, விதிபூர்வமாக நடக்கிறது. இந்த சங்கம் சமயத்தின் புருஷாரத்தத்தின் பாக்கியம் (பிராலப்த்) கிடைக்கிறது ஆதலால் அதி மேலான பகவான், குழந்தைகளாகிய உங்களுக்கும் கூட, உயர்ந்ததிலும் உயர்ந்த பிராப்தி (பலன்) கிடைக்கும்படி செய்கின்றார்.

ஹோலி என்றால் புனிதம் (பவித்திரத்தா). புனிதமானவர்களோடு கூட (ஹோலியெஸ்ட்) மேன்மையானவர்களாகவும் (ஹைஹெஸ்ட்) இருக்கின்றீர்கள். இந்த பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் தூய்மை தான் (பவித்திரத்தா). சங்கல்ப மாத்திரம் இருந்தால் கூட, அபவித்திரத்தா (துய்மையற்ற தன்மை) சிரேஷ்டமாக விடாது. பவித்திரத்தா தான் சுகம், சாந்தியின் தாய். (ஜனனி) பவித்திரத்தா எல்லா பிராப்திகளுக்கும் சாவியாகும். ஆகவே உங்கள் எல்லோருக்குமான சுலோகம் இது தான். பவித்திரமாக இருங்கள் -யோகியாக இருங்கள்! ஹோலியும் கூட இதன் ஞாபகார்த்தம் தான். பாருங்கள் முதலில் எரிக்கிறார்கள், பிறகு கொண்டாடுகிறார்கள். எரிக்காமல் கொண்டாடுவதில்லை. அபவித்திரத்தாவை எரித்தல். அதாவது யோக அக்னி மூலம் அபவித்திரத்தாவை எரிக்கிறீர்கள். இதன் ஞாபகார்த்தமாகவே அவர்கள் நெருப்பில் எரிக்கிறார்கள். மேலும் எரித்த பிறகு எப்போது பவித்திரம் ஆகி விடுகிறதோ அப்போது மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறார்கள். பவித்திரமாகி விட்டதன் ஞாபகார்த்தமாக சந்திப்பைக் கொண்டாடுகிறார்கள். ஏனென்றால், நீங்கள் எல்லோரும் கூட எப்போது அபவித்திரத்தாவை எரிக்கிறீர்களோ அப்போது பரமாத்மாவுடன் நினைவு மூலமான தொடர்பில் இருப்பதால் நிறத்தால் சிவப்பாகி விடுகிறீர்கள். இதன் காரணமாக எல்லா ஆத்மாக்களுக்காகவும் சுப பாவனை, சுப அபிலாஷையோடு சந்திப்பைக் கொண்டாடுகிறீர்கள். இதன் ஞாபகார்த்தமாக மங்கள சந்திப்பைக் கொண்டாடுகிறார்கள். ஆதலால் பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும், இதையே நினைவு படுத்துகிறார். சதா ஒவ்வொருவரிடமிருந்தும் ஆசிகளைப் பெறுங்கள். மேலும் ஆசிகளை வழங்குங்கள். தங்களுடைய ஆசிகளின் சுப பாவனையால் மங்கள சந்திப்பைக் கொண்டாடுங்கள் ஏனென்றால், ஒருவேளை யாராவது சாபம் கொடுத்தார்கள் என்றால்,

அவர் அபவித்திரத்தாவின் காரணமாக பாதிப்பில் இருக்கிறார் என்பதாகும். நீங்கள் ஒருவேளை அந்த சாபத்தை உங்கள் மனதில் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் குஷியாக இருக்க முடிகிறதா? சுகமாக இருக்க முடிகிறதா? வீணான சங்கல்பங்களின் ஏன்? என்ன? எப்படி? யார்? இம்மாதிரியான துக்கத்தை அனுபவம் செய்கிறீர்கள். சாபத்தை ஏற்பது என்றால், தங்களை துக்கம், அசாந்தியின் அனுபவத்திற்கு உள்ளாக்குவதாகும். பாப்தாதாவின் ஸ்ரீமத், "சுகம் கொடு, சுகம் பெறு" என்பது தான். அந்த ஸ்ரீமத்தை மீறுவதாகி விடுகிறது. ஆதலால் எல்லா குழந்தைகளும் இப்போது ஆசி பெறுவது, ஆசி வழங்குவதை கற்றுக் கொண்டு விட்டீர்கள் அல்லவா? கற்றுக் கொண்டீர்களா?

பிரதிக்ஞை (உறுதிமொழி) மற்றும் உறுதி. உறுதியாக பிரதிக்ஞை எடுக்க வேண்டும். சுகம் கொடுக்க வேண்டும், சுகம் பெற வேண்டும். ஆசி வழங்க வேண்டும், பெற வேண்டும். அப்படி திடமான உறுதி மொழி எடுத்திருக்கிறீர்களா? தைரியம் இருக்கிறதா? இன்று முதல் ஆசி பெறுவோம், ஆசி வழங்குவோம்! என்று உறுதியான சங்கல்பம் எடுக்கக்கூடிய தைரியசாலிகள் இருந்தால், அவர்கள் கை உயர்த்துங்கள். பக்காவா? பக்கா? கச்சா அல்ல. கச்சாவாக இருந்தால், முழுவதுமாக பழுக்காத பழத்தை குருவிகள் நிறைய சாப்பிடும். உறுதி தான் வெற்றிக்கு சாவி. எல்லோரிடத்திலும் சாவி இருக்கிறதா? இருக்கிறதா சாவி? சாவி நிரந்தரமாக இருக்கிறதா? மாயா திருடி விடவில்லை தானே? அதற்கும் கூட (மாயாவுக்கு) சாவி தான் பிரியமானதாக இருக்கிறது. எப்போதும் இதை சங்கல்பத்தில் வைத்து, சங்கல்பத்தை எழுச்சியுறச் செய்யுங்கள் (எமர்ஜ்), மெர்ஜ் அல்ல. (அமிழ்ந்து விடக்கூடாது) எமர்ஜ்! நான் செய்யத்தான் வேண்டும் என்ற சல்கல்பத்தை எமர்ஜ் செய்யுங்கள் (விழிப்படையச் செய்யுங்கள்) ஆகத்தான் வேண்டும். நடக்கத்தான் வேண்டும். நடந்து முடிந்து விட்டது. இதற்குத் தான் நிச்சய புத்தி, விஜயந்தி. டிராமா வெற்றி என்பதாகவே நிச்சயிக்கப்பட்டு விட்ட டிராமா அப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. திரும்பவும் செய்ய வேண்டும். கஷ்டமா? சில சமயம் கஷ்டமாகி விடுகிறது ஏன் கஷ்டமாக ஆகி விடுகிறது? தாங்களாகவே சுலபமானதை கஷ்டமாக்கிக் கொள்கிறார்கள். சிறு தவறு செய்து விடுகிறார்கள். அந்த சிறு தவறு என்ன தெரியுமா?

பாப்தாதாவுக்கு அந்த சமயத்தில் குழந்தைகள் மீது மிகவும் இரக்கம் என்று சொல்வதா? அன்பு வருகிறது. என்ன அன்பு வருகிறது? ஒரு பக்கம் சொல்கிறீர்கள் தந்தை கம்பைண்டாக இருக்கிறார் என்று. இருக்கிறதா கம்பைண்டு? கம்பைண்டாக இருக்கிறதா? உடல் அல்ல, கம்பைண்டு. டபுள் ஃபாரினர்ஸ் (வெளிநாட்டவர்கள்) கம்பைண்டாக இருக்கிறீர்களா? பின்னால் இருப்பவர்கள் கம்பைண்டாக இருக்கிறீர்களா? கேலரியில் உள்ளவர்கள் கம்பைண்டாக இருக்கிறார்களா?

நல்லது. இன்றைக்கு பாப்தாதாவுக்கு சமாச்சாரம் கிடைத்தது. மதுபன் நிவாசிகள், பாண்டவ பவன், ஞானசரோவர் மற்றும் இங்குள்ளவர்கள் (சாந்திவன்) தனியாக ஹாலில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களிடம் பாப்தாதா கேட்கின்றார், பாப்தாதா கம்பைண்டாக இருக்கின்றாரா? கை உயர்த்துகிறார்கள். எப்போது கம்பைண்டாக இருக்கிறாரோ, சர்வ சக்திவான் பாப்தாதா கம்பைண்டாக இருக்கிறார் என்றால், தனியானவர் ஆகி விடுவது ஏன்? ஒருவேளை நீங்கள் பலவீனமானவர் என்றால், பாப்தாதா சர்வ சக்திவான் அல்லவா? தனியாக ஆகி விடுகிறீர்கள். அப்போது பலவீனமாகி விடுகிறீர்கள். கம்பைண்டு ரூபத்தில் இருங்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் சகயோகியாக இருப்பதற்காக வந்திருக்கின்றார். பாருங்கள், பிரம்மாபாபா வியக்தத்திலிருந்து அவ்யக்தமானது எதற்காக? சாகார் சரீரத்திலிருப்பதை விட அவ்யக்த ரூபத்தில் அதிகத்திலும், அதிகமாக சகயோகம் கொடுக்க முடியும். பாப்தாதா சகயோகம் கொடுக்கிறேன் என்று சொல்லி முன் வருகின்றார். அப்படியிருக்கும்போது தனியாக ஆகி விடுவது ஏன்? கஷ்டப்பட்டு முயற்சி செய்வது ஏன்? 63-ஜன்மங்கள் கஷ்டப்பட்டு முயற்சி செய்ததாலா? அப்படி கஷ்டப் பட்டு முயற்சி செய்ததன் சம்ஸ்காரம் இப்போதும் கூட இருக்கிறதா என்ன? அன்பில் இருங்கள். அன்பில் லீனமாகி விடுங்கள், (அன்பில் மூழ்கி இணைந்து விடுங்கள்). அன்பு கஷ்டத்திலிருந்து விடுவித்து விடும். கஷ்டப்படுவது, பிடித்தமானதாக இருக்கிறதா? பழக்கப்பட்டு விட்டதால் அப்படி ஆகி விடுகிறீர்களா? சகஜயோகிகள். பாப்தாதா விசேஷமாக, குழந்தைகளுக்காக பரந்தாமத்திலிருந்து வெகுமதி (அன்பளிப்பு) கொண்டாட வந்திருக்கின்றார். என்ன அன்பளிப்பு கொண்டு வந்திருக்கிறார் என்று

தெரியுமா? உள்ளங்கையில் சொர்க்கத்தை கொண்டு வந்திருக்கின்றார். உங்களுடைய சித்திரம் கூட இருக்கிறதல்லவா? குழந்தைகளுக்காக இராஜ்ய பாக்கியத்தைக் கொண்டு வந்திருக்கின்றார். அதலால் தான் குழந்தைகள் கஷ்டப்படுவதைப் பார்க்க நன்றாக இருப்பதில்லை.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும், கஷ்டப்படுவதிலிருந்து விடுபட்டு அன்பில் மூழ்கியிருப்பதைப் பார்க்க விரும்புகின்றார். ஆதலால் கஷ்டப்படுவது மற்றும் மாயாவுடன் சண்டை போடுவது ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்காக இன்று சங்கல்பம் மூலம் ஹோலி எரிப்போம். எரிப்போமா? எரிப்பது என்றால் அடையாளம் எதுவுமே இருக்கக் கூடாது. எந்தப் பொருளை யாவது எரித்தால், அதன் பிறகு அதன் அடையாளம் எதுவும் இருக்குமா? முழுவதுமாக எரிந்து சாம்பலாகி விடும். அல்லவா? ஆகவே இப்படிப்பட்ட ஹோலி கொண்டாடலாமா? கொண்டாடலாமா? கை அசைக்கிறார்கள்! பாப்தாதா கை அசைப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். ஆனால்? ஆனால் இருக்கிறதா? ஆனால் என்று சொல்லலாமா? வேண்டாமா? மனம் என்னும் கையை அசைக்க வேண்டும். கையை அசைப்பது மிகவும் சுலபம். ஒருவேளை செய்யத்தான் வேண்டும் என்று மனதார ஏற்றுக் கொண்டு விட்டீர்களானால் முடிந்து விட்டது போலத்தான். புதுப்புது குழந்தைகள் நிறையப்பேர் வந்திருக்கிறார்கள். யாரெல்லாம் முதன் முறையாக சந்திப்பைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் கை உயர்த்துங்கள்! டபுள் ஃபாரினர்ஸ் கூட இருக்கிறார்கள். இப்போது யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, தங்களை பாக்கியசாலிகளாக்குவதற்காக வந்திருக்கின்றவர்களுக்கு, பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஆனால் இந்த வாழ்த்துக்களை நினைவில் (ஸ்மிருதியில்) வைத்திருக்க வேண்டும். மேலும் சதா இந்த இலக்ஷியம் இருக்க வேண்டும். ஏனென்றால், பைனல் ரிசல்ட் இன்னும் அவுட் ஆகவில்லை. எல்லோருக்கும் சான்ஸ் இருக்கிறது. கடைசியில் வருகிறவர்களும் கூட, முதலில் வந்தவர்களுக்குப் பிறகு வந்திருக்கிறீர்கள் அல்லவா? ஆதலால் கடைசியில் வந்திருப்பவர்கள் லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் மற்றும் ஃபாஸ்ட் ஸோ ஃபர்ஸ்ட் வர முடியும். அனுமதி உண்டு. செல்ல முடியும் இதை சதா நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எனக்கு

அதாவது ஆத்மாவாகிய எனக்கு ஃபாஸ்ட் மற்றும் ஃபர்ஸ் கிளாஸில் வரத்தான் வேண்டும். ஆம். வி.ஐ.பி. நிறைய பேர் வந்திருக்கிறார்கள் அல்லவா? டைட்டில் வி.ஐ.பி. என்றுள்ளது. வி.ஐ.பி. யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் உயரமாக கை உயர்த்துங்கள். வெல்கம், உங்களுடைய வீட்டிற்கு வந்ததற்கு வெல்கம். நன்றாக வரட்டும் அறிமுகத்திற்காக வி.ஐ.பி. என்று சொல்லப்படுகிறது. இனிமேல் வி.ஐ.பி.யிலிருந்து வி.வி.வி.ஐ.பி. ஆக வேண்டும். தேவதைகளின் ஜடசித்திரத்தைப் பாருங்கள் வி.வி.வி.ஐ.பிகளாக இருக்கிறார்கள். நீங்களும் கூட உங்கள் முன்னோர்கள் தேவதைகளாக இருப்பதைப்போல ஆகத்தான். வேண்டும். பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். உறவில் வர வேண்டும். வி.ஐ.பி. யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் எழுந்திருங்கள். உட்கார்ந்திருந்து களைத்துப் போயிருப்பீர்கள்! கொஞ்சம் எழுந்திருங்கள். நல்லது.

தாய்மார்கள் முதன் முறையாக சந்திக்க வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். இவர்கள் எல்லாம் முதல் முறையாக வந்திருக்கிறார்கள்! சரி. பாண்டவர்கள், யார் முதல் முறையாக வந்திருக்கிறார்களோ, அவர்கள் எழுந்திருங்கள். பாப்தாதாவுக்கு ரொம்பவும் குஷியாக இருக்கிறது. ஏன்? ஏனென்றால் குழந்தைகள் நல்ல சேவை செய்திருக்கிறார்கள். சேவை செய்ததன் பலனை பாப்தாதா பார்த்தார். இந்த சீசனில் மெஜாரிட்டி ஒவ்வொரு குரூப்பிலும் முதல் முறையாக சந்திக்க வந்திருந்தவர்களின் எண்ணிக்கை, பாதிக்குமேல் அதிகமாயிருந்தது. ஆதலால் எந்தக் குழந்தைகள் மெகா புரோகிராம் செய்தார்களோ, மேலும் அவரவர் இடங்களில் சேவை செய்தார்களோ மேலும் இதன் ரிசல்ட்டைக் கொடுத்தார்களோ, அந்த எல்லாக் குழந்தைகளுக்கும் பாப்தாதா சேவைக்கு வாழ்த்துக்களையும் உளம் கனிந்த ஆசிகளையும் அளிக்கின்றார். இனி என்ன செய்யப் போகிறீர்கள்?

தாதி சந்தேஷ் (செய்தி) அனுப்பியிருந்தார். இனி மேல் என்ன செய்ய வேண்டுமென்றும் கேட்டிருந்தார். பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார் ஆனால் இனி மேல் யாரெல்லாம் சம்மந்தம், தொடர்பில் வந்திருக்கிறார்களோ, அந்த ஆத்மாக்களை, விசேஷமாக

குரூப் குரூப்பாக ஒவ்வொரு சென்டர் மூலமாக அழைத்து, அவர்களுடைய அஸ்திவாரத்தை பலப்படுத்தும் முகமாக பாலனை செய்ய வேண்டும். தொடர்பில் கொண்டு வந்து விட்டீர்கள். இனி சம்மந்தத்தில் கொண்டு வாருங்கள். அவ்வப்போது வருகிறவர்களாக இருந்தாலும் சரி, தினசரி வருகிறவர்களானாலும் சரி, தொடர்பில் இருப்பவர்களானாலும் சரி, சம்மந்தத்தில் இருப்பவர்களானாலும் சரி, உறவோடு கூடவே, ஆத்மாக்களை தந்தையுடன் அவர்களுடைய தொடர்பை அதிக கஷ்டம் அனுபவமாகாத வகையில் பலப்படுத்துங்கள். மாயாவுடன் அடிக்கடி சண்டை போடும்படியான நிலை ஏற்படாமல் இருக்கட்டும். விக்னம் வராத அளவுக்கு, மனம் பாபாவிடம் லயிக்கும்படி பக்கா செய்யுங்கள். மாயா வரக் கூடாது. ஆதலால் செய்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள் ஆனால் சேவை செய்ததன் பலன் எது கிடைத்ததோ, அந்த பலனை பலமாக உறுதியாக்கி விடுங்கள். முழுமையாகப் பழுக்காத பழமாக நின்று விடக் கூடாது. ஏனெனில் நேரம் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. நேரத்தை நம்ப முடியாது. எப்போதும், எதுவும் நடக்கலாம் மேலும் திடீரென நடக்கும். எப்போது என்ன நடக்கும் என்பது பாப்தாதாவுக்குத் தெரியும் ஆனால் சொல்ல மாட்டேன். ஏனெனில் திடீரென சோதனையை எதிர் கொள்ள வேண்டும். ஆதலால் சேமிப்புக் கணக்கை மிகவும் அதிகமாக்குங்கள்.

தற்சமயம் பாப்தாதா இரண்டு விஷயங்களில் அடிக்கடி கவனம் கொடுக்கின்றார். ஒன்று ஸ்டாப், புள்ளி வைக்க வேண்டும். பாயிண்ட் வைக்க வேண்டும். இரண்டாவது சேமிப்பை சேகரியுங்ககள். இரண்டும் அவசியம். மூன்று பொக்கிஷங்களை சேமியுங்கள். ஒன்று தன்னுடைய புருஷாரத்தத்தின் பாக்கியம். அதாவது பிரத்யக்ஷபலன், அதை சேமியுங்கள். இரண்டாவது சதா திருப்தியுடன் இருப்பது, திருப்திப்படுத்துவது. இதற்காக ஆசீர்வாதங்களை சேமிப்புச் செய்ய வேண்டும். ஆசீர்வாதக் கணக்கை சில சமயம் குழந்தைகள் சேமிக்கிறார்கள் ஆனால் போகப் போக, சிற்சில சிறுசிறு விஷயங்களில், குழப்பமடைந்து பலவீனப்பட்டு சேமிக்கப்பட்ட பொக்கிஷங்களிலும் கூட கோடு போட்டு விடுகிறார்கள். (தடை போட்டு விடுவது) ஆதலால் ஆசீர்வாதக் கணக்கும் சேமிப்பு ஆகும்படி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கான விதி திருப்தியாக இருப்பது. திருப்தி படுத்துவது. மூன்றாவது சேவை மூலமாக

சேவையின் பலனை சேமிக்க வேண்டும். மேலும் சேவையிலும் கூட விசேஷமாக நிமித்த பாவனை மற்றும் நிர்மலமான பேச்சு. எல்லையற்ற சேவை என்னுடையதல்ல, பாபாவினுடையது. செய்விப்பவராகிய பாபா செய்பவனாகிய என் மூலமாக செய்விக்கின்றார். இது தான் பேகத் சேவை. இந்த மூன்று கணக்கையும் சோதியுங்கள். அதாவது இந்த மூன்று கணக்கிலும் சேமிப்பாகிக் கொண்டிருக்கிறதா? நான் என்பது இல்லாமை அதாவது அறியாத பாவனை இருக்கட்டும் இச்சா மாத்ரம் அவித்யா. (இச்சை என்பது என்னவென்றே அறியா நிலை). இந்த ஆண்டு என்ன செய்யலாம் என்று எல்லோரும் யோசிக்கிறார்கள்! சீசன் முடிந்து கொண்டிருக்கிறது. இனி 6-மாதம் என்ன செய்வது? ஒன்று கணக்கை (புண்ணியக் கணக்கை) சேமிப்பது. இதை நல்ல விதமாக சோதிக்க வேண்டும். ஏதோ ஒரு மூலையில், லௌகீக இச்சை இருக்கிறதா? இல்லையா? நான் எனது என்பது இல்லை தானே! தனக்கு வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை தானே? வழங்குபவர் ஆகுங்கள். பெறுபவர் அல்ல. பெயரோ, புகழோ, கௌரவமோ இது எதுவும் தனக்கு வேண்டும் என்ற எண்ணம் மனதில் வரக்கூடாது. வள்ளல் அதாவது வழங்குபவராக ஆகுங்கள்.

இப்போது துக்கம் மிக மிக அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அதிகரித்துக் கொண்டேயிருக்கும். ஆதலால் மாஸ்டர் சூரியன் ஆகி, அனுபவத்தின் கிரணங்களை பரப்புங்கள். எப்படி சூரியன் ஒரே சமயத்தில் எத்தனை விதமாக உதவிக் கொண்டிருக்கிறது. வெளிச்சம் மட்டும் கொடுப்பதில்லை, சக்தியும் கொடுக்கிறது. அநேக பிராப்திகள் (பலன்கள்) கிடைக்கும்படி செய்கிறது. இது போல நீங்கள் எல்லோரும் 6-மாதங்களில் ஞான சூரியன் ஆகி சுகம், குஷி, சாந்தி, சகயோகம் (ஒத்துழைப்பு) என்ற கிரணங்களைப் பரப்புங்கள். அனுபவம் ஆகும்படி செய்யுங்கள். உங்களுடைய முகத்தைப் பார்த்ததுமே, துக்கத்தின் சாயல் மறைந்து, குறைந்த பட்சம் முகம் புன்முறுவல் செய்யட்டும். உங்களுடைய திருஷ்டி மூலமாக தைரியம் வரட்டும். ஆகவே இப்படி கவனம் கொடுக்க வேண்டும். விதாத்தா (வழங்குபவர்) ஆக வேண்டும். தபஸ்வி ஆக வேண்டும். தவத்தின் ஜுவாலை ஏதாவது அனுபவம் உண்டாக்கக்கூடிய வகையில் தபஸ்யா செய்யுங்கள். வாணி மட்டும் கேட்டால் போதாது. அனுபவம் செய்வியுங்கள். அனுபவம் தான் நிரந்தரமானது. வாணி, கொஞ்ச நேரத்திற்கு நன்றாக இருக்கும். சதா

நினைவில் இருக்காது. ஆதலால் அனுபவத்தின் அதாரிட்டியாகி, அனுபவம் செய்வியுங்கள். யாரெல்லாம் சம்மந்தம், தொடர்பில் வந்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு தைரியம், ஊக்கம், உற்சாகம், உண்டாவதற்கு பாப்தாதாவுடன் தொடர்பை உண்டாக்கும் சக யோகம் செய்யுங்கள். (உதவி செய்யுங்கள்) அதிகம் கஷ்டப்படுத்தக் கூடாது. நிமித்தமாகத்தானே இருக்கிறீர்கள்! ஆதலால் ஆர்வமில்லாமல் இருப்பவர்கள் கூட ஊக்கம், உற்சாகத்தில் வரும்படியாக, உங்கள் வைப்ரேஷன் (உணர்வதிர்வுகள்) ஊக்கம், உற்சாகமாக இருக்கும்படி செய்யுங்கள். மனம் குஷியில் ஆனந்த நடனமாடட்டும். கேட்டீர்களா என்ன செய்ய வேண்டும் என்று? ரிசல்ட்டைப் பார்க்கலாம். எந்த கேந்திரம் எத்தனை ஆத்மாக்களை திடமானவர்களாக்கியிருக்கிறார்கள், தாங்களும் திடமானவர்களாகியிருக்கிறார்கள் என்ற ரிசல்ட் பார்க்க வேண்டும். சாதாரண சர்வீஸ் ரிப்போர்ட்டைப் பார்க்க மாட்டேன். தவறு எதுவும் செய்யவில்லை, பொய் சொல்லவில்லை, விகர்மம் எதுவும் செய்யவில்லை. இது மாதிரி ரிசல்ட் அல்ல. எத்தனை ஆத்மாக்களை ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வந்தீர்கள்? அனுபவம் செய்வித்தீர்கள்? திடமான உறுதி என்னும் சாவியை கொடுத்தீர்கள்? இப்படி. சரிதானா? செய்யத்தான் வேண்டும் அல்லவா? பாப்தாதா கூட செய்வீர்கள் என்று ஏன் சொல்ல வேண்டும்? அல்ல, செய்யத்தான் வேண்டும். நீங்கள் செய்யாமல், வேறு யார் செய்வார்கள்? பின்னால் வரப்போகிறவர்களா? நீங்கள் தான் கல்ப, கல்பமாக, தந்தையிடமிருந்து அதிகாரம் அடைந்தீர்கள், அடைகிறீர்கள் மேலும் ஒவ்வொரு கல்பத்திலும் அடைவீர்கள். இப்படிப்பட்ட திட உறுதியுள்ள குழந்தைகளின் கூட்டத்தை பாப்தாதா பார்க்கத்தான் வேண்டும் சரிதானா? கை உயர்த்துங்கள். ஆகத்தான் வேண்டும். மனம் என்னும் கையை உயர்த்துங்கள். திட நிச்சயத்தின் கை உயர்த்துங்கள். இதில் எல்லாம் பாஸாகி விட்டார்கள். பாஸ் தானே? நல்லது.

எல்லோரும் குஷியாக இருக்கிறார்கள். ஏற்பாடு செய்ததால் அதிகமாக வந்து விட்டார்கள். (23-ஆயிரத்திற்கும் அதிகமாக வந்து சேர்ந்து விட்டார்கள்) பரவாயில்லை. எப்போது அதிகமாக வருகிறார்களோ, அப்போது தாதி யோசிப்பார் தங்கும் வசதிகளை விஸ்தரிக்கலாமா? என்று யோசிப்பார். வருகின்றவர்கள் வரட்டும். நல்லது தான். ஹால், ஒரு நாள் சிறியதாகியேத் தீரும் சிறிதாக ஆகத்தான் வேண்டும். முதல்

லைனில் இருப்பர்கள் என்ன நினைக்கிறீர்கள். அப்படி சிறிதாக வேண்டும் தானே! அப்படியானால் தானே, பெரிதாக தயார் செய்வீர்கள். டிராமாவின்படி, விருத்தியாகத்தான் வேண்டும். சேவாதாரிகள் களைப்பு அடைந்து விடவில்லை தானே?

இப்போது யாருடைய டர்ன் (சேவை எந்த ஜோனுடையது). குஜராத், குஜராத் பெரியது தானே! குஜராத்காரர்கள் எழுந்திருங்கள். பாதி ஹால் குஜராத்காரர்கள் தான் இருக்கிறார்கள் (7-ஆயிரம் பேர்). அப்படியானால் குஜராத்திலிருந்து சேவாதாரிகள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். களைப்பு இல்லையல்லவா? இல்லை. மாதாக்கள்! மாதாக்கள் ரொட்டி உருட்டி, உருட்டி, களைப்படைந்து விட்டீர்களா? களைப்படையவில்லை எல்லாவற்றையும் விட கஷ்டமான வேலை ரொட்டி தயாரிப்பது. குஜராத்காரர்களுக்கு வரதானம் இருக்கிறது. எப்படி தேசத்தின் அமைப்புபடி சமீபமாக இருக்கிறதோ இதே போல பாப்தாதாவின் உள்ளத்திற்கும் சமீபமாக இருக்க வேண்டும். இருக்கின்றார்கள். இருக்கவும் வேண்டும். பாப்தாதா பார்க்கின்றார். எப்போதாவது, ஏதாவது அவசியத்தின்போது குஜராத் ஆஜராகி விடுகிறது. ஆதலால் இப்படி ஆஜராகும் ஆத்மாக்களுக்காக, பாப்தாதாவும் ஆஜராக இருக்கின்றார்.

நல்லது. இன்று பாப்தாதாவுக்கு செய்தி அனுப்பினார்கள். ஞானசரோவர், பாண்டவ பவன், மற்றும் சாந்திவன் ஆகிய இடங்களில் இருப்பவர்கள் தூரமாக அமர்ந்திருந்தாலும் அருகாமையில் பார்க்க வேண்டும் என்று. ஆதலால் பாப்தாதா எல்லா இடங்களிலும் இருக்கின்ற மதுபன் நிவாசிகள், சகோதரிகள் ஆனாலும், சகோதரர்கள் ஆனாலும் எல்லோரையும் அருகாமையிலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றார், தூரமாக அல்ல. உள்ளத்தில் இருக்கின்றார்கள். பாப்தாதா உள்ளத்திலிருந்து அன்பு நினைவுகளை அளிக்கின்றார். பொதுவாக கண்ணில் பட மாட்டார்கள் ஆனால் இன்று விசேஷமாக பார்வையில் தெரிகின்றார்கள்.

டபுள் விதேஷி: கை அசைத்துக் காட்டுங்கள். பாப்தாதா டபுள் விதேஷி குழந்தைகள் புத்துணர்வு (ரெஃப்ரெஷ்மெண்ட்) பெற்றதைப் பார்த்தார். சார்ட் நன்றாக தயாரித்திருந்தார்கள். நன்றாக செய்தார்கள். மேலும் மிக

நன்றாகத்தான் இருக்க வேண்டும். எப்போதாவது யாரேனும் நிலைமை எப்படி இருக்கிறது என்று கேட்டால் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பதில் சொல்ல வேண்டும். மகிழ்ச்சியாயிருக்கிறீர்களா? பரிஷ்தா ஆகி விட்டீர்களல்லவா! இது மாதிரி. சரிதானா? பிடித்தமாக இருக்கிறதல்லவா? நீங்கள் அமெரிக்கா, ஆப்பிரிக்காவுக்கு திரும்பிச் சென்ற பிறகு தான் மாற வேண்டும் என்பதல்ல. மாறுவதல்ல. பறக்க வேண்டும். பறக்கும்படி செய்ய வேண்டும். ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகள் உங்களுக்கு ஏற்கனவே இருக்கின்றன. மற்றவர்களுக்கும் ஊக்கம், உற்சாகம் என்ற இறக்கைகள் வரும்படி செய்ய வேண்டும். இது நல்லது. பாப்தாதா எல்லா சமாச்சாரங்களையும் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றார். மதுபன்னில் இருக்கும்போது லாபம் என்னவென்றால், நல்ல நல்ல புரோகிராம் செய்கிறார்கள். அதிலிருந்து அனுபவம் பெறலாம், கற்றுக் கொள்ளலாம். இதைப் பார்த்தும், கேட்டும் பாப்தாதா குஷி அடைகின்றார். 'அமர் பவ' என்னும் வரதானத்தை மட்டும் மறந்து விடாதீர்கள். 'அமர் பவ'! 60- தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள். 60-தேசங்களிலிருந்து வந்திருப்பவர்கள் ஒவ்வொரு தேசத்திலிருந்தும், ஒவ்வொருவர் கை உயர்த்துங்கள். 60-பேர் இருக்கிறார்களா என்று பார்க்கலாம். யார், ஆஸ்திரேலியாவிலிருந்து, ஆப்பிரிக்காவிலிருந்து, அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறவர்கள் கை உயர்த்துங்கள் நன்றாக வரட்டும், நல்லது. பாப்தாதா மற்றும் எல்லா பிராமண பரிவாரத்தினரும் கூட உங்கள் எல்லோரையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். ஏனென்றால், எத்தனை தேசங்களில் நீங்கள் சேவை செய்து கொண்டிருக்கிறீர்களோ, அத்தனை தேசங்களின் மொழியைக் கற்றுக் கொள்வதற்காக, பாரத வாசிகளுக்கு, நீங்கள் உதவி செய்திருக்கிறீர்கள். ஆதலால் உங்கள் எல்லோரையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்கள். நல்லது. ஊக்கம், உற்சாகத்தில் இருக்கிறார்கள் மேலும் சதா அப்படி இருக்கவும் செய்கிறார்கள். எல்லா டீச்சர்களும் நன்றாக இருக்கிறீர்களா? ஊக்கம், உற்சாகமாக இருக்க வேண்டுமென்று மிகவும் முயற்சி செய்திருக்கிறீர்கள். நல்ல புரோகிராம் செய்கிறார்கள். பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். இப்போது பாப்தாதா டபுள் விதேஷிகளிடமிருந்து ஒன்றை எதிர்பார்க்கின்றார். சொல்லட்டுமா?

பாப்தாதா கேள்விப்பட்டார். டபுள் விதேஷிகள் மிகவும் நீள நீளமாக இமெயில் அனுப்புகிறார்கள் என்று. ஜானகி குழந்தையை மிகவும்

சுறுசுறுப்பாக வைத்திருக்கிறார்கள். இரவில் அவர் ரொம்ப நேரம் விழித்திருக்க வேண்டியதாயிருக்கிறது ஆதலால் இதைக் கூட சுருக்கிக் கொள்ளுங்கள் நீளமாக அல்ல. சரிதானா? சுருக்க முடியும். சரி தானா? 3-4 லைன். மிக அதிகமாக என்றால் 5-லைனில் முடியுமல்லவா? யார் சுருக்கமாக எழுதுவார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். யார் செய்ய மாட்டார்களோ, அவர்கள் கை உயர்த்தவில்லை கெட்டிக்காரர்கள்! நல்லது. நல்லது.

மாதாக்களுடைய பாவனை மற்றும் அன்புக்கு விசேஷ நல்வாழ்த்துக்கள். பாண்டவர்களுக்கு சதா நம்பர் ஒன் மற்றும் வெற்றி அடைவதற்கு நல் வாழ்த்துக்கள். மேலும் வி.ஐ.பி. என்ற பெயரில் வந்திருக்கின்ற எல்லா குழந்தைகளையும், சதா ஒவ்வொரு அடியிலும் ஊக்கம், உற்சாகம் மூலமாக இன்னும் தொடர்பை அதிகரிப்பதற்கும், ஒவ்வொரு அடியிலும் நூறு மடங்கு வருமானம் சேமிப்பதற்கும் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்.

நல்லது. நாலா பக்கமுள்ள மனசிம்மாசனத்தின் அதிகாரி குழந்தைகளுக்கு, தூரமாக இருந்தாலும் பரமாத்மாவின் அன்பை அனுபவம் செய்து கொண்டிருக்கின்ற குழந்தைகளுக்கு சதா ஹோலி அதாவது பவித்திரத்தாவின் அஸ்திவாரத்தை உறுதிப் படுத்தக்கூடிய, சொப்பனத்திலும் கூட அபவித்திரத்தா அம்ச மாத்திரம் கூட இல்லாமல் தூரமாக விலகியிருக்கும் மகாவீர், மகாவீரனி குழந்தைகளுக்கு சதா ஒவ்வொரு சமயத்திலும் எல்லா சேமிப்புக்கணக்கை, சேமித்துக் கொண்டிருக்கின்ற சம்பன்ன குழந்தைகளுக்கு சதா சந்துஷ்டமணியாகி, சந்துஷ்டமாக இருப்பது, சந்துஷ்டப்படுத்துவதுமாக இருக்கின்ற பாப்சமான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், ஆசிகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: தாதிகள் குருபாயிகள் அல்லவா, ஆதலால் பக்கத்தில் அமருங்கள். சகோதரர்கள் ஒன்றாக சேர்ந்து அமர்ந்திருப்பார்கள். நன்றாக இருக்கிறது. பாப்தாதா தினந்தோறும் சிநேகம் என்ற மாலிஷ் (தேய்த்தல்) செய்கின்றார். நிமித்தமாயிருக்கிறார்கள் அல்லவா? இந்த மாலிஷ் நடக்கிறது. நல்லது. உங்கள் எல்லோருடைய உதாரணத்தைப் பார்த்து, எல்லோருக்கும் தைரியம் வருகிறது. நிமித்த தாதிகளுக்குச்

சமமாக சேவையில், நிமித்த பாவனையோடு முன்னேற வேண்டும். நல்லது. உங்களுக்கு பக்காவாக நிச்சயம் இருக்கிறதல்லவா -செய்விப்பவர் செய்விக்கின்றார். நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கின்றார். இந்த நிமித்த பாவனை சேவை செய்விக்கிறது. "நான்" ("மை பன்") என்பது இருக்கிறதா? கொஞ்சமாது மை பன் வருகிறதா? நல்லது, முழு உலகத்திற்கும் எதிரே நிமித்த உதாரணமாக இருக்கிறீர்கள் அல்லவா? ஆகையால் பாப்தாதாவும் கூட சதா விசேஷ அன்பு மற்றும் ஆசிகளை வழங்கிக் கொண்டேயிருக்கின்றார். நல்லது. நிறையப் பேர் வந்திருக்கின்றார்கள் என்றால் நல்லது தானே? கடைசி சந்திப்பு வேகமாகச் சென்று விட்டது. நல்லது.

டபுள் விதேஷி முக்கியமான டீச்சர் சகோதரிகளுடன்: எல்லோரும் சேர்ந்து எல்லோரையும் பாலனை செய்வதற்கு நிமித்தமாகியிருக்கிறீர்கள். இப்படி உங்களுடைய பார்ட்டை மிக நன்றாகச் செய்கிறீர்கள். நீங்களும் புத்துணர்வு பெறுகின்றீர்கள். மற்றவர்களையும் புத்துணர்வு பெறச் செய்கிறீர்கள் நல்ல புரோகிராம் தயார் செய்கிறீர்கள். பாப்தாதாவுக்கு பிடித்தமாக இருக்கிறது. தான் எப்போது புத்துணர்ச்சியோடு இருப்பீர்களோ, அப்போது தான், புத்துணர்ச்சி பெறச் செய்ய முடியும். மிகவும் நல்லது. எல்லோரும் மிக நன்றாக புத்துணர்ச்சி பெற்றார்கள். பாப்தாதாவுக்கு மகிழ்ச்சி. மிகவும் நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 04.09.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அறிவுரையோடு, மன்னித்தல் மற்றும் இரக்க குணத்தை தன்னுடையதாக்குங்கள். ஆசி வழங்குவதும், பெறுவதுமாக இருந்தால் உங்களுடைய வீடு ஆசிரமம் ஆகி விடும்!

இன்று பாப்தாதா எல்லா குழந்தைகளின் நெற்றியில் தூய்மையின் ரேகைகளைப் பார்க்கின்றார். ஏனென்றால் பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் பவித்திரத்தா (தூய்மை) ஆகும். பவித்திரத்தாவின் ரேகைகள் எப்படிப்பட்டவை என்பதை அறிவீர்களா? தூய்மை எல்லோருக்கும் பிரியமானது தூய்மை, சுகம், சாந்தி, அன்பு, ஆனந்தத்தின் பிறப்பிடம் தூய்மை தான் மனிதர்களின் உண்மையான அலங்காரம் தூய்மை இல்லையேல், மனித வாழ்வுக்கு மதிப்பில்லை. நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா? தேவதைகள் தூய்மையாக இருக்கின்றார்கள். ஆதலால் தான் வணக்கத்திற்குரியவர்களாகவும், பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறார்கள். தூய்மையில்லாத மனித வாழ்க்கையை இன்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? பாப்தாதா எல்லா குழந்தைகளின் பிராமண வாழ்க்கைக்கு இந்த வரதானத்தைத்தான் கொடுத்திருக்கிறார் பவித்திர பவ! யோகி பவ! எந்த ஆத்மாவில் தூய்மை உள்ளதோ, அவருடைய நடத்தை, முகம் பிரகாசமாக இருக்கும். ஆகவே, தூய்மை தான் வாழ்க்கையை சிரேஷ்டமாக்குவதாக இருக்கிறது. உண்மையில் எல்லா குழந்தைகளின் ஆதி சொரூபமே தூய்மை தான். அநாதி சொரூபமும் தூய்மை தான், இப்படிப்பட்ட தூய்மையான ஆத்மாவின் விசேஷங்கள் அவருடைய வாழ்க்கையில் தூய்மையின் பர்சனாலிட்டியை காட்டுகிறது. தூய்மையின் ரியல்ட்டி மற்றும் தூய்மையின் ராயல்ட்டி முகத்திலும், நடத்தையிலும் தெரிகிறது. இந்த ரேகைகைகள்

வாழ்க்கையின் அலங்காரம். ரியல்ட்டி என்பது. தான் அநாதி, ஆதி சொரூபத்தின் (தூய்மையானவன்) நினைவின் மூலம் சக்திசாலியாகி விடுகிறேன். ராயல்ட்டி என்பது தானும் ஸ்வமானில் இருப்பது மற்றும் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுத்து நடந்து கொள்பவர். பர்சனாலிட்டி என்பது, சதா திருப்தியாயிருப்பது மற்றும் மகிழ்ச்சியாயிருப்பது தானும் திருப்தியாக இருந்து, மற்றவரையும் திருப்திபடுத்துபவர். தூய்மையின் மூலம் அடையும் பிராப்திகள் மிக அதிகமானது. பாப்தாதா குழந்தைகளாகிய உங்களுக்கு என்னென்ன பிராப்திகள் செய்வித்திருக்கின்றார். இதைப் பற்றித் தெரியுமல்லவா? எத்தனை பொக்கிஷங்களால் நிறைவு செய்திருக்கின்றார்! இந்த பிராப்திகளை நினைவில் வைத்திருந்தாலே பரிபூர்ணமாகி விடுவோம்.

எல்லாவற்றிலும் முதன்மையான பொக்கிஷம் எது? ஞானப் பொக்கிஷம். இதன் மூலம் வாழ்க்கையில் துக்கம், அசாந்தியிலிருந்து விடுபட்டு விடுவோம். வீணான சங்கல்பம். எதிர்மறையான (நெகட்டிவ்) சங்கல்பம், தவறான சங்கல்பம் மற்றும் விகர்மத்திலிருந்து விடுதலையடைந்து விடுவோம். ஒருவேளை வீணான சங்கல்பம், சந்தேகம் வந்தாலும் கூட, ஞான பலத்தின் மூலம் வெற்றியடைந்து விடுவோம்.

இரண்டாவது பொக்கிஷம்: நினைவு, யோகம். இதன் மூலம் சக்திகளின் பிராப்தி அடைகிறோம். மேலும் சக்திகளின் ஆதாரத்தில் எல்லாவித பிரச்சினைகள் மற்றும் விக்னங்களை சுலபமாகவே கடந்து விடுகிறோம்.

மூன்றாவது பொக்கிஷம்: தாரணையில் (நடைமுறை) கொண்டு வருவது. இதன் மூலம் எல்லா குணங்களையும் அடைகிறோம்.

நான்காவது பொக்கிஷம்: சேவை. சேவை செய்யும்போது, யாருக்கு சேவை செய்கின்றீர்களோ, அவர்களிடமிருந்து ஆசிகள் கிடைக்கின்றன. குஷியாகவும் இருக்கிறது.

இத்தனை பொக்கிஷங்கள் பாபாவிடமிருந்து பிராப்தியாகின்றன. பாபா எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே பொக்கிஷங்களை வழங்குகின்றார். ஒருவருக்கு அதிகமாகவும், இன்னொருவருக்குக் குறைவாகவும் கொடுப்பதில்லை ஆனால் பெறுபவர்களிடம் வித்தியாசம் இருக்கிறது. சில குழந்தைகள் பொக்கிஷங்களை

அடைந்து, உண்பது, அருந்துவது, ஆனந்தமாகக் கழிப்பது ஆகியவற்றில் சமாப்தி செய்து விடுகிறார்கள் ஆனால் சிலர் உண்பது, அருந்துவது, ஆனந்தமாக இருந்தாலும் சேமிப்பும் செய்கிறார்கள். இன்னும் சிலர் காரியத்திலும் பயன்படுத்துகிறார்கள். அதிகப்படுத்தவும் செய்கிறார்கள் அதிகப்படுத்துவதற்கான சாவி -பொக்கிஷத்தை தனக்காவும், மற்றவர்களுக்காகவும் உபயோகப்படுத்துவது தான். யார் உபயோகப்படுத்துகிறார்களோ, அவர்கள் அதிகப்படுத்துகிறார்கள். ஆதலால் நீங்கள் உங்களிடம் கேளுங்கள் இந்த விசேஷ பொக்கிஷங்கள் சேமிப்பாயிருக்கின்றதா? என்ன சொல்வீர்கள்? ஆம் என்றா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் என்றா? யாரிடம் இந்த பொக்கிஷம் சேமிப்பாகியிருக்கிறதோ, அவர் எப்போதும் பரிபூரணமாக நிறைந்திருக்கின்றார். பாருங்கள். எந்த ஒரு பொருளானாலும் நிறைந்திருக்கும்போது கவலை இருக்காது. அதாவது நிறைந்திருக்கவில்லையேல், சஞ்சலமாக இருக்கும்; தள்ளாடும். ஏதாவது ஒரு பொருள் நிறைந்திருக்கவில்லையென்றால் ஆடுமல்லவா? இதுபோலவே இங்கேயும் கூட எல்லா பொக்கிஷங்களும் நிறைந்திருக்கவில்லையேல், சஞ்சலமாக இருக்கும். சதா பாபாவின் பொக்கிஷங்கள் எனது ஜன்ம சித்த அதிகாரம் என்ற நஷா இருக்கட்டும். பாபா கொடுத்தார்; நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள் என்றால் பொக்கிஷம் யாருடையதாகி விட்டது? உங்களுடையதாகி விட்டதல்லவா? யாரிடம் பொக்கிஷம் இருக்கிறதோ, அவர் எவ்வளவு நஷாவில் இருக்கின்றார்? எப்படி ஒரு ராஜாவின் சிறு குழந்தை, ராஜகுமார் இருக்கின்றார் அந்த சிறு குமாரனுக்கு, தன் தந்தையிடம் என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கின்றன என்பது தெரியாது, தெரியாமல் இருந்தாலும் கூட, தந்தையிடமிருக்கும் பொக்கிஷம் (சொத்து) தனக்குத்தான் என்ற குஷியில் இருப்பான் அல்லவா? ஒருவேளை குஷி குறைவாக இருந்தால் இதற்குக் காரணம் என்னவாக இருக்கும்? பாபா பொக்கிஷம் கொடுத்து விட்டார், கேட்டீர்கள் ஆனால் ஒருவர் கேட்பவராக இருக்கின்றார். இன்னொருவர் தனக்குள் ஏற்றுக் கொள்பவராக இருக்கின்றார். யார் ஏற்றுக் கொண்டு விட்டார்களோ, அவர்கள் நஷாவில் இருப்பார்கள்.

இன்று புதுப்புது குழந்தைகள் வந்திருக்கின்றனர். பாப்தாதா அதிர்ஷ்டசாலி குழந்தைகளாகிய உங்கள் எல்லோருடைய

பாக்கியத்திற்கு வாழ்த்துக்களைக் தெரிவிக்கின்றார். உங்களுடைய பாக்கியத்தை புரிந்து கொண்டிருக்கிறீர்களா? புரிந்திருக்கிறீர்களா? பரமாத்மாவின் அன்பு, அழிவற்ற அன்பு, ஒரு பிறவிக்கு மட்டுமல்ல, அநேக ஜன்மங்கள் சதா அன்பு நிலையாக இருக்கிறது, ஏனெனில் இப்போது இந்த சமயம் இருக்கிறதல்லவா? இது சங்கமயுகம். பாக்கியவான்யுகம். சத்யுகத்திற்கும் பாக்கியவான் என்று கூறுகின்றார்கள் ஆனால் தற்போதைய சங்கமயுகத்தின் சமயம், அதை விட பாக்கியவான் ஆகும்? ஏன்? இந்த சங்கமயுகத்தில் தான் பாபாவிடமிருந்து அகண்ட பாக்கியத்திற்கான வரதானம், ஆஸ்தி பிராப்தியாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சங்கமயுகத்தில், பாக்கியவானான சமயத்தில், நீங்கள் எல்லோரும் உங்களுடைய பாக்கியத்தைப் பெறுவதற்காக வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதா குழந்தைகளுக்கு ஒரு சகஜமான புருஷார்த்தத்திற்கான (முயற்சி) விதியைக் கூறுகின்றார். சகஜமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் அல்லவா? கஷ்டமானது விரும்ப மாட்டீர்கள் இல்லையா? இந்தக் குழந்தைகளுக்கு பாக்கியம் அடைவதற்கான சகஜ விதி கிடைத்து விட்டது, கிடைத்து விட்டதல்லவா? எல்லாவற்றையும் விட சகஜமானது. இதற்கு மேல் ஒன்றும் செய்ய வேண்டாம். ஒரே ஒரு விஷயம் செய்ய வேண்டும். ஒரு விஷயம் செய்ய முடியுமல்லவா? ஆம் என்று சொல்லுங்கள் அல்லது இல்லை என்று சொல்லுங்கள். சொல்லுங்கள் ஹான்ஜி (சரி) என்று ஆகவே எல்லாவற்றையும் விட சகஜமான விதி அமிர்தவேளையிலிருந்து, எல்லோருக்கும் யாரைச் சந்தித்தாலும் சரி, அவர்களிடமிருந்து ஆசி பெறுங்கள். ஆசி கொடுங்கள். கோபக்காரர் வந்தாலும் சரி, நீங்கள் அவருக்கும் கூட ஆசி கொடுக்க வேண்டும் மேலும் ஆசி பெற வேண்டும். ஏனென்றால் ஆசிகள் சகஜ புருஷாரத்தத்திற்கான மிக சுலபமான இயந்திரம். எப்படி விஞ்ஞானத்தில் ராக்கெட் இருக்கிறதல்லவா? எவ்வளவு சீக்கிரமாக காரியம் செய்து விடுகிறது! இது போலவே, ஆசி கொடுப்பது, ஆசி பெறுவது, முழு நாளும் இதைச் செய்ய முடியுமல்லவா? செய்ய முடியுமா? செய்ய முடியுமென்றால் கை உயர்த்துங்கள். யாராவது சாபம் கொடுத்தால் என்ன செய்வீர்கள்? யாராவது அடிக்கடி உங்களைத் தொந்தரவு செய்து கொண்டேயிருந்தால்? பாருங்கள். நீங்கள் பரமாத்மாவின் குழந்தைகள். வள்ளலின் குழந்தைகள் இல்லையா? மாஸ்டர் வள்ளல் தானே! அப்படியானால் வள்ளலின் வேலை

என்னவாக இருக்கும்? கொடுப்பது. ஆதலால் எல்லாவற்றையும் விட சிறந்த காரியம் ஆசி கொடுப்பது, எப்படிப்பட்ட மனிதராயிருந்தாலும் சரி, உங்களுடைய சகோதர சகோதரி தானே! பரமாத்மாவின் குழந்தைகள் சகோதரர், சகோதரி தானே! பரமாத்மாவின் குழந்தை என்றால், என்னுடைய ஈஸ்வரிய சகோதரர், ஈஸ்வரிய சகோதரி. அவருக்கு என்ன கொடுப்பீர்கள்? சாபமா கொடுப்பீர்கள்? தந்தை எப்போதாவது சாபம் கொடுக்கிறாரா? சாபம் கொடுப்பாரா? கொடுக்கிறாரா? ஆம் அல்லது இல்லை. என்ன சொல்கிறீர்கள்? மிகவும் கு கியாக இருப்பீர்கள். ஏன்? நீங்கள் சாபம் கொடுப்பவர்களுக்கும் கூட ஆசி வழங்குவீர்கள். அவர்கள் கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, நீங்கள் ஆசி பெறுவீர்கள். ஆதலால் துக்கம் எப்படி உண்டாகும்? பாப்தாதா வந்திருக்கின்ற குழந்தைகளுக்கு ஒரு வரதானம் கொடுக்கின்றார். வரதானத்தை நினைவில் வைத்துக் கொண்டால் சதா குஷியாக இருப்பீர்கள். வரதானம் என்னவென்று சொல்லட்டுமா? கேட்கிறீர்களா? வரதானம் ஒருவேளை உங்களுக்கு யாராவது துக்கம் கொடுத்தாலும் கூட, துக்கத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது. அவர்கள் கொடுக்கட்டும். நீங்கள் வாங்காதீர்கள் ஏனெனில் கொடுப்பவர் கொடுத்து விட்டார் ஆனால் ஏற்றுக் கொள்பவர் நீங்கள் தானே! கொடுப்பவர், ஏற்றுக் கொள்பவர் அல்ல. அவர் ஒரு கெட்ட பொருளைக் கொடுக்கிறார் என்றால், துக்கம் கொடுக்கிறார் என்றால், அசாந்தியைக் கொடுக்கிறார் என்றால். அது கெட்ட பொருள் தானே? துக்கம் உங்களுக்கு விருப்பமானதா? விருப்பம் இல்லை தானே? கெட்ட பொருள் எனும்போது, அதை வாங்கக் கூடியதா? யாராவது உங்களுக்குக் கெட்ட பொருளைக் கொடுத்தால், நீங்கள் வாங்கிக் கொள்வீர்களா? வாங்குவீர்களா? வாங்க மாட்டீர்கள். அப்படியானால் ஏன் வாங்குகிறீர்கள்? ஒருவேளை துக்கத்தை ஏற்கிறீர்கள் என்றால், துக்கப்படுபவர் யார்? நீங்களா? அல்லது அவரா? எடுப்பவர் தான் அதிகம் துக்கப்படுவார். ஒருவேளை இப்பொழுதிருந்தே, துக்கம் ஏற்பதில்லை என்றால், பாதி துக்கம் உங்களிடமிருந்து தூரமாகி விட்டது. ஏற்க மாட்டீர்கள் தானே? மேலும் நீங்கள் துக்கத்திற்குப் பதிலாக அவருக்கு சுகம் கொடுப்பீர்கள் என்றால், ஆசிகள் கிடைக்குமல்லவா? ஆகவே சுகமாகவும் இருப்பீர்கள். மேலும் ஆசிகள் எனும் பொக்கிஷம் கூட நிரம்பிக் கொண்டேயிருக்கும். ஒவ்வொரு ஆத்மாவிடமிருந்தும், எப்படிப்பட்டவராக இருந்தாலும் நீங்கள் ஆசிகளைப் பெறுங்கள்.

சுபபாவனை, சுப அபிலாஷை வைத்திருங்கள். சில சமயம் என்ன நடக்கிறது? யாராவது இப்படிப்பட்ட காரியம் செய்வதைப் பார்த்து, அவர்களுக்கு அறிவுரை கூற முயற்சிக்கிறார்கள். இவரைச் சரி செய்து விடுவோம் என்று அறிவுரை கொடுக்கிறீர்கள். அறிவுரை வழங்கலாம் ஆனால் அறிவுரை வழங்குவதற்கு சர்வோத்தமமான விதி இருக்கிறது. அதாவது மன்னிக்கும் ரூபத்தில் இருக்க வேண்டும். அறிவுரையும் வழங்குங்கள். இரண்டு வார்த்தைகளை நினைவில் வையுங்கள் -அறிவுரை மற்றும் மன்னிப்பு (இரக்கம்). நீங்கள் இரக்க மனதுடன் அவருக்கு அறிவுரை வழங்கினால், உங்களுடைய அறிவுரை வேலை செய்யும். ஒருவேளை இரக்க மனதுடன் அறிவுரை வழங்கவில்லையேல், உங்கள் அறிவுரையை ஒரு காதால் கேட்டு, இன்னொரு காது வழியாக விட்டு விடுவார்கள். அறிவுரை தாரணை ஆகாது அப்படித்தானே? அனுபவம் இருக்கிறதா? நீங்களும் கூட யாருக்காவது அறிவுரை வழங்குபவர் ஆகியிருக்கிறீர்களா? அறிவுரை வழங்குபவராவது எளிது ஆனால் மன்னிப்பதும் கூடவே இருக்க வேண்டும். இப்போதிருந்தே இரக்க மனமுடையவராகுங்கள். இரக்கம் காட்டுவதற்கான விதி சுபபாவனை, சுப அபிலாஷை. சுபபாவனை என்பது, உண்மையான அன்பு, கல்லையும், கரைத்து விடும். இதே போல மன்னிக்கும் சொரூபத்தோடு அறிவுரை வழங்குவதால், உங்களுடைய காரியம் நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ, அப்படி பிரத்யக்ஷமாகி விடும். நீங்கள் இரக்க மனமுடையவராகி, அறிவுரை வழங்குவதால் உண்டாகும் பிரபாவம் அவருடைய கடுமையான மனதையும் பரிவர்த்தனை செய்து விடும். ஆகவே உங்களுக்கு என்ன வரதானம் கிடைத்தது? துக்கம் கொடுக்கக் கூடாது, துக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடாது விருப்பமானது தானே? விருப்பமானதுதான் அல்லவா? இனி மேல் எடுக்கக் கூடாது (துக்கம்) தவறு செய்யக்கூடாது. எப்போது பாபா துக்கம் கொடுப்பதில்லையோ அது போல தந்தையை பின்பற்ற வேண்டுமல்லவா? செய்து கொண்டிருக்கிறீர்கள். சில சமயம், கொஞ்சம் கடிந்து கொள்கிறீர்கள். கடிந்து கொள்ளக் கூடாது. இரக்கம் காட்டுங்கள். இரக்கம் காட்டி, அறிவுரை வழங்குங்கள். அடிக்கடி ஒருவரை கடிந்து கொண்டால், ஆத்மா இருக்கிறதல்லவா? அது விரோதியாகி விடுகிறது. வெறுப்பு வந்து விடுகிறது. பரமாத்மாவின் குழந்தைகள் இல்லையா? எப்படி தந்தை தூய்மையற்றவர்களையும், தூய்மையாக்கக்கூடியவராக இருக்கின்றார். அப்படியிருக்கும்போது நீங்கள் துக்கத்தில்

இருப்பவர்களுக்கு சுகம் கொடுக்க முடியாதா? இப்போது நீங்கள் சென்று சோதனை செய்து பாருங்கள். செய்து பார்ப்பீர்களா? பார்ப்பீர்களா? முதலில் வீட்டில் செய்து பார்க்க வேண்டும் (சேரிட்டி பிகின்ஸ் அட் ஹோம்) பரிவாரத்தில் ஒருவேளை யாரும் துக்கம் கொடுத்தால் கூட வாங்கக் கூடாது. ஆசீர்வாதம் கொடுங்கள். இரக்க மனமுடையவராகுங்கள். முதலில் வீட்டிலுள்ளவர்களிடம் செய்து பாருங்கள் உங்களுடைய வீட்டின் பிரபாவம், அக்கம் பக்கம் பரவும், பிறகு தேசத்தின் மீது படும், பிறகு உலக முழுவதும் பரவும். சுலபமானது தானே! முதலில் உங்களுடைய பரிவாரத்தில் ஆரம்பியுங்கள். ஏனெனில், யாராவது ஒருவர் கோபப்படுபவராக இருந்தால், அந்த ஒருவருடைய கோபத்தால் வீட்டின் சூழ்நிலை என்னவாகும்? வீடாக இருக்குமா? அல்லது யுத்தகளமாக இருக்குமா? அந்த சமயத்தில் எப்படி இருக்கும்? நன்றாக இருக்குமா? நன்றாக இருப்பதில்லையல்லவா?

உங்களுக்காகவும் கூட இருக்கிறது (மதுபன் வாசிகளிடம்) உங்களோடு, உங்களுக்குத் துணையாக இருப்பவர்களுடன், அவரவர் காரியம் செய்து கொண்டிருப்பவர்களிடம் துக்கம் கொடுக்கவோ, எடுக்கவோ கூடாது. ஆசி கொடுங்கள். ஆசி பெறுங்கள். ஒருவேளை நீங்கள் உரிமையுடன் இந்த மாதிரியான சமயத்தில் மனதார மேரா பாபா என்று சொல்வீர்களானால், பரமாத்மா பாபா, மேரா பாபா என்று சொன்னால் பழமொழி இருக்கிறது, பகவான் சதா ஆஜராக இருப்பார். ஒருவேளை நீங்கள் மனப்பூர்வமாக இம்மாதிரியான சமயத்தில் உரிமையோடு மேரா பாபா என்று கூறுவீர்களேயானால், தந்தை (பாபா) இதோ இருக்கிறேன் என்று ஆஜராகி விடுவார். ஏனெனில் தந்தை இருப்பது எதற்காக? குழந்தைகளுக்காகத்தானே! மேலும் உரிமையுள்ள குழந்தைகளுக்கு தந்தை உதவி செய்யவில்லை என்பது நடக்க முடியாது, நடக்காது. ஆதலால் பரிவர்த்தனை செய்து கொண்டு செல்லுங்கள். எப்படி வந்தீர்களோ, அப்படி செல்லக்கூடாது. பரிவர்த்தனை செய்து கொண்டு தான் செல்ல வேண்டும். ஏனென்றால், பாருங்கள் எவ்வளவு செலவு செய்து கொண்டு வந்திருக்கிறீர்கள், டிக்கெட் செலவு செய்தீர்கள் அல்லவா! செலவும் செய்தீர்கள், நேரமும் ஆகியது. இதற்கு மதிப்பு இருக்கிறதல்லவா? மதிப்பு வைத்திருக்கிறீர்கள். ஆகவே சுய பரிவர்த்தனை மூலம், வீட்டின் பரிவர்த்தனை, பிறகு உலக

பரிவர்த்தனை. தேசப்பரிவர்த்தனை, உங்களுடைய வீடு ஆசிரமம் ஆகி விடட்டும். வீடல்ல. ஆசிரமம். பொதுவாகவே கூறுகின்றார்கள் அல்லவா? கிருஹஸ்தாஸ்ரமம் என்று ஆனால் இன்று ஆசிரமமாக இல்லை. ஆசிரமம் தனியாக இருக்கிறது. வீடு தனியாக இருக்கிறது. ஆதலால் வீட்டை ஆசிரமம் ஆக்க வேண்டும். ஆசி வழங்க வேண்டும். ஆசி பெற வேண்டும். இது ஆசிரமத்தின் வேலை. உங்களுடைய வீடு கோவில். கோவிலில் மூர்த்தி என்ன செய்கிறது? ஆசி வழங்குகிறதல்லவா? மூர்த்திக்கு முன் சென்று என்ன சொல்கிறீர்கள்? ஆசி கொடுங்கள்! இரக்கம் காட்டுங்கள். இரக்கம் காட்டுங்கள் என்று கூக்குரல் இடுகிறீர்கள். ஆதலால் நீங்களும் கூட என்ன கொடுக்க வேண்டும். ஆசீர்வாதம். ஈஸ்வரிய அன்பு கொடுங்கள் ஆத்மீக அன்பு கொடுங்கள். சரீர அன்பு அல்ல ஆத்மீக அன்பு. இன்று அன்பு கொடுக்கிறீர்கள் என்றால் சுய நலமிக்க அன்பு, உண்மையான உள்ளன்பு இல்லை. சுயநலத்தோடு அன்பு செலுத்துவீர்கள், இல்லையேல் பொருட்படுத்த மாட்டீர்கள் (டோன்ட் கேர்). அப்படியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஆத்மீக அன்பு கொடுக்க வேண்டும். ஆசி வழங்க வேண்டும். துக்கம் எடுக்கக் கூடாது துக்கம் கொடுக்கக் கூடாது. பாருங்கள். உங்களுக்கு சான்ஸ் (வாய்ப்பு) கிடைத்திருக்கிறது. பாப்தாதாவுக்கும் கூட குஷியாக இருக்கிறது இவ்வளவு பேர் வந்திருக்கிறீர்கள். இத்தனை வீடுகளும் ஆசிரமம் ஆகி விடுமல்லவா? செய்வீர்கள் அல்லவா? பக்கா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் கச்சாவா? என்ன நடந்தாலும் சரி, கொஞ்சம் சகித்துக் கொள்ள வேண்டியதாயிருக்கும் அடக்கிக் கொள்ளும் சக்தியை காரியத்தில் உபயோகிக்க வேண்டியதிருக்கும். என்ன நினைக்கிறீர்கள்? பொறுத்துக் கொள்வதால் உண்டாகும் பலன் இனிமையானதாக இருக்கும். யாரெல்லாம் பக்காவாக, ஒவ்வொரு வீட்டையும் சொர்க்கமாக மாற்றுவோம், கோவிலாக்குவோம், ஆசிரமம் ஆக்குவோம் என்று நினைக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். சும்மா கை உயர்த்தக் கூடாது. ஏனென்றால் பாப்தாதாவிடம் கணக்கு கொடுக்க வேண்டியதாயிருக்கும். மற்றவரைப் பார்த்து கை உயர்த்தக் கூடாது. உண்மையான மனதுடன் கை உயர்த்த வேண்டும். முழு மனதுடன் கை உயர்த்த வேண்டும். நல்லது. தாதிகள் இதற்கு என்ன பரிசு கொடுப்பீர்கள்? ஆம் என்று சொல்லுங்கள் தாதி. இத்தனை கோவில்கள் ஆகி விடும். நீங்கள் என்ன பரிசு கொடுப்பீர்கள் இவர்களுக்கு

தங்களுடைய வீட்டைக் கொண்டு வரட்டும். பரிவாரம். இது பரிசு அல்ல. இது வேலையாகி விட்டது. பாபா என்ன கட்டளை இடுவார் பாருங்கள். உங்களுக்கு பரிசு கிடைத்து விடும். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல ஆனால்? ஆனால்? ஆனால் என்ன என்று சொல்லட்டுமா? நீங்கள் சென்ற பிறகு உங்களுடைய தாரணை மூலமாக பரிவர்த்தனை செய்ய வேண்டும். மேலும் 15-தினங்களுக்குப் பிறகு ஒரு மாதத்திற்குப் பிறகு தங்களுடைய முடிவை (ரிசல்ட்) எழுத வேண்டும். யார் ஒரு மாதம் கூட துக்கம். கொடுக்க மாட்டீர்கள், துக்ககம் எடுக்க மாட்டீர்கள் அவர்களுக்கு மிக நல்ல பரிக கிடைக்கும். நீங்கள் இங்கு வருவீர்களானால் வாழ்த்துக்கள். ஒருவேளை உங்களால் இங்கு வர முடியாவிட்டாலும் சென்டருக்கு பரிசு அனுப்பி வைக்கப்படும்.

இன்று விசேஷமாக இவர்களுக்காக வர வேண்டியதிருந்தல்லவா? அப்படியானால் கமால் செய்து காட்ட வேண்டும். (வெற்றிகரமாக செயலில் நடந்து காட்டுதல்) பரமாத்மாவின் குழந்தைகளாகி கமால் செய்து காட்டவில்லையென்றால் வேறென்ன செய்வீர்கள்? தவறு செய்யக்கூடாது. கமால் செய்து காட்ட வேண்டும். உங்களுக்கு தவறுதலாக கெட்ட சங்கல்பம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது என்ன செய்வீர்கள்? என்ன செய்வீர்கள்? வரும். ஏனெனில் நீங்கள் வெகு காலம் கெட்டதைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டீர்கள். மிருகங்களும் கூட, பாருங்கள். நன்றாக பழக்கிய பிறகு தூரமாகச் சென்று விட்டு வந்தாலும், அது திரும்பவும் வந்து விடும். பாருங்கள், நீங்கள் கையை உயர்த்தி விட்டீர்கள். மிகவும் நல்லது தான் செய்தீர்கள். ஒருவேளை தவறுதலாக பலவீனம் வந்து விட்டால் என்ன செய்வீர்கள்? பலவீனத்தை வர விடுவீர்களா? பாருங்கள் இதற்கும் விதி இருக்கிறது. நீங்கள் உங்களுக்காக உறுதி எடுத்துக் கொண்டீர்கள். கெட்டதைக் கொடுத்து விட்டீர்கள். கெட்டதை தந்தையிடம் கொடுத்து விட்டீர்கள் அல்லவா? சரி யாருக்காவது ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்து விட்டீர்கள். பிறகு தவறுதலாக அந்தப் பொருள் உங்களிடமே வந்து விட்டால் என்ன செய்வீர்கள்? வைத்துக் கொள்வீர்களா? உங்களிடம் வைத்துக் கொள்வீர்களா? அல்லது திருப்பிக் கொடுத்து விடுவீர்களா? திருப்பிக் கொடுத்து விடுவீர்கள் அல்லவா! சரி. ஒருவேளை உங்களிடம் கொஞ்சம் கோபத்தின் ரேகை, லோபத்தின் ரேகை, மோஹம். அபிமானத்தின்

ரேகை தவறுதலாக வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், ஏனெனில் வெகு காலம் உங்களிடம் வைத்துக் கொண்டிருந்தீர்கள் ஆதலால் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். பாபா! பாபா! உங்களுடைய பொருளை நீங்களே வைத்துச் சமாளித்துக் கொள்ளுங்கள். என்னுடையதல்ல. பாபா. கடல் அல்லவா? கடலில் சேர்த்து விடுங்கள். நீங்கள் உபயோகப்படுத்தக் கூடாது. ஏனென்றால் கடனாக பெற்றது தானே! கடனாகப் பெற்றதை, சொந்தம் கொண்டாட முடியாதல்லவா? தந்தையிடம் கொடுத்து விடுங்கள். பாபா! நீங்களாகட்டும். உங்கள் பொருளாகட்டும். நான் உபயோகப்படுத்த மாட்டேன். சிறு குழந்தைகளுக்கும் கூட நீங்கள் கற்பிக்கிறீர்கள். மண்ணைத் திங்காதே என்று கூறுகிறீர்கள் இல்லையா? சொன்னாலும், குழந்தை மண்ணைத் தின்கிறது. ஏனென்றால் அதற்கு மண் நன்றாக இருக்கிறது. இதைப் பார்த்தால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அடிக்கடி, அதன் கையைப் பிடித்திழுத்து விலக்குகிறீர்கள். அப்படி விடுவிக்கிறீர்களா? அல்லது மண்ணைத் திண்ணும் படி விட்டு விடுவீர்களா? விடுவிக்கிறீர்கள் தானே? ஆகவே நீங்கள் உங்கள் மனதை விடுவிக்க வேண்டும். மனதில் தானே எண்ணம் வருகிறது? ஆதலால் நீங்கள் உங்கள் மனதிற்கு எஜமானன் ஆகி, இந்தப் பொருளை விலக்கி விட வேண்டும் இந்த விதி சரிதானா? செய்வீர்கள் அல்லவா? எளிதாகி விடும். தைரியத்தை இழந்து விடக்கூடாது. ஒரு அடி உங்கள் தைரியம், ஆயிரம் மடங்கு தந்தையின் உதவி அனுபவம் செய்து பாருங்கள். தைரியத்தை இழந்து விடக்கூடாது. மனம் உடைந்து விடக்கூடாது. சர்வ சக்திவானுடைய குழந்தைகள், மனம் உடைந்து விடக்கூடாது. தைரியத்தை இழந்து விடக்கூடாது. திட சங்கல்பம் கொள்ள வேண்டும். வெற்றி உங்களுடைய ஜன்ம சித்த அதிகாரம். மிக்க நன்று. நன்றாகச் செய்து விட்டீர்கள். இனி என்ன செய்ய வேண்டும்? இதற்கு வி.ஐ.பி. குரூப் என்று சொல்லப்படுகிறது. பாருங்கள் உங்களுக்கு நல்ல டைட்டில் கிடைத்திருக்கிறது. இனி வி.ஐ.பி. ஆகக்கூடாது. வி.வி.ஐ.பி., விஐ.பி. என்றால் சாதாரணமாகி விட்டது ஆனால் வி.வி.ஐ.பி. அதாவது விசேஷ ஆத்மா ஐ.பி. நல்லது.

இன்று மதுபன் வாசிகளுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. மதுபன் நிவாசிகளாகிய நீங்கள் எல்லோரும் இங்கு வருகை தந்திருக்கின்ற சகோதர சகோதரிகளுக்கு நன்றி சொல்கிறீர்கள். ஏனென்றால்

உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை, நாங்களும் பயன்படுத்திக் கொண்டோம் என்கிறீர்கள். பாபாவைச் சந்திக்கும் வாய்ப்பு உங்களால் எங்களுக்கு கிடைத்தது, ஆதலால் நன்றி என்று கூறுகின்றீர்கள். உங்களுடைய குரூப் மிகவும் சிறியது. பொதுவாக ஆயிரக்கணக்கானோர் குரூப் வருகின்றது. ஆகவே ஒரு மாதத்திற்குப் பிறகு, உங்கள் சென்டர் மூலமாக ரிசல்ட் எழுதி அனுப்ப வேண்டும். பிறகு பரிசு கிடைக்கும். அவசியம் கொடுக்கப்படும். நல்லது. நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள பரமாத்மாவின் அன்புக்கு அதிகாரியாயிருக்கின்ற (உரிமையுள்ள) குழந்தைகளுக்கு நாலா பக்கமும் சர்வ கஜானாக்களால் நிரம்பியிருக்கின்ற நிர்விக்ன, நிர்விகல்ப, நிர்வியர்த்த சங்கல்பத்தில் இருக்கக்கூடிய ஆத்மாக்களுக்கு, இத்துடன் சர்வ பரிவர்த்தனை செய்கின்ற மற்றும் செய்விக்கக்கூடிய ஆர்வம், உற்சாகத்தில் பறக்கக்கூடிய குழந்தைகளுக்கு கூடவே பாப்தாதாவின் உண்மையான மனதினுடைய சமாச்சாரத்தை கொடுக்கக்கூடிய உண்மையான மனமுடைய குழந்தைகளுக்கு விசேஷமாக திலாராம் ரூபத்தில் தந்தையின் ரூபத்தில் ஆசிரியர் ரூபத்தில், சத்குரு ரூபத்தில், பதம் குணா யாத் பியார் மற்றும் நமஸ்தே.

ஒவ்வொரு மண்டலமாக பாப்தாதாவின் சந்திப்பு: டில்லி மண்டலம்: டில்லி நிவாசிகளுக்கு சேவாவின் வாய்ப்பு மிகவும் நன்றாக இருக்கிறது ஏனென்றால் டில்லியில் என்ன என்ன சேவை நடைபெறுகிறதோ அது முழு உலகத்திற்கும் பரவுகின்றது. டில்லியின் சப்தம் உலகம் முழுவதற்கும் போய் சேருகிறது. ஆக டில்லியில் எத்தனை பேர் வந்துள்ளனர் எண்ணுங்கள்? எவ்வளவு பேர் வந்துள்ளனர்? 50. ஆக டில்லியில் 50-வீடுகளும் ஆசிரமம் ஆகி விட்டால் எவ்வளவு பெயர் (புகழ்) கிடைக்கும். சுற்றுப்புற சூழ்நிலை மாறத்தானே செய்யும். ஏனென்றால் எல்லோரும் முயற்சிச் செய்கிறார்கள் வீட்டிற்கு வீடு ஒவ்வொரு ஆத்மா சாந்தியாகி (அமைதியாக) விட்டால், சுகம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். அப்போது வீடும் ஆசிரமம் ஆகி விடும், சுற்றுப்புற சூழ்நிலையும் அமைதியாகி விடும். இரட்டை சேவை ஆகி விடும். அப்படியானால் முதல் நம்பரில் வர முடியும்தானே? டில்லி, முதல் நம்பர் எடுப்பீர்களா? அல்லது இரண்டாம் நம்பர் போதுமா? முதல் நம்பர் எடுப்பீர்களா அல்லது இரண்டாம் நம்பர் போதுமா? முதல் நம்பர்

எடுக்க வேண்டும். நல்லது. சரி அனைவரும் கை தட்டுங்கள். மிகவும் நல்ல மற்றும் தைரியசாலி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் பல மடங்கு உதவி கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

பஞ்சாப்-ஹரியானா, ஹிமாச்சல், ஜம்மு காஷ்மீர் மற்றும் உத்தராஞ்சல்: நல்லது, பஞ்சாப்பில் அதிகமான நதிகள் உள்ளன. ஆக நதியின் வேலை என்ன? நதிகள் அனைவருக்கும் குளிர்ந்த தன்மையை அளிக்கிறது. அப்படியானால் நீங்கள் பரமாத்மாவின் குழந்தைகள் பஞ்சாப்பில் குளிர்ந்த தன்மை மற்றும் அமைதியின் வாயுமண்டலத்தை பரப்புங்கள். பஞ்சாப் சிங்கம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் சிங்கம் யாருக்கும் பயப்படாது, பயப்படுகிறதா? பயப்படுவதில்லை. அப்படியென்றால் நீங்களும் மாயாவைக் கண்டு பயப்படக் கூடாது. மாஸ்டர் சர்வ சக்திவானாக மாறி எதிர் கொள்ள வேண்டும் சரிதானே. பஞ்சாப்பிற்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா? செய்வீர்களா? உத்திராஞ்சல்லாக இருந்தாலும் சரி வேறு என்னவாக இருந்தாலும் செய்வீர்களா? பஞ்சாப்பை சேர்ந்த குழந்தைகளுக்கு தைரியம் உங்களுடையது உதவி பாபாவுடையது. எது வந்தாலும் சரி என்னுடைய தந்தை (மேரா பாபா) என்று சொல்லும் போது அனைத்தும் அழிந்து விடும். மனதோடு கூற வேண்டும், வெறும் வாய் மூலம் கிடையாது, மனதால் கூறும்போது அனைத்துத் துக்கமும் தூரம் சென்று விடும். நல்லது அமருங்கள்.

ஆந்திரபிரதேஷ்: தோராயமாக 40-பேர் வந்துள்ளனர். நல்லது. சதா தன்னைத் தானே வெற்றி ரத்தினம் என்று கருதுகிறீர்களா, ஏனென்றால் பரமாத்மாவின் கூட இருப்பவர்கள். அப்படியென்றால் பரமாத்மா யாருடன் இருப்பாரோ அவர் சதா வெற்றியாக இருப்பவர். ஆக சதா தன்னை பரமாத்மாவின் கூட இருக்கக்கூடிய பாண்டவர்கள் என்ற அனுபவம் செய்யுங்கள். வெற்றி என்பது உங்களின் கழுத்தின் மாலையாகும். அப்படித் தானே? வெற்றி கழுத்தின் மாலைதானே? கழுத்தில் வெற்றியின் மாலை இருந்து கொண்டே இருக்கிறது என்பது சதா நினைவில் இருக்க வேண்டும். இதே நிச்சயம் மற்றும் போதையில் இருக்க வேண்டும். சரிதானே! இப்போது ஆந்திரா நம்பர் எடுக்க வேண்டும். அவர்களும் முதல் நம்பர் மற்றும் நீங்களும் முதல் நம்பர். முதலில் வர வேண்டும், இரண்டாவது எடுத்து என்ன செய்வது?

ஆகையால் நீங்களும் முதல் நம்பரில் வர வேண்டும். (வின்) வெற்றி அடைந்தால் (ஒன்) முதலில் வரலாம். வெற்றியடையத் தெரிய வேண்டும். அப்படியானால் வெற்றி (வின்) முதல் (ஒன்) நல்லது.

மும்பை மற்றும் மஹாராஷ்ட்ரா: மஹாராஷ்ட்ராவின் பொருளே மஹான், மஹான் தானே! இப்போது பாபாவின் நினைவு மற்றும் சேவையின் மூலமாக தன்னையும் மகானாக்கி பிறரையும் மஹானாக மாற்றுங்கள். எவ்வாறு பெயர் இருக்கிறதோ, மஹாராஷ்ட்ரா அப்படியானால் ஏதாவது மஹான் காரியம் செய்வீர்கள் தானே! ஆக மகான் ஆகியேத் தீர வேண்டும். மேலும் மஹான் காரியம் செய்து காட்டுங்கள். அதில் பக்காதானே? பக்கா? பக்கா? (உறுதி) மஹான் என்றால் பக்காவாக தான் இருப்பார்கள். யார் யார் வந்துள்ளனரோ ஒவ்வொருவரும் தைரியசாலியானவர்கள். அதைப் பார்த்து பாப்தாதாவிற்கு மிகுந்த சந்தோஷம் பயப்படக் கூடியவர்கள் அல்ல. எனவே வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!

கர்நாடகம்: கார்நாடகத்தை சேர்ந்தவர்களுக்கு பாபா கூறுகிறார்: பெயரைப் பாருங்கள் கர் நாடக், நாடக் கர் (நாடகம் நடிக்கக்கூடியவர்கள், நாடகம் அமைக்கக்கூடியவர்கள்), ஆனால் இந்த முழு சிருஷ்டியையும் நாடகம் என்று கூறுகிறோம், எல்லையற்ற நாடகம். இதில் கர்நாடககாரர்கள் என்ன செய்யப் போகிறீர்கள். ஹீரோ (கதாநாயகன்) பார்ட் நடிக்கப் போகிறீர்களா? (ஹீரோ). நல்லது. அதற்காக என்ன செய்ய வேண்டும்? மிகவும் சிறிய விஷயம் தான். பூஜ்ஜியத்தை (ஜீரோ) நினைவு செய்தால் ஹீரோ ஆகி விடலாம். எளியது தானே மேலும் ஜீரோ சுயம் ஆத்மாவாகவும் இருக்கிறார் மற்றும் ஜீரோ தந்தையாகவும் இருக்கிறார் ஆகையினால் ஜீரோவை நினைவு செய்ய வேண்டும். ஹீரோவாக நடிப்பு நடிக்க வேண்டும். சரி தானே! மிகவும் நல்லது. நீங்கள் வந்துள்ளீர்கள், வாழ்த்துக்கள்.

தமிழ்நாடு: பாருங்கள். பாண்டவர்கள் கூட ஐந்து பேர் தான் நீங்கள் கொஞ்சப் பேர் தான் வந்திருக்கின்றீர்கள் என்றாலும் பரவாயில்லை ஆனால் பஞ்ச பாண்டவர்கள் குறைந்த பேர் என்றாலும், வெற்றியடைந்து விட்டனர். ஆகவே நீங்களும் கூட கொஞ்சப் பேர் தான் ஆனால் விஜய் இரத்தினங்கள். மேலும் சதா வெற்றியாளர்களாகவே

(விஜயி) இருப்பீர்கள். எண்ணிக்கை குறைவாயிருந்தாலும் பரவாயில்லை ஆனால் வெற்றியாளர்கள். வெற்றியாளர்களாகவே இருப்பீர்கள். ஆகவே வெற்றிக்கான வரதானம் உங்கள் எல்லோருக்கும் விசேஷமாக இருக்கிறது. சரி தான். வெற்றியாளர் ஆவீர்கள். இடையே, மதுரை மெகா புரோகிராம் பற்றி பாப்தாதாவுக்கு சமாச்சாரம் தெரிவிக்கப்பட்டது. பாப்தாதா எல்லோருக்கும் நினைவைக் கொடுத்தார். பாப்தாதா கூறினார்: மதுரை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா சகோதர சகோதரிகளுக்கும் மிகுந்த நினைவைத் தாருங்கள் என்றார்.

குஜராத்: பாப்தாதா உங்களுடைய நெற்றியில் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றார்? பாப்தாதா உங்களுடைய நெற்றியில் மூன்று புள்ளியின் திலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அந்த மூன்று புள்ளிகளில் ஒன்று நீங்கள் ஆத்மா புள்ளி, புள்ளி தானே! தந்தையும் புள்ளி, மற்றும் என்ன டிராமாவில் நடந்து முடிந்ததோ அதற்கும் முற்றுப் புள்ளி வைக்கப்படுகிறது. அப்படி என்றால் முற்றுப்புள்ளி என்றால் என்ன? புள்ளியாகின்றது தானே! ஆகையால் உங்கள் அனைவரின் நெற்றியில் மூன்று புள்ளியின் திலகத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்போது தினமும் அமிர்தவேளையில் இது அனைவருக்காவும் சொல்லப்படுகிறது நீங்கள் நிமித்தமாக உள்ளீர்கள். அமிர்த வேளையில் எழுந்திருந்து பாப்தாதாவோடு சந்திப்பை கொண்டாடி சக்திகளையும் மற்றும் ஆசீர்வாதங்களையும் எடுத்து தனக்குத்தானே மூன்று புள்ளிகளின் திலகம் வையுங்கள். திலகம் நெற்றியில் தானே வைக்கப்படுகிறது. ஏனென்றால் நெற்றி நினைவின் (ஸ்மிருதி) இருப்பிடமாகும். ஆகையினால் நீங்கள் தினமும் நினைவின் மூன்று புள்ளியின் திலகம் வையுங்கள். திலகம் வைப்பதற்கு தெரியும் தானே! அப்படி என்றால் இப்போது இந்த திலகம் வைத்தால் முழு நாளும் அதிகமான சகயோகம் கிடைக்கும். திலகதாரியாகவும், கிரீடதாரியாகவும், சிம்மாசனதாரியாகவும் ஆகி விடுகிறீர்கள். நல்லது.

ஈஸ்டர்ன் (கிழக்கு மண்டலம்): ஈஸ்டர்ன் என்றாலே முழுமை, கிழக்கு திசையிலிருந்து என்ன வெளி வருகிறது. சூரியன் உதிக்கிறது. நீங்கள் ஈஸ்டர்ன் ஜோனில் இருந்து வந்துள்ளீர்கள். அங்கு சென்று என்ன செய்யப் போகிறீர்கள்? ஞான சூரியன் உதயமாகி விட்டது, இதன் அறிமுகத்தை அனைவருக்கும் கொடுங்கள். எவ்வாறு சூரியன்

அனைவருக்கும் சக்தியையும், வெளிச்சத்தையும் கொடுக்கிறதோ அம்மாதிரி நீங்களும் மாஸ்டர் சூரியன் ஆகி விட்டீர்கள் தானே! மாஸ்டர் ஞான சூரியன் ஆகி விட்டீர்கள் என்றால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அனைவருக்கும் ஒளியையும், சக்தியையும் கொடுக்க வேண்டும். இது தான் ஈஸ்டர் ஜோனின் செயல். சரி தானே மிகவும் நல்லது. ஈஸ்டர் ஜோனிலில் இருந்து தான் பிரம்மாபாபா வந்தார், அதிர்ஷ்டம் தான். ஆகையால் நீங்கள் இரட்டை அதிர்ஷ்டசாலி ஆகி விட்டீர்கள். இருப்பிடமும் அதிர்ஷ்டமானது, ஆத்மாவும் அதிர்ஷ்டமானது நல்லது மிகவும் நல்லது.

இராஜஸ்தான்: பெயரே இராஜஸ்தான்! இராஜஸ்தானில் இராஜாக்கள் இருந்தனர் இப்போது இல்லை ஆனால் இருந்தனர். ஆகையினால் நீங்களும் இராஜாவாகிப் போகிறீர்கள். இராஜா ஆகி விட்டீர்கள் தானே? (சுயராஜ்யம்) சுயராஜ்யத்தின் திலகம் வைத்துள்ளீர்கள் தானே. எனவே எப்பொழுதும் இதே நினைவு இருக்க வேண்டும் -நான் இராஜஸ்தானின் சுயராஜ்ய அதிகாரியாவேன்! யார் சுயராஜ்ய அதிகாரி ஆகிறார்களோ அவர்கள் முழு உலகத்தின் இராஜ்ய அதிகாரி ஆகிறார்கள். இது புரிந்து கொள்ளக் கூடிய விஷயம். ஆகவே சுயராஜ்யத்தை ஒருபோதும் சாதாரணமாக (டிலா) எடுத்துக் கொள்ளக் கூடாது. இராஜா என்றால் இராஜா தான். ஒருபோதும் எந்த கர்மேந்திரியங்களுக்கும் வசமாக மாட்டார்கள் இராஜாவாகி அதிகாரம் செய்ய வேண்டும். இராஜாவாகி விதிப்படி நடத்த வேண்டும். அப்போது இராஜஸ்தானுக்கு சுயராஜ்ய அதிகாரி வரதானம் கிடைக்கும் சரி தானே. சுய ராஜ்ய அதிகாரி தானே, பக்கா? இராஜஸ்தான் மிகவும் அருகில் உள்ளது. ஆகையால் அருகில் (நியரஸ்ட்) இருப்பது என்றால் அன்பில் (டியரஸ்ட்) இருப்பவர்கள். ஆகையால் இவ்வாறே நீங்கள் அனுபவம் செய்யுங்கள், நல்லது.

உத்திரபிரதேசம்: மூவர் இருந்தனர். மூன்று என்றால் திரிமூர்த்தி என்று சொல்லப்படுகிறது ஒன்று மாஸ்டர் பிரம்மா, மாஸ்டர் விஷ்ணு. மாஸ்டர் சங்கர். திரிமூர்த்தி ஆகி விட்டது தானே. மிகவும் நல்லது. பரமாத்மாவையும் திரிமூர்த்தி சிவா என்று அழைக்கப்படுகிறது. ஆகையால் நீங்கள் திரிமூர்த்தி ஏதாவது அதிசயத்தை நிகழ்த்தி காட்டுங்கள். சிறியவர்களை பாப்தாதா எப்போதுமே தனக்கு சமமாக பார்க்கிறார் ஆகையால் உங்களுடைய எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் பாபாவுக்கு சமமாக இருக்கிறீர்கள். மறு முறை

வரும்போது அதிக எண்ணிக்கையோடு வாருங்கள். அதிக எண்ணிக்கை கொண்டு வருவீர்கள் தானே! உங்களுக்கு சமமாக மாற்றி பின்னர் பெரிய எண்ணிக்கையின் பரிசை வாங்குங்கள், நல்லது.

மத்திய பிரதேசம், சத்திஸ்கட்: நீங்கள் இந்தூர் மற்றும் போபால் இருவருமே வேறு யாரும் செய்திராத அளவில் அதிசயத்தை செய்து காண்பிக்க வேண்டும். ஏனென்றால் இந்தூரை பிரம்மாபாபா தனது சங்கல்பத்தின் மூலமாக ஸ்தாபனை செய்தார், இந்தூரின் சிறப்புத்தன்மை பிரம்மாபாபாவின் பார்வை இந்தூர் மீது விழுந்தது மேலும் இந்தூர் மற்றும் போபாலை சேர்ந்தவர்கள் மத்திய பிரதேசத்தை சார்ந்தவர்கள் தான். எனவே அந்த மாதிரி அதிசயம் காட்ட வேண்டும். குறைந்தது ஒரு அதிசயமாவது காட்ட வேண்டும், எளிமையானது. அந்த மாதிரி ஒரு மைக் (பிரபலமானவர்) தயார் செய்யுங்கள். அவருடைய சப்தம் கேட்டு அனைவருக்கும் பிரபாவம் ஏற்பட வேண்டும். அனைவருக்கும் நன்மை செய்வதற்கு நிமித்தமாக வேண்டும். அப்படி பார்க்கும் போது ஒரு மைக் எவ்வளவு பெரிய காரியத்தை செய்து கொண்டிருக்கிறது. எவ்வளவு பேர் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி அதிகாரம் உள்ளவர்கள் சொல்ல வேண்டும், அவர்களின் பேச்சைக் கேட்டு பரிவர்த்தனை ஆக வேண்டும். அப்பேற்பட்டவர்களைத் தான் பாப்தாதா மைக் என்று கூறுகிறார். எனவே குறைந்தது ஒரு மைக்காவது தயார் செய்து கூட்டி வாருங்கள். சரிதானே. அதிசயம் செய்ய வேண்டும். என்னுடைய தந்தை, என்னுடைய சேவா -இதை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டால் அனைத்து காரியங்களும் எளிதாகி விடும். நல்லது.

ஸ்ரீலங்கா, மலேசியா, யு.எஸ்.ஏ.: வெளி நாட்டவரின் பரிசை பார்க்க வேண்டும் தானே! ஸ்ரீலங்காவில் சேவை மிகவும் நன்றாக நடந்தது. இயற்கை சீற்றத்தினால் சுனாமியின் காரணமாக ஸ்ரீலங்காவினர் அதிகமாக சகயோகம் கொடுத்தார்கள். ஆன்மீக சேவையும், பொருள் சேவையும் செய்தார்கள். இந்த செய்தியை பாபா கேட்டார். மேலும் ஒரு அதிசயமான விஷயத்தையும் தெரித்து கொண்டார். பாதிப்பு ஏற்பட்ட இடத்தில் சேவா கேந்திரம் திறப்பதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் திட்டமாக உள்ளது. மேலும் ஸ்ரீலங்காவின் பெயர் கேட்டவுடனே எவ்வளவு பேருக்கு இராவணனின்

நினைவு வருகிறது. எனவே ஸ்ரீலங்காவில் இராவணனின் பெயர் ரூபம் கூட இருக்கக்கூடாது. இராவணன் அங்கு கிடையாது. இந்த ஐந்து விகாரங்கள் தான் இராவணன். 5-விகாரங்கள் ஆண்களிடமும், பெண்களிடமும் இருப்பதால் இரண்டையும் சேர்த்து பத்து தலை இராவணனை காண்பித்துள்ளார்கள். பத்து தலை உடையவர்கள் எவ்வாறு தூங்குவார்கள். எவ்வாறு சாப்பிடுவார்கள், எனவே அவை அனைத்தும் தீயவைகளின் அடையாளம். ஸ்ரீலங்கா நிவாசிகள் மிக நல்ல திட்டத்தை தீட்டுகிறார்கள். மேலும் முழு பிராமண பரிவாரம் உங்களுக்கு சகயோகியாக இருக்கிறது. பாப்தாதா இருக்கவே இருக்கிறார். முதலில் பாப்தாதா பின்னர் பரிவாரம் இந்த சேவையில் சகயோகியாக இருக்கிறார்கள். நல்ல முயற்சி செய்கிறீர்கள். அதற்காக வாழ்த்துக்கள், பல மடங்கு வாழ்த்துக்கள். நல்லது.

மலேசியாவிலும் சேவையின் ஊக்கம் அதிகமாக உள்ளது. பாப்தாதாவிடம் அனைத்து செய்திகளும் வருகின்றன. மேலும் இப்போது கூட அன்பு நினைவுகளை அனுப்பினீர்கள் தானே! மலேசியாவில் ஆர்வம் நன்றாக உள்ளது. மேலும் சேவா கேந்திரத்திற்கு பின்னர் சேவா கேந்திரம் திறந்து கொண்டேயிருக்கிறீர்கள். அதில் வெற்றியும் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. ஆகையினால் மலேசியாவின் அனைத்து பிராமண ஆத்மாக்களுக்கும், யார் அன்பு நினைவுகளையும், மற்றும் கடிதங்களையும் அனுப்பினார்களோ அந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒரே ஒரு கடிதம் ஆனால் பல மடங்கு ஆசீர்வாதம் மற்றும் அன்பு நினைவுகள். நல்லது.

தங்களுடைய சகோதர சகோதரிகளைப் பார்த்து மதுபன் நிவாசிகளாகிய உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி தானே? நீங்கள் அனைவரும் மதுபனின் அழகை கூட்டி விட்டீர்கள். பாப்தாதா கூறுகின்றார்: குழந்தைகள் மதுபனின் அலங்காரம்! உங்களைப் பார்த்து மதுபன் வாசிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. சேவையினுடைய வாய்ப்பைக் கொடுத்து எவ்வளவு புண்ணியக் கணக்கை அதிகரித்து விட்டீர்கள். எனவே மகிழ்ச்சி அடைகிறார்கள். நல்லது. இது கூட இன்றைய தினம் பாபாவின் சந்திப்பு டிராமாவில் நிச்சயக்ககப்பட்டுள்ளது. இது மேலும் திரும்பவும் நடைபெறும். ஒவ்வொரு கல்பமும் நடக்கும். நல்லது.

பி.கு. கைடு மற்றும் சேவாதாரிகளுக்காக: பாப்தாதா சேவாதாரி குழந்தைகளுக்கு சேவையின் வாழ்த்துக்களை அளித்துக் கொண்டிருக்கிறார். மிகவும் நல்ல நல்ல ஆத்மாக்களை கூட்டி வந்துள்ளீர்கள், தைரியசாலிகளைக் கூட்டி வந்துள்ளீர்கள், மற்றும் தைரியத்தை பிரத்யட்சமாக காட்டக்கூடிய ஆத்மாக்களை கூட்டி வந்துள்ளீர்கள். ஆகையினால் யார் யார் எத்தனை பேரை கூட்டி வந்துள்ளீர்களோ, அத்தனை பேருக்கும் பல மடங்கு வாழ்த்துக்கள். நல்லது கோல்டன் வாய்ப்பு கிடைத்தது தானே. சேவையின் பிரதிபலன் கிடைத்து விட்டது தானே! இந்த மாதிரி முழு உலகத்திற்கும் பாபாவின் அன்பு, பாபாவின் அறிமுகத்தை கொடுக்கும் செயலை செய்து கொண்டேயிருங்கள், செய்தே ஆக வேண்டும். ஆகையினால் தான் நிமித்தமாக இருக்கிறீர்கள். எனவே உண்மையிலும் உண்மையான வழிகாட்டி நீங்கள் தான். எவ்வளவு நல்லவிதமான யாத்திரை செய்து விட்டீர்கள். பாப்தாதா குழந்தைகளின் சேவையைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். பார்த்தீர்களா? நல்லது, மகாரதி, சேவையில் மகாரதியாகி வந்துள்ளீர்கள். நல்லது. ஆசிரியர்களுக்குக் கூட நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. பாண்டவர்களுக்கும் நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது.

தாதிஜியோடு: தாதிகளைப் பார்த்து அனைவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். தாதிகளின் அன்பு கிடைக்கிறது. அனைவருக்கும் கிடைத்தது தானே. நல்லது. நீங்கள் அனைவரும் நிமித்தமாக இருப்பவர்கள். அனைவரையும் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்கள்.

முன்னி சகோதரியிடம்: நிமித்தமாகி காரியங்களை நல்ல விதமாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், நடக்க வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அனவைரும் நிமித்தமாக இருக்கிறீர்கள். அனைவரின் பார்வையும் முதலில் மதுபன் வாசிகளின் மீது படுகிறது. மதுபனில் நிமித்தமாக இருப்பது என்றால் லைட் ஹவுஸ் ஆகி, லைட் (ஒளி) கொடுக்க வேண்டும்.

ரத்தன் மோகினி தாதியிடம்: சேவையில் எத்தனை பேரின் ஆசீர்வாதம் கிடைக்கிறது. ஆசீர்வாதங்களை கொடுத்தும் ஆசீர்வாதங்களை

எடுத்தும் வருகிறீர்கள். புத்துணர்ச்சி அடைவது என்றால் சக்திகளின் ஒளி ஒளிர்ந்து கொண்டிருப்பதாகும்.

**மூன்று பெரிய சகோதரர்களுடன்:** சேவையின் பலன் உங்களுக்கு கிடைத்து விட்டது. மூன்று பேரும் சேர்ந்து யக்ஞத்தின காரிய விவகாரங்களை பார்த்து வருகிறீர்கள், பாதுகாத்துக் கொண்டே இருங்கள், மூன்று பேரும் சேர்ந்து ஒருவர் கூறினால் மற்றொருவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். அம்மாதிரி தானே! பாப்தாதா மகிழ்ச்சியடைகிறார். எப்போது சேர்ந்து ஒவ்வொரு காரியத்திலும் வெற்றியடைய வைக்கிறீர்கள். செய்து கொண்டிருக்கிறீர்கள். செய்வீர்கள். நல்லது.

**நிர்வயர் சகோதரர்** ஆஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நாடுகளுக்கு சேவா நிமித்தமாக செல்வதால் பாபாவிடம் விடை வாங்குகிறார்: ஆஸ்திரேலியாவிற்கு கொஞ்சம் சக்தியை நிரப்புங்கள். ஆஸ்திரேலியா முதல் நம்பரில் இருந்தது. இப்போது ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகி விடும். ஆத்மாக்கள் மிகவும் நல்ல தைரியத்தோடு முன்னால் சென்று கொண்டிருக்கிறார்கள் ஆனால் குப்தமாக இருக்கிறார்கள். நல்லது.

**சமர்ப்பணமான மதுபன்வாசி சகோதர சகோதரிகளோடு:** மதுபன் வாசிகளை பிராமண குழந்தைகள் எந்த கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். தெரிந்திருப்பீர்கள் தானே! மதுபன் வாசிகளை மிகவும் சிறந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். எவ்வாறு இடம் சிறப்பு வாய்ந்ததோ அதவாது தலைமையகமாக விளங்குகிறது. ஆகையினால் மதுபன் வாசிகளையும், அதே கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். இவர்கள் விசேஷ ஆத்மாக்கள். மேலும் இன்று விசேஷ சமர்ப்பணமான சகோதர சகோதரிகள் அமர்ந்துள்ளனர். சமர்ப்பணம் என்றால் உடல், மனம், பொருள் அல்லது எந்த ரூபத்தில் இருந்தாலும், சாதனங்கள் ரூபத்தில் இருந்தாலும் அல்லது பண ரூபத்தில் அர்ப்பணம் ஆனால் சமர்பணம் என்றால் என்னென்ன உள்ளதோ அவை அனைத்தும் பாபாவிற்கு அர்ப்பணம் செய்வது அதற்குத் தான் சமர்ப்பணம் என்று சொல்லப்படும். சமர்ப்பணம் என்றால் எதன் மீதும் என்னுடையது என்பதன் அம்சம் கூட இருக்கக் கூடாது. தவறாகக் கூட என்னுடையது என்பது கூடாது. சமர்ப்பணத்தின் பொருளே என்னுடையவர் ஒரே ஒரு

பாபா, பாபாவின் கூடவே தாதாவும் இருக்கிறார். சமர்ப்பணம் என்றால் சாகார ரூபத்தில் கர்மங்கள் செய்யும்போது பிரம்மாபாபாவிற்கு சமமாகவும், மற்றும் நிராகாரி சிறந்த யோக நிலையில் நிராகாரி சிவபாபாவிற்கு சமமாகவும் இருப்பது. அந்த மாதிரி தங்களை நினைத்துள்ளீர்களா? எல்லைக்குட்பட்ட நான் மற்றும் எல்லைக்குட்பட்ட என்னுடையது என்பது இல்லை தானே! இடத்தைக் கூட பாருங்கள், பாண்டவ பவனாக இருக்கட்டும், ஞான சரோவராக, சாந்திவனமாக, ஹாஸ்பிட்டலாக இருக்கட்டும் இடங்கள் அதிகமாக கிடைத்திருக்கிறது. சங்கடன் கூட எல்லையற்றதாக கிடைத்துள்ளது. அந்த மாதிரி எல்லையற்ற நிலையை அனுபவம் செய்கிறீர்களா? யார் நான் எல்லையற்ற ஸ்திதியில் இருக்கிறேன் என்று நினைக்கிறார்கள், எல்லைக்குட்பட்ட நான் மற்றும் எனது என்பது இல்லை, அவர்கள் கை உயர்த்துங்கள். என்னுடையது என்பது இல்லை தானே? அப்படியென்றால் மதுபன் வாசிகள் அதிகமாக பாஸாகி விட்டார்கள். அப்படியென்றால் தாதிகள் மூலமாக பாஸ் (வெற்றி) சான்றிதழ் (Certificate) கிடைத்து விட்டதா? ஆமாம் என்று அனைவரும் கூறுகிறார்கள், என்னிடம் நான் எனது என்பது இல்லை. தாதியிடம் சான்றிதழ் கொடுத்தீர்களா? இல்லை, யார் கை உயர்த்தினார்களோ அவர்கள் எழுதி கொடுத்தால் உறுதியாகி விடும். அப்படியென்றால் பாபாவிற்கு சமமாக ஆகி விட்டீர்கள் தானே! பாருங்கள்! மூன்று விதமான சான்றிதழ் வாங்க வேண்டும். ஒன்று சுயத்திற்கு சாட்சி நிலையில் சான்றிதழ் கொடுக்க வேண்டும். கை தூக்கினால் மட்டும் போதாது, கையை அனைவரும் உயர்த்தி விடுவார்கள். சிலர் சந்தோஷத்துடன் கை உயர்த்தி விடுகிறார்கள். மனதின் கையை உயர்த்துங்கள். ஒன்று தனக்குத்தானே சாட்சி நிலையில் இருந்து சான்றிதழ் கொடுங்கள். இரண்டாவது எந்த நிலையிலிருந்து காரியம் செய்கிறீர்களோ அதன் சர்டிபிகேட் வேண்டும். மூன்றாவது தாதிகளின் சான்றிதழ் வேண்டும். ஏனென்றால் பாப்தாதா அனைவரின் மனதின் நிலையைப் பார்க்கின்றார். முகத்தின் நிலையை அல்ல, மனதின நிலையைப் பார்க்கின்றார். நல்லது கையை தூக்குவதற்கான தைரியம் வைத்துள்ளீர்கள். ஆகையால் தைரியத்தை நிலையாக வைத்திருங்கள். மதுபன் நிவாசிகள் ஒவ்வொருவரும் சான்றிதழ் எடுக்கக் கூடியவர்கள் என்று பிரத்யட்சமாக தென்பட வேண்டும். ஏனென்றால் மதுபனில் வாயுமண்டலத்தை மறைக்க முடியாது, மதுபன் நிவாசிகள் சமீபத்தில்

இருக்கின்றனர், பாபாவின் பாலனை மற்றும் விசேஷ ஆத்மாக்களின் பாலனை கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது பாபா மதுபன் வாசிகளிடமிருந்து ஒரு விஷயத்தை விரும்புகின்றார், ஒவ்வொருவருக்கும் சேவையின் அடிப்படையில் நிமித்தமாக இருக்கிறீர்கள், அந்த சேவையில் எவ்வாறு பரிஸ்தாக்கள் கர்மயோகியாக இருந்து காரியங்கள் செய்து கொண்டிருப்பது போன்ற வாயுமண்டலம் தென்பட வேண்டும். ஏனென்றால் அனைவரின் கண்ணோட்டமும் மதுபன் வாசிகளின் மீது தான் இருக்கிறது. மதுபனில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது, மதுபன் வாசிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். மதுபனில் நீங்கள் இருக்கவில்லை ஆனால் உலகின் மேடையில் இருக்கிறீர்கள். எனவே மேடையின் மீது தானாகவே அனைவரின் பார்வையும் போகும் தானே! நல்லது. அதிகமானோருக்கு சேவையில் சான்றிதழ் மிக நன்றாக உள்ளது. சமமாக மாறுவதில் இப்போது ஆக வேண்டும். இந்த லட்சியம் வைக்க வேண்டும், முகபாவனை இருக்க வேண்டும். அப்போது தான் பிரத்யட்சம் ஆக முடியும். எனவே இப்போது மதுபன் நிவாசிகளின் கூட சமானமாக வேண்டும். மேலும் கர்மம், ஒவ்வொருவரின் சம்பந்தம், தொடர்பு அனைத்திலும் சமானமாக வேண்டும். இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். சாதாரணமாக இல்லை, சமானமாக வேண்டும். சேவையின் பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நான்கு பாடங்களிலும் தன்னைத் தான் சோதனை செய்ய வேண்டும். பின்னர் தனக்கு சான்றிதழ் கொடுங்கள். நல்லது. இன்று விசேஷமாக சந்திப்பு நடந்து கொண்டிருக்கிறது பாபா உங்களுடைய ஆசையை பூர்த்தி செய்து விட்டார், இப்போது பாபாவின் ஆசையை பூர்த்தி செய்யுங்கள். சமர்ப்பணம் ஆவது சாதாரண விஷயம் கிடையாது. அனைத்து பாடங்களிலும் பாபாவிற்குச் சமமாக இருப்பது தான் சமர்ப்பணம் என்று கூறப்படுகிறது. மற்றபடி மதுபனில் அனைவரையும் பார்க்கும்போது மிகுந்த மரியாதையோடு பார்க்கின்றனர். ஆகையினால் ஏதாவது அதிசயத்தை நிகழ்த்திக் காட்டுங்கள். தனக்குள் சின்ன சின்ன குழு அமைத்து பாபாவிற்கு சமமாக எந்தெந்த விஷயத்தில் ஆகலாம் என்ற திட்டம் தீட்டுங்கள், எந்த விஷயத்தில் இன்னும் கொஞ்சம் பாக்கி உள்ளது என்பதை சோதனை செய்யுங்கள். வாஸ்தவமாக தனக்குத்தானே மிகுந்த ஆழமான சோதனை செய்வது, யதார்த்தமாக சோதனை செய்வது அம்மாதிரி பிறர் செய்ய முடியாது. மற்றபடி

## 2005 அவ்யக்த முரளி

அனைவரும் நல்லபடியாக இருந்து கொண்டிருக்கிறீர்கள் தானே! ஏதாவது குறை உள்ளதா? இது கூட பாக்கியம் தான். பாக்கியம் உங்களை மதுபன் வாசிகளாக்கி விட்டது. எனவே அனைவருக்கும் மகிழ்ச்சி தானே? மகிழ்ச்சியோடு இருக்கிறீர்களா அல்லது இடையிடையே கோபப்படுகிறீர்களா? தனக்குத் தானே புரிய வையுங்கள். புரிய வைப்பது என்றாலே நான் யாராக இருந்தேன், என்னவாக இருந்தேன், அம்மாதிரியே தன்னை புரிந்து கொள்ளுங்கள். ஆத்மா என்பது பொதுவான விஷயம் ஆனால் நடமாடிக் கொண்டிருக்கும்போது ஆத்மா அபிமானியாக இருந்து நடக்கிறேன் என்ற உணர்வு இருக்கிறதா? அதற்கு தான் புரிந்து கொள்ளக்கூடியத் தன்மை என்பதாகும். சம்ஸ்காரம் உள்ளது. சம்ஸ்காரத்தின் ஞானம் உள்ளது, அறிவு உள்ளது, சம்ஸ்காரம் சமாப்தி ஆகி விட்டதா? பரிவர்த்தனை ஆகியுள்ளதா? அல்லது இல்லையா? இவை தனக்குத் தெரிய வேண்டும். இது இல்லை, இது சரியாக உள்ளது, இது சரியாக படவில்லை. இரண்டாவது உணர வைத்தால் கூட உணர மாட்டார்கள். ஆகையால் தனக்குத்தானே உணர வைப்பதற்கான பாடத்தை படியுங்கள். எவ்வாறு ஒரு வார கால பாடம் நடத்துகிறீர்கள். ஆத்மா, பரமாத்மா, யோகம், டிராமா, அம்மாதிரி தனக்கும் புரிய வையுங்கள். இப்போது உணர வேண்டிய நேரம். பாபா என்ன நினைக்கிறாரோ அதை செய்கிறேனா? சம்பந்தம் மற்றும் தொடர்பில் வரக்கூடியவர்களுக்குப் புரிய வையுங்கள், சுப பாவனை மற்றும் சுப அபிலாஷை உள்ளதா? சரி உணரக்கூடிய வகுப்பு உங்களுக்கு நீங்களே எடுங்கள். நான் நடக்க வைக்கக் கூடாது, நடக்க வேண்டும். நேரம் ஏமாற்றவில்லைதானே, நீங்கள் மதுபன் வாசிகள். எனவே எப்போதும் கூடவே செல்லக்கூடியவர்கள். இடையில் நிற்க கூடியவர்கள் இல்லை தானே! அப்படியென்றால் தனக்குத்தானே புரிய வைக்கக்கூடிய வகுப்பு எடுக்க ஆரம்பியுங்கள். ஒவ்வொரு விஷயங்களையும் உணருங்கள். நல்லது. சந்தித்தாகி விட்டது. இப்போது என்ன செய்ய வேண்டும்? திருஷ்டி வாங்க வேண்டும். கண்ணில் (திருஷ்டியில்) சதா பாபாவை வையுங்கள். சாதாரணமாக திருஷ்டி வாங்கக்கூடாது. திருஷ்டி வாங்குவது என்றால் திருஷ்டியில் பாபாவை வைத்துக் கொள்வதாகும். அம்மாதிரியான திருஷ்டி வாங்குங்கள் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 21.10.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூரணம் மற்றும் சம்பன்னம் ஆவதற்கான தேதியை நிச்சயித்து நேரத்தின் கணக்குப்படி இப்போது எவர்ரெடி (தயாராகுங்கள்) ஆகுங்கள்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் மூன்று ரூபத்தைப் பார்க்கின்றார். எப்படி தந்தையின் விசேஷ மூன்று சம்மந்தங்கள் நினைவில் இருக்கின்றதோ, அதேபோல குழந்தைகளுக்கும் கூட இருக்கின்ற மூன்று ரூபங்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். உங்களுடைய மூன்று ரூபங்களையும் பற்றித் தெரியுமல்லவா? இந்த சமயத்தில் எல்லா குழந்தைகளும் பிராமண ரூபத்தில் இருக்கின்றார்கள். பிராமணனிலிருந்து கடைசி ஸ்டேஜ் வ்ரை, அதாவது பிராமணனிலிருந்து பரிஷ்தா, பிறகு பரிஷ்தாவிலிருந்து தேவதா. எல்லாவற்றையும் விட விசேஷமானது தற்காலத்தில் உள்ள பிராமண வாழ்க்கை தான். பிராமண வாழ்க்கை மிகவும் மதிப்பு வாய்ந்தது. பிராமண வாழ்க்கையின் விசேஷம் தூய்மை (பியூரிட்டி). தூய்மை தான் பிராமண வாழ்க்கையின் உண்மையான இயல்பு. (ரியல்டி) தூய்மை தான் பிராமண வாழ்க்கையின் தனிப்பட்ட விசேஷ குணம் (பர்சனாலிட்டி) தூய்மை தான் சுகம், சாந்தியின் தாய். எவ்வளவு தூய்மை இருக்கிறதோ அவ்வளவு சுகம் மற்றும் சாந்தி நிறைந்த வாழ்க்கை இயல்பானதாகவும், இயற்கையான குணம் உடையதாகவும் இருக்கும். மேலும் தூய்மையான ஆத்மாக்களின் இலக்ஷியம். பிராமணனிலிருந்து தேவதையாவதல்ல. முதலில் பரிஷ்தா ஆக வேண்டும். பரிஷ்தாவிலிருந்து தேவதையாக வேண்டும். ஆகவே பிராமணனிலிருந்து பரிஷ்தா, பரிஷ்தாவிலிருந்து தேவதா. இந்த மூன்று ரூபங்களையும் எல்லா குழந்தைகளிடமும் பாப்தாதா பார்க்கின்றார். உங்கள் எல்லோருக்கும், உங்களுடைய மூன்று

ரூபங்களும் எதிரில் வந்து விட்டதா? வந்து விட்டதா? பிராமணன் ஆகி விட்டீர்கள். இப்போது லக்ஷியம் பரிஷ்தா ஆக வேண்டும். என்பதாக இருக்கிறது. இந்த லக்ஷியம் இருக்கிறதல்லவா? இருக்கிறதா? பரிஷ்தா ஆகத்தான் வேண்டும். ஆதலால் பரிஷ்தாவின் விசேஷ குணங்கள் வாழ்க்கையில் எவ்வளவு வந்திருக்கிறது என்பதை சோதித்துப்பாருங்கள் பரிஷ்தா என்றால் யாருக்கு பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரத்தோடு எந்த வித சம்மந்தமும் இல்லையோ, அவர்கள் தான் பரிஷ்தா பரிஷ்தர என்றால் பிரச்சனைகள் வருகின்ற சமயத்தில் மட்டும் டபுள் லைட் ஆவதல்ல சதா மனம், சொல், சம்மந்தம், தொடர்பில் டபுள் லைட், இலகுவான தன்மை (ஹல்கா), இலேசான பொருள் விருப்பமுள்ளதாக இருக்குமா? அல்லது பாரமான பொருள் விருப்பமுள்ளதாக இருக்குமா? எது பிடித்தமானதாக இருக்கிறது. இலகுவாக இருப்பது தான் விருப்பமானது இல்லையா? பரிஷ்தா என்றால் எல்லோருக்கும், சிலபேருக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் பிரியமானவர்கள் (அன்பானவர்கள்) மற்றும் விலகியுமிருப்பவர்கள் அன்பானவர்களாக இருப்பது மட்டுமல்ல, எவ்வளவு அன்போ அவ்வளவு விலகியுமிருப்பது. பரிஷ்தாவின் அடையாளம் எல்லோருக்கும் பிரியமானவர்களாக இருப்பார்கள். யாரைப் பார்த்தாலும், யாரைச் சந்தித்தாலும், யாருடைய சம்மந்தத்தில் மற்றும் தொடர்பில் வந்தாலும், இவர் என்னுடையவர் என்ற அனுபவம் அவர்களுக்கு உண்டாகும். எப்படி தந்தையை, இவர் என்னுடையவர் (மேரா பாபா) என்று எல்லோருமே அனுபவம் செய்கிறார்கள் அல்லவா? அனுபவம் செய்கிறார்கள் தானே? இப்படி. பரிஷ்தா என்றால் ஒவ்வொருவரும் இவர் என்னுடையவர் என்று அனுபவம் செய்ய வேண்டும் என்னுடையவர் என்ற அனுபவம் உண்டாக வேண்டும். ஏனென்றால் எளிமையானவராக (ஹல்கா) இருப்பதால், இந்த எளிமையானது எல்லோருக்கும் பிரியமுள்ளவராக்கி விடுகிறது. முழு பிராமண பரிவாரத்தினரும் இவர் என்னுடையவர் என்று அனுபவம் செய்ய வேண்டும் பாரமுள்ளவராக இருக்கக்கூடாது ஏனெனில் பரிஷ்தா என்பதன் அர்த்தமே டபுள் லைட் பரிஷ்தா என்றால் எண்ணம் (சங்கல்பம்), சொல், செயல், சம்மந்தம், தொடர்பு எல்லாம் விசாலமானதாக இருக்க வேண்டும். (பேகத்) எல்லைக்குட்பட்டதல்ல (குறுகிய, உலகாயது) எல்லோருமே என்னுடையவர்கள் மற்றும் நான் எல்லோருடையவன் எங்கே அதிகமாக என்னுடையவர்

என்பதிருக்கிறதோ, அங்கே ஹல்காபன் (பாரமாகத் தோன்றாது) இருக்கும் சம்ஸ்காரத்திலும் எளிமை (இலகுவான தன்மை) ஆகவே எத்தனை சதவிகிதம் பரிஷ்தா ஸ்டேஜ் அடைந்திருக்கிறோம் என்று பரிசோதனை செய்யுங்கள் பரிசோதிக்கத் தெரியுமா? பரிசோதிக்கவும், ஆக்கவும் (செக்கர், மேக்கர்) தெரிந்தவர்கள் ஆகி விட்டீர்கள். வாழ்த்துக்கள்.

பாப்தாதா உங்கள் எல்லோருக்கும் கொடுத்திருந்த ஹோம் ஓர்க்கினுடைய ரிசல்ட்டைப் பார்த்தார். எல்லோரும் ஹோம் ஓர்க் செய்து, அதன் ரிசல்ட்டையும் எழுதினீர்கள் அல்லவா? ரிசல்ட்டில் என்ன பார்த்தீர்கள்? பாப்தாதாவின் சுபவிருப்பம் என்னவென்றால், குறைந்தபட்சம், தற்சமயத்தில் எல்லா விஷயங்களிலும் (ஏழு) விஷயங்களைப் பற்றி எழுதியிருந்தீர்கள் அல்லவா? டபுள் பாரினர்ஸ் பாப்தாதாவுக்கு ஏழு விஷயங்களைப் பற்றி செய்தி அனுப்பியிருந்ததை குறிப்பிடுகின்றார். இது பற்றிய விபரம் ஏழு கேள்விகளாக கடைசியில் உள்ளது. சிலர் சில விஷயங்கள். வேறு சிலர் வேறு சில விஷயங்களில் குறையிருப்பதாக நினைக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவுக்கு இந்த விருப்பம் தான் உள்ளது. அதாவது இப்போது நேரம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதை மனதிற்கொண்டு, யார் தன்னை மகாரதி என்று நினைக்கிறார்களோ, அவர்களுடைய ஸ்டேஜ் 95-சதவிகிதம் இருக்க வேண்டும். இருக்க வேண்டும் தானே? பாண்டவர்கள் சொல்லுங்கள் இருக்க வேண்டுமா? சரி, இன்னும் சற்று குறைந்த சதவிகித நம்பர் என்றாலும் கூட 75-சதவிகிதமாவது இருக்க வேண்டும். தாதிகள் என்ன சொல்கிறீர்கள்? 95_சதவிகிதம் உள்ளதா? முன்வரிசையில் அமர்ந்துள்ளவர்கள் எல்லோரும் என்ன நினைக்கிறீர்கள்? 95-சதவிகிதம் உள்ளதா? சரி உங்களுக்கு எவ்வளவு இருக்க வேண்டும்? 75-சதவிகிதமா? நீங்களும் கூட 75-சதவிகிதம் என்று தான் நினைக்கிறீர்களா? சரி, நாளைக்கே விநாசம் ஆகி விட்டால்? 75-சதவிகிதத்தோடு செல்வீர்களா? 75-சதவிகிதம் இருந்தால் 1-1'ல் வர மாட்டீர்கள் பிறகு என்ன செய்வீர்கள்? சரி, பாப்தாதா இன்றைய தினம், இன்று விசேஷ தினமல்லவா? ஆதலால் இன்றைய தினத்தை, கடந்தது கடந்து விட்டதாக வைத்துக் கொள்ளலாம். சரிதானா? நல்லது. யார் நாளை முதல், 75-சதவிகிதம் என்று சொல்கிறீர்கள் அல்லவா? அதை 95-சதவிகிதமாக உயர்த்த முடியாவிட்டாலும், 85-சதவிகிதம்

வரையிலாவது உயர்த்தலாம் அல்லவா? வந்து விடுவீர்களா? அப்படியானால், நாளை மறுநாள் விநாசம் செய்தால், 85-சதவிகிதம் இருக்கும் பின்னால் இருப்பவர்களும் ஆகி விடுவீர்கள், இல்லையா? கை உயர்த்துங்கள். நல்லது. 85-சதவிகிதம் ஆகி விடும். (யாரோ ஒருவர் 98-சதவிகிதம் என்று சொன்னார்) அவருக்கு வாழ்த்துக்கள். வாயில் குலாப் ஜாமுன் சாப்பிடுங்கள். ஏனென்றால், பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். நடக்கத்தான் போகிறது. ஆகி விடும் என்பதல்ல. ஆகத்தான் வேண்டும். செய்வோம், ஆவோம், ஆகி விடுவோம், பார்க்கலாம், முயற்சி செய்யலாம் என்ற வார்த்தைகளை மாற்றுங்கள். பரிவர்த்தனை செய்யுங்கள். எந்த ஒரு சங்கல்பம் (எண்ணம்) செய்கிறீர்களோ, அதை சோதித்து, அது எத்தனை சதவிகிதம் நிச்சயம் மற்றும் வெற்றியுள்ளதாக இருக்கிறது என்று பாருங்கள். இப்போது சோதனை செய்வதில் வேகத்தை தீவிரப்படுத்துங்கள். முதலில் சோதியுங்கள் (எண்ணத்தை) பிறகு கர்மத்தில் வாருங்கள் எந்த எண்ணம் வந்ததோ, எதைப் பேசினோமோ, யாருடைய சம்மந்தம் தொடர்பில் வந்தோமோ, என்பதல்ல. உலகில் யாரை விவிஐபி என்று கருதுகின்றார்களோ அவர்களுக்காக எப்படி, எப்படியெல்லாம் முன்கூட்டியே சோதனை செய்கிறார்கள் என்பது தெரியுமல்லவா. ஒவ்வொரு பொருளும் முன்கூட்டியே சோதிக்கப்படுகிறது பிறகு தான் அனுமதி. ஆதலால் இப்போது, இரண்டு மணி நான்கு மணி நேரத்திற்குப் பிறகு சோதித்துப் பார்ப்பது என்பது கூடாது. முதலில் சோதனை, பிறகு அடியெடுத்து வைத்தல். ஏனெனில், நீங்களோ சிருஷ்டி டிராமாவில், தற்காலத்தின் விவிஐபி இன்று இருப்பவர்கள். ஒரு ஜன்மத்திற்காக மட்டுமே. அவர்களோ கொஞ்ச நாட்களுக்காக வி.வி.ஐ.பி. ஆக இருப்பவர்கள் ஆனால் பிராமணர்களிலிருந்து பரிஷ்தாக்களாகிய உங்களுக்கு எத்தனை வி.வி. என்று சேர்த்தாலும் அவ்வளவு தகுதி உங்களிடம் உண்டு. பாருங்கள், உங்களுக்கு முன்னே எத்தனை வி.வி.வி.என்று போட்டுக் கொண்டேயிருங்கள். நீங்கள் உங்களுடைய பூஜிக்கப்படுகின்ற சித்திரத்தைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? பார்த்திருக்கிறீர்கள் தானே? சரி. கோவில்களைப் பார்க்கவில்லை, சித்திரத்தையாவது பார்த்திருக்கிறீர்கள் தானே! இப்போதும் கூட அதற்கு எத்தனை மதிப்பிருக்கிறது. எத்தனை பெரிய, பெரிய கோவில்கள் கட்டுகிறார்கள்! உங்களுடைய படம் இருக்கிறதல்லவா? அது மூன்றடி

தயாரிக்கப்படுகிறது. ஜடசித்திரமாக இருந்தாலும் கூட, எவ்வளவு மதிப்பு இருக்கிறது? மதிப்பு இருக்கிறதல்லவா? உங்களுடைய சித்திரத்தை தரிசனம் செய்வதற்காக எத்தனை பெரிய க்யூ நிற்கிறது? மேலும் சைத்தன்யத்தில் (தற்சமயம்) எவ்வளவு பெரிய விவிஐபி ஆக இருக்கிறீர்கள்! ஆதலால் அடியெடுத்து வைப்பதற்கு முன்பாக சோதனை செய்யுங்கள். அடியெடுத்து வைத்த பிறகு சோதித்தீர்களானால், என்ன பிரயோஜனம்? அடியெடுத்து வைத்து முடிந்து விட்டதல்லவா? அந்த அடி உங்கள் கைவசம் வருமா? வராது இந்தக் காலத்தில் கூட சொல்கிறார்கள் அல்லவா? நன்றாக யோசித்து அடியெடுத்து வை என்கிறார்கள். உங்களுடைய ஸ்வமான் எனும் சீட்டில் அமருங்கள் எவ்வளவு உங்களுடைய பொசிஷனில் (ஸ்திதி) இருக்கிறீர்களோ, அவ்வளவு அப்போசிஷன் (எதிர்ப்பு) இருக்காது மாயாவின் எதிர்ப்பு எப்போது வருகிறது என்றால், எப்போது நீங்கள் உங்கள் பொசிஷனில். அமர்ந்திருக்கவில்லையோ, அப்போது தான். ஆதலால் இப்போது பாப்தாதாவின் கேள்வி என்னவென்றால், எல்லோருக்கும். சம்பூரணமாக வேண்டும். சம்பன்னமாக வேண்டும் என்ற இலக்ஷியம் இருக்கிறது. லக்ஷியம் இருக்கிறதா? அல்லது இன்னும் கொஞ்சம், கொஞ்சம் தயாராக வேண்டியிருக்கிறதா? லக்ஷியம் இருக்கிறது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். சம்பூரணம் ஆக வேண்டும். நல்லது ஆனால் எப்போது? நீங்கள் உங்களுக்குள்ளேயே கேள்வி கேட்கிறீர்கள். ஆதலால் இன்று விசேஷமாக பாப்தாதா டீச்சர்களிடம் கேட்கின்றார். 30-ஆண்டுகள் ஆனவர்கள் அமர்ந்திருக்கிறீர்கள் அல்லவா? 30-ஆண்டுகள் ஆனவர்கள் உங்களுக்குள்ளே புரோகிராம் (திட்டம்) செய்து தீர்மானம் செய்ய வேண்டும். மீட்டிங் நிறையவே செய்கிறீர்கள். பாப்தாதா பார்க்கின்றார். மீட்டிங், சிட்டிங், மீட்டிங், சிட்டிங் என்று ஆனால் இப்போது உங்களுடைய மீட்டிங் இந்தவித மாக இருக்க வேண்டும்? நீங்கள் ஏதாவது ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், எப்போது செய்வது என்ற தேதி நிச்சயிக்கிறீர்கள், அப்படியானால் இதற்கு தேதி ஏன் நிச்சயிக்கக்கூடாது? எத்தனை ஆண்டுகள் வேண்டுமோ, சொல்லுங்கள், ஏன்? பாப்தாதா ஏன் இப்படி கூறுகின்றார்? ஏனென்றால் பாபாவிடம் பிரகிருதி (தத்துவம்) கேட்கிறது? எப்போது விநாசம் ஆரம்பிக்கலாம் என்று. இதற்கு பாப்தாதா என்ன பதில் கூறுவது? எப்போது? என்பதை பாப்தாதா குழந்தைகளிடம் தான் கேட்பாரல்லவா?

## 2005 அவ்யக்த முரளி

இன்றைய விசேஷ தலைப்பு எப்போது? என்பது டபுள் ஃபாரினர்ஸ் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? டபுள் ஃபாரினர்ஸ் என்றால் டபுள் புருஷாரத்தம் செய்வார்கள் அல்லவா? அற்புதம் செய்து காட்டுங்கள் ஃபாரினர்ஸ் முன்மாதிரியாக ஆகுங்கள். பிராமண பரிவாரத்திற்கு முன்னே, உலகத்தின் முன்னே சம்பன்னம் மற்றும் சம்பூரணம். சர்வ சக்திகள், சர்வ குணங்களில் சம்பன்னம் அதாவது சம்பூரணம் எல்லாவற்றிலும் மனம், சொல், சம்மந்தம், தொடர்பு என்ற நான்கிலும் இந்த நான்கில் ஒன்று பலவீனமாக இருந்தாலும் சம்பன்னம் என்று சொல்ல முடியாது. நான்கு விஷயங்கள் நினைவிருக்கிறதல்லவா? மனம், சொல், சம்மந்தம், தொடர்பு இதில் கர்மம் வந்து விட்டது. நான்கு விஷயங்களில், மனம் சொல்லில் நாங்கள் சரியாக இருக்கிறோம். சம்மந்தம் தொடர்பில் கொஞ்சம் தான் உள்ளது என்பது கூடாது. முன்பே கூறியிருக்கிறேன் அல்லவா? யார் எதிரில் போனாலும், யாருடைய தொடர்பில் வந்தாலும், இவர் என்னுடையவர் என்று அவர்களுக்கு அனுபவம் ஆக வேண்டும். தன்னைப் பற்றி கேள்வி உண்டாகாது ஆனால் மற்றவர் மீது அவ்வளவு இலகுவான தன்மை இருப்பதில்லை. கொஞ்சம் பாரமாக இருக்கும் ஆனால் தன்மீது இலகுவான தன்மை இருக்கும். இப்போது எல்லோரிடமும் இலகுவான தன்மை இருக்க வேண்டும். தனது ஜோன், தன்னுடைய சென்டர் என்றால் மட்டும் ஹல்காபன் என்பது சரியில்லை. தன்னுடைய ஜோன், தங்களுடைய சென்டர் என்றால் மட்டுமே இலகுவாக, பாரமற்ற தன்மை இருக்கிறது என்றால், விஷ்வ ராஜன் எப்படி ஆக முடியும்? விஷ்வ கல்யாணகாரியாகவும் ஆக முடியாது. விஷ்வ ராஜனாகவும் ஆக முடியாது. ராஜன் என்பதன் அர்த்தம் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் மட்டுமல்ல, இராஜதானியில் ராயல் குடும்பத்தில், இராஜ்யத்தில், இராஜ்ய அதிகாரம் உடையவர்கள். அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்? எப்போது? என்ற கேள்விக்கான பதில் தருவீர்கள் அல்லவா? மீட்டிங் செய்வீர்கள்! மீட்டிங் செய்து தீர்மானம் செய்ய வேண்டும். சரிதானா? நல்லது.

எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதல்லவா? பாப்தாதா ஆர்வம் மற்றும் உற்சாகப்படுத்துகின்றார் மாயா பார்த்துக் கொண்டே.யிருக்கிறது. யாராவது ஆர்வம் மற்றும் உற்சாகத்தில்

இருந்தால் மாயா ஏதாவது இடைஞ்சல் செய்கிறது. ஏனென்றால் அதற்கும் கூட இப்போது கடைசி நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆதலால் அதுவும் கூட தன்னிடமுள்ள அஸ்திர, சஸ்திரங்களைப் பயன்படுத்துகின்றது. மேலும் புரிந்து கொள்ள முடியாதபடி, அப்படி பாலனையும் செய்கிறது. இது மாயாவின் மத்தா (வழி) அல்லது பாபாவின் மத்தா என்று புரிந்து கொள்ள முடியாதபடி கலப்படம் செய்து விடுகிறது. பரிஷ்தா ஆவதில், புருஷாரத்தத்தில் எந்த வித தடைவருகிறதோ, அது இரண்டு வார்த்தைகள் தான். இது பொதுவானது தான். கஷ்டம் ஒன்றும் இல்லை. மேலும் அதனை அநேக முறை பயன்படுத்தவும். செய்கிறார்கள். அது என்ன? நான் மற்றும் எனது என்பது. பாப்தாதா இதற்கு முன்பும் கூட மிகவும் சகஜமான விதியைக் கூறியிருந்தார். இதிலும் மற்றும் எனது என்பதை பரிவர்த்தனை செய்வதற்கு நினைவிருக்கிறதா? பாருங்கள் எப்போது நீங்கள் நான் என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்களோ, அந்த சமயத்தில் நான் ஆத்மா தான் என்பது எதிரில் வரவேண்டும். நான் என்ற வார்த்தை சொன்னதும் எதிரில் ஆத்மாவின் ரூபத்தைக் கொண்டு வாருங்கள். நான் என்ற வார்த்தையை வேகமாகச் சொல்லக் கூடாது. நான் ஆத்மா இவ்வாறு இயற்கையான நினைவைக் (ஸ்மிருதி) கொண்டு வாருங்கள் நான் என்ற வார்த்தையோடு, ஆத்மாவையும், சேர்த்து விடுங்கள். நான் ஆத்மா. எப்போது எனது என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்களோ, அப்போது முதலில் சொல்லுங்கள் மேரா பாபா. எனது கர்ச்சிப், எனது சேலை. இப்படி எனது ஆனால் முதலில் மேரா பாபா எனது (மேரா) என்ற வார்த்தை சொன்னதும் பாபா எதிரில் வந்து விட வேண்டும். நான் என்ற வார்த்தை சொன்னதும் ஆத்மா எதிரில் வந்தது இந்த இயல்பை, இயல்பாகவே ஆக்கி விடுங்கள். எளிதாக இருக்கிறதா? கஷ்டமா? நான் ஆத்மா என்பது உங்களுக்குத் தெரிந்தது தான் ஆனால் அந்த சமயத்தில் அப்படி ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள். அறிந்தது 100-சதவிகிதம் ஆனால் ஏற்றுக் கொள்வதில் சதவிகிதம் இருக்கிறது. எப்போது தேக அபிமானம் இயற்கையாகி விட்டதோ, அப்போது நான் சரீரம் என்று நினைவு செய்ய வேண்டியதாயிருக்கிறதா? இயற்கையாக இருக்கிறதல்லவா? மேலும் நான் என்ற வார்த்தை வாயில் வருவதற்கு முன்பாக சங்கல்பத்தில் வருகிறதல்லவா? ஆதலால் நான் என்ற வார்த்தை சங்கல்பத்தில் வரும்போதே ஆத்ம சொரூபம் எதிரில் வரட்டும். சகஜமானதல்ல. ஆதலால் இப்படி அப்பியாசம் செய்ய

வேண்டும். நான் என்று வார்த்தையை மட்டும் சொல்லி விடக்கூடாது கூடவே ஆத்மா என்ற உணர்வோடு சேர்த்துச் சொல்ல வேண்டும். அப்போது பக்கா ஆகி விடும். பக்காவாக இருக்கிறதல்லவா? மற்றவரை யாராவது அழைத்தாலும் நீங்கள் இப்படித்தான் செய்வீர்கள். நான் ஆத்மா. ஆத்மாவின் உலகம் பாப்தாதா. ஆத்மாவின் சம்ஸ்காரம் பிராமண் சோ பரிஷ்தா சோ தேவதா. இப்போது என்ன செய்யப் போகிறீர்கள். இது மனதிற்கான டிரில். இந்தக் காலத்தில் டாக்டர்களும் கூட கூறுகிறார்கள் அல்லவா, டிரில் செய்யுங்கள் என்று எக்சர்சைஸ் (தேகாப்பியாசம்) ஆகவே நீங்கள் இந்த நான் ஆத்மா -மேரா பாபா என்ற எக்சர்சைஸ் (அப்பியாசம்) செய்யுங்கள் ஏனெனில் சமயத்தின் வேகத்தை டிராமாடி குறைக்க வேண்டியதாயிருக்கிறது. உண்மையில் கிரியேட்டர், செய்ய வேண்டியது தீவிரமாக ஆனால் படைக்கப்பட்டவர்களுக்கல்ல. இந்த நேரத்தின் கணக்குப்படி நேரம் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. பிரகிருதி எவர்ரெடியாக இருக்கிறது. கட்டளைக்காக மட்டுமே காத்திருக்கிறது. டிராமாவில் உள்ள நேரத்தின் கணக்குப்படி தான் கட்டளை இருக்குமல்லவா? ஸ்தாபனை செய்பவர்கள் ஒருவேளை ரெடியாக இல்லையென்றால், பிரளயம் ஏற்படுமா என்ன? பிரளயம் ஏற்படுமா? அல்லது விநாசத்திற்குப் பிறகு ஸ்தாபனை தான் ஆகுமா? ஆகவே ஸ்தாபனைக்கு நிமித்தாக ஆகியிருப்பவர்கள், இப்போது சமயப்படி எவர்ரெடியாயிருக்க வேண்டும். பாப்தாதா இதைத்தான் பார்க்க விரும்புகின்றார். எப்படி பிரம்மாபாபா அர்ஜுன் ஆனாரல்லவா? முன்னுதாரணம் ஆனாரல்லவா? இவ்வாறு பிரம்மாபாபாவை பின்பற்றுபவர்களாக யார் ஆகப் போகிறீர்கள்? தன்னையும் பாருங்கள், நேரத்தையும் பாருங்கள்.

பாப்தாதா இதற்கு முன்பும் கூறினார். தற்சமயத்தில் பிராமணனிலிருந்து பரிஷ்தா ஆத்மாக்களாகிய நீங்கள் எல்லோரும் நிமித்தம் மற்றும் பணிவு என்ற இரண்டு வார்த்தைகளை கோடிட்டு வைத்துக் கொள்ளுங்கள். இதில் தேகாபிமானத்தின் நான் என்பது இல்லாமல் முடிந்து விடும். எனது என்பதும் இல்லாமல் போய் விடும். நிமித்தம் மற்றும் பணிவு சுபாவமாகி விடும் எவ்வளவு பணிவாக இருக்கிறார்களோ, அவ்வளவு மரியாதை கிடைக்கும். ஏனெனில் யார் பணிவாக இருக்கிறார்களோ, அவர் எல்லோருக்கும் அன்பானவர் ஆகி

விடுகின்றார். மேலும் எப்போது அன்பானவர் ஆகி விடுகின்றாரோ, அப்போது மரியாதை தானாகவே கிடைக்கும். ஆதலால் நிமித்த பாவனை, நிர்மான் பாவனை (கருவி, பணிவு) இந்த பாவனை சுப பாவனையாகும். பாவ் மற்றும் பாவனா என்ற இரண்டு விதம் உண்டு நிமித்தம் (கருவி) மற்றும் பணிவு (பாவ்) எனப்படும். பாவனை என்பது ஒவ்வொருவருக்கும் சுப பாவனை, சுபகாம்னா (சுப அபிலாஷை) எப்படிப்பட்டவராக இருந்தாலும் சரி, உங்களுடைய நிமித்த நிர்மான் பாவ் மற்றும் சுப பாவனையின் வாயுமண்டலத்தால், எதிரில் இருப்பவர்களுடைய வைப்ரேஷன் (சங்கல்பத்தின் ஒலி அதிர்வுகள்) மாறி விடும். சில குழந்தைகள் பாப்தாதாவுடன் ரூஹ்-ரிஹான் (ஆன்மீக சம்பாஷணை) செய்யும் போது கூறுகின்றார்கள் நான் ஒரு மாத காலமாக சுப பாவனை வைத்திருந்தேன், அவர் மாறவேயில்லை என்கிறார்கள். இதனால் களைப்படைந்து விடுகிறார்கள். மன முடைந்து போய் விடுகிறார்கள். ஏனென்றால் இந்த அப்பாவியினுடைய விருத்தியும், திருஷ்டியும் கல்லைப் போன்றதாக இருக்கிறது. ஆதலால் கொஞ்சம் அதிக நேரம் தேவைப்படுமல்லவா? சரி அவர் மாறாமலிருக்கட்டும். உங்களை நீங்கள் சரியாக வைத்துக் கொள்ளலாமல்லவா? நீங்கள் உங்கள் பொசிஷனில் (ஸ்திதியில் நிலைத்திருத்தல்) இருக்கலாமல்லவா? நீங்கள் ஏன் மனமுடைந்து போய்விடுகிறீர்கள்? மனமுடைந்து போகாதீர்கள். நல்லது அவர் மாறவில்லை என்றால், நானும் கூட மாறாமல் இருந்து விடக்கூடாது. மனமுடைந்து போய் விட்டீர்கள் என்றால், இதன் பொருள், அவர் உங்களை இந்த மாதிரியாக மாற்றி அவரோடு விடும் அளவுக்கு சக்திசாலியாக இருக்கின்றார் என்றாகி விடுகிறதல்லவா? நீங்கள் உங்கள் ஸ்வமான் சீட்டிலிருந்து கீழிறங்கி விடுவதேன்? வீணான எண்ணமும் மனதில் எழக்கூடாது ஏன்? ஏன் என்ற கேள்வி மனதில் எழுந்தது என்றால், கதவைத் திறந்து விட்டீர்கள். பிறகு திறந்த கதவை மூடுவது கஷ்டமாகி விடுகிறது. ஆதலால் ஏன் என்று நினைக்காதீர்கள் இரக்க மனமுடையவராகி வைப்ரேஷன் கொடுத்துக் கொண்டேயிருங்கள். நீங்கள் எதற்காக உங்களுடைய சீட்டை விட்டுவிட்டு மனமுடைந்து போகிறீர்கள்? பொசிஷனை விட்டு கீழே வரக்கூடாது என்பதை நினைவில் வையுங்கள். கீழே இறங்கி வந்து விட்டால் எதிர்ப்பு அதிகமாகி விடும். ஸ்தூலத்திற்கும், ஸ்தூலத்திற்குமிடையே எதிர்ப்பு உண்டாகி விடுகிறது. சுபாவ

சம்ஸ்காரத்தில் எதிர்ப்பு வந்து விடுகிறது. சிந்தனையில் எதிர்ப்பு வந்து விடுகிறது. ஆதலால் பொசிஷனில் இருங்கள். சரி. நாளை என்ன செய்வீர்கள்? நினைவிருக்கிறதா? பாப்தாதாவிடம் அன்பு இருக்கிறதல்லவா? பிரம்மாபாபா சமானமாக ஆகி விட வேண்டும் என்று பாப்தாதா எதிர்பார்க்கின்றார். என்ன! பிரம்மாபாபாவுக்கு எதிர்ப்பு வரவில்லையா? எதிர்ப்பு மாயாவிடமிருந்தும் வந்தது. மனிதர்கள் மூலமாகவும் எதிர்ப்பு வந்தது. பிரகிருதி மூலமாகவும் வந்தது ஆனால் பிரம்மாபாபா பொசிஷனை விட்டு விடவில்லை. விட்டு விடவில்லை தானே? இதனால் தான் பரிஷ்தா ஆனாரல்லவா? ஆதலால் இப்போது நீங்கள் ஒருவர்க்கொருவர் பரிஷ்தா என்று நினைத்து முன்னேறிக் கொண்டேயிருங்கள். நான் பரிஷ்தா. எல்லோரும் பரிஷ்தா எனக்கு இந்த பழைய உலகம் மற்றும் பழைய சம்ஸ்காரத்தோடு சம்மந்தமில்லை. இந்த பிராமணர்களோடும் எந்த ஒரு சம்மந்தமுமில்லை. எல்லாம் முடிந்து விட்டது. இவரும் பரிஷ்தா. அவரும் பரிஷ்தா என்ற பார்வையில் பாருங்கள். இந்த சங்கல்பத்தை வாயுமண்டலத்தில் பரப்புங்கள் நல்லது. டபுள் ஃபாரினர்ஸ், டபுள் நஷா உண்டாக்குகிறார்கள் இன்று வாய்ப்பு கிடைத்திருக்கிறதல்லவா? இதுவும் கூட பாருங்கள். உங்களிடம் பாரதவாசிகள் மிகவும் பரிவுடன் இருக்கிறார்கள். உங்களுக்கு வாய்ப்பைக் கொடுத்து விட்டு, கீழே அமர்ந்து விட்டார்கள். கீழே அமர்ந்திருப்பவர்களுக்கு பாப்தாதா தியாகத்திற்கான பாக்கியத்தை சேமிக்கின்றார். நல்லது. இனி என்ன செய்ய வேண்டும்? எல்லோருமே இப்போது இனிமையான புன்முறுவலுடன் காட்சியளிக்கிறீர்கள். இதே மாதிரியே எப்போதும் இருக்க வேண்டும். எப்போதானாலும், யாருடனாவது பேசுவீர்களல்லவா, அப்போது புன்முறுவலுடன் பேசுவது அவசியம். உங்களுடைய புன்சிரிப்பால் அவர்களுடைய பாதி துக்கம் தூரமாகி விடும். தர்மம் தன்னிடமிருந்து ஆரம்பமாக வேண்டும். யாரிடம் பேசினாலும் சரி, கூட இருக்கும் பிராமணருடன் அல்லது அஞ்ஞானியுடனானாலும் சரி, புன்முறுவலுடன் பேசுங்கள். ஆன்மீக ரோஜா சீரியஸாகி பேசாதீர்கள் என்ன செய்கிறீர்கள்? ஏன் செய்கிறீர்கள்? அல்ல. புன்முறுவலுடன் கூடிய பேசுங்கள் புன்முறுவல் செய்வதற்கான ஸ்டாக் (சேமிப்பு) இருக்கிறதா? செலவாகி விடவில்லைதானே? புன்முறுவலுடன் முகம் எவ்வளவு பார்க்க நன்றாக இருக்கிறது. ஆவேசமுடன் கூடிய முகத்தைப் பார்த்ததுமே அங்கிருந்து விலகிச்

சென்று விட வேண்டுமென்று விரும்புவார்கள். மேலும் புன்முறுவலுடன் இருப்பவரை நெருங்கி வர விரும்புவார்கள். ஆதலால் இப்போது உங்களுக்கு நீங்கள் புன்முறுவலுடன் இருக்கும் போட்டோ எடுத்து, உங்களுக்கு காப்பி கொடுக்கலாம். இந்த போட்டோவை வைத்துக் கொள்வீர்களா? அல்லது மனதின் போட்டோவை மனதில் வைத்துக் கொள்வீர்களா? நல்லது.

**76-தேசங்களிலிருந்து** வந்திருக்கிறார்கள். அநேக குரூப்கள் இருக்கின்றார்கள். அதாவது ஆப்ரிக்கா முழுவதிலுமிருந்து வந்திருக்கின்ற முக்கியமானவர்களின் குரூப் நல்ல சேவை செய்கிறார்கள். பாப்தாதாவுக்கு செய்தி வந்தது. தீவிரமான நிர்விக்ன சேவை நடந்து கொண்டிருக்கிறது. எப்படி ஆப்பிரிக்கா செய்தி (பாப்தாதா பற்றி) பரப்புவதை தீவிரமாக்கியதோ, அதற்காக கரவொலி எழுப்பி வாழ்த்துக்களை தெரிவியுங்கள், இம்மாதிரி எல்லோரும் அவசியம் செய்ய வேண்டும். பிளான் செய்யுங்கள். சேவைக்காக தயார் செய்யுங்கள், சேவை பாரமாகத் தோன்றக்கூடிய சேவை செய்யாதீர்கள். அநேக குழந்தைகள் சேவைக்குப் பிறகு களைப்படைந்து விடுகிறார்கள். அவர்களுக்கு மாலிஸ் போட வேண்டிய அளவுக்குக் களைப்படைந்து விடுகிறார்கள். யதார்த்தமான சேவை என்றால், குஷி கிடைக்க வேண்டும். இலகுவாகவும் உணரவேண்டும். பிராப்தி கிடைக்கிறதல்லவா? பிராப்தி கிடைக்கிறதென்றால் களைப்பு வருமா என்ன? அநேக குழந்தைகள் புருஷாரத்தம் இப்படித்தான் செய்கிறார்கள். கஷ்டப்பட்டு முயற்சி செய்து பாரமாக ஆக்கிக் கொள்கின்ற சேவையாக இருக்கிறது. அஸ்திவாரம் அன்புடன் கூடிய சிநேகம். தந்தைக்கும், குழந்தைக்குமிடையேயான சிநேகம் சேவை மூலம் ஆத்மாக்களுக்கு தந்தையிடமிருந்து சிநேகம் என்ற பாக்கியம் கிடைக்கிறது. ஆகையால் சேவை செய்து, பாரமான ரூபத்தில் ஆகி விடுவதற்காக அல்ல. இலகுவான அனுபவம் அளிக்கக்கூடியது. புருஷாரத்தமும் கூட கஷ்டமான முயற்சி செய்வதாக இருக்கக்கூடாது. பாப்தாதாவுக்கு கஷ்டப்படுவது விருப்பமானதல்ல நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்கிறீர்கள் ஆனால் கஷ்டப்பட்டு முயற்சி செய்கிறீர்கள். இது பொறுத்தமாக இல்லை கஷ்டப்படுவது நன்றாக இருக்கிறதா? முயற்சி செய்வதிலும் சரி, சேவை செய்வதிலும் சரி கஷ்டப்படுவது நன்றாக இருப்பதில்லை. பாப்தாதா பார்த்தார். இவர்களுடைய (ஆப்பிரிக்கா)

ரிசல்ட்டைப் பற்றிக் கேள்விப்படும்போது, இவர்கள் ஆர்வம் மற்றும் உற்சாகத்துடன் சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் விசேஷம் என்னவென்றால், இவர்கள் தங்களுக்குள்ளாகவே சேவாதாரிகளைத் தயார் செய்து கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இல்லையென்றால், அநேகர் சொல்கிறார்கள். சேவை அதிகமாக இருக்கிறது. ஹேண்ட்ஸ் (சேவாதாரிகள்) இல்லை என்று. ஹேண்ட்ஸ் இருந்தால் சேவை அதிகரிக்கும் என்று ஆனால் இவர்கள் ஹேண்ட்ஸ் வேண்டும் என்று கேட்கவில்லை. இது இவர்களிடமுள்ள விசேஷம். தங்களுக்குள்ளாகவே, ஹேண்ட்ஸ் தயார் செய்தார்கள் எப்படியோ செய்து கொண்டார்கள். தாங்களே தங்களுக்குள் சேவாதாரிகளை தயார் செய்து கொண்டு முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார்கள். மிக வேகமாக விருத்தி செய்திருக்கிறார்கள் அல்லவா? என்ன விசேஷம் சொன்னார்கள் என்றால், எத்தனை ஜோனில் சேவை நடந்திருக்கவில்லையோ, அவ்வளவும் இப்போது நடந்திருக்கிறது. ஆகவே வேகமாக நடந்திருக்கிறதல்லவா? வாழ்த்துக்கள் நன்றாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பீஸ் ஆப் மைண்டு குரூப்: நன்றாகச் செய்திருக்கிறார்கள். இப்போது எந்த குரூப் வந்திருக்கிறதோ, அதற்கு பாலனை கொடுக்க வேண்டும். ஸ்தாபனை செய்து விட்டீர்கள் ஆகவே பாலனையும் செய்ய வேண்டும். தொடர்பு துண்டிக்கப்பட்டு விடக்கூடாது. ஏதாவது கொஞ்சம் தொடர்ந்து அனுப்பிக் கொண்டேயிருங்கள். தொடர்பை ஏற்படுத்திக் கொண்டேயிருங்கள். சரிதானா? இவர்கள் கால்-ஆப்-டைம் (காலத்தின் அழைப்பு) என்ற பெயரில் செய்கின்ற சேவை செய்தி பாப்தாதாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. இந்த சேவை செய்யும் இவர்கள் ஏதாவது அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். இப்படி தொடர்பு ஏற்படுத்தி வைத்துக் கொண்டேயிருக்கிறார்கள் அல்லவா? இதுபோல நீங்களும் தொடர்பு வைத்துக் கொண்டேயிருங்கள். சரி தான். முதலில் தொடர்பில் வரட்டும். பிறகு சம்மந்தத்தில் வரட்டும். சம்மந்தத்தில் வந்து, வந்து பிராமணர் ஆகி விடுவார்கள். ஆதலால் அவர்களை முன்னேற்றிக் கொண்டேயிருங்கள். இடையிடையே அநேக நாடுகளிலிருந்தும் அழைக்கலாம் ஆனால் அவர்களுக்கான பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல ரிசல்ட் கிடைக்கும்படி இருக்க வேண்டும். அப்போது முன்னேறுவார்கள். புரோகிராம் நன்றாகச் செய்கிறீர்கள்

ஆனால், பாலனை குறைவாக இருக்கிறது. பாலனை கிடைக்காததால் ஜன்மம் கிடைத்தும் முன்னேற்றம் நடக்கவில்லை. வயது அப்பாவிகளுக்கு அதே தான் இருக்கிறது. வளரவில்லை. நன்றாகச் செய்திருக்கிறீர்கள் என்பது சரி தான். பாப்தாதா வதனத்தில் இருந்தவாறே பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார். செய்தியும் கிடைக்கிறது. செய்தி பாப்தாதாவுக்கு நன்றாகத் தான் இருக்கிறது. களைப்படைவதில்லை. வாழ்த்துக்கள். செய்தி அனுப்புபவர்கள், சந்தேஷியாகட்டும் இதற்கு வாழ்த்துக்கள். கரவொலி எழுப்புங்கள்.

பீஸ் ஆப் மைண்டு: இந்த குரூப்பைச் சேர்ந்த சிலர் சேவையின் அடையாளமாக அமர்ந்திருக்கிறார்கள். பாப்தாதா எல்லோரையும் முன்னே வரும்படி அழைத்தார். மொத்தம் 6பேர். இதைப் பாருங்கள். எவ்வளவு நல்ல உதாரணமாக இருக்கிறார்கள். நீங்கள் அமைதி ஸ்தாபனை செய்த சேவைக்காக, இங்குள்ள பிராமண ஆத்மாக்களும் உங்களுக்கு மனதார வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அமைதி ஸ்தாபனைக்கு வாழ்த்துக்கள் இப்போது புது ஜன்மம் கிடைத்ததல்லவா? ஆகவே இன்று பிறந்த தினம் ஆகி விட்டது. ஆதலால் உங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். நல்லது, பாருங்கள். சேவை செய்ததற்கான பலன் கிடைத்தது. நல்லது.

இன்டர்ஃபெயித் குரூப்: நல்லது இன்டர்ஃபெயித் (மதங்களுக்கிடையே நம்பிக்கை) குரூப்காரர்கள் இருக்கிறார்கள். நல்லது. இவர்கள் சேவாதாரிகளாக வந்திருக்கிறார்கள் நல்லது தான். எல்லோருக்கும் செய்தி கொடுப்பதில் இவர்கள் மட்டும் ஏன் பின் தங்கியிருக்க வேண்டும். நன்றாகச் செய்திருக்கிறீர்கள். இந்த குரூப்பையும் அழைத்தீர்கள் பாப்தாதா இதில் ஒரு விசேஷத்தைப் பார்த்தார் இவர்கள் இன்டர் நேஷனல் ரூபத்தில் பன்னாட்டு சேவை செய்தார்கள். உள்நாடு மற்றும் வெளிநாட்டினர் சேர்ந்து ஒரு சங்கல்பம் செய்து, இந்த சேவையைச் செய்தார்கள். இதை மிகவும் நன்றாகச் செய்தார்கள் வெற்றியும் அடைந்தார்கள் இன்டர் நேஷனல் புரோகிராம் வெற்றிகரமாகச் செய்தார்கள். இதற்கு வாழ்த்துக்கள் இன்னும் இந்த குரூப்பை முன்னேற்ற வேண்டும். ஏனென்றால், இவர்கள் உங்களுடைய சகதோழர்கள் அல்லவா? ஆன்மிகத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இவர்களில் ஒருவர் மைக் (முக்கியப் பிரமுகம் பேச்சாளர்)

ஆகி விட்டால், மிகுந்த சேவை செய்ய முடியும். ஆதலால் நன்றாகச் செய்தீர்கள். பாப்தாதாவுக்கு மகிழ்ச்சி மற்றெல்லோருக்கும் கூட மகிழ்ச்சி தான் ஆகவே தான் கரவொலி எழுப்பினார்கள். இன்னும் முன்னேற்றிக் கொண்டேயிருக்க வேண்டும் விட்டுவிடக் கூடாது. எப்படி கால்-ஆப்-டைம் செய்து கொண்டேயிருக்கிறார் 'களல்லவா? அதேபோல செய்து கொண்டேயிருக்க வேண்டும். முன்னேற்றம் செய்து கொண்டேயிருங்கள். நல்லது.

ஜானகி பவுண்டேஷன் மற்றும் வேல்யு டிரெயினிங் குரூப்: மிகவும் நல்லது. பாப்தாதா பார்த்தார். புதுப்புது விதி மூலமாக செய்தி அனுப்புவதற்கான காரியம் நன்றாக இருக்கிறது. ஏனென்றால் தற்காலத்தில் உடல் ஆரோக்கியம் பற்றிய கவனம் மற்றெல்லாவற்றையும் விட அதிகமாக இருக்கிறது ஆனால் எப்படி பெயர் பவுண்டேஷன் என்று இருக்கின்றதோ, அதே போலவே நினைவு மற்றும் சேவை இந்த இரண்டிற்கான பவுண்டேஷனையும் இணைத்தவாறே ஜானகி பவுண்டேஷனை முன்னேறச் செய்ய வேண்டும் சரிதானா? ஆம் ஏனெனில் உங்களுடைய சேவை விஸ்தாரமாக முன்னேற முடியும். முன்னேறுகிறது. இன்னும் அதிகமாக முன்னேறும் வேல்யு புத்தகத்தைப் பார்த்தேன் மிக நன்றாக ஆர்வம், உற்சாகத்துடன் சேவை செய்வதற்கான பலன் பிரத்யக்ஷமாகக் கிடைக்கிறது. எவ்வளவு முன்னேறிக் கொண்டேயிருக்கிறீர்களோ, அவ்வளவு நெருங்கி வந்து கொண்டேயிருப்பீர்கள். இது அனைவர் சார்பிலும் செய்யப்பட்டிருக்கிறது. எந்த ஒரு பவுண்டேஷன் இருக்கிறதோ, அவை தனித்தனியானதாக இருக்கிறது. அவை எல்லாம் இந்த பவுண்டேஷனுக்கு சமீபமாக வந்து கொண்டேயிருப்பார்கள். களைப்படையவில்லை தானே? டபுள் சேவை செய்கிறீர்கள். வேலைக்கும் செல்கிறீர்கள், இதையும் செய்கிறீர்கள். ஆகவே டபுள் சேவை. டபுள் விதேஷிகளுக்கு, இதற்காக டபுள் வாழ்த்துக்கள். மிக நன்று.

ஐ.டி.குரூப்: நல்லது இது உள்நாடு, வெளிநாடு ஒன்றாக சேர்ந்து இருக்கிறது. ஏதாவது புது பிளான் செய்திருக்கிறீர்களா? புதிய வெப்சைட் தயார் செய்திருக்கிறீர்கள். மேலும் முரளிக்காக புதிய சிஸ்டம் ஆரம்பம்

செய்திருக்கிறீர்கள். இதைத் தவிர புதிய இமெயில் சிஸ்டமும் செய்திருக்கிறீர்கள். ஏனென்றால் இதன் மூலமாக சப்தமானது நாலா பக்கமும் பரவ முடியும். இதில் ஒருமுகப்பட்டு (கவனம் செலுத்தி) புதிய, புதிய பிளான் செய்து கொண்டேயிருங்கள். மேலும் முன்னேறிக் கொண்டேயிருங்கள் ஏனென்றால் உள்நாடு, வெளிநாடு இந்த இரண்டுக்குமான தொடர்பு இருக்கிறதல்லவா? எவ்வளவு இந்த டிபார்ட்மெண்ட்டை முன்னேற்றிக் கொண்டேயிருப்பீர்களோ, அவ்வளவு ஒரு இடத்தில் இருந்தவாறே ஏராளமானோர்க்கு செய்தி கொடுக்க முடியும். இது மிக நல்ல உங்களுடைய சாதனம். உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. சாதனம் மூலமாக செய்தி கொடுப்பதற்கான காரியம் இதுவே டிப்பார்ட்மெண்ட்டின் சாதனையாக ஆகி விடும். நன்றாகச் செய்திருக்கிறீர்கள். இதை மோஹினி கவனித்துக் கொண்டிருக்கின்றார். நல்லது பாருங்கள், பீஸ் காரர்கள், கால்-ஆப்-டைம் காரர்கள் சேவை செய்து நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா டபுள் விதேஷிகளுக்கு வித விதமான சேவைக்கு வாழ்த்துக்களும், கூடவே ஆசிகளும் வழங்குகின்றார். ஆசீர்வாதங்கள் உரித்தாகட்டும். தாதியும் கூட ஆசீர்வாதம் தருகின்றார்.

டிராவெலர் பிலிம் குரூப்: இந்த பிலிம் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள் நல்லது. ஏனெனில் தற்காலத்தில் கல்ச்சுரல் புரோகிராம் எல்லோருக்கும் விருப்பமுள்ளதாக இருக்கிறது. கோர்ஸ் முழுமையாக கொடுத்து விடுகிறீர்கள். கல்ச்சுரலிலேயே முழு கோர்சும் கொடுக்கப்பட்டு விடுகிறது. மிக நன்றாக இருக்கிறது. பாப்தாதாவுக்கு மிக விருப்பமுள்ளதாக இருக்கிறது. பார்த்திருக்கின்றார். நன்றாகச் செய்கிறீர்கள். இப்பொழுது காணபிக்கப் போகிறோம் என்று கூறுவீர்கள் ஆனால் பாப்தாதாவோ பார்த்து விட்டார். இந்த சாதனங்கள் மூலமாக மீண்டும் பார்க்கலாம் ஆனால் பாப்தாதாவிடம் உங்களிடம் இருப்பதையும் விட மிகப் பெரிய மெஷினரி இருக்கிறது. அதில் பார்த்து விட்டேன். நன்றாகச் செய்கிறார்கள் செய்து கொண்டேயிருப்பார்கள். தந்தையை பிரத்யக்ஷம் செய்து கொண்டேதான் இருப்பீர்கள். மிகவும் நல்லது வாழ்த்துக்கள்.

மத்திய கிழக்கு நாடுகள்: சேவையில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. மிக நல்ல நல்ல இரத்தினங்கள் இருக்கின்றனர்.

ஒவ்வொருவருடைய விசேஷமும் அவரவருடையதாக இருக்கிறது. மேலும் நீங்கள் நிமித்தம் ஆகி செய்து கொண்டிருக்கிறீர்கள். எல்லோருடைய ஆர்வம், உற்சாகத்திற்கான சர்டிபிகேட் தாதிகள் மூலமாக கிடைத்தது. இதற்கு மிகவும் மிகுந்த வாழ்த்துக்கள் ஆனால் இதற்கு காரணம் என்ன? எந்த ஒரு சேவை ஸ்தானத்திலாவது சேவை விருத்தியாகிக் கொண்டிருக்கிறது, நிர்விக்னமாக நடக்கிறது என்றால் இதற்கு என்ன காரணம்! தெரியுமா? பாலனை. அநேக சென்டர்களில் வி.ஐ.பி சேவை மிக நன்றாகச் செய்கிறார்கள் ஆனால் மாணவர்களுக்கான பாலனை குறைவாக இருக்கிறது. இதன் காரணமாக மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாவதில்லை. மேலும் மாணவர்கள் ரெகுலராக சேவையில் ஆர்வம், உற்சாகத்துடன் இருக்க மாட்டார்கள் வகுப்பிற்கு வருவார்கள். என்ன சொல்கிறீர்களோ அதைச் செய்வார்கள் ஆனால் ஆர்வம் உற்சாகம் இருக்காது. ஆகவே இதன் ரிசல்ட் பாலனை செய்யாததற்காக. வாழ்த்துக்கள்.

எல்லோரும் நிமித்த டீச்சர்ஸ் அமர்ந்திருக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு வி.ஐ.பி. மீது கவனம் செலுத்துகிறீர்களோ, அவ்வளவு பாலனை மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும். மாணவர்களிடம் புதுமையைக் கொண்டு வாருங்கள் புதுமையைக் கொண்டு வருவதன் மூலமாக ஆர்வம், உற்சாகம் அதிகரிக்கும் சேவையில் மிகவும் மூழ்கி விடுகிறீர்கள் பிறகு களைத்துப் போய் விடுகிறீர்கள் இதனால் பாலனை அவ்வளவு விருப்பத்துடன் செய்ய முடிவதில்லை. முதலில் இராஜதானி தயார் செய்யுங்கள் இது மாணவர்கள் மூலமாகத்தான் நடக்குமல்லவா? உளப்பூர்வாக பாலனை செய்யுங்கள். ஒவ்வொருவருடைய பலவீனத்தை நீக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். குஷியாக இருப்பதற்கு முயற்சி செய்யுங்கள். பாரம் சுமக்கக்கூடியதாக இருக்கக்கூடாது. ஏனெனில் வகுப்பில் மாணவர் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவு சீக்கிரமாக இராஜதானி தயாராகும். யார் சகயோகிகளாக இருக்கின்றார்களோ, அவர்களை சம்மந்தத்தில் கொண்டு வாருங்கள் மாணவர் ஆக்குங்கள். மற்றபடி நன்றாக இருக்கிறது டீச்சர்களுடைய மகிமையைக் கேட்டோம். நல்ல சேவை செய்கின்றார்கள். நல்ல பிளானும் செய்கிறார்கள் டீச்சர்ஸ் கை உயர்த்துங்கள். நல்லது உங்களுக்கு லக்ஷம் மடங்கு வாழ்த்துக்கள். இப்போது ஒரு நிமிடம் அப்படி பவர்புல்லாக சர்வ சக்தி சம்பன்னமாகி

உலகத்திலுள்ள ஆத்மாக்களுக்கு கிரணங்களை அனுப்புங்கள். நாலா பக்கமும் உங்களுடைய சக்திகளின் வைப்ரேஷன் பரவட்டும், நல்லது.

நாலா பக்கமுமுள்ள பிராமண் பரிஷ்தா குழந்தைகளுக்கு சதா சுயதர்ஷன் மூலமாக தன்னை (ஸ்வ) பரிசோதித்து, சதா டபுள் லைட்டாகி சேவை மற்றும் புருஷாரத்தம் செய்யக்கூடிய பரிஷ்தா ஆத்மாக்களுக்கு சதா தன்னுடைய பொசிஷனில் (ஸ்வமான்) சீட்டில் செட்டாகி, எதிர்ப்பை இல்லாமல் முடித்து விடக்கூடிய மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகளுக்கு சங்கமயுகத்தில் பிரத்யக்ஷ பலன் அனுபவம் செய்யக்கூடிய தந்தைக்கு சமீபமாக உள்ள குழந்தை களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன் பாப்தாதா: தாதிகளைப் பார்த்து குஷியடைகிறார்கள் அல்லவா? போதும் தாதிகளின் புன்முறுவலுடன் முகமும், திருஷ்டியும் சுகம், அளிக்கக்கூடியதாகும். நீங்கள் எல்லோரும் புன்சிரிப்போடு சந்திக்கிறீர்கள் திருஷ்டி கொடுக்கிறீர்கள். ஆதலால். குஷியடைகிறார்கள். புன்சிரிப்பு சிரிக்க வைக்கிறது. பாப்தாதா கூறியிருக்கின்றார் -எல்லோருடைய முகமும் சதா புன்முறு வலித்தபடி இருக்க வேண்டும். புன்சிரிப்பில்லாமல் ஒருபோதும் இருக்கக் கூடாது. பாருங்கள் தாதி கூறுகின்றார். புன்சிரிப்பில்லையேல், கஷ்டம் வந்து சேரும் (தாதி வெறும் சைகை காட்டுகிறார்) தாதி பரிஷ்தா ஆகிக் கொண்டிருக்கிறார் அல்லவா? பரிஷ்தாபன் ஸ்டேஜ் வந்து கொண்டிருக்கிறது. புன்சிரிப்பில் எல்லாமே வந்து விடுகிறது. அதிகமான சொற்பொழிவு செய்தீர்கள் அல்லவா? ஜன்மம் எடுத்தது முதல் சொற்பொழிவாற்றிக் கொண்டேயிருக்கின்றார். வகுப்பு நடத்தியிருக்கின்றார். இப்போது சுலோகம் சொல்வது போல பேசுகின்றார். பரிஷ்தாவாகி டான்ஸ் செய்கிறார். பரிஷ்தா இன்னும் என்ன செய்வார்? பறப்பது, டான்ஸ் செய்வது. நல்லது.

டபுள் ஃபாரினர்ஸ் கூறியிருக்கின்றார்கள் நாளை முதல் 85-சதவிகிதம் ஆகி விடுவோம் என்று தாதி 95-சதவிகிதத்தில் இருக்கின்றார். காப்பியடியுங்கள், போதும் யாராவது சீரியஸ் ஆனால் அவர்களுக்கு டைட்டில் கொடுக்க வேண்டும். கேஸ் பலூன் ஆகி விட்டார் என்று கேஸ் பலூன் இருக்கிறதல்லவா? எப்போது கம்பீரமாகி

விடுகிறார்களோ, அப்போது வீணான சங்கல்பங்கள் எனும் கேஸ் நிரம்பி விடும். யாரையும் கேஸ் பலூன் என்று கூறி விடாதீர்கள். கூறினால் கேஸ் நிரம்பி விடும். சுபபாவனை வைக்க வேண்டும். இவர்கள் தான் ஆக வேண்டுமல்லவா? வேறு யார் ஆவார்கள்.

மூன்று மூத்த சகோதரர்களுடன் பாப்தாதா: மூவரும் தங்களுக்குள் ஒரு சங்கல்பம் செய்து அவ்வாறே நடந்து கொண்டிருக்கிறீர்கள் மூன்று பேரிடமும் ஒரே சங்கல்பம் ஹான்ஜி, ஹான்ஜி! மற்றபடி எல்லோருடைய ஆசிகளும் உங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. கிடைக்கிறதல்லவா? நல்லது பாண்டவர்களிலும் கூட உதாரணம் இருக்கிறதல்லவா? மிகவும் நன்று.

சோம்நாத்காரர்களுக்கு நினைவு அளித்தார். அங்கேயும் கூட சேவை நன்றாக நடக்கிறது. அவர்களுக்கு சேவைக்காக, அன்பு நினைவுகள் வாழ்த்துக்கள்.

பிரசிடெண்ட் எப்போதும் பாபா கொடுத்த செய்தி என்ன என்று கேட்கின்றார். செய்தி வந்திருக்கிறது என்ற நினைவு இருக்கிறது, பாருங்கள். இந்த ஒரு பிரசிடெண்ட்டிடம் தான் மூன்று அதிகாரம் உள்ளன சயின்ட்டிஸ்ட், அரசியல் தலைவர் மற்றும் தர்மத்தில் மிகுந்த விருப்பமுள்ளவர். எத்தனையோ பிரசிடென்டுகள் வந்திருக்கின்றனர். இப்படிப்பட்டவர் யாரும் இருக்கவில்லை. ஆகவே இவருக்கும் பார்ட் இருக்கிறது. ஆன்மீகத்தில் ருசி இருப்பதால், ஆன்மீக வழிக்கு துணையாக இருக்கின்றார்.

வெளிநாடுகளின் மூத்த சகோதரிகளுடன் பாப்தாதா: நல்லது. இவர்கள் டபுள் விதேஷி சேவாதாரிகளுக்கு நிமித்தமாகியிருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிடம் செய்தி வந்து கொண்டேயிருக்கிறது. மேலும் எல்லோருமே நல்ல விதமாக பரிபாலிக்கவும் செய்கிறார்கள். அங்கும் இங்குமாக சேவையில் சுற்றிக் கொண்டுமிருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு பிடித்தமாக இருக்கிறது. தங்களுக்குள் சந்திக்கும்போது பிளான் தயார் செய்கிறீர்கள். ஆகவே கூட்டு சக்தியின் பிரயோகம் இது மிக நன்றாக இருக்கிறது. ஏனென்றால், ஒவ்வொருவரின் விசேஷம் வெவ்வேறானதாக இருக்கிறது. சிந்தனை சிலசமயம் சிலரிட மிருந்து

நன்றாக வெளிவருகிறது ஆகவே உங்களுக்குள் சந்தித்துக் கொண்டேயிருக்கிறீர்கள். மீட்டிங் செய்கிறீர்கள். இது பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. இப்போது நீங்கள் முதலில் பரிஷ்தா நிலைக்கு அருகாமையில் வர வேண்டியதாயிருக்கும். ஏனென்றால் நீங்கள் சாகார ரூபத்தில் முன் உதாரண மாக இருப்பவர்கள். சாகாரத்தில் நீங்களும் கூட உதாரணங்கள் மற்றும் நிமித்தமாகவும் இருக்கிறீர்கள். ஆதலால் எப்படி உங்களுடைய வேகம் இருக்குமோ, அதேபோல மற்றவர்களுக்கும் தைரியம் வரும் ஆர்வம் உண்டாகும் எல்லோரும் பழமையானவர்கள். சாகார் பாபாவின் பாலனைக்கு பதிலாக ஃபாலோ பிரம்மாபாபா. எல்லாவற்றிலும் முதல் நம்பர் அப்போது தான் முதன்மையான ஆத்மா ஆவீர்கள் அல்லவா? முழு டிராமாவிலும் முதன்மை நம்பர் ஆத்மா ஆதலால் ஃபாலோ பிரம்மாபாபா மேலும் எல்லோருடைய அன்பும் ஆசிகளும் எவ்வளவு கிடைக்கிறது. உங்களுடைய புருஷாரத்தம் இருக்கிறது. ஆனாலும் ஆசிகளும் கூட கிடைக்கின்றது. யாருக்கு நிமித்தமாக இருக்கிறீர்களோ, அவர்களின் ஆசிகள் (மகிழ்ச்சியுடன் கூடிய சுப பாவனை) கிடைக்கின்றன. இதுவும் கூட லிஃப்ட் (உயரே) தூக்கிச் செல்லும் இயந்திரம்) உங்களுக்கு ஈஸ்வரிய கிஃப்ட் (வெகுமதி) கூட இருக்கிறது (மொரிஷியஸில் ரிட்ரீட் வசதிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றன) நன்றாக தயாராகிறது. சேவை மிக நன்றாக நடக்கும். நல்லது.

**டபுள் விதேஷி சகோதர சகோதரிகள் பாப்தாதாவுக்கு எழுத்து மூலமாக 7-விஷயங்களைப் பற்றி சந்தேஷி மூலமாக அனுப்பினார்கள். இதன் ரிசல்ட் அடிப்படையில், மேற்கொண்டு செய்ய வேண்டியது கொடுக்கப்பட்டிருக்கிறது. புருஷாரத்தத்திற்கான சைகை:**

1. ஸ்வ பரிவர்த்தனையின் வேகம் எவ்வளவு?

2. தனது ஸ்வமானில் நிரிந்தரமாக நிலைத்திருந்து, மற்றவருக்கு மரியாதை கொடுக்கிறேனா?

3. எல்லோரிடமிருந்தும் ஆசிகள் பெற்றேனா? கொடுத்தேனா?

4. சர்வ கஜானாக்களின் இருப்பு (ஸ்டாக்) எவ்வளவு சேமித்திருக்கிறேன்?

5. தனது மனதை ஒரு விநாடியில் ஏகாக்கிரஹம் மற்றும் நிரந்தரமாக ஏக்ரஸ் ஸ்திதியில் வைத்திருக்க முடிகிறதா?

6. பிந்துவாகி, பிந்துவை நினைவு செய்து, ஒரு விநாடியில் புல்ஸ்டாப் (முற்றுப்புள்ளி) வைக்க முடிகிறதா?
7. கடந்த 6-மாதங்களாக குஷி, சரந்தி மற்றும் சக்தி, கிரணங்களை பரவச் செய்து ஞான சூரியன் ஆகியிருக்கிறேனா? ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 15.11.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான மனதுடன் தந்தை மற்றும் பரிவாரத்தினரிடம் அன்பாயிருந்து, உழைப்பிலிருந்து விடுபடுவதற்கு உறுதிமொழி எடுங்கள் மற்றும் லாபம் அடையுங்கள்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய சுயராஜ்ய அதிகாரி மற்றும் ஸ்வமான்தாரி குழந்தைகளைப் பார்க்கின்றார். தந்தை தன்னை விட குழந்தைகளுக்கு உயர்ந்த கௌரவம் அளித்திருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையையும் காலில் விழுவதனின்றும் விடுவித்து, தலைக் கிரீடமாக்கி விட்டார். தன்னை சதா, அன்பான குழந்தைகளின் சேவாதாரி என்றார். இவ்வளவு பெரிய அத்தாரிட்டியின் கௌரவத்தை குழந்தை களுக்குக் கொடுத்தார். ஆதலால், ஒவ்வொருவரும் தன்னை இவ்வளவு சுய கௌரவத்திற்குரியவர் என்று புரிந்து கொண்டிருக்கிறீர்களா? ஸ்வமான்தாரியின் (சுய கௌரவமுள்ளவர்) விசேஷ லக்ஷணம் எது? எவ்வளவு ஸ்வமான்தாரியாக இருக்கின்றாரோ, அவ்வளவு அனைவருக்கும் மரியாதை கொடுப்பவராக இருப்பார். எவ்வளவு ஸ்வமான்தாரியோ, அவ்வளவு பணிவுத்தன்மை, எல்லோருக்கும் பிரியமானவராக இருப்பார். ஸ்வமான்தாரியின் அடையாளம் -தந்தையின் அன்புக்குப் பாத்திரமாயிருப்பதோடு, அனைவரின் அன்புக்குப் பாத்திரமாயிருப்பவர் லௌக்க அன்பு அல்ல. எல்லையற்ற அன்பு எப்படி தந்தை எல்லோருக்கும். அன்பானவராக இருக்கின்றாரோ அதாவது ஒரு மாதக் குழந்தையாயிருப்பவரானாலும், ஆதி ரத்தினமாயிருந்தாலும், ஒவ்வொருவருமே “நான் பாபாவினுடையவன், பாபா என்னுடையவர்” என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். இது எல்லோருக்கும் அன்பு இருக்கிறது, சிரேஷ்ட ஸ்வமான் இருக்கிறது என்பதன் அடையாளம்

ஏனெனில் இப்படிப்பட்ட குழந்தைகள் (ஃபாலோ ஃபாதர்) தந்தையைப் பின்பற்றி நடப்பவர்கள். பாருங்கள், தந்தை வயது வித்தியாசமின்றி ஒவ்வொரு குழந்தைக்கும் சிறுவரிலிருந்து, முதியவர் வரை அனைத்து குழந்தைகளுக்கும் கௌரவம் (ஸ்வமான்) கொடுத்தார். இளைஞர்களுக்கு விநாஷ்காரியிலிருந்து, விஷ்வகல்யாணகாரி என்ற ஸ்வமான் (கௌரவம்) கொடுத்தார். மகான் ஆக்கினார். பிரவிருத்தியிலிருப்பவர்களை குடும்ப வாழ்க்கையிலிருந்தாலும், மகாத்மாக்கள், பெரிய, பெரிய ஜகத்குருமார்களைக் காட்டிலும், சந்நியாசிகளாக இருக்கும். மகாத்மாக்களும் தலை வணங்கும்படியாகச் செய்தார். கன்னிகைகளுக்கு சிவசக்தி சொரூபம் என்ற கௌரவத்தை நினைவூட்டினார், ஆக்கி விட்டார், வயதான குழந்தைகளுக்கு பிரம்மாபாபா சமானமான அனுபவத்தின் ஸ்வமான் கொடுத்தார். இப்படிப்பட்ட ஸ்வமான்தாரி குழந்தைகள், ஒவ்வொரு ஆத்மாவையும், இதே போன்றே ஸ்வமானில் பார்ப்பார்கள். பார்ப்பது மட்டுமல்ல, சம்மந்தம் மற்றும் தொடர்பிலும் அவ்வாறே நடந்து கொள்வார்கள். ஏனென்றால் ஸ்வமான் தேக அபிமானத்தை விலக்கக்கூடியது. எங்கே ஸ்வமான் இருக்கிறதோ, அங்கே தேகாபிமானம் இருக்காது தேக அபிமானத்தை விலக்கு வதற்கான சகஜ சாதனம், சதா ஸ்வமானில் இருக்க வேண்டும். என்பதாகும். சதா ஒவ்வொருவரையும் ஸ்வமான் நிலையிலிருந்து பார்க்க வேண்டும். சாதாரண போர் வீரனாக இருந்தாலும், பதினாறாயிரம் மாலையில் கடைசி நம்பரில் வரக்கூடிய வரானாலும், கடைசி நம்பரில் இருப்பவரும் டிராமாபடி பாபாவிடமிருந்து ஏதாவதொரு விசேஷத்தை அடைந்தவராக இருப்பார். ஸ்வமான்தாரி விசேஷத்தைப் பார்த்து, ஸ்வமான் கொடுப்பார். அவருடைய பார்வையில், உணர்வில் செயலில் (திருஷ்டி, விருத்தி, கிருத்தி) ஒவ்வொருவருடைய விசேஷத் தன்மையும் அடங்கியிருக்கிறது. யார், பாபாவினுடையவராக ஆகியிருக்கின்றாரோ, அவர் விசேஷ ஆத்மா தான். நம்பர்வாராக இருக்கலாம் ஆனால் உலகிலுள்ள கோடியில் ஒருவர் இப்படி எல்லோரும் உங்களை விசேஷ ஆத்மா என புரிந்து கொண்டிருக்கிறீர்களா? ஸ்வமானில் நிலைத்திருக்க வேண்டும் தேக அபிமானத்தில் அல்ல. ஸ்வமான்.

தந்தைக்கு ஒவ்வொரு குழந்தையிடமும் அன்பு இருக்கிறது ஏன்? ஏனென்றால், என்னைப் புரிந்து கொண்டு, என்னுடையவர் ஆகி

விட்டார்கள் என்பதை தந்தை அறிவார். வேண்டுமானால், இன்றைக்கு இந்த சந்திப்பில் முதல் முறையாக வந்திருக்கலாம். இருப்பினும் பாபா என்று கூறினார்கள் அல்லவா, ஆதலால் அன்பிற்குப் பாத்திரமாகி விட்டார்கள். பாப்தாதாவின் நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா குழந்தைகளும், எல்லோரிடமும் அன்பாயிருப்பவர்கள் இதேபோல தந்தையை பின்பற்றக்கூடியவர்கள். பிரியமில்லாதவர் யாருமே இல்லை. எல்லோருமே பிரியமானவர்கள் தான். பாருங்கள், எந்த ஒரு குழந்தை மேரா பாபா (என்னுடைய தந்தை) என்று சொல்கிறார்களோ, அந்த மேரா என்னுடைய என்பதைக் கொண்டு வந்தது எது? அன்பு தானே! யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கிறார்களோ, அவர்களெல்லாம் அன்பு தான் என்னை பாபாவினுடையவராக் கியது என்று புரிந்து கொண்டிருக்கிறார்களா? தந்தையின் அன்பு காந்தம் போன்றது. அன்பு எனும் காந்தத்தால் தந்தையினுடையவராகி விட்டார்கள். உளப்பூர்வமான அன்பு வாயில் சொல்லும் அன்பு அல்ல மனப்பூர்வமான அன்பு பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம். எதற்காக சந்திக்க வருகிறீர்கள்? அன்பு தான் கொண்டுவந்ததல்லவா? யாரெல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறீர்களோ, வந்திருக்கிறார்களோ, எதற்காக வந்தீர்கள்? அன்பு இழுத்துக் கொண்டு வந்ததல்லவா? அன்பு கூட எவ்வளவு? 100-சதவிகிதமா? அல்லது குறைவா? எனக்கு 100-சதவிகித அன்பு இருக்கிறது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள் அன்பில் 100 சதவிகிதம் கொஞ்சம் கூட குறைவாக இருக்கக் கூடாது. நல்லது. இவ்வளவு அன்பு பிராமணர்களுக்குள் இருக்கிறதா? கை உயர்த்தச் சொல்லலாமா? இதில் சதவிகிதம் உள்ளது. எப்படி எல்லோருக்கும் தந்தையிடம் அன்பு இருக்கிறதோ, இதேபோல குழந்தைகளுக்கும் கூட எல்லோரிடமும் அன்பு, எல்லோருக்கும் அன்புடையவர் என்று சொல்ல முடியுமா? மற்றவர்களுடைய பலவீனத்தைப் பார்க்கக் கூடாது. ஒருவேளை யாராவது, சம்ஸ்காரத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள் என்றால், யாரைப்பின்பற்றுவது? அடிமையாயிருப்பவர்களையா? நீங்கள் வசீகரிக்கும் மந்திரம் கொடுப்பவர்கள், வசீகரிக்கப்பட்டிருப்பவர்களை விடுவிக்கும் மந்திரம் விடுவிப்பவர் தானே? அல்லது பார்ப்பவர்களா? தென்படுகிறதா? ஒருவேளை ஏதாவதொரு கெட்ட பொருள் கண்ணில் படுகிறது என்றால் என்ன செய்வீர்கள்? பார்த்துக் கொண்டேயிருப்பீர்களா? அல்லது விலக்கி விடுவீர்களா? ஏனென்றால், பாப்தாதா பார்த்தார், யார் மனப் பூர்வமான

அன்புடையவராயிருக்கிறார்களோ, தந்தையின் மனதிற்கு அன்பானவர், எல்லோருக்கும் அன்பானவராக நிச்சயம் இருப்பார். மனப்பூர்வமான அன்பு, சம்பன்னம் மற்றும் சம்பூரணம் முழுமை மற்றும் நிறைவு) அடைவதற்கு சகஜமான விதியாகும். வேண்டுமானால், யாராவது எவ்வளவு ஞானியாக இருந்தாலும் சரி, மனப்பூர்வமான அன்பு இல்லாதவராக இருந்தால் பிராமண வாழ்க்கையில் ரமணீகரமான வாழ்க்கையாக இருக்காது. வறட்சியான வாழ்க்கையாகத்தான் இருக்கும். ஏனென்றால் ஞானம் அன்பில்லாத ஞானமாக இருந்தால், ஞானத்தில் ஏன்? என்ன? என்ற கேள்வி எழும் ஆனால் அன்பு ஞானத்தோடு கலந்திருந்தால் அன்பாயிருப்பவர் சதா அன்பில் மூழ்கியிருப்பார். அன்பாயிருப்பவருக்கு, நினைவு செய்வதற்கு கஷ்டப்பட வேண்டியதிருக்காது. ஞானம் மட்டும் தான் இருக்கிறது. அன்பு இல்லை என்றால் உழைக்க வேண்டியதாயிருக்கும். இவர் உழைத்து பலன் அனுபவம் செய்பவராக இருப்பார் ஆனால் அவர் அன்பின் பலனை அனுபவம் செய்வார். ஞானம் என்பது விதை, ஆனால் நீர் அன்பாகும். ஒருவேளை விதைக்கு அன்பாகிய நீர் கிடைக்காவிட்டால், பலன் விளையாது.) ஆதலால் பாப்தாதா இன்று எல்லா குழந்தைகளினுடைய மனப்பூர்வமான அன்பை சோதனை செய்தார். அதாவது தந்தையிடமானாலும் சரி அல்லது எல்லோரிடமும் ஆனாலும் சரி ஆகவே நீங்கள் எல்லோரும் என்ன நினைக்கிறீர்கள்? அன்பானவர்கள் என்றா? யார் தங்களை மனப்பூர்வமான அன்புடையவர்கள் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள் எல்லோருக்கும் அன்புடையவர்களா? எல்லோருக்கும் அன்புடையவர்களாக இருக்கிறீர்கள். நல்லது தந்தையிடம் மனப்பூர்வமான அன்புடையவர்கள் தான் ஆனால் இதே போலவே எல்லோருக்கும் அன்புடையவர்களாக இருக்கிறீர்களா? எல்லோருக்கும்? ஒவ்வொருவரும், இவர் எனது சகோதரர், இவர் எனது சகோதரி என்று நினைக்கிறீர்களா? ஒவ்வொருவரும் இவர் என்னுடையவர் என்று நினைக்கிறீர்களா? அல்லது சிலர் அப்படி நினைக்கிறார்களா? எப்படி தந்தையிடம் எல்லோருக்கும் அன்பிருக்கிறது என்று கை உயர்த்துகிறீர்களோ, அதுபோல நீங்கள் ஒவ்வொருவருக்காகவும் கை உயர்த்துவீர்களா? ஆம். நாங்கள் எல்லோருக்கும் அன்பானவர்கள் தான் என்று இதற்கான சர்டிபிகேட் கிடைக்குமா? ஏனென்றால், பாப்தாதா இதற்கு முன்பும் கூறியிருந்தார்

தந்தையிடமிருந்து மட்டும் சர்டிபிகேட் வாங்கினால் போதாது பிராமண பரிவாரத்தினரிட தில் தர்மம் மற்றும் இராஜ்யம் இரண்டும் கூடக் கூடவே ஸ்தாபனை செய்யப்படுகிறது. ராஜ்யத்தில் தந்தை மட்டும் இருக்க மாட்டார் பரிவாரமும் கூட இருப்பார்கள் தந்தையிடமும் அன்பு பரிவாரத்தினரிடமும் அன்பு. ஞானி ஆகி விட்டீர்கள், கூடவே அன்பும் அவசியம். ஸ்வமானில் இருக்க வேண்டும். மரியாதை கொடுக்க வேண்டும். இந்த இரண்டும் அவசியம். தந்தை பிராமண பிறவி எடுத்தவுடன் ஒவ்வொரு குழந்தைக்கும் மரியாதை கொடுத்தார். ஆகவே தான் உயர்ந்தவர் ஆனீர்கள். இந்த ஒரு ஜன்மத்தில் மரியாதை கொடுக்க வேண்டும். மேலும் முழு கல்பமும் இதனுடைய பாக்கியம் கிடைக்கும். அரைக்கல்பம் ராஜ்ய அதிகாரிக்கான மரியாதை கிடைக்கிறது அரைக்கல்பம் பக்தியில் பக்தர்களிடமிருந்து மரியாதை கிடைக்கிறது ஆனால் இதற்கு, முழு கல்பத்திற்கான ஆதாரம் இந்த ஒரு ஜன்மத்தில் மரியாதை கொடுக்க வேண்டும். மரியாதை பெற வேண்டும்.

பாருங்கள், இன்றைக்கு இந்த சீசனில் முதலாம் சந்திப்பு. நாலா பக்கங்களிலிருந்தும் அன்பின் காரணமாக ஒன்று கூடியிருக்கிறீர்கள். ஆகவே யார், முதல் முறையாக வந்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் வந்திருக்கிறார்கள். முதல் முறையாக வந்திருக்கிறார்கள். முதல் வாய்ப்பையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் முதலாவது வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு வாழ்த்துக்கள். எல்லோருக்கும் தங்கள் பரிவாரத்தில் விருத்தியடைந்திருப்பதைப் பார்த்து குஷியாயிருக்கிறதல்லவா? ஆஹா! எங்கள் சகோதரர்களே! ஆஹா! எங்கள் சகோதரிகளே! வந்து விட்டீர்களா? பாப்தாதாவுக்கும் கூட குஷியாயிருக்கிறது. காணாமல்போன குழந்தைகள் மீண்டும் தங்களுடைய அதிகாரத்தை எடுத்துக் கொள்வதற்காக வந்திருக்கிறார்கள். ஆகவே எல்லோருக்கும் குஷியா? அல்லது மிக மிக மிக குஷியாயிருக்கிறது. ரெம்ப ரெம்ப குஷி அதிகமான குஷி.

நல்லது டபுள் ஃபாரினர்ஸ் (இரட்டை வெளிநாட்டினர்) வந்திருக்கிறார்கள், கெட்டிக்காரரர்கள். வெளிநாட்டினர் ஒரு சான்ஸைக்கூட தவற விடுவதில்லை. நல்லது. சான்ஸ் எடுத்துக் கொள்பவர்கள் சான்ஸ்லர் என்று கூறப்படுகிறார்கள். சான்ஸ் எடுத்துக்

கொள்வதில் மிகவும் கெட்டிக்காரர்கள். வெளிநாட்டவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா ஒரு விஷயத்திற்கு விசேஷமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். என்ன விஷயம்? யார் எங்கெங்கெல்லாமோ காணாமல் போனார்கள் தேசமும் மாறி விட்டது, தர்மமும் கூட அநேகருக்கு மாறிவிட்டது சுலாத். சாரமும் மாறிவிட்டது ஆனால் மாறிவிட்டாலும், புரிந்து கொள்ளக்கூடிய கண்கள் மிகவும் கூர்மையாக இருக்கிறது யம் வேறுபட்டு விலகிப் போயிருந்தாலும் கூட புரிந்து கொள்வதில் கெட்டிக்காரர்களாகி விட்டார்கள். புரிந்து கொண்டார்கள். தந்தையை தன்னுடையவராக்கிக் கொண்டு விட்டார்கள். பரிவாரத்தையும் தனதாக்கிக் கொண்டார்கள். பிராமண கலாச்சாரத்தை தனதாக்கிக் கொண்டார்கள். ஆகவே கெட்டிக்காரர் ஆகி விட்டார்கள் அல்லவா? மேலும் பாப்தாதா சதா இந்த ஒரு விசேஷத்தைப் பார்க்கின்றார். என்னவென்றால் தந்தையிடமும் அன்பு இருக்கிறது. சேவையிலும் கூட அன்பு இருக்கிறது. சேவையில் அன்பிருப்பதன் காரணமாக மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். டபுள் சேவை செய்கிறீர்கள். டபுள் கூட அல்ல, மூன்று சேவை செய்கிறீர்கள். ஒன்று லௌகிக வேலை இன்னொன்று ஞான சேவை மூன்றாவது சென்டரிலும் கூட கர்மனா சேவையில் சகயோகியாக இருப்பதை பாப்தாதா பார்த்தார் பாப்தாதா எப்போது பார்க்கின்றாரோ, அப்போதெல்லாம் கூட மூன்று விதத்திலும் சேவையில் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். குஷியடைகிறார்கள். மேலும் மனதிற்குள்ளே வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டேயிருக்கிறார்கள். இப்போதும் கூட பாப்தாதா பார்க்கின்றார். வெளிநாட்டில் நாலா பக்கமும் சிலர் இரவிலும், சிலர் பகலிலும் பாப்தாதாவுடன் சந்திப்பில் குஷியாக இருக்கின்றார்கள். நல்ல புருஷார்த்தத்தில் தீவிர கதியில் முன்னேறுவதற்கு, உங்களுக்கு நல்ல தாதியும் கிடைத்திருக்கின்றார். சரிதானா? கொஞ்சம் ஏதாவது குறை இருப்பதாகத் தெரிந்தால் உடனே வகுப்பு நடத்துகிறார்கள். எந்தக் குழந்தையாயிருந்தாலும் சரி, உள் நாடானாலும் சரி, வெளி நாடானாலும் சரி. எந்த பாடமாவது கஷ்டமாக இருந்தால் இதற்கு மூல காரணம் மனப்பூர்வமான அன்பில் குறை தான் அன்பு என்றால் அன்பில் மூழ்கியிருத்தல் (லவ்-லீன்) நினைக்க வேண்டிய அவசியமில்லை. நினைவை மறப்பது கடினமாக ஒருவேளை கஷ்டப்பட்டு இருக்கும் உழைக்க வேண்டியதிருந்தால் இதற்கான காரணம் அன்பில் குறையிருக்கிறதா? என்று சோதித்துப் பாருங்கள்

எங்கேயாவது லீக்கேஜ் இருக்கிறதா? யார் மீதாவது ஆகர்ஷணம் இருக்கிறதா? அல்லது ஏதாவது சாதனத்தின் மீது அல்லது நிவாரணத்தின் மீது அதிகப்படியான நிவாரணம், சட்டப்படி நிவாரணம் சரியாக இருக்கிறதா? அல்லது அதிகப்படியான நிவாரணத்தின் மீது (சால்வேஷன்) அன்பிருக் கிறதா? ஆகர்ஷணம் இருக்கிறதா? அப்படிப்பட்ட நிவாரணம் நினைவுக்கு வந்து கொண்டேயிருக்கும். இதன் அடையாளம், எங்கேயாவது லீக்கேஜ் இருந்தால், சதா வாழ்க்கையில் ஏதாவது காரணமாக, திருப்தியின் அனுபவம் இருக்காது. ஏதாவதொரு வகையில் அதிருப்தி அனுபவம் ஆகும். எங்கே திருப்தி இருக்கிறதோ, அதன் அடையாளம் அங்கே மகிழ்ச்சி இருக்கும். சதா ஆன்மீக ரோஜாவைப் போன்று புன்முறுவலுடன் இருப்பார்கள். மகிழ்ச்சியில் திளைத்த முகத்துடன் காணப்படுவார்கள். மூடு ஆஃப் ஆகமாட்டார்கள் சதா டபுள் லைட் ஆதலால் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதினின்றும் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். பாப்தாதாவுக்கு குழந்தைகள் கஷ்டப்படுவது நன்றாக இருப்பதில்லை. அரைக்கல்பம் உழைத்தீர்கள். இப்போது சந்தோஷமாயிருங்கள். அன்பில் முழ்கியிருங்கள் அனுபவம் என்ற முத்தை ஞான சாகரத்தின் அடித்தளத்தில் அனுபவம் செய்யுங்கள். மேலே மேலே மூழ்கி விட்டு கடலிலிருந்து வெளியில் வந்து விடாதீர்கள். (லவ்-லீன்) அன்பில் மூழ்கியிருங்கள்.

எல்லோரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? கூடவே இருப்போம், கூடவே செல்வோம். உறுதி மொழி எடுத்தக் கொண்டீர்கள். இல்லையா? கூடவே செல்வோம். என்றா? அல்லது பிறகு பின்னால் வருவோம் என்றா? யார் கூடவே வருவோம் என்று சொல்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். தயாராக இருக்கிறீர்களா? யோசித்து கை உயர்த்துங்கள். தயார் என்றால் பாப்சமான் என்று பொருள் யார் கூடவே செல்வார்கள்? சமமாக இருப்பவர்கள் தானே கூடவே செல்வார்கள். அப்படியானால் செல்வோமா? எவர்ரெடியா? முதல் வரிசையில் இருப்பவர்கள் எவர்ரெடி? நாளைக்கு செல்ல வேண்டும் என்று ஆர்டர் செய்தால் செல்வீர்களா? சரி- பிரவிருத்தியிலிருப்பவர்கள் செல்வீர்களா? எவர் ரெடியா? குழந்தைகள் நினைவுக்கு வர மாட்டார்களா? மாதாக்கள் செல்லத்தயாரா? நினைவு வராதல்லவா? டீச்சர்ஸ்களுக்கு சென்டர் நினைவுக்கு வருமா? மாணவர்கள் நினைவுக்கு வருவார்களா? நினைவு

வராதா? நல்லது. எல்லோரும் நிர்மோஹி ஆகி விட்டீர்களா? அப்படியானால் நல்ல விஷயம் தான் ஆகவே உழைக்க வேண்டியதிருக்காது அல்லவா!

இன்று பாப்தாதா, எதிரில் அமர்ந்திருப்பவர்கள் ஆனாலும் சரி, வெகு தூரத்தில் இருப்பவர்களானாலும் மனதில் அமர்ந்திருப் பவர்களானாலும் சரி, எல்லோருக்கும் இன்றைய தினம் உழைப்பிலிருந்து விடுதலையடையச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். ஆவீர்களா? கை தட்டி விட்டீர்கள். ஆவீர்களா? நாளை முதல், யாரும் தாதியிடம் வரமாட்டீர்கள், கஷ்டம் கொடுக்க மாட்டீர்கள். ஆனந்தமாக சந்திப்பீர்கள். ஜோன் இன்சார்ஜிடம் (நிமித்தமானவர்) செல்ல மாட்டீர்கள்? குற்றம் குறை சொல்ல மாட்டீர்கள்? முடிந்து விட்டது. சரியா? இப்போது கை உயர்த்துங்கள், பாருங்கள் யோசித்து கை உயர்த்த வேண்டும். சும்மா கை உயர்த்தக் கூடாது. முன் வரிசையில் இருப்பவர்கள் கை உயர்த்தவில்லை. நீங்கள் உயர்த்தியிருக்கிறீர்கள் எந்த ஒரு குறையும் இல்லை. எந்த ஒரு எனது, எனது என்பதில்லை. யாரும் என்னுடையவர் அல்ல நானும் இல்லை. என்னுடையதும் எதுவுமில்லை. முடிந்து விட்டது. பாருங்கள். உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்லது. வாழ்த்துக்கள் ஆனால் என்ன? உறுதிமொழி மூலம் பலன் எடுக்காமல் இருக்கிறீர்கள். உறுதி மொழி உடனே எடுத்துக் கொள்கிறீர்கள் ஆனால் பலன் அடைவதற்கு தினந்தோறும் முதலாவது உணருதல் (ரியலைசேஷன்) இரண்டாவது திரும்பப்படிப்பது (ரிவைஸ் செய்வது) உறுதிமொழியை ரிவைஸ் செய்யுங்கள் (நினைத்துப் பாருங்கள்) என்ன உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவு செய்யுங்கள் அமிர்தவேளை சந்திப்பிற்குப்பிறகு, உறுதிமொழி (வாய்தா) மற்றும் ஃபாய்தா (பலன்). இதைப் பற்றி சார்ட் எழுதுங்கள். உறுதிமொழி என்ன செய்தோம் பலன் என்ன அடைந்து கொண்டிருக்கிறோம், உணர்ந்து பாருங்கள். ரிவைஸ் செய்யுங்கள், பேலன்ஸ் ஆக இருந்தால் எல்லாம் சரியாகி விடும்.

பாப்தாதாவுக்குத் தெரியும் மீட்டிங்காரர்கள் உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள் மீட்டிங்காரர்கள் எழுந்திருங்கள் நல்லது பக்காவாக உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்களா? அல்லது ரிகார்டுக்காக (ஃபைலில்) உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்களா?

அல்லது பைனல் செய்திருக்கிறீர்களா? செய்திருக்கிறீர்களா? கை தட்டுங்கள் நன்றாக கரவொலி எழுப்புங்கள் ரெம்பவும் நன்றாகச் செய்திருக்கிறீர்கள். அமருங்கள். பாருங்கள். இவ்வளவு பைனல் ஆகி விட்டாலும் இன்னும் மீதி இருப்பவைகளும் பைனல் ஆகி விடும். ஏனென்றால், நீங்கள் விசேஷ சேவைக்கு ஆதார மூரத், திமித்தமாக இருப்பவர்கள் மேலும் சேவையில் வெற்றியும் கூட சுய சேவை மூலமாகவே நடக்கும் சுயத்திற்கான சேவை விஷ்வ சேவைக்கு ஆதாரம். ஆகவே, இவ்வளவு உறுதிமொழிகளும், பலனளிக்கக்கூடியதாகவே ஆகி விடும். உங்களுடைய நிமித்த பாவனை, மற்றவர்களுக்கும் உதவும். அடிக்கடி உணர்ந்து பார்க்க வேண்டும். மனதார உணர வேண்டும் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து பார்க்க வேண்டும். 21-ஜென்மத்திற்கான ஆல்மைட்டி கவர்ன்மெண்ட்டினுடைய முத்திரை குத்தி விட வேண்டும். மேலும் ஹான்ஜி, ஹான்ஜி என்று சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். மாஸ்டர் சர்வ சக்திவான், என்ன செய்ய வேண்டு மென்று நினைக்கிறீர்களோ, அதைச் செய்ய முடியும். இவ்வளவு அத்தாரிட்டி பாபாவிடமிருந்து கிடைத்திருக்கிறது. முதலில் எந்த ஒரு சங்கல்பம், பேச்சு, கர்மம் செய்வதற்கு முன்பாக பாப்சமான் இருக்கிறதா? இல்லையா? என்று பார்க்க வேண்டும் முதலில் இதை சோதித்துப் பிறகு காரியத்தில் கொண்டு வாருங்கள். எப்போது உங்களுடைய விவேகம், சரி தான் என்று சொல்கிறதோ, அப்போது நடை முறையில் கொண்டு வாருங்கள். சமான் ஆக வேண்டுமானால், சமானமாக செய்ய வேண்டும். அதன்படி நடக்கவும் வேண்டும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் மிகுந்த நம்பிக்கையோடு பார்க்கின்றார். அதாவது இவர்கள் தான் ஆக வேண்டும். ஆகியிருந்தார்கள், மேலும் அவசியம் ஆகத்தான் வேண்டும். இரண்டு வார்த்தைகளை மட்டும் நினைவில் வையுங்கள். நிமித்தம் மற்றும் நிர்மான் (பணிவு) இதில் நான், எனது என்ற இரண்டும் இல்லாமல் முடிந்து விடும் நிமித்த மாயிருக்கிறேன். மேலும் பணிவாக இருக்கத்தான் வேண்டும்.

நீங்கள் 70'ம் ஆண்டு கொண்டாடுகிறீர்கள். இந்த செய்தி கிடைத்தது. வெளிநாடும் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் உள்நாட்டில் உள்ளவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மீட்டிங் தான்

செய்தீர்கள் அல்லவா? ஆகவே பாப்தாதா 70ம் ஆண்டை எந்த விதி மூலம் கொண்டாட வேண்டுமென்று விரும்புகிறீர்கள், கொண்டாட வேண்டும் என்பதில் எல்லோருக்கும் விருப்பம் தானே? ஆர்வம் இருக்கிறதா? மாதாக்களுக்கு இருக்கிறதா? வெளிநாட்டவர்களுக்கு இருக்கிறதா? கொண்டாட வேண்டுமா? சேவைக்கான புரோகிராம் நீங்கள் செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் இனி மேலும் செய்வீர்கள். இதில் நீங்கள் கெட்டிக்காரர்கள். பாப்தாதா பார்த்திருக்கின்றார். பிளான் மிகவும் நன்றாக தயார் செய்கிறார்கள். பாப்தாதாவுக்கு பிடித்தமாக இருக்கிறது. பாப்தாதா என்ன விரும்புகின்றார்? பாப்தாதா ஒரே ஒரு வார்த்தை மட்டும் விரும்புகின்றார். அந்த ஒரு வார்த்தை -பயன்படுத்துங்கள், பயனுள்ளதாக்குங்கள்! என்னென்ன பொக்கிஷங்கள் இருக்கின்றதோ, சக்திகள், எண்ணங்கள், பேச்சு, கர்மம் கூட சக்தி தான் நேரமும் கூட ஒரு பொக்கிஷம், சக்தி பொக்கிஷம். எல்லாவற்றையும் பயன்படுத்திப் பயனடைய வேண்டும். ஸ்தூலதனமாக இருந்தாலும், அலௌக்க பொக்கிஷங்களானாலும், எல்லாவற்றையும் உபயோகப்படுத்தி, பலனடைய வேண்டும். வெற்றி மூரத் என்ற சர்டிபிகேட் வாங்கத்தான் வேண்டும். பயன் படுத்துங்கள், பயன்படுத்தும்படி செய்யுங்கள் ஒருவேளை யாராவது பயன்படுத்தவில்லை என்றால், பேச்சு மூலமாகவோ, அறிவுரை மூலமாகவோ அல்ல. தன்னுடைய சுப பாவனை, சுபகாம்னா மூலமாக மேலும் சதா சுப பாவனை, கொடுப்பதன் மூலம் பயனடையச் செய்யுங்கள். அறிவுரை மட்டும் கொடுக்காதீர்கள், ஒருவேளை அறிவுரை வழங்க வேண்டும் என்றால், மன்னிப்பு மற்றும் அறிவுரை மன்னிக்கும் ரூபத்தில் அறிவுரை வழங்க வேண்டும் இரக்கமுள்ளவர் ஆகுங்கள். கருணையுள்ளவர் ஆகுங்கள். (உங்களுடைய கருணை முகம் அவசியமாக அறிவுரை மூலம் நடக்கக்கூடிய பலனைத் தரும். பாருங்கள். (தற்காலத்தில் மருத்துவர்கள் கூட ஆப்ரேஷன் செய்கிறார்கள் ஆனால் அதற்கு முன்பாக மயக்கமுறச் செய்கிறார்கள். பிறகு அறுவை சிகிச்சை செய்கிறார்கள். முதலிலேயே அறுவை சிகிச்சை ஆரம்பிப்பதில்லை. டிஞ்ச்சர் கூட தடவுகிறார்கள். முதலில் சுத்தம் செய்து விட்டு, டிஞ்ச்சர் தடவுகிறார்கள் ஆகவே நீங்களும் கூட முதலில் கருணை காட்டுங்கள், பிறகு அறிவுரை வழங்கினால் பிரபாவம் உண்டாகும். இல்லையேல் என்ன நடக்கும்? நீங்கள் அறிவுரை வழங்குவீர்கள். அவர் ஏற்கனவே உங்களை விட அதிகமாக

அறிவுரை வழங்குபவராக இருப்பார். இதன் காரணமாக அறிவுரை வழங்குபவர். இன்னொருவர் கூறுவதை ஏற்க மாட்டார். நீங்கள் இப்படிச் செய்யக் கூடாது. இப்படித் தான் செய்ய வேண்டும் என்று நீங்கள் ஒரு பாயிண்ட் (கருத்து) மூலமாக அறிவுரை தருவீர்களானால், அவர் இதை மறுத்துப் பேசுவதற்கு 10-பாயிண்ட்கள் தயாராக வைத்திருப்பார். ஆதலால் மன்னிப்பு மற்றும் அறிவுரை கூடக்கூடவே இருக்க வேண்டும். ஆதலால் இந்த 70ம் ஆண்டுக்கான தலைப்பு பயன்படுத்துங்கள், பயன்படுத்தும்படி செய்யுங்கள். வெற்றி மூரத் ஆகுங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்துங்கள். டபுள் லைட் ஆக வேண்டுமானால், பயன்படுத்துங்கள். சம்ஸ்காரத்தையும் பயனுள்ளதாக்கி விடுங்கள். உங்களுடைய ஒரிஜினல் ஆதி சம்ஸ்காரம் இருக்கிறதல்லவா? தேவதா சம்ஸ்காரம், அநாதி சம்ஸ்காரம் அவற்றை ஆத்மாவில் விழிப்படையச் செய்யுங்கள் (எமர்ஜ்) தவறான சம்ஸ்காரங்களை சம்ஹாரம் செய்யுங்கள். ஆதி, அநாதி சம்ஸ்காரத்தை எமர்ஜ் செய்யுங்கள். இப்போது எல்லோருடைய குறை விசேஷமாக ஒன்று மட்டும் அப்படியே இருக்கிறது. சம்ஸ்காரம் மாறவில்லை சம்ஸ்காரம் மாறவில்லை என்பது. ஆதலால் 70ம் ஆண்டில் ஏதாவது விந்தை (கமால்) செய்து காட்டுவீர்கள் அல்லவா? செய்ய வேண்டும் செய்வீர்களா? செய்வீர்களா? அல்லது ஏற்கனவே செய்யப்பட்டு விட்டதா? நிமித்தமாக இருக்க வேண்டும் அவ்வளவு தான். நல்லது. பாப்தாதா எல்லா குழந்தைகளையும் பார்த்து பாட்டு பாடுகின்றார் (மகிமை செய்கின்றார்) வாஹ் பச்சே வாஹ் (ஆகா குழந்தையே ஆஹா) நல்லது இப்போது என்ன செய்ய வேண்டும்?

**சேவையின் வாய்ப்பு இந்தூர் ஜோன்:** நிறைய சேவாதாரிகள் வந்திருக்கிறார்கள். என்ன சேவை செய்தார்களோ உள்ளன்போடு சேவை செய்தார்கள். இதற்கான பிரத்ய பலனாகிய குஷியையும் அனுபவம் செய்தார்கள். குஷி கிடைத்ததா? சேவை செய்ததற்கான பிரத்யக்ஷபலன் குஷி மேலும் எதிர்காலத்திற்கான பலன் புண்ணியம் சேமிப்பானது. புண்ணியக்கணக்கு அதிகரித்து விட்டது. ஆதலால் தற்சமயத்திலும் பலன் கிடைத்தது, எதிர்காலத்திற்கும் சேமிப்பாகி விட்டது நல்லது. ஒவ்வொரு ஜோனுக்கும் சான்ஸ் கிடைக்கிறது. விசேஷ சான்ஸ் கிடைப்பதால், வாயுமண்டலத்தால் லாபமும், யக்ஞ சேவைக்கான புண்ணியக் கணக்கும், சேவை மூலம் எல்லா

பிராமணர்களுடைய சம்மந்தம், தொடர்பு மூலம் ஈஸ்வரிய அன்புறவும் அதிகரிக்கிறது ஆகவே மிக நன்றாகச் செய்தீர்கள். மேலும் நாளையிலிருந்து முடிக்கும் வேலை ஆரம்பமாகி விடும் மிக நன்றாகச் செய்தீர்கள். சேவையின் பலத்தை, சதா காலத்திற்காக நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும் நல்லது. மாதாக்களும் இருக்கிறார்கள், குமாரிகள் இருக்கிறார்கள். எல்லோரும் சேவாதாரிகள். பாண்டவர்கள் இருக்கிறார்கள், பாண்டவர்கள் கை உயர்த்துங்கள், பாண்டவர்கள் அதிகம் இருக்கிறார்கள். மாதாக்கள் கை உயர்த்துங்கள். குமாரிகள் கை உயர்த்துங்கள். யாரெல்லாம் சேவை செய்வதற்கான சான்ஸ் எடுத்துக் கொண்டீர்களோ, அவர்கள் என்ன உறுதிமொழி எடுத்துக் கொண்டு செல்கிறீர்களோ, அதன் பலனை சேவை கிடைத் ததற்குக் கைமாறாக கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் உறுதிமொழிக்கு லாபம் அடைய வேண்டும். வெறும் உறுதி மொழி மட்டுமல்ல, லாபம் நல்லது.

இந்தூர் நடியாட், ஹாஸ்டல் குமாரிகளும் கூட இருக்கிறார்கள். நடியாட்டியிலிருந்து கொஞ்சப்பேர் தான் இருக்கிறார்கள். நடியாட் குமாரிகள் நன்றாக இருக்கிறார்கள். சுய உன்னதி, சேவைக்கான உன்னதி இரண்டுமே நடந்து கொண்டிருக்கிறது. நன்றாக இருக்கிறது. குமாரிகள் டிரெயனிங் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக பயிற்சிக்காக குமாரிகள் வந்திருக்கிறார்கள் அல்லவா? நடியாட் குமாரிகளும் முன்னே வந்து விடுங்கள். நல்லது. இந்த எல்லா குமாரிகளும் நடியாட்டில் இருப்பவர்கள் ஆனாலும், மதுபனில் இருந்தாலும், இப்போது மதுபனைச் சேர்ந்தவர்கள் தானே ஆகவே எல்லோரும் என்ன லக்ஷியம் வைத்திருக்கிறீர்கள். வெற்றி மூரத் ஆவதற்காக பிரச்சினையுள்ளவர்களாகக் கூடாது. சமாதான மூரத் ஆக வேண்டும். வாயுமண்டலத்தின் பிரபாவத்தில் வரக்கூடாது. உங்களுடைய வாயுமண்டலத்தின் பிரபாவம் ஏற்படுத்த வேண்டும். இவ்வளவு பலம்: நிரம்பியிருக்கிறது. வாயுமண்டலத்தின் உதவி கிடைக்கவில்லையானால், என்ன உங்களுக்கு செய்வீர்கள்? உங்களுடைய வாயுமண்டலத்தை காண்பிப்பீர்களா? இவ்வளவு பலம் இருக்கிறதா? அப்படியானால் கரவொலி எழுப்புங்கள் வாழ்த்துக்கள் ரெம்ப நல்லது பாருங்கள் உங்களுடைய போட்டோ இதில் வருகிறது. உங்களுடைய போட்டோ எடுக்கிறார்கள். ஆதலால் பாப்தாதா ஒவ்வொரு மாதமும் உங்களைப் பற்றிய ரிப்போர்ட் கேட்டுப் பெறுவார்.

வாழ்த்துக்களும் கொடுப்பார். ஏனென்றால் வெற்றி மூரத், வெற்றிக்கு அதிகாரிகள். ஆகவே வெற்றிக்கு அதிகாரி ஆக வேண்டும் அல்லவா? நல்லது ஒரு விஷயத்திற்கான வாழ்த்துக்கள் இன்னுமிருக்கிறது அதாவது துணிச்சலோடு வந்து விட்டீர்கள். ஆதலால் உங்களுடைய துணிச்சலுடன் எடுத்து வைத்த அடி மீது பாப்தாதா நூறு மடங்கு உதவி இருக்கவே இருக்கிறது மன முடைந்து போகக்கூடாது. மனமகிழ்ச்சி ஒருவேளை ஏதாவது பிரச்சினை வந்தால் அந்த சமயத்தில் மனதில் வைத்துக் கொள்ளக் கூடாது. பாபா! நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். நாங்களோ சமாதான சொரூபமாகி விட்டோம் சரி தானா? நல்ல தைரியசாலிகள். மேலும் சதா தைரியத்தை கூடவே வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

கட்டக்கில் மிக நல்ல மெகா புரோகிராமாக இருந்தது. பூரியிலும்கூட புரோகிராம் மிகவும் நன்றாக இருந்தது: புரோகிராம் மிக நன்றாகச் செய்கிறீர்கள். செய்திக்கான காரியம் என்ன செய்ய வேண்டுமோ அந்த செய்தி எல்லோருக் கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் தெரிகிறது. பிரம்மா குமாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் இந்த காரியம் செய்ய விரும்புகிறார்கள். இதெல்லாம் கூட எல்லோருக்கும் தெரியும் ஆனால் பாப்தாதாவினுடைய மிகப் பழமையான மிகப் பெரிய சென்டர்கள் எது நடந்து கொண்டிருக்கிறதோ, அதைப் பற்றிய சுபமான எதிர்பார்ப்பு எது இருக்கின்றதோ, அது இது வரை பூரணமடையவில்லை. இது பற்றி பாப்தாதா குறை சொல்ல வேண்டியதாக இருக்கிறது. வாரிஸ் குவாலிட்டி மற்றும் சேவையை விட உயர்ந்த புருஷார்த்தத்தில் செய்யும் தீவிர குவாலிட்டி, அது பாப்தாதாவின் முன்பாக இன்னும் அதிகமாக அழைத்து வர வேண்டும். வி.ஐ.பிக்களும் வருகிறார்கள் ஆனால் வி.ஐபிக்கள் வி.வி.ஐ.பி. ஆக வேண்டும். வி.ஐ.பி. விஐபியாகவே இருந்து விடக்கூடாது ஐ.பி, ஐபியாகவே இருந்து விடக்கூடாது. பிராமண வாழ்க்கையை அனுபவம் செய்ய வேண்டும். எண்ணிக்கை என்னவோ அதிகமாகிக் கொண்டு தான் இருக்கிறது. இனி குவாலிட்டியின் பூச்செண்டு, ஒவ்வொரு ஜோனிலும் உருவாக வேண்டும். ஒவ்வொரு ஜோனிலும் நாலா பக்கமிருந்தும் அப்படிப்பட்ட நம்பிக்கையுள்ள ஆத்மாக்களுக்கு விசேஷ பாலனை கொடுத்து சமீப சம்மந்தத்தில் கொண்டு வர வேண்டும். இராஜ்யத்தின் பிளான் என்னமோ செய்கின்றீர்கள். இதனைத் தீவிரப்படுத்துங்கள்.

ஏனென்றால், குறைந்த பட்சம் தங்களுடைய முதல் பிறவியில் சக்திசாலியான எண்ணிக்கை அவ்வப்போது வருபவர்கள் அல்ல, நியமப்படி எப்போதாவது வருபவர்கள் அல்ல, பக்கவாக, யார் வெற்றியாளர் ஆவார்களோ, அதாவது முதலாவது தேதியில், முதலாவது பிறவியில் வரக்கூடியவர்களாக இருப்பவர்களுடைய பூச்செண்டு தயார் செய்ய வேண்டும். வேண்டுமானால், பிரஜையாகவும் ஆகட்டும், ஆனால் பிரஜையிலும் கூட விசேஷமானவர்கள் இருப்பார்கள் அல்லவா? பிரஜையும் கூட எஜமானன் என்ற அதிகாரம் இருக்குமல்லவா? ஏனென்றால் முதல் ஜன்மத்தின் அழகு, முதல் ஜன்மத்திற்கான சிறப்பு தனிப்பட்டதாக இருக்குமல்லவா? ஆதலால் ஒவ்வொரு ஜோனும், தங்களுடைய ரிசல்ட் தயார் செய்ய வேண்டும். புரோகிராம் நிறைய செய்து விட்டீர்கள் அதற்கு வாழ்த்துக்கள், பாப்தாதா அது நல்லது தான் என்கின்றார். பயன்படுத்துகிறீர்கள், ஆர்வம், உற்சாகத்தில் வருகிறீர்கள். பெரிய, பெரிய மனிதர்களை சம்மந்தம், தொடர்பில் கொண்டு வருகிறீர்கள். இப்படி நன்றாகவே செய்கிறீர்கள் ஆனால் ரிசல்ட் வேண்டும். குறைந்த பட்சம் ஒன்றரை லக்ஷம், லக்ஷம் பேர் வந்தால் அவர்களில் வெற்றி பெறுகின்றவர்கள் கொஞ்சப்பேர் இருப்பார்கள். ஆகவே அப்படிப்பட்ட புரோகிராம் செய்யுங்கள். மேலும் பழைய சென்டர் வாரிஸ் குவாலிட்டி புதுப்புதிதாக தயார் செய்யுங்கள் யார் பழமையானவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்கு வாழ்த்துக்கள் கிடைக்கும். புதுப்புது வாரிசு குவாலிட்டி தயார் செய்யுங்கள். ராயல் ஃபேமிலி ராயல் சம்மந்தம், தொடர்பில் உள்ளவர்களும் வேண்டுமல்லவா? நல்லது.

இப்போது ஒரு நிமிடம், ஒரு நிமிடம் பிரசித்தி பெற்றதல்லவா? ஒரு நிமிடம் நீங்கலெல்லாம் உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? போட்டோ எடுங்கள். ஆகவே இப்போது ஒரு நிமிடம் தங்களுடைய மனதில் மனப்பூர்வமாக இந்த உறுதிமொழியை உறுதி செய்து கோடிட்டு வையுங்கள். உங்களுடைய மனதில் பக்கா செய்யுங்கள். நல்லது.

நாலா பக்கமுள்ள எல்லா ஸ்வமான்தாரி குழந்தைகளுக்கு, சதா தந்தையின் உள்ளன்புக்கு பாத்திரமாக இருக்கின்ற சிரேஷ்ட

ஆத்மாக்களுக்கு சதா உழைப்பிலிருந்து விடுதலையடைகின்ற, ஜீவன் முக்தியை அனுபவம் செய்கின்ற, தீவிர புருஷார்த்தி குழந்தைகளுக்கு சதா உறுதிமொழி எடுக்கின்ற எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்குப் பலன் அடைவதன் மூலம் பேலன்ஸ் வைக்கக்கூடிய, ஆனந்த அனுபவத்தில் இருக்கின்ற குழந்தைகளுக்கு சதா மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கின்ற, மற்றவர்களையும் மகிழ்ச்சியடையச் செய்கின்ற இப்படிப்பட்ட சங்கமயுக சிரேஷ்ட பாக்கியத்திற்கு அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் திலாராமின் உள்ளத்திலிருந்து ஆசிகளைப் பெற்றுக் கொள்வீர்களாக. அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: நன்றாக இருக்கிறீர்கள் அல்லவா? எல்லோரும் உங்களைப் பார்த்து குஷியடைகிறார்கள். தந்தை மற்றும் குழந்தைகள் இருவரையும் பார்த்து குஷி அடைகிறார்கள். இருவரும் சமான் எல்லோருக்கும் செல்லமானவர்கள் எல்லோருக்கும் தாதிகளிடம் நிறைய அன்பு இருக்கிறதல்லவா? ஏனெனில் யார் நிமித்தமாயிருக்கிறார்களோ, நிமித்தமாயிருப்பவர்கள் மீது பொறுப்பும் இருக்கிறது. கூடவே அன்பும் அவ்வளவு இருக்கும். ஏனென்றால் எல்லோருக்கும் அன்பு மற்றும் ஆசிகள் அவர்களுடைய வாழ்க்கையில் லிப்ட் கிடைத்து விடுகிறது. நீங்களும் கூட நிமித்தமாக இருக்கிறீர்கள் அல்லவா? உங்களுக்கும் கூட லிப்ட் கிடைக்கிறது ஆனால் லிப்ட் என்ற கிப்ட் (அன்பளிப்பு) கூட நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும். அப்படி வைத்திருப்பவர்கள் நல்ல பலனை அடைவார்கள். இந்த எக்ஸ்ட்ரா (அதிகப்படியான) வரதானம் கிடைக்கிறது. எந்த ஒரு காரியத்திலாவது, ஈஸ்வரிய காரியத்தில், யக்ஞ சேவையில், யார் விசேஷ நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்களுக்கு ஆசிகள் மற்றும் அன்பு என்ற இரண்டு லிப்ட் கிடைக்கிறது அன்பு எப்படிப்பட்ட வஸ்து என்றால், எதிலிருந்து எதுவாக ஆக்கி விடுகிறது. இன்றைக்கு உலகிலும் கூட யாரிடமாவது என்ன வேண்டும் என்று கேளுங்கள், அன்பு வேண்டும் என்பார்கள். சாந்தி வேண்டும் என்பார்கள் இது அன்பினால் கிடைக்கும். ஆகவே அன்பு அதாவது ஆத்மீக அன்பு எல்லாவற்றிலும் சிரேஷ்டமானது.

பிரான்ஸ்காரர்கள் நிறைய நினைவுகள் கொடுத்திருக்கிறார்கள். பாப்தாதாவும் குழந்தைகளுக்கு விசேஷ சேவையில்

பரிவர்த்தனைக்கான வாழ்த்துக்கள் அளிக்கின்றார். மார்க் அதிகமாக உழைத்திருக்கின்றார். அவருக்கு குறிப்பாக விசேஷ வாழ்த்துக்கள். கரவொலி எழுப்புங்கள் பாருங்கள். எது பழைய கவர்ன்ட்மெண்டின் ரிகார்டாக இருந்ததோ அதாவது ஒரு வித கொள்கையை அனுசரித்து நடப்பது, இது எல்லா இடத்திலும் இல்லாமல் போய் விடும். மிக தைரியசாலி துணிச்சலுக்கு உதவி கிடைக்கிறது. மனதார யோகம் செய்தார். பலன் கிடைத்தது. சக்தியும் கிடைத்தது. பாப்தாதாவுக்கும் குஷி பரிவாரமும் குஷி அதனால் தான் கை தட்டினார்கள் அல்லவா?

**தாதிஜியிடம் பாபாவின் உரையாடல்:** உடல் நலமாக இல்லையா? காய்ச்சல் இருக்கிறதா? இவரே பகாதூர் பாருங்கள். குளிராக இருக்கிறதா? சூடாக இருக்கிறதா? விளையாட்டு காண்பிக்கிறது. உடல் பலவீனமடைந்து விடுகிறது. இப்போது பலம் வந்து கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் சொல்லுங்கள். நான் நலமாக இருக்கிறேன் என்று சொல்லுங்கள். நலமாக இருக்கிறேன். நான் முற்றிலும் நலமாக இருக்கிறேன். எல்லோருக்கும் அன்பு இருக்கிறதல்லவா? பாருங்கள். சாகார், அவ்யக்தமாகி விட்டார் மேலும் ஸ்தூலத்தில் நிமித்தமாக்கினார். இப்படி தக்க நேரத்தில் நிமித்தமாவது எவ்வளவு துணிச்சலான விஷயம் இப்படி வேண்டிய நேரத்தில் தைரியசாலியாக இருப்பவர்களுக்கு ஆயுள் உள்ளவரை உதவி கிடைக்கும். அச்சா!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 30.11.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சமயம் என்பது நெருங்கிக் கொண்டிருக்கிறது, அதற்கேற்ப தன்னை எல்லைக்குட்பட்ட பந்தனத்திலிருந்து விடுவித்து சம்பன்ன மற்றும் சம்பூர்ணமாக ஆகுங்கள்!

இன்று நான்கு திசைகளிலும் உள்ள சம்பூர்ண (நிறைவு) சமானமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். சமமான குழந்தைகள் தான் பாபாவின் உள்ளத்தில் மூழ்கியுள்ளார்கள். சமான் குழந்தைகளின் சிறப்புத்தன்மை, அவர்கள் சதா தடைகளற்றவர்கள் கெட்ட எண்ணங்களின்றி பணிவுடன் மற்றும் குளிர்ந்தவராக இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆத்மாக்கள் சதா சுதந்திரமாக இருக்கின்றார்கள். எந்தவிதமான எல்லைக்குட்பட்ட பந்தனங்கள் என்பது பந்தனங்களாக இருக்காது. தன்னைத்தான் கேளுங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட சுதந்திரமான ஆத்மாவாக ஆகி விட்டீர்களா? அனைவற்றையும் விட முதலாவது சுதந்திரம் தேக அபிமானம் என்ற சுதந்திரம். எப்போது விரும்பினாலும் தேகத்தினை ஆதாரமாக

எடுப்பார்கள், எப்போது விரும்பினாலும் தேகத்திலிருந்து விலகி விடுவார்கள். தேகத்தின் சுவர்ச்சியில் வரமாட்டார்கள், மற்றொரு விஷயம் சுதந்திர ஆத்மா எந்த ஒரு பழைய சுபாவம் மற்றும் சம்ஸ்காரத்தின் பந்தனத்தில் போகமாட்டார்கள். பழைய சுபாவம், சம்ஸ்காரத்திலிருந்து முக்தியாக இருப்பார்கள். எந்த ஒரு தேகதாரி ஆத்மாவின் சம்மந்தம், தொடர்பில் கவர்ந்திழுக்கப்பட மாட்டார்கள் சம்மந்தம் தொடர்பில் வந்தாலும் விடுபட்ட நிலை மற்றும் அன்பாக இருப்பார்கள் தன்னைத்தான் சோதனை செய்யுங்கள், ஏதேனும் ஒரு சிறிய கர்மேந்திரியம் உங்களை பந்தனத்தில் கட்டிப் போடுவதில்லை தானே? தனது சுய பெருமையை (சுவமான்) நினைவில் வைக்கவும், மாஸ்டர் சர்வ சக்திவான், திரிகாலதரிசி, திரிநேத்திரி, சுவதர்சன சக்கரதாரி, சுவமானத்தின் ஆதாரத்தில் மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தைகளை எந்த ஒரு கர்மேந்திரியமும் கவர்ச்சி செய்ய முடியுமா? ஏனென்றால் சமயம் என்பது அருகாமையில் உள்ளது, தன்னைத்தான் பாருங்கள், நொடியில் அனைத்து பந்தனத்திலிருந்து முக்தி அடைய முடியுமா? அல்லது ஏதாவது பந்தனங்கள் இருக்கின்றதா? இறுதி சமயத்தின் தேர்வில் நடைமுறையில், ஒரு நொடியில் எங்கே விரும்பினாலும், எவ்வாறு மனம், புத்தியை செலுத்த விரும்பி னாலும் அங்கு ஒரு விநாடியில் நிலையாகி விட வேண்டும். குழப்பத்தில் வரக்கூடாது. எவ்வாறு ஸ்தூல உடல் மூலமாக எங்கே செல்ல வேண்டும் என்று விரும்பினாலும் செல்ல முடியும் தானே? அதே போன்று புத்தியின் மூலமாக எந்த ஸ்திதியில் நிலையாக இருக்க விரும்புகின்றீர்களோ, அந்த நிலையில் நிலைத்திருக்க முடியும் தானே? எவ்வாறு விஞ்ஞானத்தின் மூலமாக லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் இருக்கின்றது, ஒரு விநாடியில் சுவிட்சைத் தட்டியவுடன் லைட் ஹவுஸ் நாலாபுறமும் ஒளியைக் கொடுக்கின்றது, சக்தியை கொடுக்கின்றது. நினைவு என்ற சுவிட்சைத் தட்டியவுடன் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகி ஆத்மாக்களுக்கு ஒளி மற்றும் சக்தியினைத் தர முடியும் தானே? ஒரு விநாடியில் அசரீரியாக ஆகுங்கள் என்று கட்டளை கிடைத்தவுடன், ஆகி விடுவீர்களா? அல்லது போராட நேருமா? இந்த ஒரு பயிற்சி பல காலம் செய்தால் தான் இறுதி காலத்தில் உதவியாக இருக்கும் அதாவது வெகு காலத்தின் பயிற்சி இல்லையென்றால், அச்சமயம் அசரீரியாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கும். ஆதலால் பாப்தாதா சமிக்ஞை தருகின்றார்,

இந்தப் பயிற்சியினை நாள் முழுவதும் காரியங்களைச் செய்யும் போதும் அப்பியாசம் செய்ய வேண்டும். இதற்காக மனதிற்கு கட்டுப்படுத்தும் சக்தி அவசியமானது. அதாவது மனம் என்பது கட்டுப்பாட்டில் வந்து விட்டால் எந்த ஒரு கர்மேந்திரியமும் உங்களை வசம் என்பது செய்ய இயலாது.

இப்போது அனைத்து ஆத்மாக்களுக்கும், உங்களின் மூலமாக சக்திகளின் வரதானம் வேண்டும். மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களாகிய தங்களின் மீது மற்ற ஆத்மாக்களுக்கு சுபமான ஆசை உள்ளது, எவ்விதமான உழைப்பின்றி வரதானம் மூலமாக, பார்வையின் மூலமாக, வாயுமண்டலத்தின் மூலமாக முக்தி செய்யுங்கள் தற்போது முயற்சி செய்து களைப்படைந்து விட்டார்கள். நீங்கள் அனைவரும் உழைப்பிலிருந்து முக்தியாகி விட்டீர்கள் தானே? அல்லது உழைக்க வேண்டியதாக உள்ளதா? உழைப்பிலிருந்து முக்தி அடைய எளிமையான வழிமுறை இதயப் பூர்வமாக பாபாவிற்கு சிநேகியாக ஆகி விடுங்கள் என்று கேட்டீர்கள் தானே? ஆத்மாக்கள் பிறவி எடுத்தவுடனேயே உறுதிமொழி கொடுத்தீர்கள். எப்போது பாபா தன்னுடையவராக ஆக்கிக் கொண்டாரோ, பிராமண வாழ்க்கை கொடுத்துள்ளார், பிராமண வாழ்க்கையில் உங்கள் அனைவரின் உறுதி மொழி என்ன? ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை? நினைவு உள்ளதா? கழுத்தினை அசையுங்கள், நல்லது கைகளை அசைக்கின்றீர்கள். உறுதியாக நினைவு உள்ளதா? அல்லது அவ்வப்போது மறந்து விடுகின்றதா? 63-பிறவிகளாக மறந்து போய் விட்டீர்கள், இப்போது ஒரு பிறவியில் நினைவு சொரூபமாக ஆகுங்கள். பாபா குழந்தைகளிடம் கேட்கின்றார்: குழந்தைப் பருவத்தில் என்ன உறுதி மொழியைக் கொடுத்தீர்கள் நினைவு உள்ளதா? எவ்வளவு எளிதாக ஆக்கி விட்டார். ஒரு பாபா தான் முழு உலகமும். ஒரே பாபாவிடம் அனைத்து சம்மந்தமும் ஒரே பாபாவிடம் அனைத்து பிராப்திகள். ஒரே ஒருவர் தான் படிப்பு கற்றுத் தருபவர் மேலும் பாலனை (வளர்ப்பு) செய்யக்கூடியவர் அனைவற்றிலும் ஒருவர் தான் பரிவாரம் கூட ஈஸ்வரிய பரிவாரம், ஆனால் ஒரு பாபாவின் பரிவாரம் தனித்தனியான பாபாவின் குடும்பமல்ல. ஒரே ஒரு குடும்பம் ஒருவர் மற்றவர் மீது குடும்பத்திற்குள் ஆன்மீக அன்பு, அன்புமட்டுமல்ல ஆன்மீக அன்பு பாப்தாதா நினைவு படுத்துகின்றார். பிறவி எடுத்தவுடன்

கொடுத்த உறுதிமொழிகளை, வேறு என்ன உறுதிமொழி கொடுத்தீர்கள். அனைவரும் மிகவும் உற்சாகத்துடன், ஆர்வத்துடன் பாபா முன்னால் இதயப்பூர்வமாகக் கூறினீர்கள், அனைத்தும் உன்னுடையது, மனம், உடல், செல்வம், அனைத்தும் உன்னுடையது. பாபாவிடம் கொடுத்ததை அடகு பொருள் ரூபத்தில் காரியத்தில் பயன்படுத்தக் கொடுத்துள்ளார். நீங்கள் பாபாவிடம் கொடுத்து விட்டீர்களா, கொடுத்து விட்டீர்கள் தானே? அல்லது கொஞ்சம், கொஞ்சம் திரும்பிப் பெற்றுக் கொள்கின்றீர்களா? திரும்பி பெற்றுக் கொண்டால் அடகுப் பொருளை மோசடி செய்கின்றீர்கள். சில குழந்தைகள் உரையாடல் செய்யும்போது கூறுகின்றார்கள், எனது மனம் குழப்பமாக உள்ளது, என்னுடைய மனம் என்று வந்தது? எப்போது எனதை, உன்னுடையது என்று அர்ப்பணிப்பு செய்து விட்டீர்களோ பிறகு எனது என்று எங்கிருந்து வந்த நீங்கள் அனைவருமே செலவின்றி இராஜாவாக ஆகி விட்டீர்கள். இப்போது உங்களுடையது என்று எதுவுமே இல்லை. ஒன்று கூட உங்களுக்கு சொந்தமில்லை, ஆயினும் இராஜாவாக ஆகி விட்டீர்கள். ஏன்? பாபாவின் பொக்கிஷங்கள் உங்களுடைய பொக்கிஷங்கள். ஆதலால் இராஜாவாக ஆகி விட்டீர்கள் தானே. பரமாத்மாவின் பொக்கிஷங்கள், குழந்தைகளின் பொக்கிஷங்கள் பாப்தாதா கொடுத்த உறுதிமொழியை நினைவுபடுத்துகின்றார். உனது என்பதனை எனதாக ஆக்காதீர்கள். பாபா கூறுகின்றார்: எப்போது பாபா, உங்கள் அனைவரையும் பரமாத்மாவின் பொக்கிஷத்தால் நிரம்பியவர்களாக ஆக்கி விட்டாரோ, பாபா பொறுப்புகளை ஏற்றுக் கொண்டார். எந்த ஒரு வார்த்தையால்? நீங்கள் என்னை நினைவு செய்யுங்கள், அனைத்து பிராப்திக்கும் அதிகாரியாக ஆகி விடுவாய் நினைவு மட்டும் செய்ய வேண்டும். பின்பு கூறினீர்கள் நான் உன்னுடையவன், நீங்கள் என்னுடையவர். இது உறுதிமொழி தானே? பாபா கூறுகின்றார்: பொக்கிஷங்களை சதா தனக்காகவும், அனைத்து ஆத்மாக்களின் காரியத்திற்காகவும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள். எந்தளவு காரியத்தில் ஈடுபடுத்துகின்றீர்களோ அந்தளவு பொக்கிஷங்கள் அதிகமாகும். அனைத்து சக்திகள் என்ற பொக்கிஷம் அனைத்து சக்திகளையும் காரியத்தில் பயன்படுத்துங்கள் நான் சர்வ சக்திவான் என்ற ஞானத்தினை புத்தியில் மட்டுமே வைக்காதீர்கள் ஆனால் அனைத்து சக்திகளையும் நேரத்திற்கு ஏற்ப காரியத்தில் ஈடுபடுத்துங்கள் மற்றும் சேவையில் ஈடுபடுத்துங்கள்.

பாப்தாதா அதிகமான குழந்தைகளின் கணக்குகளைக் காண்கின்றார். இரண்டு சக்திகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் காரியங்களில் சமயத்தில் சரியான நேரத்தில் பயன்படுத்துங்கள், அப்போது சதா நிர்விக்னமாக இருக்க முடியும் உங்களின் எதிரிலே தடைகள் வருவதற்கான சக்தியே இருக்காது. இது பாபா உத்திரவாதம் கொடுக்கின்றார். அனைத்து சக்திகளும் தேவையாக உள்ளது அதிகமாகக் காணும்போது பொறுமை சக்தி, மற்றும் உணரும் சக்தி உணரக்கூடச் செய்கின்றீர்கள், ஆயினும் நடைமுறை காரியத்தில் கொண்டு வருவதில் கவனம் என்பது குறைவாக உள்ளது. ஆதலால் எந்த சமயம் உணருகின்றீர்களோ, அந்த சமயம் நடத்தை மற்றும் தோற்றம் மாறி விடுகின்றது. நல்ல ஊக்கம், உற்சாகத்தில் வருகின்றீர்கள், உணருகின்றீர்கள், ஆயினும் மீண்டும் என்னவாகி விடுகின்றது. அனை வருமே அனுபவசாலிகள் தானே? பின்பு என்னவாகி விடுகின்றது. அதனை ஒவ்வொரு சமயமும் சொரூபத்தில் கொண்டு வருவதில் குறைவாக இருக்கின்றது இங்கே சொரூபமாக ஆக வேண்டும். புத்தியில் மட்டும் அறிந்து கொள்வது என்பது தனியானது, ஆனால் அதனை சொரூபத்தில் கொண்டு வர வேண்டும், இதுவே அவசியம். சில நேரங்களில் பாப்தாதாவிற்கு. சில குழந்தைகள் மீது இரக்கம் வருகின்றது. பாபா புரிந்து கொள்கிறார், குழந்தைகளால் செய்ய இயலவில்லை, குழந்தைகளுக்குப் பதிலாக பாபாவே செய்து விடலாமே! ஆனால் நாடகத்தின் ரகசியம், யார் செய்கின்றார்களோ, அவர்கள் அடைகின்றார்கள். ஆதலால் பாப்தாதா அவசியம் உதவி செய்கின்றார் ஆனால் குழந்தைகள் தான் செய்ய வேண்டியதாக உள்ளது.

பாப்தாதா பார்க்கின்றார்: குழந்தைகள் நல்ல, நல்ல எண்ணங்களை எண்ணுகின்றார்கள், அமிர்தவேளையில் பாப்தாதாவிடம் நல்ல, நல்ல சங்கல்பத்துடன் அதிகமாக மாலைகள் வருகின்றன. இது செய்வேன், அது செய்வேன் என்று பாப்தாதாவும் குஷியாக ஆகின்றார். ஆஹா! குழந்தைகளே ஆஹா! ஆனால் செயலில் வரும்போது ஏன் பலஹீனமாக ஆகி விடுகின்றீர்கள். இதற்கான காரணம் என்னவென்று பார்த்தீர்களா? பிராமண குடும்பத்தில் குழுவின் வாயுமண்டலம், மேலும் ஆங்காங்கு வாயுமண்டலம் பலஹீனம் ஆகின்றது, அதன் பாதிப்பானது சீக்கிரம் ஏற்பட்டு விடுகின்றது. அதன் பிறகு அவர்கள்

கூறுகின்ற வார்த்தை என்ன தெரியுமா? மிகவும் இனிமையான வார்த்தையில் பேசுகின்றார்கள், இது எல்லாம் நடக்கும், இது எல்லாம் இருக்கும், அப்படிப்பட்ட சமயத்தில் என்ன சங்கல்பம் செய்வது? இப்படியெல்லாம் நடக்கும். இப்படியெல்லாம் இருக்கும், இது சோம்பேறித்தனத்தைக் கொண்டு வருகின்றது. அச்சமயம் இம்மாதிரியாக பேசாமல், பாபாவின் கட்டளை என்ன? பாபாவிற்குப் பிரியமானது என்ன? பாபாவிற்கு எந்த விஷயம் பிடிக்கும்? பாபா கூறினாரா? செய்தாரா? பாபா நினைவு வந்தால் சோம்பேறித்தனம் நீங்கி விடும், ஊக்கம், ஆர்வம் வந்து விடும். அநேக விதத்தில் சோம்பேறித்தனம் வருகின்றது. நீங்கள் தங்களுக்குள் கலந்து பேசி லிஸ்ட் தயார் செய்யுங்கள். சாதாரணமான சோம்பேறித்தனம், ராயல் சோம்பேறித்தனம். சோம்பேறித்தனம் இருந்தால் உறுதியான எண்ணம் இருக்காது. உறுதி தான் வெற்றிக்கு ஆதாரமாக இவ்வாறு உள்ளது. ஆதலால் எண்ணத்தில் அளவில் மட்டுமின்றி சொரூபத்தில் கொண்டு வர வேண்டும்.

இன்று என்ன கேட்டீர்கள்? உறுதிமொழியை நிலை செய்தார், நல்ல, நல்ல உறுதிமொழிகளைச் செய்கின்றீர்கள். பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார். உறுதிமொழிகளைக் கேட்டவுடன், ஆனால் எந்தளவு உறுதிமொழிகளை கொடுக்கின்றீர்களோ அந்தளவு அதன்படி நடந்து பலனை எடுத்துக் கொள்வதில்லை. இதுவே பாப்தாதா விரும்புகின்றார், நம்மிடம் பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்று கேட்கின்றார், பாப்தாதா. வின் விருப்பம் மற்றும் நேரத்திற்கு முன்னால் அனைவருமே தயாராகி விட வேண்டும், நேரம் உங்களுக்கு ஆசிரியராக ஆகக் கூடாது. நீங்கள் நேரத்திற்கு எஜமானர்கள், ஆதலால் பாப்தாதா விரும்புவது, சமயத்திற்கு முன்பே சம்பூர்ணமாக ஆகி உலகத்தின் முன்னே பாபாவுடன் நீங்கள் குழந்தைகளும் பிரத்யட்சம் ஆக வேண்டும். நல்லது.

புதிய, புதிய குழந்தைகள் சந்திப்பதற்காக வந்திருக்கின்றீர்கள் கைகளை உயர்த்துங்கள். நேராகக் கைகைள உயர்த்துங்கள். நல்லது. பாப்தாதா புதிய, புதிய குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். பாக்கியசாலியான குழந்தைகள், தனது பாக்கியத் தினை அடைவதற்காக வந்து விட்டீர்கள். ஆதலால் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். இப்போது வந்திருக்கின்ற புதிய குழந்தைகளுக்குள் யார்,

என்ன அதிசயமான காரியம் செய்து காட்டப் போகின்றீர்கள்? பின்னால் வந்தாலும், முன்னால் சென்று காட்டுங்கள். பாப்தாதாவிடம் அனைத்து ரிசல்ட்டும் வந்து சேருகின்றது. நல்லது.

சேவை வாய்ப்பு டில்லி மற்றும் ஆக்ரா: டில்லியிலிருந்து வந்துள்ளவர்கள் எழுந்து நில்லுங்கள் கைகளை அசையுங்கள் மிகவும் நன்றாகச் செய்தீர்கள், வாய்ப்பினை எடுத்துக் கொண்டீர்கள், டீச்சர்கள் கூட நிறைய பேர் வந்துள்ளீர்கள், நல்லது பாப்தாதா டீச்சர்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார். ஏன்? பாபாவின் சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆகி விட்டீர்கள். பாப்தாதா டீச்சர்களை சதா சகோதரன் என்று கூறுகின்றார் பாப்சமான் சேவாதாரி ஆகி விட்டீர்கள், மற்ற குடும்பத்தில் உள்ளவர்கள் யாரெல்லாம் வந்திருக்கின்றீர்கள், குமாரிகள் வந்திருக்கின்றார்கள், குமாரர்கள் வந்திருக்கின்றார்கள். இப்போது டில்லியில் ஏதவாது புதுமையை செய்துக் காட்டுங்கள். மெகா நிகழ்ச்சிகள் நிறைய செய்து விட்டீர்கள், நிறைய மாநாடுகள் நடத்தி விட்டீர்கள், துறைகளாகப் பிரித்தும் நிறைய நிகழ்ச்சிகளைச் செய்து விட்டீர்கள், இப்போது வேறு என்ன புதுமை செய்ய வேண்டும்? ஏதாவது புதிய திட்டத்தினை டில்லி யில் உள்ளவர்கள் செய்துள்ளீர்களா? செய்துள்ளீர்களா? செய்து கொண்டு இருக்கின்றீர்களா? பாப்தாதாவிடம் துறைகளாகப் பிரித்து செய்த சேவையின் தகவல்கள் வருகின்றது, ஆனால் ஒவ்வொரு துறையினருக்கும் இத்தனை ஆண்டுகள் சேவை செய்தீர்கள், அதில் வேகமாக, தீவிரமாக முயற்சி செய்யும் குரூப் எவ்வளவு ஏற்பாடு உள்ளது, அது கொண்டு வரவில்லை. இதுவரை பூங்கொத்தினைக் கொண்டு வரவில்லை. மிகப் பெரிய மாலையை விடுங்கள், பூச்செண்டாவது கொண்டு வாருங்கள். ஒவ்வொரு துறையிலிருந்தும், அம்மாதிரியான எடுத்துக்காட்டு வேண்டும் அவர்கள் மைக்காகவும், சக்திசாலியாகவும் இருக்க வேண்டும். மைக்காக மட்டும் இருந்தால் போதாது, சக்திசாலியாகவும் இருக்க வேண்டும். அவரின் அனுபவத்தினை கேட்டு மற்றவர்களும் ஊக்கம், ஆர்வத்தில் வர வேண்டும் பாப்தாதா ஒவ்வொரு துறை யிலும் விரும்புகின்றார். அந்த குரூப் உலக சேவைக்குத் தகுதியானதாக ஆகி விட வேண்டும். நல்லது டில்லியை உள்ளவர்கள், டில்லி யை ராஜ்தானியாக ஆக்குங்கள். முதலில் டில்லியில் அம்மாதிரியான வாயுமண்டலத்தினை உருவாக்குங்கள். டில்லியின் செய்தி நாலாபுறமும் வெகு எளிதாகப்

பரவிடும், இது தான் விஷயம் நல்லது செய்தீர்கள் வாய்ப்பினை எடுத்துக் கொண்டீர்கள். பாதி மண்டபம் டில்லி தான் தென்படுகின்றது. இது புதுமை தான்! அடுத்த முறை ஏதவாது புதுமையைக் கொண்டு வந்து காட்டுங்கள். டில்லிக்கு மட்டுமே சொல்லவில்லை. எந்த ஒரு மாநிலமாவது ஏதாவது புதிய திட்டம் போட்டுக் கொண்டு வாருங்கள். பாப்தாதா அதிகமான சக்தி மற்றும் வரதானம் கொடுப்பார். எதனைச் செய்துக் கொண்டிருக்கின்றீர்களோ, அதனைச் செய்யுங்கள். ஏதாவது புதியதாக திட்டத்தினைப் போடுங்கள். யாத்திரை செல்வது, பாரம் பூர்த்தி செய்வது, இம்மாதிரியாக நிறைய செய்து விட்டீர்கள். இப்போது ஏதாவது புதிய திட்டத்தினைச் செய்யுங்கள். மாநாடுகள், மற்ற நிகழ்ச்சிகள் நிறைய செய்து விட்டீர்கள், சிந்தித்துப் பாருங்கள். டில்லி தான் முதலாவது எண்ணில் வர வேண்டும். ஏனென்றால் டில்லியின் மீது அவைரின் பார்வை உள்ளது. மேலும் நாடகத்தின்படி சேவை யின் ஆரம்பம் டில்லியில், ஜமுனா நதிக்கரை ஓரம் தான் சேவை ஆரம்பமானது. ஜமுனா நதிக் கரை ஓரம் ராஜ்யம் செய்யப் போகின்றீர்கள். ஜமுனா நதிக் கரை ஓரம் சேவையும் ஆரம்பமாகியது. இப்போது இவற்றிலும் முதலாவது எண்ணை அடை யுங்கள், மிகவும் நல்ல நல்லவர்கள் உள்ளார்கள், புதுமையான திட்டங்களைச் செய்யக் கூடியவர்கள், பாப்தாதா பார்க்கின்றார். பார்க்கின்றார். டில்லியில் உள்ளவர்களுக்கு வாழ்த்துக்கள் ஆனால் புதுமையான திட்டம் செய்யுங்கள் பலமடங்கு வாழ்த்துக்களைக் கொடுப்பார்.

**950-இளைஞர்கள்** வந்திருந்தார்கள். நல்லது. மிகவும் பெரிய குரூப் வந்திருக்கின்றீர்கள் பாப்தாதா செய்தியினைக் கேட்கின்றார். யாத்திரைக்கான திட்டத்தினை செய்து கொண்டு இருக்கின்றார்கள் ஆனால் பாப்தாதா விரும்புகின்றார், அனைத்து மாநிலங்களிலும், முழு பிராமண குடும்பத்தில் எத்தனை இளைஞர்கள் உள்ளார்கள், அவர்களிடம் என்னென்ன மாற்றங்கள் வந்துள்ளன, அவர்களின் பெயர், இடம், என்ன மாற்றம் அடைந்துள்ளார்கள், அவைகள் அனைத்தையும் எழுதி அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் அரசாங்கம் தானாகவே இளைஞர்களை அழைப் பார்கள். இளைஞர்களின் பெயர். ஊர் என்ன மாற்றம் அடைந்தார்கள் என்பதனைப் பற்றி மிகவும் சுருக்கமாகவும் எழுத வேண்டும். பரிவர்த்தனை என்ற புத்தகம், அதில் பெயர், ஊர் எழுதி அரசாங்கத்திற்குக் காட்டுங்கள். பின்பு இளைஞர்களுக்குத் தானாகவே

அழைப்பிதழ் கொடுப்பார்கள். அவ்வாறு திட்டம் தீட்டுங்கள். இப்போது எத்தனை பேர் வந்துள்ளார்கள் (950) கொஞ்சம் பேர் தானே சுமாராக ஆயிரம் பேர் இருப்பார்கள். அவர்களுக்காக என்று ஒரு புத்தகத்தினைத் தயார் செய்யுங்கள், நல்லது அவர்களின் மாறறங்களும் வேண்டும். அதில் எந்தளவு பரிபக்குவம் அடைந்துள்ளார்கள். இந்த ரிசல்ட்டு வேண்டும். அரசாங்கம் இளைஞர்களுக்காக நிறைய செலவு செய்கின்றது. ஆதலால் பரிவர்த்ததனையின் அதிசயத்தினைக் காட்டுங்கள். நல்லது. பாப்தாதா பார்க்கின்றார் -இளைஞர்களின் வர்க்கம் ஏதாவது காரியத்தினைச் செய்து கொண்டே இருக்கின்றார்கள். சேவையின் மீது கவனம் உள்ளது. ஆதலால் பரிவர்த்ததனை செய்து காட்டுங்கள். நன்கு பயிற்சி அடைந்துள்ளீர்கள். பயிற்சி பெற்றதை நடைமுறையில் செய்து ரிசல்ட்டினைக் காட்டுங்கள், தெய்வீக குடும்பம் உங்களை வாழ்த்தும். நல்லது.

**இரட்டை அயல்நாட்டினர்:** நல்லது. இரட்டை அயல்நாட்டினர் தன் மீதும், சேவையின் மீதும் நன்கு கவனம் கொடுக்கின்றார்கள் ஆனால் இதில் ஒரு விஷயத்தில் கவனம் கொடுக்க வேண்டும், கோடிட வேண்டும். தனக்குள் மாற்றத்தினைக் கொண்டு வருவதற்கான சங்கல்பம் செய்கின்றீர்கள். நல்ல உற்சாகம், ஆர்வம், தைரியத்துடன் செய்கின்றீர்கள். இதனை செய்தே ஆக வேண்டும் என்று கோடிடுங்கள். மாறியே தீர வேண்டும். நான் மாறி, உலகத்தினை மாற்ற வேண்டும். இந்த திடமான எண்ணத்தினைக் கோடிடுங்கள். அடிக்கடி நினைவு செய்யுங்கள். மற்றபடி பாப்தாதா மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார், வளர்ச்சியடைந்து கொண்டு இருக்கின்றீர்கள். சேவையின் மீதும், தன் மீதும் கவனமும் இருக்கின்றது, ஆயினும் முழுமையான அழுத்தம் நீங்கி விட்டதா? கவனம் கொடுக்கின்றீர்கள், இடை, இடையே மன அழுத்தமும் இருக்கின்றது. அதனை நீக்கி விடுங்கள். மற்றபடி தைரியமாக இருக்கின்றீர்கள். தைரியத்திற்கான வாழ்த்துக்கள். இங்கு அமர்ந்துள்ள அனைவருக்கும், உங்களின் தைரியத்திற்கான வாழ்த்துக்கள். கரங்களைத் தட்டுங்கள். நல்லது.

நீங்கள் இங்கே அமர்ந்துள்ளீர்கள். பாப்தாதாவிற்குத் தூரமாக அமர்ந்திருந்தாலும் நிறைய குழந்தைகளின் அன்பு நினைவுகள் வருகின்றது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தைகளைக் கண்ணிலே

வைத்துக் கொள்கின்றார், மிக, மிக இதயப்பூர்வமான வாழ்த்துக்களைக் கொடுக்கின்றார். பாரத தேசத்திலும், அயல்நாட்டிலும், நிறைய குழந்தைகளின் நினைவுகள் வருகின்றது. கடிதங்கள் வருகின்றது. ஈ.மெயில் வருகின்றது. அனைத்துமே பாபாவிடம் வந்து சேர்ந்து விட்டது. நல்லது.

பாப்தாதா ஒரு விநாடியில் அசரீரி பவ என்ற டிரில்லை பார்க்க விரும்புகின்றார். இறுதியில் தேர்ச்சி பெற வேண்டும் என்றால் இந்த பயிற்சி மிகவும் அவசியமானது. ஆதலால் இவ்வளவு பெரிய சபையில் அமர்ந்திருந்தாலும், ஒரு விநாடியில் தேகம் என்ற எண்ணத்திலிருந்து விலகிய நிலையில் இருங்கள், எந்த ஒரு கவர்ச்சியும், உங்களை ஈர்க்கக் கூடாது. நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள தீவிரமான முயற்சி செய்யும் குழந்தைகள், சதா சுயமாற்றத்தின் மூலம் உலக மாற்றத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள குழந்தைகள், விசேஷமான ஆத்மாக்கள். சதா பிரம்மாபாபா சமான் கர்மயோகி, கர்மத்தின் கர்மேந்திரியத்தின் கவர்ச்சியிலிருந்து முக்தியான (விடுதலை பெற்ற) ஆத்மாக்களுக்கு சதா திடமான எண்ணம், பேச்சு மற்றும் கர்மத்தில் சொரூபத்தில் வரக்கூடிய குழந்தைகள். பாபாவிற்குச் சமீபமாக, சமமான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் இதயப்பூர்வ மான வாழ்த்துக்கள், இதயப் பூர்வமான அன்பு நினைவுகளை ஏற்றுக் கொள்ளுங்கள் மற்றும் நமஸ்தே.

தாதிஜியிடம்: ஆரோக்கியமாக ஆகி விட்டீர்கள். இப்போது நோய் போய்விட்டது. மகாரதிகளிடம் வியாதிகள் கூட விடை பெற்றுக் கொண்டு செல்ல வருகின்றது. தனக்குள்ளேயே கர்மாதீத் நிலையை அடைவதற்கான ஒத்திகை செய்து கொண்டு இருக்கிறார். தாதி ஜானகி கூறுகின்றார்; தாதி கவலையற்ற இராஜாவாக இருக்கின்றார்கள். பாபா கூறுகின்றார்: உங்களுக்கு கவலை உள்ளதா? நீங்கள் கூட கவலையற்றவர்கள். இருவருமே நன்கு பாகம் ஏற்று நடிக்கின்றீர்கள். பாருங்கள், அனைவரையும் விட மிகவும் உற்சாகம் வருகின்றது. இனி என்ன புதுமையாக செய்வது? பாபா தான் தூண்டுதலைத் தர வேண்டும். பாப்தாதா கூறினார்: ஒவ்வொரு துறையின் பூங்கொத்தினை தயார் செய்யுங்கள், மைக்கும் மற்றும் சக்தியும் இருக்க வேண்டும். மைக்

மற்றும் தொடர்பில் உள்ளவர்கள் அல்ல, நெருக்கமான சம்மந்தத்தில் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பூங்கொத்தினைத் தயார் செய்யுங்கள். அந்த குரூப் சேவை செய்ய நிமித்தமாக ஆக வேண்டும். அவர்கள் மைக்காக இருப்பார்கள். நீங்கள் சக்திசாலியாக இருப்பீர்கள். அவர்களின் உள்ளத்திலிருந்து பாபா என்ற வார்த்தை வரவேண்டும், அப்போது தான் பிரபாவம் ஏற்படும். அவர்களை சம்மந்தத்தில், அருகாமையில் கொண்டு வாருங்கள். சில நேரம் ஆகின்றது. சிலசமயம் ஆன்மீக போதை குறைந்து விடுகின்றது. எங்கே சம்மந்தம், தொடர்பில் வருகின்றீர்களோ, அங்கே அந்த சம்மந்தம், தொடர்பில் இருப்பது நல்லது.

சகோதரி மோகினி அவர்களுக்கு கால் மூட்டு அறுவை சிகிச்சை மிகவும் நன்றாக ஆகி விட்டது. தங்களுக்கு மிக, மிக இதயப்பூர்வமான நினைவினை கொடுத்தார்கள். அவர்களிடம் கூறவும் பாப்தாதா தங்களின் தைரியத்தால் மிக, மிக இதயப்பூர்வமான ஆசீர்வாதம் மற்றும் அன்பு நினைவுகளைக் கொடுத்தார்கள் என்று கூறவும். அவர்கள் அனைவருக்கும் அன்பானவர்கள் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.12.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வரும் புத்தாண்டில் சிநேகம் மற்றும் சகயோகத்தின் தோற்றத்தை மேடையில் கொண்டு வாருங்கள். ஒவ்வொருவருக்கும் குணம் மற்றும் சக்திகளை அன்பளிப்பாக கொடுங்கள்!

இன்று பரமாத்ம தந்தை, நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய பரமாத்ம அன்புக்கு அதிகாரியாயிருக்கும் குழந்தை களைப் பார்க்கின்றார். இந்த பரமாத்ம அன்பு உலகில் கோடியில் ஒருவருக்குத்தான் கிடைக்கிறது. இந்த பரமாத்ம அன்பு சுயநலமற்ற அன்பு ஏனெனில் ஒரு பரமாத்மா தந்தை தான் நிராகார் மற்றும் நிரஹங்காரியாக இருக்கின்றார். மனித ஆத்மா சரீரதாரியாக இருக்கின்ற காரணத்தால், ஏதாவதொரு சுயநலம் வந்தே விடுகிறது. பரமாத்ம தந்தை தான் குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட சுயநலமற்ற அன்பைக் கொடுக்கின்றார். பரமாத்ம அன்பு பிராமண வாழ்க்கைக்கு விசேஷ ஆதாரமாகும். பிராமண வாழ்க்கையின் உயிர் நாடி, ஒருக்கால், பிராமண வாழ்க்கையில் பரமாத்ம அன்பு குறைவாக இருக்குமானால், அந்த அன்பில்லாத வாழ்க்கை இனிமையுள்ளதாக இருக்காது. சாரமற்ற வறண்ட வாழ்க்கையாகத்தான் இருக்கும். பரமாத்ம அன்பு தான் வாழ்க்கையில் சதா துணையாகவுமிருக்கிறது மேலும் துணைவனாக இருந்து உதவியும் செய்கின்றார். எங்கே அன்பு இருக்கிறதோ, துணை இருக்கிறதோ, அங்கே எல்லாமே எளிதாகவும், சரளமாகவும் ஆகி விடுகிறது. கஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறது என்று அனுபவம் உண்டாகாது. இந்த மாதிரியான அனுபவம் உங்களுக்கு இருக்கிற தல்லவா? பரமாத்மாவின் அன்புக்குப் பாத்திரமானவர்கள், எந்த ஒரு மனிதர் மற்றும் சாதனங்களின் ஆகர்ஷணத்திற்குள்ளாக மாட்டார்கள். ஏனென்றால் பரமாத்மா ஆகர்ஷணம், பரமாத்ம அன்பு, அப்படிப்பட்ட

ஒரு அன்பை அனுபவம் செய்விப்பதாக இருப்பதால், அந்த அன்பின் காரணத்தால் சதா லவ்லீன் அதாவது அன்பில் மூழ்கி யிருக்கிறார்கள். இதை பக்த ஜனங்கள் பரமாத்மாவில் ஐக்கியமாதல் என்பதாக புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். பரமாத்மாவில் ஐக்கிய மாவதில்லை ஆனால் பரமாத்ம அன்பில் (லவ்லீன்) மூழ்கி, லயித்து விடுகிறார்கள்.

பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளைப் பார்க்கின்றார். பரமாத்மாவுக்கு அன்புடையவர்களாக எல்லோரும் ஆகியிருக்கிறார்கள் ஆனால் ஒன்று (லவ்லி) அன்பான குழந்தைகள். இரண்டாவது (லவ்லீன் அன்பில் மூழ்கி லயமாகியிருக்கும் குழந்தைகள். ஆதலால் உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள். எல்லோருமே அன்பாயிருப்பவர்கள் தான் ஆனால் அன்பில் மூழ்கி அதில் ஐக்கிய மாகியிருக்கும் அனுபவம் எவ்வளவு? லவ்லீன் குழந்தைகளின் அடையாளம், அவர்கள் சதா பரமாத்டி)கட்டளைப்படி எளிதாக நடக்கிறார்கள். கட்டளைப்படி நடக்கவும் செய்கிறார்கள் மேலும் தேக உணர்வை தியாகம் செய்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஏனென்றால், அன்பு இருப்பதால், தியாகம் செய்வது ஒன்றும் கடினமல்ல. எல்லாவற்றிலும் முதலாவது கட்டளை யோகிபவ, பவித்திரபவ. தந்தைக்கு குழந்தைகளிடம் அன்பு இருப்பதன் காரணமாக, தந்தை குழந்தைகள் கஷ்டப்படுவதைப் பார்க்க முடிவதில்லை. ஏனென்றால், 63-ஜன்மங்கள் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பதை தந்தை அறிவார். இப்போது இந்த ஒரு அலௌகீக ஜன்மம் கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலிருந்து விடுதலையாகி, அதீந்திரிய சுக அனுபவத்தில் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் ஆகவே மகிழ்ச்சியோடு இருக்கிறீர் களா? அல்லது கஷ்டப்பட வேண்டியதாக இருக்கிறதா? அன்பு இருப்பதால் கட்டளைப்படி நடப்பது கடினமாகத் தெரிவதில்லை. ஒருவேளை கஷ்டப்பட வேண்டியதிருந்தால் அன்பில் சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று பொருள். எங்கேயாவது அன்பில் கொஞ்சம் லீக்கேஜ் இருக்கிறது என்பதாகும் இரண்டு விஷயங்களில் லீக்கேஜ் இருப்பதால் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியதாயிருக்கிறது. ஒன்று பழைய உலக ஆகர்ஷணம், உலகாயத சம்மந்தம், பொருட்கள், இதெல்லாம் இதில் அடங்கும். இரண்டாவது பழைய சம்ஸ்காரத்தின் ஆகர்ஷணம் இந்தப் பழைய உலகம், பழைய சம்ஸ்காரம் தன்பக்கமாக ஆகர்ஷித்து விடுகிறது. இதன் காரணமாக பரமாத்ம அன்பில் சதவிகிதம் வந்து

விடுகிறது ஆதலால் சோதித்துப் பாருங்கள். இந்த இரண்டு விதமான லீக்கேஜ்'லிருந்து விடுபட்டு விட்டீர்களா? நினைத்துப் பாருங்கள் ஆத்மாக்களாகிய உங்களுடைய அநாதி சம்ஸ்காரம் மற்றும் ஆதி சம்ஸ்காரம் என்னவாக இருந்தது? மேலும் இப்போது இந்தக் கடைசி பிராமண ஜன்மத்திலும் உங்களுடைய சம்ஸ்காரம் எது? அநாதி, ஆதி மற்றும் அந்திமத்திலும் கூட சிரேஷ்டமான சம்ஸ்காரம் தான். இந்தப் பழைய சம்ஸ்காரம் இடைப்பட்டது. இது அநாதியுமல்ல, ஆதியுமல்ல அந்தமத்தைச் சார்ந்ததுமல்ல ஆனால் உங்கள் எல்லோருடைய லக்ஷியம் எது? எந்த ஒரு குழந்தையைக் கேட்டாலும், ஒரே பதிலைத்தான் கூறுவார்கள். உங்கள் லக்ஷியம் எது? எங்கள் லக்ஷியம் பாப்சமான் ஆவது என்பார்கள். இது தானே? அப்படியானால் கை உயர்த்துங்கள் இந்த லக்ஷியம் பக்காவாக இருக்கிறதா? அல்லது இடையிடையே மாறி விடுகிறதா? ஆதலால் தந்தை குழந்தைகளிடம் கேட்கின்றார். தந்தை மற்றும் தாதா (பிரம்மாபாபா) இந்த இருவருக்கும் சமமான சம்ஸ்காரம் எது? சதா தந்தை எல்லா ஆத்மாக்களின் முன்னேற்றத்திலேயே கண்ணும், கருத்துமாயிருந்தார். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அன்பளித்ததோடு, கௌரவித்து உதவியாகவும் இருந்தார். இதேபோல நீங்களும், ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும், உதவியாளன் (சகயோகி) என்று அனுபவம் செய்கிறீர்களா? உதவி செய்பவர்களுக்கு, உதவி செய்வோம் என்பதாக இருக்கிறதா? இல்லை தானே? எப்படி பிரம்மாபாபா ஒவ்வொரு குழந்தைக்கும் உதவியாளராக இருந்தார், அன்பு தந்தார், இப்படி எல்லோருடைய அன்புக்கும் பாத்திரமுடையவர்களாக, உதவி செய்பவர்களாக ஆக வேண்டும். இதற்குத்தான் சமம் ஆவது என்பதாகும். ஒருவேளை எந்த ஒரு குழந்தைக்காவது. சம்ஸ்காரம் பரிவர்த்தனை செய்வதில் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியதாயிருக்கிறது என்றால் இதற்கு காரணம் என்ன? பிரம்மாபாபா தன்மீது கவனம் வைத்தார் ஆனால் கஷ்டப்படவில்லை. சம்ஸ்கார் பரிவர்த்தனையில் கஷ்டப்படுவதற்கான காரணம், அன்புடையவர் ஆகியிருக்கிறார்கள் (லவ்லி) ஆனால் அன்பில் மூழ்கியிருப்பவர்களாக ஆகவில்லை (லவ்லீன்).

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும், அன்பான குழந்தைகள் என்று அறிந்திருக்கின்றார். புரிந்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு

குழந்தையினுடைய ஜாதகத்தையும் அறிந்திருக்கின்றார். இருந்தாலும் என்ன சொல்வார்? லவ்லீ என்பார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரே படிப்பு, ஒரே பாலனை, ஒரே வரதானம் சதா கொடுத்துக் கொண்டேயிருக்கின்றார். கடைசி நம்பரில் வந்திக்கின்ற குழந்தையாக இருந்தாலும், அவரைப் பற்றியும் அறிந்திருக்கின்றார். இருந்தாலும், பாப்தாதா எந்த ஒரு குழந்தையினுடைய அவகுணத்தை, பலவீனத்தை, சங்கல்பத்திலும் கூட வைத்துக் கொள்வதில்லை. செல்லமானவர்கள், காணாமல்போய் கண்டெக்கப்பட்டவர்கள், இனிமையிலும், இனிமையானவர்கள் என்ற இதே திருஷ்டி, விருத்தியோடு பார்க்கின்றார். ஏனென்றால், இதே விருத்தி மற்றும் சிரேஷ்ட திருஷ்டி மூலமாக பலவீனமானவர்களும், மகாவீர் ஆகி விடுவார்கள். இதேபோல தன்னுடைய சிரேஷ்ட விருத்தி மற்றும் சுப பாவனை, சுபகாம்னா மூலமாக, எப்படிப்பட்டவரையும் பரிவர்த்தனை செய்ய முடியும் நீங்கள் எப்போது இயற்கையையும் கூட பரிவர்த்தனை செய்து காட்டுவோம் என்று சவால் விட்டீர்களோ, அப்போது ஆத்மாக்களை பரிவர்த்தனை செய்ய முடியாதா? பிரகிருதிஜீத் ஆகிறீர்கள் என்றால், ஆத்மா, ஆத்மாவினுடைய சிரேஷ்டபாவனை மூலம் (கல்யாண கி காம்னா) நன்மை செய்யும் அபிலாஷை மூலம் பரிவர்த்தனை செய்ய முடியாதா?

இப்போது புது வருஷம் ஆரம்பமாகப் போகிறதல்லவா? புத்தாண்டில், அனைத்து எல்லையற்ற பிராமண பரிவாரத்தில், ஒருவருக்கொருவர் தன்னுடைய சுபபாவனை, சிரேஷ் அபிலாஷை மூலமாக, ஒவ்வொருவரும், ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்வதில் உதவியாளர் ஆகுங்கள். பலவீனம் இருந்தாலும், இவருடைய சம்ஸ்காரத்தில் இந்த பலவீனம் இருக்கிறது என்பது தெரிந்திருந்தாலும், உங்களுடைய அன்பு, உதவி என்னும் சக்தி மூலமாக உதவியாளர் ஆகுங்கள். ஒருவருக்கொருவர் உதவி செய்பவர் என்ற முறையில் கைகோர்த்துக் கொள்ளுங்கள். இம்மாதிரி உதவும் கரங்கள் ஒன்று சேர்ந்திருக்கின்ற காட்சி எப்படியிருக்கு மென்றால், அன்பின் காரணமாக கை கோர்ப்பது உதவியைப் பகிர்ந்து கொள்வது என்று மாலையாகி விடட்டும் அறிவுரை கொடுக்காதீர்கள். உதவியாளராகுங்கள். ஏனென்றால், உங்களுடைய ஞாபகார்த்தம் விஜயமாலை, ஒவ்வொரு

மணியும், மணியோடு சேர்ந்திருக்கட்டும். அப்போதுதான் ஒரு மாலையாகும்.

ஆகவே எல்லோரும் பாப்தாதாவிடம் கேட்கிறார்கள். புத்தாண்டில் என்ன செய்ய வேண்டும்? செய்தி கொடுக்கும் காரியம் நிறைய செய்து விட்டீர்கள் செய்து கொண்டுமிருக்கிறீர்கள் செய்து கொண்டேயிருப்பீர்கள். இப்போது செய்தி யாருக்குக் கொடுத்தீர்களோ, அவர்களில் சகயோகிகளாக இருப்பவர்கள், அன்பாக இருப்பவர்கள் ஆகியோரை, செய்தி அவர்களுக்குக் கிடைக்கச் செய்ததன் அடையாளங்களாக இருப்பவர்களை இங்கு மேடைக்கு அழைத்து வாருங்கள் மகாதானி ஆகுங்கள். தங்களுடைய குணத்தை அளிப்பதன் மூலமாக சகயோகி ஆகுங்கள், ஆக்குங்கள் இவ்வாறு தங்களுடைய குணங்கள் பரமாத்மாவின் குணங்கள், அதாவது எதை தன்னிடம் ஆக்கிக் கொண்டிருக்கிறீர்களோ, அந்த குணத்தின் சக்தி மூலமாக மற்றவர்களுடைய பலவீனத்தை தூரமாக்கி விடுங்கள். (விலக்கி விடுங்கள்) இதைச் செய்ய முடியுமா? அல்லது கஷ்டமா? உச்சர்கள் கூறுங்கள். செய்ய முடியுமா? செய்ய முடியுமா? அல்லது செய்யத்தான் வேண்டுமா? யாரும் பலவீனமாக இருக்கக்கூடாது ஏனெனில் கோடியில் ஒருத்தர் அல்லவா? ஒருவேளை, கடைசி மணியாக இருந்தாலும் சரி, இவர்களும் கோடியில் ஒருவர் தானே? உங்களுடைய டைட்டில் (அந்தஸ்து) என்ன? மாஸ்டர் சர்வ சக்தி வான். அப்படியானால் சர்வ சக்திவானுடைய கடமை என்ன? சக்திகளை பரிமாறிக் கொள்வது பாபாவிடமிருந்து பெற்ற குணங்களை உங்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த உதவி எனும் அன்பளிப்பை ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டும். புத்தாண்டில் ஒருவர்க்கொருவர் அன்பளிப்பு கொடுக்கிறீர்கள் அல்லவா? ஆதலால் இந்த ஆண்டு, ஒருவர்க்கொருவர் குணங்களை அன்பளிப்பாகக் கொடுங்கள். இப்படி நன்மை செய்யும் பாவனையுடையவர்களாக இருந்தால், எப்படி பிரசங்கம் மூலமாக செய்தி கொடுக்கிறீர்கள் அல்லவா? பேச்சு மூலம் தங்களுடைய நன்மை செய்யும் பாவனை மூலம், நன்மை செய்யும் விருத்தி மூலம், நன்மையளிக்கும் வாயுமண்டலம் மூலமாக, இந்த குணங்களின் அன்பளிப்பை வழங்குங்கள் சக்திகளின் அன்பளிப்பை வழங்குங்கள். பலவீனமாயிருப்பவருக்கு உதவி செய்வது, இது வேண்டிய சமயத்தில்

செய்யும் உதவியாகும். கீழே விழுந்து விட்டவர்களை இன்னும் கீழே தள்ளி விடாதீர்கள். உயர்த்துங்கள். மேலே உயர்த்துங்கள். இவர் இப்படிப்பட்டவர், அப்படிப்பட்டவர் என்பதல்ல இவர் பிரபுவின் அன்புக்குப் பாத்திரமானவர். கோடியில் ஒரு ஆத்மா விசேஷ ஆத்மா வெற்றி அடையக் கூடிய ஆத்மா. இப்படிப்பட்ட பார்வை (திருஷ்டி) இருக்கட்டும். இப்போது விருத்தி, திருஷ்டி, வாயுமண்டலத்தை மாற்றுங்கள். ஏதாவது புதுமை செய்ய வேண்டுமல்லவா? பலவீனத்தைப் பார்த்தாலும், பார்க்காதீர்கள். உற்சாகப்படுத்துங்கள். உதவி செய்யுங்கள். இப்படிப்பட்ட பிராமணர் குழுவைத் தயார் செய்தால், பாப்தாதா வெற்றியடைந்ததற்கான கரவொலி செய்வார். நீங்களும் கூட அடிக்கடி கரவொலி எழுப்புகிறீர்கள் அல்லவா? பாப்தாதா வாழ்த்துக்கள், நல் வாழ்த்துக்கள். கார்டுகளும் அனுப்புகிறீர்கள் அல்லவா? அதற்கான கரவொலி செய்யப்படும். நீங்களும் கூட, கூடவே கரவொலி எழுப்புவீர்கள் அல்லவா? இப்போது கரவொலி எழுப்பினீர்கள் நன்றாக இருந்தது ஆனால் உலகத்திலுள்ளவர்கள் கரவொலி செய்ய வேண்டும். எல்லோருடைய வாயிலிருந்தும் செய்தி வரட்டும், எங்களுக்கு இஷ்டமானவர்கள் வந்து விட்டார்கள். எங்களது பூஜைக்குரியவர்கள் வந்து விட்டார்கள். இலக்ஷியம் உறுதியாயிருக் கிறதல்லவா? உறுதிதானே லக்ஷியம் செய்யத்தான் வேண்டுமா? அல்லது பார்க்கலாம், திட்டம் போடலாம். அப்படியா? செய்யத்தான் வேண்டும். திட்டம் போடுவதென்ன? செய்யத்தான் வேண்டும். இப்போது எல்லோரும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி இவர்களை காத்திருக்கச் செய்யாதீர்கள். பிரத்யக்ஷம் செய்யும் காரியத்தைச் செய்யுங்கள் பாருங்கள், பிரகிருதியும் கூட (தத்துவங்கள்) எவ்வளவு கஷ்டப்படுகிறது? பிரகிருதியையும் சாந்தப்படுத்துங்கள். நீங்கள் பிரத்யக்ஷம் ஆகி விட்டால், விஷ்வ சாந்தி தானாகவே ஏற்பட்டு விடும். நன்று.

இந்த முறையும் கூட புதுப்புதுக் குழந்தைகள் நிறைய பேர் வந்திருக்கிறார்கள். நல்லது. பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார் எங்கெங்கெல்லாம், மூலை முடுக்குகளில் மறைந்திருந்த, காணாமல் போன குழந்தைகள் வந்து கொண்டிருக்கிறார்கள். இனி பின்னால் வரக்கூடியவர்களும், நேரம் குறைவாக இருப்பதால், தீவிர புருஷாரத்தம் செய்தால் நம்பர் முன்னே பெற முடியும். இப்போதும் கூட

டூலேட் போர்டு தொங்க விடப்படவில்லை. லேட் போர்டு தான் உள்ளது. ஆதலால் எவ்வளவு புருஷார்த்தம் செய்ய வேண்டுமோ அவ்வளவு முன்னேற முடியும். யார், முதன் முதலில் வந்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. எல்லோரும் யாரெல்லாம் கை உயர்த்தினீர்களோ, அவர்கள் எல்லாம் தீவிர புருஷாரத்தம் செய்ய வேண்டுமல்லவா? இப்போது டீலா புருஷார்த்தம் செய்யும் நேரம் முடிந்து விட்டது. நடந்து செல்வதும் முடிந்து விட்டது. இப்போது பறக்க வேண்டிய நேரம். ஆதலால் டபுள் லைட் ஆகி பறக்க வேண்டும். யாரெல்லாம் ஆக வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் ஆக முடியும். பிறகு குற்றம் சுமத்தக்கூடாது. பாபா தாமதமாக அழைத்தார் என்று குறை சொல்லக் கூடாது. இப்போதும் கூட டபுள் லைட் ஆகி பறக்க முடியும். இவ்வளவு ஆர்வம் இருக்கிறதா? யாரெல்லாம் கை உயர்த்தினார்களோ, அவர்கள் சொல்லுங்கள் அவ்வளவு ஆர்வம் இருக்கிறதா? முன்னேறிக் காட்டுவோம் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதாவோ, முன்கூட்டியே வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்.

நல்லது **குஜராத் (குழந்தைகளின்) சேவை.** குஜராத்காரர்கள் தான் சந்தித்து மகிழ்வதற்காக வந்திருக்கிறார்கள். குஜராத்திலிருந்து யாரெல்லாம் இருக்கிறார்களோ, வந்திருக்கிறார்களோ, சேவைக்காக வந்திருந்தாலும் சரி, அவர்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் வந்திருக்கிறார்கள். மிக்க நன்று நல்ல வாய்ப்பை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் குஜராத்துக்கு பாப்தாதா கூறுகின்றார். சிந்தியில் பழமொழி ஒன்று இருக்கிறது. "யார் நெருக்கமாக இருக்கின்றார்களோ, அவர்கள் உள்ளத்தில் இருக்கிறார்கள்" என்பது அதாவது எல்லோரிலும் அருகாமையிலும், அருகாமையில் இருப்பது குஜராத். யார் அருகாமையில் இருக்கிறார்களோ, அவர்களை வாசப்படியில் (நுழைவாயில்) இருப்பவர்கள் ஆவர். அதாவது கூப்பிட்ட உடனேயே, வந்து சேர்ந்து விடுவார்கள். ஆகவே அப்படி எவர்ரெடியாக இருப்பவர்கள் தானே, குஜராத், எப்போது வேண்டுமானாலும் சரி, வாருங்கள் என்றால் வந்து விடுவார்கள். அப்படித் தானே? பரிவாரத்தைப் பார்க்க மாட்டார்கள். என்ன செய்வது? வந்து விடுவார்கள். எவர்ரெடி குஜராத் நன்றாக இருக்கிறது. சாகார் பிரம்மாவின் பிரேரணை மூலம் ஸ்தாபனை செய்யப்பட்டது குஜராத்.

குஜராத், குஜராத்துக்கு அழைப்பு அனுப்பவில்லை. பிரம்மாபாபா குஜராத்தில் ஆரம்பித்தார். ஆதலால் குஜராத்தை மேலிருந்து விசேஷ மாக பிரம்மாபாபாவின் பார்வை விழுந்து கொண்டிருக்கிறது மேலும் குஜராத் புருஷார்த்தமும் செய்திருக்கிறது நல்ல நல்ல சென்டர்களையும் திறந்திருக்கிறார்கள். குஜராத்தில் எத்தனை சென்டர். 300-சேவா கேந்திரம் உபசேவா கேந்திரம் மூவாயிரம் கீதாபாடசாலைகள். சரி எல்லோரிலும் அதிகமான சென்டர்கள் எந்த ஜோனில் இருக்கிறது? (பம்பாய்-மகாராஷ்டிரம்) நல்லது மகாராஷ்டிராகாரர்கள் வந்திருக்கிறார்களா? (இன்றைக்கு வரவில்லை). எல்லோரிலும் அதிகம் மகாராஷ்டிராவில் உள்ளது. குஜராத் நன்றாக சேவை செய்து கொண்டிருக்கிறது. குஜராத்தில் அதிகமாக விஸ்தாரமாகியிருக்கிறது. இனி என்ன செய்ய வேண்டும்? விஸ்தாரமாக இருக்கிறது. நன்றாக விஸ்தரித்திருக்கிறீர்கள். இனி குஜராத்காரர்கள் நம்பர் ஒன் வாரிஸ் தயார் செய்யட்டும். குறைந்த பட்சம், பெரிய சென்டர் எதெல்லாம் இருக்கிறதோ, யார் பழைய வாரிசுகளாக இருக்கிறார்களோ, அவர்கள் இருக்கிறார்கள் ஆனால் புதிதாக இன்னும் வாரிசுகள் வேண்டும். சரி ஒவ்வொருவராக தயாராகட்டும். ஏனெனில் மாலையில் மணியாக யார் வருவார்கள் என்றால், யார் வாரிசு குவாலிட்டியாக இருப்பார்களோ அவர்கள் தான். சரி. மாலை தயாரிக்க வேண்டுமல்லவா? 16108-மணி மாலை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது, ஒருவேளை பாப்தாதா 108-மணி மாலை தயார் செய்யுங்கள் என்றால், செய்ய முடியுமா? தயாராகி விடுமா? தாதிகள் கூறட்டும். 108-மணி மாலை தயாரிக்க முடியுமா? (தாதிஜி தயார் செய்ய முடியும் என்றார்) தயாராக இருக்கிறார்களா? 108-மணி மாலை தயாராகி விட்டதா? ஆம் பாபா தயாராக இருக்கிறது. சரி எழுதிக் காண்பியுங்கள். தயாராக இருந்தால் மிகவும் நல்லது வாழ்த்துக்கள். நல்லது. 16000க்கு, பாதி வரை தயாராகியிருக்கிறது. பாதிவரை என்ன? அதை விட அதிகமாகவே ஆகியிருக்கிறது நல்லது தானே! பாருங்கள் குப்த ரூபத்தில் தயாராகியிருக்கிறது. உங்களுடைய தாதி பார்த்து விட்டார். நல்லது. இப்போது எல்லோரும் உங்களிடம் கேட்பார்கள் மாலையில் என்னுடைய பெயர் இருக்கிறதா? நல்லது. இப்படிப்பட்ட சுப பாவனை. சுப நம்பிக்கையுள்ளவர்கள் தயார் செய்து விடுகிறார்கள். இப்போது, எல்லோரும் கேட்டீர்கள் அல்லவா?

தன்னைத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். நான் அந்த மாலையில் எவர்ரெடியாக இருக்கிறேனா? நல்லது. இனி என்ன செய்ய வேண்டும்?

**கைடு (CAD) குரூப்:** நல்லது. இதுவும் கூட செய்தி பரவுவதற்கான நல்ல சாதனம் மிக நன்றாக இருக்கிறது. ஏனென்றால், நடைமுறையில் பார்க்கிறோம் அல்லவா? மேலும் செலவில்லாமல் தியானம் செய்வதன் மூலம் குணமாவது என்பது எல்லோருக்கும் பிடித்தமான விஷயம் இப்போது கொஞ்சம், கொஞ்சமாக இதை விருத்தி செய்து கொண்டேயிருங்கள் கேட்டீர்களா? செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் வெற்றியும் கிடைக்கிறது இன்னும் அதிகமாகவே கிடைக்கும். மற்றபடி பாப்தாதா இந்தக் காரியத்தில் நிமித்தம் ஆனதற்காக வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். காரியாம்சத்தில் கவர்மெண்ட் வரை சென்றடைந்திருக்கிறது. இன்னும் விரிவடைந்து கொண்டேயிருக்கும். தியானம் செய்வதன் மகிமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். மற்றபடி பாப்தாதாவுக்கு இந்த விதி விருப்பமுள்ளதா இருக்கிறது. நல்லது.

**டபுள் விதேஷி:** டபுள் விதேஷிகள் சதா டபுள் புருஷாரத்தம் செய்து கொண்டேயிருப்பீர்கள் அல்லவா? பழைய உலகம், பழைய சம்ஸ்காரம். இவற்றின் அடையாளமே இருக்கக்கூடாது. இது தான் டபுள் புருஷார்த்தம், அப்படியானால், இப்படிப்பட்ட புருஷார்த்தம் நடந்து கொண்டிருக்கிறதா? நடக்கிறதா? தலையசைத்துக் காட்டுங்கள். இந்த டபுள் புருஷார்த்தத்தில் கவனம் யாருக்கெல்லாம் இருக்கிறதோ (அட்டென்ஷன்) அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. அப்படியானால் பிரத்யக்ஷம் வெளி நாட்டிலிருந்து தான் ஆகும். டபுள் புருஷார்த்தம் செய்பவர்களுக்கு வெற்றி பிரத்யக்ஷம் ஆகி விடும். பாப்தாதாவுக்கு மிக்க மகிழ்ச்சி ஏனென்றால் டபுள் ஃபாரினர்ஸ், சேவை மற்றும் புருஷார்த்தம் இந்த இரண்டு பக்கமும் அட்டென்ஷன் (கவனம்) கொடுத்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக வாழ்த்துக்கள் ஆனால் இனி இந்த அட்டென்ஷனில் (கவனம் கொடுப்பதில்) இன்னும் தீவிரத் தன்மையைக் கொண்டு வாருங்கள், எந்த ஒரு சென்டருக்குச் சென்றாலும், அது மதுபன் வாயுமண்டலத்தைப் போல அனுபவம் ஆக வேண்டும். இப்போது ஒவ்வொரு இடமும் (சென்டரும்) இப்படிப்பட்ட

வாயுமண்டலத்தின் அனுபவம் ஏற்படும்படி செய்யட்டும். எப்படி மதுபனில் யாராவது வந்தால், பிரபாவம் உண்டாகிச் செல்கிறார்கள் அல்லவா? எந்த விஷயத்தில் ஆகட்டும், இதே போல எந்த ஒரு ஆத்மா வந்தாலும், எந்த ஒரு விஷயமானாலும், பிரபாவம் உண்டாகிச் செல்ல வேண்டும். இதனால் அடிக்கடி வர வேண்டும் என்ற எண்ணம் வரும்படியாக இருக்க வேண்டும், வர வேண்டும். முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். மற்றபடி, கவனம், புருஷார்த்தம், லக்ஷியம் ஆகியவற்றில் பிரபாவம் ஏற்பட வேண்டும். இப்படியிருந்தால் வராமலிருக்க மாட்டார்கள். ஆகாமல் இருக்க மாட்டார்கள். நல்லது ஒவ்வொரு சந்திப்பிலும் வெளி நாட்டினர் வருகிறார்கள். இதை விட மதுபன் மிக நன்றாக இருக்கிறது. பிடித்தமானதாக இருக்கிறது. இன்டர்நேஷனல் ஆகி விடுகிறதல்லவா? வெற்றியாளர்கள் தான். வெற்றித்திலகம் பிரகாசித்துக் கொண்டிருப்பது தெரியட்டும். யார் பார்த்தாலும் வெற்றித்திலகம் பிரகாசித்துக் கொண்டிருப்பது தெரியட்டும். எத்தனை முறை வெற்றியடைந்திருக்கிறீர்கள்? அநேக தடவை ஆகியிருக்கிறீர்கள். இன்னமும் கூட அடைந்து கொண்டேயிருப்பீர்கள். இரண்டு விதத்திலும் விஜயி பவ என்ற வரதானம் நடத்தையிலும், முகத்திலும் தெரியட்டும். நிச்சயம் மற்றும் நஷா எற்கனவே இருக்கிறது. நாங்கள் வெற்றியடையவில்லையேல், வேறு யார் அடைய முடியும்? இந்த போதை (நஷா) இருக்கிறதல்லவா? அது, எதைச் செய்ய வேண்டுமோ, அதை முழுமையாகச் செய்ய வேண்டும். அரை குறையாக அல்ல என்பதாகும். ஆகவே இதிலும் சம்பன்னமாகத்தான் வேண்டும். சரிதானா? பக்காவாக இருக்கிறதல்லவா? கச்சாவாக இல்லையல்லவா? நல்லது.

தற்காலத்தில் உலகில் இரண்டு விஷயங்கள் விசேஷமாக நடக்கின்றது. ஒன்று எக்சர்சைஸ் (தேகப்பயிற்சி) இரண்டாவது உணவில் கவனம், ஆகவே நீங்களும் கூட இந்த இரண்டையும் செய்கின்றீர்களா? உங்களுடைய எக்சர்சைஸ் எது? சரீர சம்மந்தமான தேகப்பயிற்சி எல்லோருமே செய்கிறார்கள் ஆனால் மனப்பயிற்சி, இப்போது பிராமணன், பிராமணனிலிருந்து பரிஷ்தா மற்றும் பரிஷ்தாவிலிருந்து தேவதா. இந்த மனதிற்கான டிரில் (பயிற்சி) சதா செய்து கொண்டேயிருக்க வேண்டும். மேலும் சுத்தமான உணவு, மனதிற்கு சுத்த சங்கல்பம் ஒருவேளை வீணான சங்கல்பம், எதிர்மறையான

சங்கல்பம் வந்தால், இது மனதிற்கு அசுத்தமான உணவாகும். ஆதலால் மனதில் சதா சுத்த சங்கல்பம் இருக்கட்டும். இரண்டையும் செய்யத் தெரியுமல்லவா? எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரம் சுத்த சங்கல்ப சொரூபமாகி விடுங்கள். நல்லது.

நாலா பக்கமுமுள்ள பரமாத்ம அன்பிற்கு அதிகாரியாயிருக்கும் விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா ஒருவருக்கொருவர் சக யோகியாக இருக்கக்கூடிய பாபாவுக்கு சிநேகமுள்ள மற்றும், சகயோகி ஆத்மாக்களுக்கு சதா வெற்றியாளர் ஆகி வெற்றிக் கொடியை உலகில் பறக்க விடுகின்ற, இந்த லக்ஷியத்தை நடைமுறைப்படுத்தவிருக்கும் வெற்றியாளர்களாகிய குழந்தைகளுக்கு சதா இந்த பழைய உலகம் மற்றும் சம்ஸ்காரத்தின் ஆகர்ஷணத்திலிருந்து விடுபட்டிருக்கின்ற, பாபா சமானமான குழந்தைகளுக்கு திலாராம் தந்தையின் உளப்பூர்வமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன் -தாதிஜியுடன்: நல்ல மகிழ்ச்சிக்குரிய விஷயத்தைக் கூறினீர்கள்.

மோகினி சகோதரியிடம்: நல்லது விடுதலையாகி வந்து விட்டீர்கள். எளிதாகி விட்டதல்லவா? எல்லா பிராமணர்களின் ஆசிகளும் இருந்தது. சூலாயுதமாயிருந்தது, முள்ளாகி விட்டது. பாப்தாதாவுக்கு குஷி உங்களுடைய மனசா சக்தியின் மகிமை நன்றாக இருக்கிறது.

தாதிஜியுடன்: மிக நல்ல பார்ட் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் பார்த்து எல்லோருக்கும் பரிஷ்தா வாழ்க்கை நினைவுக்கு வருகிறது. நியாரா அவுர் பியாரா (விலகியிருப்பது மற்றும் அன்பாயிருப்பது).

குஜராத்தின் முக்கியமான 13-சகோதரிகளுடன்: நல்ல நல்ல மகாவீர்கள். மகாவீரர்களின் வேலை, வெற்றியடைவது, அடையச் செய்வது எல்லோரும் நல்ல சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிக சேவை நடந்து கொண்டேயிருக்கும். பாப்தாதா குழந்தைகளின் ஆர்வம் மற்றும் உற்சாகத்தைப் பார்த்து குஷியடைகின்றார். நல்லவிதமாக குஜராத்தில் விஸ்தரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் கூட விஸ்தரிப்பீர்கள். பாப்தாதாவுக்கு

எல்லா குழந்தைகளும் நம்பிக்கை தீபங்களாக காட்சியளிக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. குழுவும் நன்றாக இருக்கிறது. ஒவ்வொருவரும் விசேஷமானவர்கள் நல்லது. குஷி, குஷியாக பங்கிடுபவர்கள். சரளாதீதி கேட்டார். தாதி மாலையில் எங்கே வைத்திருக்கின்றார்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், நாங்கள் இருப்போமல்லவா? அப்படி நினைக்கிறீர்கள் கொஞ்சம் ஒருவருக்கொருவர் சகயோகம் கொடுத்து, இன்னும் என்ன பாக்கி இருக்கிறதோ, அதை முடித்து விடுங்கள். எல்லோரும் பாபா சமான் ஆகக்கூடியவர்களாக இருக்கிறார்கள். புதுமை என்ன செய்வது சொன்னேன் அல்லவா? ஒவ்வொரு சென்டரும் குறைந்தபட்சம், ஒரு வாரிசு தயார் செய்ய வேண்டும். இந்த ஆண்டு அதைக் கொண்டு வர வேண்டும் 21-வாரிசுகளை அழைத்து வர வேண்டும். இதை ஆரம்பியுங்கள். அந்தஸ்து பற்றி அறிவீர்கள் அல்லவா? இவர்கள் எல்லோரும் பாபாவினுடையவர்களாக ஆக்குவீர்கள் அல்லவா? உங்களுடையவராக ஆக்க மாட்டீர்கள் அல்லவா? நல்லது சிவபாபா நினைவிருக்கிறதா?

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.12.2005 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புத்தாண்டில், தங்களிடமுள்ள பழைய சம்ஸ்காரங்களை யோக அக்னியில் பஸ்மம் செய்து, பிரம்மாபாபா தியாகம், தபஸ்யா மற்றும் சேவையில் சமானமாக நம்பர் ஒன் ஆகுங்கள்!

இன்று பாப்தாதா, எதிரில் அமர்ந்திருப்பவர்கள் அல்லது தூரமாக இருந்தாலும் உள்ளத்தில் அமர்ந்திருப்பதால் அருகிலேயே இருப்பவர்கள், மற்றும் நாலா பக்கமும் உள்ள எல்லோருக்கும் மூன்று வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஒன்று புது வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள். இரண்டாவது புது யுகத்திற்கு வாழ்த்துக்கள். மூன்றாவது இன்றைய தின ஆண்டுக்கான வாழ்த்துக்கள். நீங்கள் எல்லோரும் கூட புத்தாண்டிற்கான வாழ்த்துக்களை அளிப்பதற்காகவும், வாழ்த்துக்களைப் பெறுவதற்காகவும் வந்திருக்கின்றீர்கள். உண்மையில் உள்ளத்தின் மகிழ்ச்சியாகிய வாழ்த்துக்களை பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் பெற்றுக் கொண்டுமிருக்கிறீர்கள், அளித்துக் கொண்டுமிருக்கிறீர்கள். இன்றைய தினத்திற்கு மகத்துவம் உண்டு. விடையும் கொடுக்கிறீர்கள், வரவேற்பும் செய்கிறீர்கள். இப்போது விடை கொடுப்பது மற்றும் வரவேற்பதற்குமான சங்கமயுகம். இன்றைய தினத்தை சங்கம தினம் எனக் கூறலாம். சங்கமத்தின் மகிமை மிகப் பெரிது. நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கிறீர்கள். சங்கமயுகத்தின் மகிமைக்குக் காரணம், தற்சமயத்தின் பழைய ஆண்டு மற்றும் புதிய ஆண்டின் சங்கமத்தை எவ்வளவு விமரிசையாகக் கொண்டாடுகிறீர்கள்! சங்கமயுகத்தின் மகிமை காரணமாகவே, இந்தப் பழைய மற்றும் புதிய ஆண்டின் சங்கமத்திற்கு மகிமை உள்ளது. எங்கே. இரண்டு நதிகள் சந்திக்கிறதோ, அது சங்கமம் எனப்படுகிறது. இதற்கும்

கூட மகிமை உண்டு எங்கே நதியானது, கடலில் கலக்கிறதோ, அதற்கும் கூட மகிமை இருக்கிறது ஆனால் எல்லாவற்றையும் விட பெரிய மகிமை இந்த சங்கம யுகத்திற்குத்தான், புருஷோத்தம யுகத்திற்குத்தான்! எங்கே பிராமண பாக்கியவான் ஆத்மாக்கள் அமர்ந்திருக்கிறீர்களோ அது தான். இந்த உள்ளக்கிளர்ச்சி (நஷா) இருக்கிறதா? ஒருவேளை பாராவது உங்களிடம், நீங்கள் கலியுகத்தில் இருக்கிறீர்களா? சத்யுகத்தில் இருக்கிறீர்களா? என்று கேட்டால், நீங்கள் உடனே என்ன சொல்வீர்கள்? நாங்கள் இப்போது புருஷோத்தம சங்கமயுகத்தில் இருக்கிறோம் என்பீர்கள். நீங்கள் கலியுகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. சங்கமயுகத்தைச் சார்ந்தவர்கள். மேலும் இந்த சங்கமயுகம் விசேஷ மகிமையுடையதாக இருப்பது ஏன்? ஏனென்றால், பகவான் மற்றும் குழந்தைகளினுடைய சந்திப்பு நடக்கிறது. விழா நடக்கிறது. சந்திப்பு நடக்கிறது. இப்படி வேறு எந்த யுகத்திலும் நடப்பதில்லை. ஆகவே விழாக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா? நீங்கள் எங்கெங்கிருந்தெல்லாம் இந்த சந்திப்பு விழாக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள். இந்த நாடகத்தில் ஆத்மாவாகிய எனக்கு இப்படிப்பட்டதொரு பாக்கியம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்று சொப்பனத்திலாவது நினைத்துப் பார்த்தது உண்டா? இருந்தது வேறொன்று. ஆத்மா பரமாத்மாவை சந்திப்பதற்கு. தந்தையும் கூட ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஆஹா! பாக்கியவான் குழந்தைகளே, ஆஹா! உங்களுடைய பாக்கியத்தை நினைத்து, உள்ளத்தில் நீங்களாகவே, ஆஹா! நான் ஆஹா! ஆஹா! என்னே எனது பாக்கியம் ஆஹா! ஆஹா!! மேரா பாபா வாஹ் என்னுடைய பிராமண பரிவாரமே ஆஹா! இப்படி ஆஹா! ஆஹா! என்ற பாட்டு உள்ளத்தில் தானாகவே இசைத்துக் கொண்டே இருக்கிறீர்கள் அல்லவா!

ஆகவே, இன்று இந்த சங்கமத்தின் சமயத்தில், எந்தெந்த விஷயங்களுக்கு விடை கொடுக்க வேண்டும் என்பது பற்றி உங்களுக்குள் முடிவெடுத்து விட்டீர்களா? எல்லோருமே ஆலோசனை செய்திருக்கிறீர் களா? சதா காலத்திற்காகவும் விடை கொடுக்க வேண்டும் ஏனெனில் சதா காலத்திற்குமாக விடை கொடுத்து விட்டால், சதா காலத்திற்கும் வாழ்த்துக்களைப் பெற முடியும். எந்த ஒரு ஆத்மா உங்கள் எதிரில் வந்தாலும், அவர்களும் கூட வாழ்த்துக்களைப் பெற்று

மகிழ்ச்சி அடையும்படியாக, அப்படிப்பட்ட வாழ்த்துக்களை அளிக்கும்படியாக உங்களுடைய முகத்தின் தோற்றம் இருக்க வேண்டும். யார் மனதார வாழ்த்துக்களை அளிக்கின்றார் மற்றும் பெறுகின்றார் என்றால், அவர் எப்போதும் எப்படி காணப்படுவார்? சங்கமயுக பரிஷ்தா. எல்லோரும் இதற்கான முயற்சி தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா. பிராமணனிலிருந்து பரிஷ்தா, பரிஷ்தாவிலிருந்து தேவதை. ஏனென்றால் பலவிதமான எண்ணங்கள் அதாவது ஏதாவது குடும்ப வாழ்க்கை சம்மந்தமாக, கர்மத்தின் விளைவாகிய மனச்சுமை சம்மந்தமாக எதுவானாலும் அவற்றை தந்தையிடம் ஒப்படைத்து விட்டீர்கள். அல்லவா? பாரத்தைக் கொடுத்து விட்டீர்களா? அல்லது இன்னும் கொஞ்சம் மீதமிருக்கிறதா? ஏனெனில் கொஞ்சம் பாரம் இருந்தாலும் அது பரிஷ்தா ஆக விடாது மேலும் எப்போது தந்தை வந்தாரோ அது குழந்தைகளிடமிருந்து பாரத்தை வாங்கிக் கொள்வதற்காகத்தான்! ஆகவே பாரத்தை கொடுப்பதில் கஷ்டமாக இருக்கிறதா? கஷ்டமா? அல்லது சுலபமா? நாங்கள் எங்கள் சுமையை தந்தையிடம் கொடுத்து விட்டோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். கொடுத்து விட்டீர்களா? யோசித்து கை உயர்த்தினீர்களா என்று பாருங்கள், சுமையைக் கொடுத்து விட்டீர்களா? நல்லது கொடுத்து விட்டீர்களா? வாழ்த்துக்கள் கொடுத்து விட்டீர்களானால் நிறைய வாழ்த்துக்கள். சரி யார், இன்னும் கொடுக்கவில்லையோ, அவர்கள் எதற்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? சுமையின் மீது அவ்வளவு அன்பா? சுமை விருப்பமுள்ளதாக இருக்கிறதா என்ன? பாருங்கள் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் என்னவென்று கூறுகின்றார்? ஓ என்னுடைய கவலையில்லாத பாதுஷா குழந்தை என்று தானே! அப்படியானால், சுமை பற்றி கவலை இருக்கிறது என்பது தானே! ஆகவே சுமையை வாங்கிக் கொள்வதற்காக தந்தை வந்திருக்கின்றார். ஏனெனில் 63- ஜென்மங்களாக, பாரம் சுமந்து, சுமந்து குழந்தைகள் ரொம்பவும் கவலைக்குள்ளாகி விட்டனர். ஆதலால் தான், தந்தை குழந்தைகளிடம் அன்பாக கூறுகின்றார். பாரத்தை என்னிடம் கொடுத்து விடுங்கள் என்று. இருந்தாலும் ஏன் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? நன்றாக இருக்கிறதா சுமை? எல்லாவற்றிலும் சூட்சுமமான சுமை பழைய சம்ஸ்காரத்தினுடையதாக இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய இந்த ஆண்டுக்கான சார்ட்டைப் பார்த்தார்.

ஏனெனில் ஆண்டு முடிவடைந்து கொண்டிருக்கிறதல்லவா! ஆகவே தான் இந்த ஆண்டின் சார்ட்டைப் பார்த்தார். நீங்கள் எல்லோரும் கூட, உங்களுடைய ஆண்டு சார்ட்டை சோதித்துப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? இதில் பாப்தாதா என்ன பார்த்தார் என்றால், அநேக குழந்தைகளினுடைய இந்த பழைய சம்ஸ்காரத்தின் ஆகர்ஷணம் குறைந்திருக்கிறதா? என்று பார்த்தார். பழைய சம்மந்தத்தின் ஆகர்ஷணம் குறைந்திருக்கிறது ஆனால் பழைய சம்ஸ்காரம், அதனுடைய பாரம் மெஜாரிட்டியில் மீதமிருக்கிறது. ஏதாவதொரு விதத்தில், அசுத்த சங்கல்பம் அல்ல, வீணான சங்கல்பத்தின் சம்ஸ்காரம் இன்னமும் கூட சதவிகிதத்தில் தென்படுகிறது. பேச்சிலும் தெரிகிறது சம்மந்தம், தொடர்பிலும் கூட, ஏதாவதொரு சம்ஸ்காரம் இப்போதும் கூட காணப்படுகிறது

ஆதலால் பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, கூடவே ஒரு எச்சரிக்கையும் சைகையாகக் கூறுகின்றார். அதாவது எந்த ஒரு கடுமையான சம்ஸ்காரம் பஸ்மம் செய்யப்படாமல் மீதமிருக்கிறதோ, அது சமயத்தில் ஏமாற்றி விடும். அத்தோடு கடைசியில் ஏமாற்றப்படுவதற்கும் காரணமாகி விடும். ஆகவே இன்று அந்த சம்ஸ்காரத்தைப் பரிவர்த்தனை (சீர் செய்தல்) செய்து விடுங்கள். ஒவ்வொருவரும் தங்களுடைய சம்ஸ்காரத்தைப் பற்றி அறிந்தவர்களாகவே இருக்கிறார்கள், விட்டுவிட வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். துன்பத்திற்குள்ளாகிக் கொண்டுமிருக்கிறார்கள் ஆனால் சதா காலத்திற்காக சீர் செய்வதற்காக தீவிர முயற்சி செய்யப்படுவதில்லை. முயற்சி செய்கிறார்கள் ஆனால் தீவிர முயற்சி இல்லை. காரணம்? தீவிர புருஷார்த்தம் ஏன் செய்ய முடிவதில்லை? காரணம் இது தான், உதாரணமாக இராவணனை அடிக்கவும் செய்தார்கள், அடிப்பதோடு மட்டுமல்லாமல், எரிக்கவும் செய்தார்கள். இது போல சம்ஸ்காரத்தை அடிப்பதற்கான முயற்சி செய்கிறார்கள். இதனால் மூர்ச்சையடையவும் செய்கிறது ஆனால் எரிக்காததால், மூர்ச்சையாகியிருந்தாலும், இடையிடையே எழுந்து விடுகிறது. ஆதலால் பழைய சம்ஸ்காரத்தை சமாப்தி செய்வதற்காக, இந்த புத்தாண்டில் யோக அக்னி மூலமாக எரித்து விட வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தில் கவனம் வையுங்கள். சொல்கிறீர்கள் அல்லவா, புத்தாண்டில் என்ன செய்வதன்று? சேவை பற்றிய விஷயம்

தனிப்பட்டது ஆனால் முதலில் தன்னைப் பற்றிய விஷயம் (சுயம்) யோகாப்பியாசம் செய்கிறார்கள். பாப்தாதாவும் குழந்தைகள் யோகாப்பியாசத்தில் இருப்பதைப் பார்க்கின்றார். அமிர்தவேளையிலும் கூட மிகவும் பிரயாசையுடன் கூடிய முயற்சி செய்கிறார்கள் ஆனால் யோக தபஸ்யா, அக்னி ரூபத்தில் செய்வதில்லை. நிச்சயமாக அன்போடு நினைவு செய்கிறார்கள் ஆன்மீக சம்பாஷணையும் (ருஹ் ரிஹான்) அதிகம் செய்கிறார்கள். சக்தியடைவதற்கான அப்பியாசமும் செய்கிறார்கள் ஆனாலும், நினைவை தேவையான அளவு சக்திசாலியாக ஆக்கவில்லை. எந்தெந்த சங்கல்பத்திற்கு விடை கொடுக்க விரும்புகிறீர்களோ, அதற்கு விடை கொடுத்து விட வேண்டும் யோகத்தை யோக அக்னி ரூபத்தில் காரியாம்சத்தில் கொண்டு வருவதில்லை. ஆதலால் யோகத்தை சக்திசாலி (பவர் ஃபுல்) ஆக்குங்கள் ஒருமுகப்பட்டிருக்கும் (ஏகாக்கிரத்தா) விசேஷ சக்தி, சம்ஸ்காரத்தை பஸ்மம் செய்வதற்கு அவசியமாக இருக்கிறது. எந்த சொரூபத்தில் ஒருமுகப்பட்டிருக்க விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் ஒருமுகப்பட்டிருக்க வேண்டுமோ அப்படி ஒருமித்த சங்கல்பம் செய்து விட்டால் பஸ்மம் ஆகி விடும். இதற்குத்தான் யோக அக்னி என்று சொல்லப்படுகிறது. பெயர், ரூபம், அடையாளமே இல்லாமல் போய்விடும். ஆகவே இந்த ஆண்டு யோகத்தை சக்திசாலி நிலைக்குக் கொண்டு வாருங்கள். எந்த சொரூபத்தில் நிலைத்திருக்க விரும்புகிறீர்களோ, அதில் மாஸ்டர் சர்வ சக்திவான். கட்டளை இடுங்கள். சமாப்தி செய்யக்கூடிய சக்தி உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை, என்பது நடக்க முடியாது. நீங்கள் எஜமானர்கள். மாஸ்டர் என்று சொல்கிறீர்கள் அல்லவா? ஆகவே மாஸ்டர் கட்டளை இட்ட பின்னரும், சக்தி ஆஜராகவில்லை என்றால், அவர் தன்னை மாஸ்டர் என்று சொல்லிக் கொள்ள முடியுமா? ஏனெனில், பாப்தாதா பார்த்தார். இன்னும் கொஞ்சம், கொஞ்சம் பழைய சம்ஸ்காரத்தின் அம்சம் இருப்பது தெரிகிறது. மேலும் அம்ச ரூபத்தில் மீதமிருக்கும் சம்ஸ்காரம், சிற்சில சமயம் வம்சத்தை உருவாக்கி விடுகிறது. அது கர்மத்திலும் கூட வந்து விடுகிறது. போராட வேண்டியதாயிருக்கிறது. பாப்தாதாவுக்கு சமயப் பிரமாணமாக குழந்தைகள் இன்னும் போராடிக் கொண்டிருக்கும் சொரூபம் பொருத்தமானதாகத் தெரியவில்லை. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் எஜமானர் (மாலிக், அதிகாரி) ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். ஆர்டர் செய்தவுடன் ஜி ஹஜூர்

(இதோ வந்து விட்டேன் ஐயா) கேட்டீர்களா? இந்த புத்தாண்டில் தனக்காக (சுயத்திற்காக) என்ன செய்ய வேண்டும்? சக்திசாலி, கவலையற்ற பாதுஷா, ஏனெனில் எல்லோருடைய லக்ஷியமும் என்னவாக இருக்கிறது? யாரைக் கேட்டாலும் என்ன சொல்கிறார்கள்? நாங்கள் உலக இராஜ்யத்தை அடைவோம். இராஜ்ய அதிகாரியாவோம். தங்களை இராஜயோகி என்று தான் கூறுகிறீர்கள் அல்லவா? பிரஜாயோகி யாராவது இருக்கிறார்களா? இந்த சபையில் பிரஜாயோகி யாராவது இருக்கிறார்களா? இருக்கிறார்களா? யார் தங்களை இராஜயோகி அல்ல என்று நினைப்பவர்கள் இங்கிருக்கிறார்களா? டீச்சர்ஸ் யாராவது இருக்கிறார்களா? உங்கள் சென்டரில் பிரஜாயோகி இருக்கிறார்களா? சொல்வதென்னமோ, நாங்கள் இராஜயோகிகள் என்று தான். பிரஜாயோகி என்ற சொல்பவர்கள் யாருமில்லை. ஒருவர் கூட கை உயர்த்தவில்லை. இது பிடித்தமானதாக இல்லையல்லவா? தந்தைக்கும் கூட இது பெருமை தான் பாப்தாதா பெருமிதத்துடன் கூறுகின்றார், சங்கமத்தில் ஒவ்வொரு குழந்தையும் இராஜா குழந்தை என்று. என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் ராஜா என்று வேறு எந்த ஒரு தந்தையும் அப்படி உயர்வாகக் கூற முடியாது ஆனால் பாப்தாதா கூறுகின்றார். என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் சுய இராஜ்ய அதிகாரி ராஜாவாக இருக்கின்றார். பிரஜாயோகியில் யாருமே கை உயர்த்தவில்லையல்லவா? ஆகவே நீங்கள் ராஜா தான் இல்லையா? ஆனால் அப்படி, இப்படி என்று அரை குறையான ராஜா ஆகக்கூடாது. ஆர்டர் செய்தேன், வரவில்லை என்று பலவீனமான இராஜா ஆகக்கூடாது. பின்னால் யார் இருக்கிறார்கள்? யார் தங்களை இராஜயோகி என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். மேலேயும் காலரியில் அமர்ந்திருக்கிறார்கள். இன்று காலரியிலும், ஹாலிலும் 18-ஆயிரம் சகோதர, சகோதரிகள் அமர்ந்திருக்கிறார்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். மேலே உட்கார்ந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். ஆதலால் பாப்தாதா மூன்று மாத அவகாசம் கொடுக்கின்றார். சரிதானா? கொடுக்கலாமா? ஹோம் ஒர்க் கொடுக்கலாமா? ஏனெனில் இந்த இடையிடையே கொடுக்கப்படும் ஹோம் ஒர்க்கும் கூட கடைசி பேப்பரில் சேமிப்பாகும். ஆதலால் மூன்று மாதத்தில், ஒவ்வொருவரும் தங்களுடைய சார்ட்டை சோதித்துப் பார்க்க வேண்டும். அதாவது சுயம் மாஸ்டர் சர்வ சக்திவானாகி எந்த ஒரு கர்மேந்திரியத்திற்கும், எந்த ஒரு சக்திக்கும்,

எப்போது ஆர்டர் (கட்டளை) கொடுக்கிறேனோ, அந்த ஆர்டரை காரியாம்சத்தில் (பிராக்டிக்கல்) ஏற்றுக் கொண்டதா? அல்லது ஏற்றுக் கொள்ளவில்லையா? செய்ய முடியுமா? முதலாவது வரிசையில் இருப்பவர்கள் செய்ய முடியுமா? கை உயர்த்துங்கள். நல்லது. மூன்று மாதங்கள் எந்த ஒரு பழைய சம்ஸ்காரமும் யுத்தம் செய்யக் கூடாது. அலக்ஷியமாக இருந்து விடக்கூடாது. மிகவும் இனிமையாகப் பேசுகிறார்கள், சொல்கிறார்கள். பாபா! நீங்கள் ஒன்றுமே கவலைப்பட வேண்டாம் ஆகி விடுவேன், பாப்தாதா என்ன செய்வார்? கேட்டு புன்முறுவல் செய்கிறார் ஆனால் பாப்தாதா இந்த மூன்று மாதத்தில், இப்படிப் பேசினார்கள் என்றால் ஏற்கமாட்டார். சரிதானா? கை உயர்த்துங்கள். மனதார கை உயர்த்த வேண்டும். சபையில் இருக்கிறோமே என்று கை உயர்த்தக் கூடாது. செய்யத்தான் வேண்டும். எப்படியெல்லாம் சகித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, எதையாவது விட வேண்டுமானாலும் சரி, பரவாயில்லை. செய்தே ஆக வேண்டும். பக்கா? பக்கா? பக்கா? (உறுதி தானே). டீச்சர்ஸ், செய்ய வேண்டுமா? நல்லது. இந்த கிரீடம் அணிந்து கொண்டு வந்திருக்கும் குழந்தைகள் என்ன செய்யப்போகிறார்கள்? கிரீடம் நன்றாகத்தான் அணிந்து கொண்டிருக்கிறார்கள். செய்ய வேண்டியதிருக்கும். நல்லது பார்க்க வேண்டும். குழந்தைகள் கை உயர்த்துகிறார்கள். ஒருக்கால் செய்யவில்லை என்றால், என்ன செய்வது? அதையும் சொல்லித் தாருங்கள். பிறகு பாப்தாதா சீசனில், ஒருமுறை வருவதற்கு அனுமதி கொடுக்க மாட்டேன் ஏனெனில் பாப்தாதா பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார். நேரம் உங்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது. தத்துவங்களும் கூட, சதோபிரதான இயற்கை உங்களை வரவேற்கக் காத்துக் கொண்டிருக்கிறது ஆதலால் மூன்று மாதத்தில் தங்களுடைய சக்திசாலி ஸ்திதியிலிருந்து மீதமுள்ள சம்ஸ்காரத்தை சீர் செய்து விடவேண்டும். ஒருவேளை மூன்று மாதங்கள் கவனம் (அட்டென்ஷன்) வைத்தீர்களானால், இதன் பிறகும் தொடர்ந்து அப்பியாசம் செய்வது சுலபமாகி விடும். ஒரு தடவை இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற விதியை அறிந்து கொள்ளும் போது, பரிவர்த்தனை (சுயமாற்றம்) என்பது அதிகமாக நடைமுறையில் வந்து விடும். நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்காதீர்கள். எப்போது விநாசம் ஆகும்? எப்போது விநாசம் அகும்? எல்லோரும் ஆன்மீக சம்பாஷணையின் போது கேட்கின்றார்கள். வெளியில் சொல்வதில்லையேத் தவிர

உள்ளுக்குள்ளேயே பேசுகிறார்கள். எப்போது விநாசம் வரும் என்று தெரியவில்லையே? இரண்டு ஆண்டுகள் பிடிக்குமா? 10-ஆண்டுகள் ஆகுமா? எத்தனை ஆண்டுகள் ஆகும்? நீங்கள் ஏன் சமயத்தை எதிர்பார்க்கிறீர்கள்? சமயம் உங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. தந்தையிடம் கேட்கிறார்கள் தேதியை மட்டும் சொல்லி விடுங்கள். கொஞ்சம் எந்த ஆண்டு என்பதையும் சொல்லிவிடுங்கள். 10-ஆண்டுகளா? 20-ஆண்டுகளா? எத்தனை ஆண்டுகள் ஆகும்?

பாப்தாதா குழந்தைகளிடம் இந்தக் கேள்வியைக் கேட்கின்றார். நீங்கள் எல்லோரும் பாப்சமான் ஆகி விட்டீர்களா? திரையை விலக்கலாமா? திரையை விலக்கினால் சிலர் தலை வாரிக் கொண்டிருக்கிறார்கள், சிலர் முகத்தில் கிரீம் தடவிக் கொண்டிருக்கிறார்கள். எவர் ரெடியாக இருந்தால், சம்ஸ்காரத்தை சமாப்தி செய்திருந்தால், பாப்தாதாவுக்கு திரையை விலக்குவதற்கு நேரம் ஆகுமா என்ன? எவர் ரெடியாவது ஆகுங்களேன். ஆகி விடுவோம், ஆகி விடுவோம் என்று சொல்லிச் சொல்லியே வெகு காலமாக தந்தையைக் குஷிப்படுத்திக் கொண்டே இருந்து விட்டீர்கள் இனியும் அப்படி செய்யக் கூடாது. ஆகத்தான் வேண்டும். செய்யத்தான் வேண்டும். பாப்சமான் ஆக வேண்டும். இதிலெல்லாம் எல்லோருமே கையை உயர்த்தி விடுகிறார்கள் கை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை. பிரம்மாபாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா? சாகாரத்தில் பிரம்மாபாபாவைப் பின்பற்ற வேண்டும் அல்லவா? பிரம்மாபாபா தியாகம், தபஸ்யா, மற்றும் சேவை கடைசி நேரம் வரையிலும் சாகார் ரூபத்தில் பிராக்டிக்கலாக செய்து காண்பித்தார். தன்னுடைய கடமையை சிவபாபா மூலமாக மகாவாக்கியம் உச்சரிக்கும் கடமையை கடைசி நாள் வரை செய்தார். நினைவிருக்கிறதல்லவா? கடைசி முரளி? மூன்று வார்த்தைகள் (நிராகாரி, நிரஹங்காரி, நிர்விகாரி) அடங்கிய வரதான், நினைவிருக்கிறதா? யாருக்கு நினைவிருக்கிறதோ அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது, எல்லோருக்கும் நினைவிருக்கிறது. வாழ்த்துக்கள். தியாகம் கூட கடைசி நாள் வரையிலும் செய்தார். தன்னுடைய பழைய அறையை விடவில்லை குழந்தைகள் எவ்வளவு அன்புடன் பிரம்மாபாபாவிடம் கூறினார்கள் என்றாலும் அது குழந்தைகளுக்காக கட்டப்பட்டது என்று கூறி தனக்காக உபயோகப்படுத்தவே இல்லை. அவர் தினமும் 2½-3 மணிக்கு எழுந்து

தனக்காக தபஸ்யா செய்தார். சம்ஸ்காரத்தை பஸ்மம் செய்தார். இதன் பிறகு தான் கர்மாதீத், அவ்யக்தம் ஆனார் பரிஷ்தா ஆனார் என்ன நினைத்தாரோ, அதை செய்து காட்டினார். சொல்வது நினைப்பது மற்றும் செய்வது இம்மூன்றும் சரிசமமாக இருந்தது. ஃபாலோ ஃபாதர் கடைசி வரை தனது கடமையை சம்பூரணமாகவே செய்தார் பதில் கடிதங்களும் எழுதி முடித்தார். எத்தனை கடிதங்கள் எழுதினார்? சேவையையும் விட்டு விடவில்லை. ஃபாலோ பாதர். அகண்ட மகாதானி. மகாதானி அல்ல அகண்ட மகாதானி எப்படி இருப்பார் என்பதை பிராக்டிக்கலாக செய்து காண்பித்தார் கடைசி வரை. கடைசி வரையிலும் யாருடைய உதவியுமின்றி தபஸ்வி ரூபத்தில் அமர்ந்திருந்தார். இப்போது குழந்தை களுக்கு உதவி தேவைப்படுகிறதல்லவா? உட்காருவதற்கு உதவி தேவைப்படுகிறது ஆனால் பிரம்மாபாபா ஆதி முதல் கடைசி வரையிலும் தபஸ்வி ரூபத்திலேயே இருந்தார். கண்களில் கண்ணாடி அணியவில்லை. இது சூட்சும சக்தி நிராதாரம் சரீரம் பழையது தான். நாளுக்கு நாள் பஞ்ச தத்துவங்களும், காற்று நீர், ஆகியன மாசு படிந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே தான் பாப்தாதா, நீங்கள் ஏன் கண்ணாடி அணிந்து கொள்கிறீர்கள் என்று கேட்பதில்லை. நீங்கள் அணிந்து கொள்ளலாம் ஆனால் சக்திசாலி ஸ்திதியை அவசியமாக அடையத்தான் வேண்டும். முழு உலகத்தின் காரியங்களை செய்து முடித்து விட்டீர்களா? பாப்தாதா உங்களிடம் கேள்வி கேட்கின்றார். நீங்கள் எல்லோரும் திருப்தியோடிருக்கிறீர்களா? அதாவது விஷ்வ கல்யாணகாரியத்தை செய்து முடித்து விட்டோம் என்ற திருப்தி இருக்கிறதா? இருக்கிறது யார் விஷ்வ கல்யாண காரியம் முடிந்து விட்டது என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்தலாம். ஒருவர் கூட இல்லை. அப்படியானால் விநாசம் ஆகும் என்று எப்படி நினைக்கிறீர்கள்? காரியம் முழுமையாக இன்னும் முடியவில்லை.

எல்லோரும் கேட்கிறார்கள் புது வருடத்தில் என்ன செய்ய வேண்டும் என்று? கேள்வி இருக்கிறது. பாப்தாதா கூறுகின்றார் -அறிமுகம் கொடுக்கக்கூடிய மெகா சேவை புரோகிராம் நிறைய செய்திருக்கிறீர்கள். பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார். செய்ததை, நன்றாகவே செய்தீர்கள் ஆனால் அறிமுகச் செய்தி கொடுத்தீர்கள் அனுபவம் செய்விக்கவில்லை. இதற்காக எப்படி

இங்குமங்கும் ஓரிருவருக்கு ஆர்வம், உற்சாகத்தைக் கொடுத்தீர்கள். அல்லது ஆர்வம், உற்சாகத்தைப் பார்த்துப் பிறகு ஆர்வம், உற்சாகத்துடன் செய்தீர்கள் ரிசல்ட்டும் நன்றாகத்தான் இருந்தது ஆனால் இப்போது ராயல் பிரஜையாவது ஆகும்படியான அப்படிப்பட்ட திட்டம் போடுங்கள். ராயல் பிரஜை என்றால் நெருக்கமான தொடர்பில் வரக் கூடியவர்கள் சம்மந்தம், தொடர்பில் இருப்பவர்கள். முதலில் 9-லக்ஷம் பேர் தயார் செய்யுங்கள். இப்போது 9-லக்ஷம் தயராகியிருக்கிறார்களா? ஆகியிருக்கிறார்களா? 9-லக்ஷம் பேர் ஆகி விட்டதா? யார் லிஸ்ட் தயார் செய்கிறார்கள்? (லிஸ்ட் இப்போது வரும், கடந்த ஆண்டு வரை 8-லக்ஷம் 12-ஆயிரம் பேர்) ஆனால் 9-லக்ஷம் பேர் தயாராகியிருக்கிறார்கள் என்றால், அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? நெருக்கமான ராயல் பிரஜை யாவதற்கு யோக்கியதை உள்ளவர்களா? இப்படியெல்லாம் கூட சோதித்துப் பார்க்க வேண்டியதிருக்குமல்லவா? இப்போது கணக்குப் பார்க்க வேண்டும். ஒன்று 9-லக்ஷம் முதலாவது ஜன்மத்தில் வரக்கூடிய பிரஜைகள், ராயல் குடும்பத்தைச் சார்ந்தவர்களும் வேண்டுமல்லவா? ஒருவேளை நாளைக்கே விநாசம் ஆகிறது என்று வைத்துக் கொண்டால், ராயல் பிரஜைகள் தயாராகியிருக்க வேண்டுமல்லவா? தயாராக இருக்கிறார்களா? அல்லது இனிமேல் தான் தயார் செய்ய வேண்டுமா? பொதுவாக எல்லோரையுமே சேர்த்து கணக்குப் போட்டால் 9-லக்ஷ்ம் பேர் இருப்பார்கள் ஆனால் குவாலிட்டியும் வேண்டுமல்லவா? சம்மந்தம் மற்றும் தொடர்பில் இருப்பவர்களையும் சேர்த்தால் 9-லக்ஷம் பேர் ஆகி விடும் ஆனால் பாப்தாதா கூறுகின்றார் முதலாம் ஜன்மம் எடுக்கும் பிரஜைகள் நல்ல நம்பர் உள்ளவர்களாக இருப்பார்கள் அல்லவா! ஏனென்றால் அவர்களுக்கும் கூட எல்லோருக்கும் ஒன். ஒன் நம்பர் கிடைக்க வேண்டும். தேதி நம்பர் ஒன், ஒன்னாவது ஆகும். சகாப்தம் (ஆண்டு) நம்பர் ஒன். இராஜ்யம் நம்பர் ஒன். (முதல் இராஜ்யம், முதல் ஆண்டு, முதல் ஜன்மம், ஒன், ஒன், ஒன்) இந்த அடிப்படையில் குவாலிட்டியை சோதித்து 9-லக்ஷம் தயாரா? என்று பாருங்கள். ராயல் பிரஜை தயாரா? ராயல் குடும்பத்தினர் தயாராகியிருக்க வேண்டுமல்லவா? இருக்கிறார்கள் கொஞ்சம் இந்த ஆண்டில் சம்ஸ்காரத்தை சீர் செய்து விட வேண்டும். பாப்தாதாவுக்கு இந்த சங்கல்பம் இருக்கிறது அதாவது இதற்காக ஒவ்வொரு சென்டரும் யோகாப்பியாசத்திற்காகத் தனித் தனியாக முறைப்படி புரோகிராம்

செய்ய வேண்டும் மேலும் ஒரு லக்ஷியம் வைக்க வேண்டும். உள்நாடு மற்றும் வெளி நாடுகள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரு நாளில் ஒரே சமயத்தில் யோகம் செய்ய வேண்டும். இத்தனை சென்டர்களில் உலக முழுவதிலும் இந்த நாளில், இந்த நேரத்தில் பிரம்மா குமாரிகள் யோகம் செய்கிறார்கள் என்பது பத்திரிகைகளில் செய்தி வரவேண்டும். யோகம் கமெண்ட்டரி மூலமாகச் செய்ய வேண்டாம் அனுபவம் உண்டாகும்படி செய்விக்க வேண்டும். அனுபவம் தான் உறுதி செய்கிறது. ஒரே நேரத்தில் ஒவ்வொரு சென்டரிலும் ஒரு புரோகிராம் செய்யலாம். மேலும் ஒவ்வொரு சென்டரும் என்ன அனுபவம் செய்தார்கள் என்ற ரிசல்ட் எழுத வேண்டும். 3-தினங்கள் புரோகிராமாக இருந்தாலும் சரி, ஒரு நாள் புரோகிராமாக இருந்தாலும் சரி, நாலா பக்கமும் உள்ளவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து 3வது ஞாயிற்றுக் கிழமை இன்டர்நேஷனல் யோகம் செய்கிறீர்கள் அல்லவா? அதுபோல இது அனுபவம் செய்விப்பதற்கான புரோகிராமாக ஒரே சமயத்தில் கூட்டு தியானம் செய்ய வேண்டும். மேலும் ஒரு சமயத்தில் ஒரு லக்ஷியம், இது நாலா பக்கமுமுள்ள சென்டர்களிலும் இதேபோல ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் இதன் மூலம் உள் நாட்டில் உள்ளவர்கள், உலக அமைதிக்காக இத்தனை பேர் ஒன்று கூடி ஒரே நேரத்தில் புரோகிராம் வைத்திருக்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள். அனுபவம் செய்விக்க வேண்டும் என்பது லக்ஷியமாக இருக்க வேண்டும். கேட்டுவிட்டு போய்விட்டால் மட்டும் போதாது, கொஞ்சம் அனுபவம் செய்து கொண்டு செல்ல வேண்டும். நீங்கள் கூட எப்படி பாபாவினுடையவர்கள் ஆனீர்கள். கொஞ்சம், கொஞ்சம் அனுபவம் செய்ததால்தானே! அன்பு அனுபவம் செய்தீர்கள் அல்லது டோலி சாப்பிட்ட பின் அந்த அன்பின் காரணமாக அனுபவம் செய்தீர்கள். சகோதரிகள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை அனுபவம் செய்தீர்கள் -சிரித்த முகம்; மரியாதை எப்படி செய்கிறார்கள் என்பதை அனுபவம் செய்தீர்கள். இவ்விதமாக கொஞ்சம் கொஞ்சம் அனுபவம் செய்ததால் தான் இப்படி ஆனீர்கள் அல்லவா? இதேபோல அனுபவம் செய்வியுங்கள். இனி அகண்ட சேவை செய்யுங்கள். இன்னும் செய்ய வேண்டிய சேவை மீதமிருக்கிறது. நல்லது.

இன்றைய தினம் வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் அளித்துக் கொண்டீர்கள் அல்லவா? இரண்டாவது என்ன செய்தீர்கள்? அன்பளிப்பு

கொடுத்தீர்கள். பாப்தாதாவிடம் கூட எத்தனை அன்பளிப்புகள் வந்து சேர்ந்திருக்கின்றன. கிரீட்டிங்ஸ் கார்டுகள் (வாழ்த்து அட்டை) வந்திருக்கின்றன. அழகழகான அன்பளிப்பு அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் எழுந்து நின்று பாருங்கள். உண்மையில் உங்களிடம் யார் வந்தாலும் காலியாகத் திரும்பிச் செல்லக் கூடாது. மனம் மூலமாக சக்தியை அன்பளிப்பாகக் கொடுத்தனுப்புங்கள், வாணி மூலமாக ஞானத்தை அன்பளிப்பாகக் கொடுத்தனுப்புங்கள், செயல் மூலமாக குண தானம் கொடுத்து அனுப்புங்கள் ஆனால் ஒவ்வொருவருக்கும், யார் உங்கள் சம்மந்தம் அல்லது தொடர்பில் வந்தாலும் அவர்களுக்கு அவசியம் அன்பளிப்பு கொடுக்க வேண்டும். வெறுங்கையோடு அனுப்பக்கூடாது. நீங்கள் மாஸ்டர் வள்ளல், மாஸ்டர் வள்ளலிடம் வந்த பின் வெறுங்கையோடு திரும்பினார்கள் என்பது இருக்கக்கூடாது. அகண்ட மகாதானி ஆகுங்கள். அகண்ட என்று கூறுவது ஏதாவதொரு சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். மனம், சொல், செயல் மூலமாக சம்மந்தத்தில், தொடர்பில் உள்ளவர்களுக்கு தொடர்ந்து சேவை செய்து கொண்டே இருங்கள். அகண்ட சேவாதாரி.

அநேக குழந்தைகள் பாபாவுடன் ரூஹ்-ரிஹான் செய்யும்போது கூறுகிறார்கள் அமிர்தவேளையில் சோம்பலான வைப்ரேஷன் கொஞ்சம் இருக்கிறது என்று அவசியம் எழுந்து விடுகிறார்கள் ஆனால் பவர் ஃபுல் சக்திசாலி ரூபத்தில் தனக்காகவும், உலகத்திற்கும் சக்தி கொடுப்பதில் களைப்படைவது தெரிகிறது. அந்த சமயத்தில் நமது சென்டரில் பாபா ரூமில் அமர்ந்திருக்கிறோம். கிளாஸ் ரூமில் அமர்ந்திருக்கிறோம் என்று எண்ணாதீர்கள். உலக மேடையில் (விஷ்வ கீ ஸ்டேஜ்) அமர்ந்திருக்கிறோம் என்று எண்ணுங்கள். ஹீரோ பார்ட்தாரிகள் மேடையில் அமர்ந்திருக்கிறீர்கள். ஒருக்கால், ஹீரோ பார்ட்தாரி களைப்படைந்த பார்ட் செய்கிறார் என்றால், எப்படி இருக்கும்? எப்படிப்பட்ட வாயுமண்டலம் பரவும்? ஆதலால் அமிர்தவேளையும் பவர்ஃபுல்லாக இருக்க வேண்டும். நியமம் நன்றாகவே செய்கிறீர்கள் ஆனால் இப்போது கூறினேன் அல்லவா, யோகம் சர்வ சக்திகளுடன் கூடியதாக சக்திசாலியாக இருக்கட்டும். யோகம் அக்னியாக இருக்கட்டும், ஜுவாலை சொரூபமாக இருக்கட்டும். ஆகவே இந்த மூன்று மாதங்கள் விசேஷமாக அமிர்தவேளையிலும் கூட, ஞாபகம் இருக்கட்டும். பேசுவது மிக நன்றாகப் பேசுகிறார்கள். அன்பு

சொரூபமாகவும் இருக்கிறது ஆனால் ஜுவாலை சொரூபம் குறைவாக இருக்கிறது. இனி சம்ஸ்காரத்தில் அம்ச மாத்திரம் கூட மீதி இருக்கக் கூடாது அப்போது தான் ஜுவாலா ரூப யோகி தூ ஆத்மா என்று சொல்லலாம். இத்தோடு கூடவே, புத்தாண்டில் எந்த ஒரு பொக்கிஷம் (கஜானா) இருக்கிறதோ, ஞான கஜானா, சக்திகளின், குணங்களின், சிரேஷ்ட சங்கல்பத்தின் கஜானா. ஒன்று பயனுள்ளதாக்குங்கள். இரண்டாவது சேமிப்பு செய்யுங்கள் ஏனென்றால் உங்களுடைய டைட்டில், வரதான், வெற்றி நட்சத்திரங்கள் (ஸபலத்தா கா சித்தாரே) என்பதாகும். உங்களுடைய டைட்டில் ஸபல்தா கா சிதாரே தானே? ஆகவே நீங்கள் வெற்றி மூர்த்திகள் (ஸபல்தா மூரத் பயனுள்ளதாக்குங்கள், சேமிப்பும் செய்யுங்கள். சேவை எவ்வளவோ செய்கிறீர்கள் ஆனால் சேமிப்புக் கணக்கில் சேமிப்பானதா? அல்லது இல்லையா? இதன் அடையாளம் அல்லது கோல்டன் சாவி எது? நிமித்த பாவ், நிர்மாண் சுபாவம், நிர்மல் வாணி (காரண கர்த்தா, பணிவுத் தன்மை, சுத்தமான பேச்சு) மூன்றும் இருக்கிறதா? இந்த மூன்றில் ஒன்று குறைவாக இருந்தாலும், சேவை எவ்வளவு செய்தாலும், சேமிப்பு கணக்கில் வராது. மிகக் கொஞ்சம், பெயரளவுக்கு கணக்கில் சேரலாம். ஆகவே பாப்தாதா இதையும் சோதித்துப் பார்த்தார். சேவை நிறைய செய்கிறார்கள் ஆனால் சேமிப்பு கணக்கில் எவ்வளவு சேமிப்பாகியிருக்க வேண்டுமோ, அவ்வளவு இல்லை. இதற்கு என்ன காரணம்? காரணம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமல்லவா? ஒன்று மூன்று விசேஷங்கள். நிமித்தம் என்பதில் நான் என்பது கலப்படமாகி விடுகிறது. நான் என்பது வந்து விட்டால் சேமிப்பாவதில்லை. எவ்வளவு கஷ்டப்பட்டு முயற்சி செய்தாலும் சரி, இரவும் பகலும் ஓடி ஆடினாலும் சரி, புத்தியை எவ்வளவு பயன்படுத்தினாலும் சரி, ஆனால் நிமித்தம் என்ற பாவனை, நிர்மான் சுபாவம், நிர்மல் வாணி இந்த மூன்றும் இல்லாது போனால் சேமிப்பு இல்லை. அதிகபட்சமாக 5-சதவிகிதம் சேமிப்பாகலாம். ஆதலால் சேமிப்பாகிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். பாப்தாதா மிகவும் சுலபமான வழி காட்டுகின்றார். யாருடனாவது சம்மந்தத்தில் வந்தால், தொடர்பில் வந்தால், லௌகீக சம்மந்தமானாலும், அலௌகிக சம்மந்தமானாலும், முதலில் தன்னுடைய சுபபாவனை, சுப அபிலாஷை என்ற உணர்வு எப்படித் இருக்கிறது என்று சோதியுங்கள் மேலும் யாரைச் சந்தித்தாலும், சதா ஆத்மாவைப் பார்த்துப் பேசுங்கள்.

ஆத்மாவுடன் பேசுகிறேன். மேலும் அலௌகிக பரிவாரத்துடன் பேசினால் குஷி ஏற்பட வேண்டும் இவர் கல்பத்திற்கு முன்பும் இருந்தவர், ஒவ்வொரு கல்பத்திலும் பாக்கியத்தை சேமிக்கக்கூடிய கோடியில் ஒரு ஆத்மா -இந்த பாவனையில் பார்க்க வேண்டும் சோல்ஜர் (காலாட்படை/இராணுவ வீரர்) என்றிருந்தாலும் கோடியில் ஒருவர் தானே! மேரா பாபா என்று சொல்கிறார் அல்லவா? வேண்டுமானால், கோபக்காரராகக் கூட இருக்கட்டும். நல்ல சுபாவம் இல்லாதவராகக் கூட இருக்கட்டும் ஆனால் நீங்கள் உங்களுடைய சுபாவத்தை சிரேஷ்டமாக வைத்திடுங்கள். அவரை சிரேஷ்ட ஆத்மா என்ற ரூபத்தில் பாருங்கள். சிரேஷ்ட ஆத்மாவின் சொரூபத்தைப் பாருங்கள் அப்போது தான் காரியம் நன்றாக நடக்கும், சேமிப்பாகும். ஆகவே ஹோம் ஓர்க் நிறையவே கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டில் எல்லோரும் கேட்கிறார்கள் அல்லவா? என்ன செய்வது, என்ன செய்வது என்று நிறைய ஹோம் ஓர்க் கிடைத்திருக்கிறது. பிறகு பாப்தாதா எல்லா ஹோம் ஒர்க்கிலும் நம்பர் ஒன் ஆக பாஸ் செய்பவர்களுக்கு, பரிசு கொடுப்பார். ஆயிரம் பேர் பாஸாகியிருந்தாலும் கூட பரிசு கொடுப்பார். பரிசுகள் தயார் செய்விக்கலாம். செய்வீர்கள் அல்லவா? ஆனால் சர்டிபிகேட் வாங்க வேண்டும். நீங்கள் சொன்னால் பாபா ஏற்றுக் கொண்டு விடுவாரா? அல்ல. உடன் இருப்பவர்களிடமிருந்தும் சர்டிபிகேட் வாங்க வேண்டும். முதலில் தனது மனதின் சர்டிபிகேட். பிறகு பிராமண பரிவாரத்தில் இருப்பவர்களுடைய சர்டிபிகேட். மூன்றாவது தந்தையின் சர்டிபிகேட். அப்படியானால் சர்டிபிகேட் வாங்குவீர்கள் அல்லவா? தைரியம் இருக்கிறதல்லவா? நான் சர்டிபிகேட் வாங்கியேத் தீருவேன், வாங்காமல் விடப் போவதில்லை. திடமான நிச்சயம் இருக்கிறது என்று நினைப்பவர்கள் இருக்கிறார்களா? இதென்ன இளைஞர்கள் கூட கை உயர்த்துகிறார்கள்! யூத் குரூப் கூட கை உயர்த்துகிறார்கள். நன்றாக இருக்கிறது. டபுள் ஃபாரினர்ஸ் கூட கை உயர்த்துகிறார்கள். இங்கே எதிரில் உள்ளவர்கள் கை உயர்த்தவில்லை. கை உயரமாக தூக்குங்கள். செய்து காண்பிப்பீர்கள். அப்படியானால் நிறைய பரிசுகள் தயார் செய்ய வேண்டியதிருக்கும். நீங்கள் தயாராகி விட்டால், இதை விட பரிசு ஒன்றுமே இல்லை. முதலில் பரமாத்மாவின் மன சிம்மாசனம் கிடைக்கும் ஆனால் பரிசும் கொடுப்பேன். நல்லது இனி என்ன செய்ய வேண்டும்?

சேவை டர்ன் (சேவையின் வாய்ப்பு) ஈஸ்டர்ன் நேபாளம் மற்றும் தமிழ் நாடு ஜோன்: பாப்தாதா என்ன பார்க்கின்றார் என்றால், எந்த ஒரு ஜோனுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தாலும், மிகுந்த ஆர்வம், உற்சாகத்துடன், எண்ணிக்கையிலும் நிறைய பேர் ஒன்று சேருகிறார்கள் குஷியாகவும் இருக்கிறது கோல்டன் சான்ஸ் கிடைக்கிறதல்லவா? பாருங்கள், எத்தனை பேர் வந்திருக்கிறார்கள். பாதி சேனை ஹாலில் அவர்கள் தான் இருக்கிறார்கள். மூன்று ஜோன்களும் சேர்ந்து 5-ஆயிரம் பேர். பாருங்கள் பரப்பளவும் அதிகம். 3-4 மாநிலங்கள் தனித்தனியாக இருந்தாலும் ஒரே ஜோனில் இருக்கிறது. 7-மாநிலங்களுக்கு ஒரு ஜோன். நல்லது எவ்வளவு இருந்தாலும் சரி, ஈஸ்டர்ன் ஜோனின் விசேஷம் என்னவென்றால், சூரியன் உதிப்பது கிழக்கிலிருந்து தான். உதிக்கிறதல்லவா? மேலும் ஞானசூரியனுடைய உதயமும் கிழக்கிலிருந்து தான் நடந்திருக்கிறது. நல்லது. இனி என்ன பாக்கி இருக்கிறது? ஒரு காரியம் மீதமிருக்கிறது. எப்போது இரண்டு விஷயங்கள் நடந்திருக்கின்றதோ, சூரியோதயம், ஞான சூரியோதயம் ஆகியிருக்கிறது. ஆதலால் பிரத்யக்ஷத்தா கொடியும் கிழக்கிலிருந்து தான் (ஈஸ்டர்ன்) ஆக வேண்டும். ஆம், இதற்கு ஏதாவது செய்யுங்கள். ஆகவே பிரத்யக்ஷத்தா கொடி ஆரம்பமே கிழக்கில் பறக்கும்படியாக, அப்படிப்பட்ட திட்டம் தீட்டுங்கள். பறப்பதென்னமோ உலகில் தான். இங்கே அமர்ந்து மீட்டிங் செய்யுங்கள். என்ன செய்யலாம் என்று பேசி முடியுங்கள். ஒவ்வொரு ஜோனும் நாங்கள் நிமித்தமாவோம் என்று நினைக்கிறார்கள். அதாவது பிரத்யக்ஷத்தா கொடியை பறக்க| விடுவதற்காக. எல்லோருமே முயற்சி செய்யுங்கள். குரல் ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும். நல்லது. செய்ய முடியும் ஒவ்வொரு மாநிலத்திலும் குரூப் தயார் செய்யுங்கள். இவர்கள் மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பில் தீவிர புருஷாரத்தியாக இருக்க வேண்டும். பிறகு இவர்களை ஒன்று சேருங்கள். ஒருவர்க்கொருவரிடமிருந்து ஆலோசனையைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இப்படிச் செய்வீர்களானால் நடந்து விடும். செய்யத்தான் வேண்டுமல்லவா? தீவிரமாக முயற்சி செய்ய வேண்டியதாயிருக்கும். நன்றாகத் தான் நடக்கிறது. மாணவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள், அப்படி அல்ல ஆனால் பிரத்யக்ஷத்தா கொடி பறக்க விடுவதற்கு விசேஷ புரோகிராம் செய்ய வேண்டியிருக்கும். மெகா புரோகிராம் செய்தீர்கள் அல்லவா? அதுவல்ல. அது நன்றாகவே செய்தீர்கள், சரி

தான் ஆனால் பிரத்யக்ஷத்தா கொடி பறக்க விட வேண்டும். நிறைய மாநிலங்கள் உள்ளன. சேர்ந்து செய்ய முடியும். பின்னால் சொல்லுங்கள். செய்வீர்களா? யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ இருப்பவர்கள் செய்வீர்களா? எத்தனை நாட்களில் செய்வீர்கள். பிளான் முதலில் தயார் செய்யுங்கள். பாப்தாதா பிளான் என்னவென்று பார்ப்பாரல்லவா? டில்லிக்காரர்கள் கூட யோசிக்கிறார்கள், டில்லியின் பிரத்யக்ஷதாவின் கொடி பறக்க வேண்டும் என்று பூமி / இடம் இருக்கிறது ஆனால் பிளான் செய்யுங்கள். எப்படி பிரத்யக்ஷத்தாவின் கொடியைப் பறக்க விடுவீர்கள்? இதற்காக என்ன ஆலோசனை இருக்கிறது? புரோகிராம் செய்கிறீர்கள். அது செய்யத்தான் வேண்டும். இந்த சப்தம் யார், ரேடியோவை ஆன் செய்தாலும், டி.வி. ஸ்விட்ச் போட்டாலும், எங்கள் சிவபாபா வந்து விட்டார் (ஹமாரா சிவபாபா ஆகயா) என்ற சப்தம் வர வேண்டும். அப்போது தான் பிரத்யக்ஷத்தா கொடி பறக்கிறது என்று சொல்ல முடியும். மீடியாக்காரர்கள் யோசிக்கிறார்கள், நாம் செய்யலாமா என்று? யார் செய்தாலும் சரி ஆனால் எல்லா ரேடியோவிலும், வெளிநாட்டிலானாலும், உள் நாட்டிலானாலும், எங்கேயானாலும் ஸ்விட்ச் போட்டால், இதே சப்தம் தான் வர வேண்டும். இதற்குத்தான் பிரத்யக்ஷத்தா ஜன்டா என்பது. யார் செய்யப்போகிறார்கள்? வெளிநாட்டினர் செய்வார்களா? வெளி நாட்டில் நடக்குமா? செய்யுங்கள். யார் வேண்டுமானாலும் செய்யலாம் முதல் பரிசைத் தட்டிச் செல்லுங்கள். இந்த புரட்சி செய்ய வேண்டும். வந்து விட்டார், வந்து விட்டார், வந்து விட்டார். (ஆகயா, ஆகயா, ஆகயா) பார்க்க நன்றாக இருக்கிறது. எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இனி கமால் செய்ய வேண்டும். முதல் நம்பர் வாங்குவது நல்லது தானே! இரண்டாவது, மூன்றாவது என்றால் மஜா இல்லை. பர்ஸ்ட் (முதல்) நல்லது. மிக நல்ல பார்ட் செய்கிறார்கள். பாப்தாதா பார்த்தார். சகயோகம் ஒருவர்க்கொருவர் மிகவும் நன்றாகவே இருக்கிறது. செய்தி கிடைக்கிறது. புரோகிராம் எங்கு நடந்தாலும் அங்கே ஒருவர்க்கொருவர் சகயோகியாகி, காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்கிறார்கள். இதற்கு பாப்தாதா விசேஷமாக வாழ்த்துக்கள் அளிக்கின்றார். இனி அழகைப் பார்க்கும்படி செய்யுங்கள். உங்களிடம் ஒரு பாட்டு இருக்கிறதல்லவா (ஜல்வா தேக்கா வஹ் தேரா ஹோ கயா) என்று ஒரு அழகு மிளிர்வதைப் பார்தேன், அது உங்களுடையதாக

இருக்கிறது என்ற பாட்டு. இனி இந்தப் பாட்டை வாயால் பாடட்டும், உலகம் பாடட்டும். நன்று

**ஜூரிஸ்ட் (நீதித்துறை) விங்:** நல்லது பிளான் செய்து கொண்டிருக்கிறீர்கள். (கீதையின் பகவான் யார் என்பதை நிரூபிப்பீர்கள்) பிளான் மிக நன்றாக இருக்கிறது ஆனால் கீதை பகவான் இன்னார் தான் என்பதை நிரூபிப்பதற்காக, முதலில் உங்களுக்குள்ளே ஆலோசனை செய்யுங்கள். பாயிண்ட்ஸ் இன்னதென்று தேர்ந்தெடுங்கள். இது நல்லது தான். என்றாலும் யாராவது இதில் அதாரிட்டியாக இருக்கும் இருவரை உங்களோடு சேர்த்துக் கொள்ளுங்கள். முதலில் அவரை திருப்திப்படுத்துங்கள். பிறகு அவரை உங்களோடு சேருங்கள். இரண்டு அல்லது நான்கு இப்படிப்பட்டவர்கள் இருந்தால், இந்த விஷயத்தை நிரூபிப்பதில் இவர்கள் துணையாக இருப்பார்கள். கீதையில் அதாரிட்டியாக இருப்பவர்களை துணையாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். (இதற்காக இரண்டு நீதிபதிகள் தயாராக இருக்கிறார்கள்) நல்லது. பிளான் தயார் செய்து காட்டுங்கள்.

**டபுள் விதேஷி (இரட்டை வெளி நாட்டவர்) 45-நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள்:** நல்லது. குழந்தைகளும் இருக்கிறார்கள், இளைஞர்களும் இருக்கிறார்கள். டபுள் விதேஷிகளுக்கு பாப்தாதா டைட்டில் கொடுக்கின்றார். டபுள் தீவிர புருஷார்த்தி ஏனென்றால், விதேஷிகளின் சம்ஸ்காரம் என்னவென்றால், என்ன நினைக்கிறார்களோ, அதைச் செய்கிறார்கள். அது தவறானதாக இருந்தாலும் சரி, சரியானதாக இருந்தாலும் சரி செய்வதில் தைரியசாலிகளாயிருக்கிறார்கள். ஆதலால் இதே தைரியத்தை, ஆன்மீக முயற்சியிலும், சேவை காரியங்களிலும் ஈடுபடுத்துங்கள். பாப்தாதா பார்த்தார். பிளானை பிராக்டிக்கலில் கொண்டு வருவதில் லக்ஷியம் நன்றாக இருக்கிறது. இந்தியாவை எழுப்புவதற்காக, வெளிநாட்டிலிருந்து சப்தம் வரட்டும். இது நடக்க முடியும். வெளிநாட்டு சப்தம் இந்தியாவிற்கு வந்தால், இதுவும் நடக்க முடியுமல்லவா? பாப்தாதாவுக்கு நினைவிருக்கிறது. ஆரம்பத்தில் எப்போது இந்தியாவில் பெரிய புரோகிராம் நடந்ததோ அதில் வெளி நாட்டிலிருந்து அதாரிட்டியாக உள்ளவர்கள் யாராவது வருவதுண்டு; (ஐநா) அவர் வந்து சொற்பொழிவும் செய்தார்கள் பத்திரிகைகளிலும் வந்தது. இப்போது

வெகு நாட்களாக இப்படிப்பட்ட விசேஷ சபையில் வரவில்லை. தனியாக வந்திருக்கிறார்கள். ரிட்ரீட் நடக்கிறது புரோகிராமும் நடக்கிறது ஆனால் எப்படி ஆரம்பத்தில் விசேஷ ஆத்மாக்கள் கூடியிருந்த சபையில் பேசினார்களோ, அது நன்றாக இருந்தது. இனி 70'வது ஆண்டுக்கான புரோகிராம் செய்வீர்கள் அல்லவா! அதில் வரும்படியாக முயற்சி செய்யுங்கள். ஏனெனில் பத்திரிகையாளர்கள் விரும்பி வருவார்கள். மற்றபடி நன்றாக விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. புரோகிராம் கூட நன்றாகவே செய்கிறீர்கள். வாழ்த்துக்கள். முதலில் அங்கே புரோகிராமில் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. இப்போது நிறைய பேர் வருகிறார்கள் ஆனால் மூன்று மாதத்தில் வெளி நாட்டினர் நம்பர் ஒன் வருவார்களா? ஃபர்ஸ்ட் நம்பர் எடுப்பீர்களா? எடுக்க முடியும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். மூன்று சர்டிபிகேட் வாங்க வேண்டியதாயிருக்கும் தைரியம் வையுங்கள். வெளிநாட்டினரைப் பற்றி, இவர்களுடைய கலாச்சாரம் வேறானாது என்று நினைக்கிறார்கள் ஆனால் வெளிநாட்டினர், இந்தியாவை விட முன்னே நம்பர் எடுக்க முடியும். மகான் தபஸ்வி ஆவதில் நம்பர் ஒன் ஆக முடியுமல்லவா? ஆகத்தான் வேண்டும். ஆக முடியும் ஏனெனில் வெளி நாட்டினரிடம் உறுதியான சம்ஸ்காரம் இருக்கிறது. இனி இதில் திட சம்ஸ்காரத்தை உபயோகியுங்கள் ஆகி விடும், சரிதானா? நம்பர் ஒன் வரவேண்டும் அல்லவா? நல்லது வெளிநாட்டினர் ஒவ்வொரு முறையிலும் வருகிறார்கள். இதனால் சபை அலங்கரிக்கப்பட்டு விடுகிறது. இன்டர்நேஷனல் ஆகி விடுகிறதல்லவா? மிகவும் நல்லது. இந்த எதிரில் உள்ள குரூப் (சிந்தி குரூப்) என்ன செய்யப்போகிறீர்கள்? வரிசையில் நன்றாகவே நின்று கொண்டிருக்கிறீர்கள், நன்றாக விருத்தியும் ஆகிக் கொண்டிருக்கிறது. இதற்கு வாழ்த்துக்கள். நல்லது. பாப்தாதா கேட்கின்றார்: சில நாட்களுக்கு முன்பாக இதே குரூப்பில் வந்தவர்கள் சொன்னார்கள் நாங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொருவரை அழைத்து வருவோம் என்றார்கள். நினைவிருக்கிறதா? ஒவ்வொருவரும், இன்னொருவரை தயார் செய்திருக்கிறீர்களா? தன்னை விட முன்னேற்றியிருக்கிறீர்களா? யார் செய்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். மேலும் இங்கும் அழைத்து வந்திருந்தால் அவர்களும் கை உயர்த்துங்கள். நல்லது. சொன்னதைச் செய்து காட்டியிருக்கிறீர்கள். வாழ்த்துக்கள். இதற்கு மிக மிக வாழ்த்துக்கள்

ஆனால் இனி இன்னமும் கூட அழைத்து வர வேண்டியதாயிருக்கும். விருத்தியாகத்தானே வேண்டும். மேலும் எங்கே சிந்துவில் தந்தை வந்தார், அங்கே அந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், தங்களைச் சார்ந்தவர்களை எழுப்ப வேண்டுமல்லவா? இரக்கம் வருகிறதல்லவா? பெருமித்ததோடு சொல்கிறீர்கள் அல்லவா? சிவபாபா வந்தார் என்றால் சிந்துவில் தானே! என்று சட்டென்று கூறுகிறீர்கள் அல்லவா? ஆகவே செய்ய வேண்டும். கமால் செய்து காண்பிக்க வேண்டும். நல்ல நல்லவர்கள் இருக்கிறீர்கள். செய்ய முடியும். என்ன சொல்கிறார்கள்? (இப்போது செய்யவில்லையேல், பிறகு எப்போது செய்வீர்கள்? பாபாவின் ஆசிகள் நிறைய உண்டு. அவசியம் செய்வீர்கள்) பிராமண பரிவாரத்தில் மொத்தம் எத்தனை சிந்திகள் இருக்கிறார்கள். கணக்கில் குறைவாகத்தான் உள்ளது. (இந்த குரூப்பில் 32-பேர் வந்திருக்கிறார்கள்) இனி குறைந்தபட்சம் 100-பேராவது அழைத்து வாருங்கள். 100-பேர் அழைத்து வர முடியாதா? (108-பேர் கொண்டு வருவோம்) சிறு குழந்தைகள், சிறு குழந்தைகளாயிருக்கும் தங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள். பாப்தாதா குஷியடைகின்றார். தைரியம் வைத்திருக்கிறார்கள். உதவியும் கிடைக்கிறது ஆதலால் உங்களுக்கு குஷி பாபாவுக்கும் குஷி.

**கல்ச்சுரல் விங்:** என்ன பிளான் செய்திருக்கிறீர்கள்? செய்தி பரவும்படியாக ஏதாவது செய்யுங்கள். ஒவ்வொரு குரூப்பும் மைக் போலவும், சக்திசாலியாகவும் (மைட்) இருக்கக்கூடியவர்களை தயார் செய்ய வேண்டும். நடக்கும். ஏனெனில், தற்காலத்தில் நாலா பக்கமும் கல்ச்சுரல் மிக நன்றாக நடக்கிறது எல்லோருக்கும் விருப்பமாகவும் இருக்கிறது. இப்படி செய்தி பரப்பக்கூடியவர் யாராவது நிமித்தமானார்கள் என்றால் அநேகருக்கு நன்மை கிடைக்கும். மற்றபடி நன்றாக இருக்கிறது. இனி அப்படிப்பட்ட மைக் அழைத்து வர வேண்டும். அவர் மூலமாக அநேகர் நன்மை அடைவார்கள். அப்படிப்பட்ட ஒருவரை தேர்ந்தெடுத்து அழைத்து வாருங்கள். மிக்க நன்று இனியும் முன்னேறிக் கொண்டே இருங்கள்.

**இன்டர்நேஷனல் யூத் குரூப்:** நல்லது. இளைஞர்களும் கூட செய்தி பரவுவதற்கான நல்ல புரோகிராம் (நிகழ்ச்சிகள்) செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் சுய உன்னதிக்காகவும் நன்றாகப் புரோகிராம் செய்கிறார்கள். பாப்தாதாவுக்கு செய்தி கிடைத்தது. நல்ல

செய்தி கிடைத்தது. பரிவர்த்தனை செய்திருக்கிறார்கள். மேலும் இனி மேலுமே கூட பரிவர்த்தனையை நிரந்தரமாக வைத்திருப்பார்கள். பரிஷ்தா சொரூபத்திற்கான தாரணையில் சமீபமாக வந்து கொண்டிருக்கிறார்கள். யார் தன்னில் பரிவர்த்தனை கொண்டு வந்திருக்கிறார்களோ, இவர்கள் அங்கோ சென்ற பிறகும் அப்படியே இருக்குமா? கொஞ்சம் குறைந்து விடுமா? இருக்கும். சதா அப்படியே இருக்கும் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள் ஏனென்றால் பாப்தாதா ரிசல்ட்டைத் தெரிந்து கொண்டார். பரிவர்த்தனையை உணர்வுபூர்வமாக அனுபவம் செய்திருக்கிறார்கள். யூத் குரூப் சதா காலத்திற்கும் அப்படியே இருந்தார்களானால், உலகில் பிரசித்தமாகி விடுவார்கள். நல்ல ஆர்வம் உற்சாகம் வந்திருக்கிறது பாப்தாதாவுக்கு குழந்தைகளின் ஆர்வ உற்சாகம், தைரியத்தைப் பார்த்து குஷியடைகின்றார் ஆனால் சதா என்ற வார்த்தை நினைவில் இருக்க வேண்டும். பிராமண ஆத்மாக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும். இப்போதோ பாப்தாதா ஹோம் ஒர்க் கொடுக்கின்றார். பார்க்கலாம் எத்தனை யூத் குரூப் இதில் நம்பர் வாங்குகிறார்கள் என்று பார்க்கலாம். பிரைஸ் வாங்குவார்கள். வாங்குவீர்கள் அல்லவா, பிரைஸ். நல்லது. (33-தேசங்கள், 150-இளைஞர்கள் பங்கேற்றிருந்தார்கள்) நல்லது. ஒவ்வொரு ஆண்டும் செய்து கொண்டே இருக்கிறார்கள். இது மிகவும் நன்றாக இருக்கிறது. முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் நல்லது. நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள்.

**இன்டர்நேஷனல் சில்ரன் குருப்:** (பாபா நீங்கள் கமால் செய்து விட்டீர்கள் என்ற பாட்டை குழந்தைகள் பாடினார்கள்) நீங்களும் கூட கமால் செய்து காண்பிக்க வேண்டும். பாபா கமால் செய்தார். இனி நீங்கள் செய்ய வேண்டும். அமருங்கள்.

**தமிழ்நாடு ஜோனும் சேவையில் வந்திருக்கிறது:** நன்றாக இருக்கிறது. சிறியது தான் ஆனால் சக்தி நன்றாக இருக்கிறது. தமிழ்நாடு ஒரு அப்படிப்பட்ட வி.ஐ.பி தயார் செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து தானே தயாராகியிருக்கின்றார். யார், இன்றைக்கு பிரஸிடெண்ட்டாக இருக்கிறாரோ, அவர் தமிழ்நாடு கனெக்ஷனிலிருந்து தானே வந்தார். இப்படி நல்லவர் ஒருவர் தயாராகியிருக்கிறாரல்லவா, இதேபோல

இன்னமும் கூட நிமித்தமாக்குங்கள். அவருடைய குரல் கொஞ்சமாவது காரியம் செய்கிறதல்லவா? இப்படிப்பட்டவர்களை இனியும் நிமித்தமாக்கிக் கொண்டேயிருப்பீர்களானால் (சோட்டா சுபான் அல்லா ஆகி விடும்) சிறியது. ஆசீர்வாதத்திற்குரியதாக ஆகி விடும். என்றாலும், எண்ணிக்கை போதுமானது தான் நல்ல எண்ணிக்கையில் இருக்கிறார்கள். மொத்தம் எவ்வளவு பேர். (12-ஆயிரம் சகோதர சகோதரிகள்). நல்லது. சிறியது தான் என்றாலும் கமால் மிக நன்றாகச் செய்திருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு நன்றாக இருக்கிறது. பிளான் செய்து கொண்டேயிருங்கள். சேவையிலும் நல்ல சகயோகம் கொடுத்திருக்கிறீர்கள். கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் கோல்டன் உலகைக் கொண்டு வருவதற்கும் நிமித்தமாகத்தான் வேண்டும். மிக்க நன்று. நல்லது.

நாலா பக்கங்களிலிருந்தும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் அடங்கிய கார்டுகள், கடிதங்கள், இ.மெயில் மூலம் விதவிதமான ரூபத்தில் சாதனங்கள் மூலமாகவும் வாழ்த்துக்கள், செய்திகள் வந்து சேர்ந்திருக்கின்றன. பாப்தாதா யாரெல்லாம் வாழ்த்துக்கள் அனுப்பி இருக்கின்றார்களோ, அவர்கள் எல்லோருக்கும் (பதம்-பதம்) ஆயிரம் மடங்கு வாழ்த்துக்கள் அளிக்கிறேன். பாப்தாதாவோ, தூரமாக உள்ள குழந்தைகளையும் கூட எதிரிலேயே பார்த்துக் கொண்டிருக்கின்றார். எவ்வளவு ஆர்வம், உற்சாகத்துடன் அவரவருடைய சென்டர்களில் இடங்களில் அமர்ந்திருக்கிறார்கள். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார். குழந்தைகளும் குஷி அடைகின்றார்கள். வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கொடுத்துக் கொண்டும் இருக்கின்றார்கள். பாப்தாதாவுக்கு செய்தி வந்தது. இரவையும் பகலாக்கி வடுகின்றனர் என்று. ஆதலால் இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு எத்தனை தடவை, உள்ளத்திலிருந்து ஆசிகள் மற்றும் அன்பைக் கொடுத்தாலும் தகும். ஆர்வம், உற்சாகம் நன்றாக இருக்கிறது. இன்னும் நல்லதிலும் நல்லதாகவே இருக்கும் இப்போது தூரமாக அமர்ந்திருப்பவர்கள் எல்லோரும் தங்களை பிரைஸ் வாங்குவதில் நம்பர் ஒன் ஆக்க வேண்டும். நல்லது.

யார் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் எழுந்திருங்கள். நன்றாக இருக்கிறது. பாப்தாதா எல்லா குழந்தை களையும் பார்த்துப்

பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். யாரெல்லாம் புதிதாக வந்திருக்கிறீர்களோ அவர்கள் லாஸ்ட் ஸோ பாஸ்ட் மற்றும் பர்ஸ்டாக வந்து காட்ட வேண்டும். நன்றாக இருக்கிறது. விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு குரூப்பிலும், புதிது புதிதாக வந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது இவர்கள் நிரந்தரமாக தொடர வேண்டும். மற்றவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும். அமர் பவ என்னும் வரதானம் தங்களுக்குத் தாங்களே கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது, மாதாக்கள் அதிகம் இருக்கிறார்கள். சங்கமத்தில் மாதாக்களுக்குத்தான் வாய்ப்பு. பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. நல்லவர்கள் நல்லது. பாண்டவர்கள் அமருங்கள். மாதாக்கள் நில்லுங்கள். மாதாக்கள் அதிகம். நல்லது இன்றைக்கோ எல்லோரும் அமர்ந்திருக்கத்தான் வேண்டும்.

நாலா பக்கமுமுள்ள சதா ஆர்வம், உற்சாகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்ற, சதா தைரியத்தின் காரணமாக பாப்தாதாவிடமிருந்து ஆயிரம் மடங்கு உதவிக்குப் பாத்திரமாயிருக்கின்ற குழந்தைகளுக்கு, சதா விஜயி ரத்தினங்கள் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றியடைந்து, இப்போதும் அவ்வாறே இருக்கின்ற மற்றும் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றியாளர்களாகவே இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வெற்றிக் குழந்தைகளுக்கு சதா ஏக் பாப் தூஸ்ரா ந கோயி (ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை) உலகாயத ஆகர்ஷணம் இல்லாதவர்கள் சுய சம்ஸ்காரத்தின் ஆகர்ஷணம் இல்லாதவர்கள், இரண்டு ஆகர்ஷணங்களிலிருந்தும் விடுதலையாகியிருப்பவர்கள், சதா பாபா சமானமாக இருக்கும் குழந்தைகளுக்கு, பாப்தாதவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே!

தாதிஜியுடன்: எல்லோருக்கும் திருஷ்டி மூலமாக, தங்களுடைய யோக யுக்த் ஸ்திதி மூலமாக திருப்திப்படுத்தி விடுகிறீர்கள். எல்லோரும் கொஞ்ச நேரம் இருந்தாலும் குஷியடைந்து செல்கிறார்கள். இதற்கு வெகுகால வருமானத்தின் சேமிப்பு இருந்ததல்லவா? அதன் பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது (ஆயிரக்கணக்கில் சந்திக்கிறார்கள்) நல்ல பார்ட் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

மோகினி சகோதரி: சுகமாகிக் கொண்டிருக்கின்றார். ஆகத்தான் வேண்டும்.

பரதாதியிடம் -நிர்மல் சாந்தாஜி: உங்களுடைய ஜோன் பெரிய பாக்கியசாலி (யாருடைய குழந்தை நான்!) இப்படி இவருக்கு நஷா இருக்கிறது. மற்ற எல்லோரும் உங்களைப் பார்த்து குஷியடைகிறார்கள். உங்களை மூர்த்தியாகப் பார்க்கிறார்கள் மிக்க நன்று.

சாந்தாமணி தாதியுடன்: எல்லோரும் தங்கள், தங்கள் பார்ட்டை செய்து கொண்டிருக்கிறீர்கள். ஒன்றுமே செய்ய வேண்டாம். நீங்கள் ஆஜராயிருந்தால் எல்லாம் தானாகவே நடக்கும். தந்தையின் ரூபம் தெரிகிறதல்லவா? உங்களைப் பார்த்து எல்லோரும் குஷி அடைகிறார்கள். மனோகர் தாதி: மௌனம் தாரணை செய்கிறார். பேச்சு அதிகமாகி விட்டது. சர்வீஸில், அல் ரவுண்டில் இவருடைய பெயர் முதலாவதாக இருந்தது. பாப்தாதா முரளியிலும் கூட வர்ணனை செய்தார். கொஞ்சம் சிகிச்சை செய்தால் எல்லாம் சரியாகி விடும். அப்படி பெரிய விஷயம் ஒன்றுமில்லை. எல்லோரும் நினைவு செய்கிறார்கள் அல்லவா? உங்களுடைய விசேஷமான பார்ட்டை வேறு யாரும் செய்ய முடியாது. யக்ஞ வரலாறை நீங்கள் சொல்வதுபோல் வேறு யாரும் சொல்வதில்லை. ஆதலால் உங்களுடைய பார்ட்டை நீங்கள் செய்யுங்கள். எல்லாம் சரியாகி விடும். ஒன்றுமில்லை.

ரத்தன் மோகினி தாதியுடன்: இவர் சுற்றி வருகின்ற சக்கரவர்த்தி நல்ல விதமாக பார்ட் செய்கின்றார். ஏனெனில் ஆதி ரத்தினம் அல்லவா? ஆதி ரத்தினத்திற்கு மதிப்பு இருக்கிறது. நீங்கள் ஆஜராயிருந்தால் அது பாப்தாதாவின் நினைவைக் கொடுக்கிறது.

**2006-ஆண்டு சுப வரவேற்பில் இரவு 12-மணிக்கு அன்பான பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை அளித்தார்!** எல்லாக் குழந்தைகளும் மிகமிக அன்போடு புத்தாண்டைக் கொண்டாடினார்கள். கொண்டாடவும் செய்தார்கள். கூடவே பாப்தாதாவிடம் உறுதிமொழியும் கொடுத்தார்கள் சம்ஸ்காரத்தை சமாப்தி செய்வோம். பழகுவது கொண்டாடுவது எல்லா விஷயங்களும்

நடந்தது. இனி முழு ஆண்டும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மேலும் எல்லோரையும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். நான் சந்துஷ்ட ஆத்மா! (திருப்தியான ஆத்மா). திருப்தியாயிருப்பது, திருப்திப்படுத்துவது -இதுதான் கொண்டாடுவதாகும். இதுதான் தந்தைக்குப் பிடித்தமானது. இதுதான் ஆசிகள். இதுதான் அன்பு நினைவுகள். எல்லோருக்கும் நமஸ்தே.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂